இலங்கை முஸ்லிம்கள்

தொன்மைக்கான வரலாற்றுப் பாதை

கலாநிதி M.A.M. சுக்ரி Phd. (Edin)

M.T. mujahideen.
0752066248.

இலங்கை முஸ்லிம்கள்

தொன்மைக்கான வரலாற்றுப் பாதை

கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி

Mujahideen

Title	:	Ilangai Muslimkal- Thonmaikkana Varalattrup Pathai
Auther	:	Dr. M.A.M. SHUKRI - Ph.D(Edin)
Pages	:	168 +xiv
Copy Right	:	Author
First Edition	:	Jamathul Akhir 1431, May 2010
Printer	:	A.J. Printers
Cover Designed By	:	Muhammed Nusair +94714304204
Photoes From	:	www.lankapura.com
Price	:	250/-
தலைப்பு	:	இலங்கை முஸ்லிம்கள் தொன்மைக்கான வரலாற்றுப் பாதை
ஆசிரியர்	:	கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி - Ph.D(Edin)
பக்கங்கள்	:	168 +xiv
பதிப்புரிமை	:	ஆசிரியருக்கு
அட்டை வடிவமைப்பு	:	முஹம்மத் நுஸைர் +94714304204
முதற் பதிப்பு	:	ஜமாதுல் ஆகிர் 1431, ஜுன் 2010
விலை	:	250/-

உள்ளடக்கம்

	பக்கம்
முன்னுரை	i - x
01. இலங்கை முஸ்லிம்களின் ஆரம்பக் குடியேற்றமும் பரம்பலும்	1-44
02. ஐரோப்பியர் ஆட்சியில் முஸ்லிம்கள்	45-106
03. இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட அரபுச் சிலாசனங்கள் -அவற்றின் வரலாற்று முக்கியத்துவம்	107-139
04. இலங்கை முஸ்லிம்களின் கலாசார பண்பாட்டுப் பாரம்பர்யம்	140-153
05. இலங்கை முஸ்லிம்களின் தேசியப் பங்களிப்பு	154-168

சமர்ப்பணம்

அரபு மொழி இலக்கியத்தினதும், இஸ்லாமிய கலைகளினதும் வாயிலை எனக்குத் திறந்துவிட்ட, ஆய்வுத் துறையில் என்னை நெறிப்படுத்திய எனது பேராசான் முன்னைநாள் பேராதனைப் பல்கலைக்கழக அரபுப் பேராசிரியர் ஸெய்யித் அக்தர் இமாம் M.A (Aligar) Ph.D (Bonn) அவர்கட்கு இந்நூல் சமர்ப்பணம்.

முன்னுரை

இலங்கை முஸ்லிம்களின் வரலாறு பற்றி மிக விரிவான, விளக்கமான ஆய்வு மேற்கொள்ளப்படுவதன் அவசியம் பல்வேறு காலகட்டங்களிலும், பல ஆய்வாளர்களால் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. இலங்கை முஸ்லிம்களின் வரலாற்று ஆய்வின் மூலபிதாவாக ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் அவர்கள் கருதப்படல் மிகப் பொருத்தமானதாகும். இத்துறையில் அவர்கள் ஆற்றிய பணி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இப்பணியின் வரலாற்றுப் பின்னணியை இங்கு நாம் குறிப்பிடுதல் பொருத்தமாகும். இலங்கையின் அரசியல் சீர்திருத்த முயற்சிகளின் ஒரு முக்கிய கட்டமாக 1833ம் ஆண்டு சட்ட நிரூபண சபை நிறுவப்பட்டது. இச்சபைக்கான அங்கத்தவர்கள் இன அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டனர். எனினும் முஸ்லிம்களுக்கென தனிப் பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை. சட்ட சபைக்கு தமிழ் இனத்தின் சார்பில் நியமிக்கப்பட்ட உத்தியோகப்பற்றற்ற தமிழ் அங்கத்தவரே முஸ்லிம்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு வகை செய்யப்பட்டது. தமிழ் இனத்தைச் சேர்ந்த ஓர் அங்கத்தவருக்கு முஸ்லிம்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த மேலாதிக்கப் பொறுப்பு ஏன் வழங்கப்பட்டது என்பதற்கான காரணங்கள் குறிப்பிடவில்லை. முஸ்லிம்களும் தமிழர்களைப் போன்றே தமிழ் மொழியைப் பேசுவது ஒருவேளை இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். 1880ம் ஆண்டு சட்ட சபையில் சில மாற்றங்கள் கொண்டுவரப்படும் சூழ்நிலை எழுந்தபோது

முஸ்லிம்கள் அவர்களுக்கென தனிப்பட்ட அங்கத்துவம் வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர். இச்சந்தர்ப்பத்தில் சட்டசபையில் தமிழ் இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய திரு. பொன்னம்பலம் ராமநாதன் முஸ்லிம்கள், இஸ்லாத்தை தழுவிய திராவிட இனத்தவர்களென்றும், அவர்களது பூர்வீகம் தென் இந்தியாவென்றும் எனவே அவர்கள் இனத்தால் தமிழர்களென்றும் ஒரு வாதத்தை முன்வைத்தார். சட்டசபையில் முஸ்லிம்களை தமிழ் சமூகத்தைச் சார்ந்த அங்கத்தவரொருவர் பிரதிநித்துவப் படுத்தும் நிலையைத் தொடரச் செய்யும் ஒரு மறைமுகமான முயற்சியாக இதனை முஸ்லிம்கள் கருதினர். திரு. பொன்னம்பலம் ராமநாதன் ரோயல் ஆசிய கழகத்தின் இலங்கைக் கிளையின் சஞ்சிகையில் 1888ம் ஆண்டு 'இலங்கைச் சோனகர்களின் இனத்துவம்' (The Ethnology of Moors of Ceylon) என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் இலங்கைச் சோனகர்கள் இனத்தால் திராவிடர்கள் எனவும் அவர்கள் தென்னிந்தியாவி லிருந்து இலங்கையில் வந்து குடியேறியவர்கள் எனவும் ஒரு வாதத்தை முன்வைத்தார். இக் கருத்தை வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையில் மறுத்துரைத்து, இலங்கைச் சோனகர்கள் இனத்தால் அரபிகள் என்ற கருத்தை நிறுவி ஐ.எல்.எம் அப்துல் அஸீஸ் "ராமநாதனின் இலங்கைச் சோனகரின் இனத்துவம் பற்றிய கருத்துக்கான ஒரு விமர்சனம்" (A Criticism of Mr. Ramanathan's Ethnology of The Moors of Ceylon) என்ற நூலை வெளியிட்டார். இந் நூலில் அவருக்கு அவரது காலப் பிரிவில் கிடைக்கப்பெற்ற வரலாற்று ஆவணங்களை அடிப்படையாக வைத்து இலங்கைச் சோனகர்கள் இனத்தாலும் பூர்வீகத்தாலும் அராபியர்கள் என்ற கருத்தை நிறுவினார். அப்துல் அஸீஸ் இந்த நூல் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்று ஆய்வுக்கான ஒரு முன்னோடி முயற்சியாகக் கருதப்படுதல் வேண்டும். இந்நூலில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

''எனது இனத்தின் வணிகம், சம்பிரதாயங்கள், பாரம்பரியங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு விரிவான வரலாற்றை எழுதும் பணியை எதிர்காலத்திற்கு விட்டு விட்டு இப்போதைக்கு இந்த விமர்சனத்தை எழுதுவதோடு நான்

போதுமாக்கிக்கொள்ளத் தீர்மானித்துள்ளேன்".

I have dicided to leave to the future the writing of a comprehensive history of my race to the future, explaining it's origin manners, customs, habits and trade and to content myself for the present with writing a critisism of 'Ethnology of Moors'of Ceylon.

ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் வரலாற்றாசிரியர் எல்.ஈ. பிளேஸ் (Blaze) இலங்கை முஸ்லிம்களின் வரலாற்று ஆய்வுக்கான தேவையை வலியுறுத்தும் போது பின்வரும் வகையில் ஒரு வினாவை எழுப்பினார்:

Why does hot a patriotic member of the large community of Moors in Ceylon write an accurate and comprehensive history of it's community? The work involves a great deal of patient research, keen interest and cool Judgment but the end will repay the labour devoted to it. There is need of an authentic history; there is plenty of meterial available and the story is of romantic as well as of historicalinterest.

''இலங்கை முஸ்லிம் சமூகத்தின் பற்றுமிக்க அங்கத்தவர் ஒருவர் அவரது சமூகம் பற்றிய மிக ஆதாரபூர்வமான, விரிவான வரலாற்றை ஏன் எழுதக்கூடாது? இது மிகவும் பொறுமையான ஆய்வையும், அதற்கான அர்ப்பணிப்பையும் நிதானமான மதிப்பீட்டையும் வேண்டி நிற்கும் ஒரு பணியாகும். ஆனால் அதன் இறுதி விளைவு அப்பணிக்கான அர்ப்பணிப்பிற்கும். உழைப்பிற்கும் ஈடான ஒரு பயனைத் தரும் என்பதில் சந்தேகமில்லை. இலங்கை முஸ்லிம்கள் பற்றிய ஆதாரபூர்வமான ஒரு வரலாற்றிற்கான தேவை உள்ளது. இதற்கான தகவல்கள் நிறைய உள்ளன.

கடந்த ஒரு நூற்றாண்டு காலப் பிரிவில் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, வாழ்வியல் தொடர்பான பல கட்டுரைகளை அவ்வப்போது பலர் எழுதியுள்ளனர். சில நூல்களும்

எழுதப்பட்டுள்ளன. இவற்றில் சில பொதுவான கட்டுரைகளாகவும், சில ஆய்வு ரீதியான கட்டுரைகளாகவும் உள்ளன. பேராசிரியர் கே.டப்ளியு. குணவர்தன, பேராசியர் எஸ். அரசரட்னம், J.C.வான்ஸன்டென், பேராசிரியர் எஸ்.எம். யூஸுப், பேராசிரியர் எஸ்.ஏ. இமாம், ஏ.எம்.ஏ. அஸீஸ், எம்.எம்.எம். மஹ்ரூப், க. முஹம்மது சமீம் ஆகியோர் இத்துறையில் பங்களிப்புச் செய்துள்ளனர். இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, வாழ்வியல் தொடர்பான கட்டுரைகளை உள்ளடக்கிய சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தின் வெளியீடுகள் இத்துறையில் மிகச் சிறந்த ஒரு பங்களிப்பாகக் கொள்ளப்படல் வேண்டும்.

ஆனால் அப்துல் அஸீஸும், பிளேஸும் எதிர்பார்த்த வகையில் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, வணிகம், பண்பாடு, இனத்துவம், அரசியல், பொருளாதாரம் அனைத்தையும் உள்ளடக்கிய விரிவான விளக்கமான ஆய்வு ரீதியான ஒரு வரலாற்று நூலை எழுதுவதற்கான எத்தகைய ஆக்கபூர்வமான முயற்சிகளும் மிக அண்மைக் காலம்வரை மேற்கொள்ளப்படவில்லை.

1984ம் ஆண்டு நளீமிய்யா இஸ்லாமிய ஆய்வு நிலையத்தினால் நடாத்தப்பட்ட முஸ்லிம்களின் வரலாறு தொடர்பான கருத்தரங்கும் செயலமர்வும் இத்துறையில் நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட முதல் ஆய்வு முயற்சியாகும். நளீமிய்யா இஸ்லாமிய ஆய்வு நிலையமும், இனங்கள் பற்றிய கற்கைக்கான சர்வதேசிய மத்திய நிலையமும் இணைந்து நடாத்திய இந்த ஐந்துநாள் செயலமர்வில் இலங்கை, தென் கிழக்காசிய முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு தொடர்பான இருபத்தி ஐந்து ஆய்வுக் கட்டுரைகள் சமாப்பிக்கப்பட்டன. இலங்கை, மற்றும் தெற்காசியா, தென் கிழக்காசியாவைச் சேர்ந்த துறைசார்ந்த வரலாற்று ஆய்வாளர்கள் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர். இதில் பதினெட்டு ஆய்வுக் கட்டுரைகள் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றோடு தொடர்பானவை. ஏனைய ஏழு ஆய்வுக் கட்டுரைகளும்தான் தென் கிழக்காசிய முஸ்லிம்களின்

வரலாற்றோடு தொடர்புடையவை.

ஆரம்ப காலம் முதல் நவீன காலப்பிரிவு வரையிலான இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை பரந்த தெற்காசிய, தென் கிழக்காசிய வரலாற்றின் பின்னணியிலும், பாரசீக வளைகுடாவிற்கும், தூரகிழக்கிற்கு மிடையிலும் நடைபெற்ற இந்து சமுத்திர வணிகத்தின் பகைப்புலனிலும் ஆராயும் முயற்சிகள் இந்த செயலமர்வில் மேற்கொள்ளப்பட்டன. இந்த செயலமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுகளை இலங்கை முஸ்லிம்களின் வரலாறு பற்றிய, விமர்சன ரீதியான, விளக்கமான நீண்ட முன்னுரையுடன் தொகுத்து வெளியிடும் முயற்சி அல்லாஹ்வின் அருளால் என்னால் மேற்கொள்ளப்பட்டது. இது நளீமிய்யா இஸ்லாமிய ஆய்வு நிலையத்தினால் 1986ம் ஆண்டு Muslims of Sri Lanka - Avenues to Antiquity என்ற பெயரில் நூலுருவில் வெளியிடப்பட்டது. இலங்கை முஸ்லிம்களின் வரலாறு பற்றிய கருத்தரங்கை ஒழுங்குபடுத்துவதில் பல்வேறு வகையில் ஒத்துழைத்து முன்னின்று உழைத்த சகோதரர்களான ஏ.ஜே.எம். ஸனீர் அவர்களும், ஏ.ஆர்.ஏ நூர் அமீன் அவர்களும் நன்றியுணர்வுடன் நினைவுகூரத் தகைமை படைத்தவர்களாவர். நளீமிய்யா இஸ்லாமிய ஆய்வு நிலையத்திற்கும், இனங்கள் பற்றிய கற்கைக்கான சர்வதேசிய மத்திய நிலையத்திற்குமிடையில் ஒத்துழைப்பை ஏற்படுத்தி, பேராசிரியர் கே.எம்.டீ சில்வாவின் ஆலோசனைக்கு ஏற்ப இந்த கருத்தரங்கை தென்கிழக்காசிய பகைப்புலனில் உள்ளடக்கும் வகையில் விரிவாக்குவதற்கு ஜனாப் ஏ.ஜே.எம். ஸனீர் ஆற்றிய பணி காத்திரமானது.

Muslims of Sri Lanka வின் வெளியீட்டைத் தொடர்ந்து இலங்கை முஸ்லிம்களின் வரலாற்று ஆய்வு தொடர்பான ஆர்வமும், ஈடுபாடும் மிக மிக கணிசமான அளவு அதிகரித்தன. பல ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டன.

இலங்கை முஸ்லிம்களின் வரலாறு தொடர்பாக எனது ஆர்வத்தைத் தூண்டியவர் எனது பேராசான் எஸ். அக்தர் இமாம் அவர்களாவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒரு பட்டதாரி

மாணவனான அவரின் கீழ் கல்வியை மேற்கொண்டிருந்த காலப் பிரிவில் அவர் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு பற்றிய ஆய்வில் மிக ஆர்வத்துடன் ஈடுபட்டிருந்தார். அவர் அடிக்கடி தனது ஆய்வுகள் பற்றி என்னிடம் குறிப்பிடுவார். இலங்கை பற்றி அல்-பலாஸுரி, அல்- இத்ரீஸ், அல்- மஸ்ஊதீ, இப்னு பதூதா போன்ற அரபுப் பயணிகள், வரலாற்றாசிரியர்களின் மூல நூல்களை வகுப்பில் வாசித்துக் காட்டுவார். இப் பொருள் பற்றி பிற்காலத்தில் நான் ஆய்வுகள் மேற்கொள்ளல் வேண்டும் என என்னைத் தூண்டுவார். 1969ம் ஆண்டு அவர் கொழும்பு சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தில் - Ceylon - Arab Relations- ''இலங்கை அராபிய தொடர்புகள்'' என்ற தலைப்பில் உரையொன்றை நிகழ்த்திச் சென்றபோது என்னையும் பேராதனையிலிருந்து அவருடன் கொழும்புக்கு அழைத்துச் சென்றார். இலங்கை முஸ்லிம்களின் வரலாறு தொடர்பாக இலங்கை வானொலியில் ஒரு தொடர் பேச்சை நிகழ்த்தி, இலங்கை முஸ்லிம்களுக்கு அவர்களது வரலாறு பற்றிய பரிச்சயத்தை ஏற்படுத்தல் வேண்டுமென எனக்கு ஆர்வமூட்டினர். அக்காலப் பிரிவில் இலங்கை வானொலி முஸ்லிம் சேவைப் பணிப்பாளராகப் பணிபுரிந்த மர்ஹூம் வீ.ஏ. கபூர் அவர்கள் வானொலி முஸ்லிம் சேவையில் ''இலங்கையில் இஸ்லாம்'' என்ற தலைப்பில் ஒரு தொடர் பேச்சுக்கு ஏற்பாடு செய்தார். பேராசிரியர் இமாம் அவர்கள் இப் பேச்சுக்கான தகவல்கள், செய்திகளை எனக்கு வழங்கினார். இதுவே இலங்கை முஸ்லிம்களின் வரலாறு பற்றிய எனது முதல் பிரவேசமாகும்.

1973ம் ஆண்டு ஐக்கிய ராச்சியத்திலுள்ள எடின்பரோ பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டப்படிப்பு மாணவனாக இருந்த காலப்பிரிவில், எடின்பரோ பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் ''இலங்கையில் இஸ்லாம்'' என்ற தலைப்பில் எனது உரையொன்றை ஏற்பாடு செய்தது. எனது கலாநிதிப் பட்டப்படிப்பை முடித்து நாடு திரும்பிய பின்னர் கொழும்பிலுள்ள ஸேர் ராஸிக் பரீத் நிறுவனம் (Sir Razik Fareed Foundation) 'Some Reflestions on The History of Muslims of Sri Lanka' - "இலங்கை

முஸ்லிம்களின் வரலாறு பற்றிய சில சிந்தனைகள்" என்ற தலைப்பில் எனது ஆய்வுரை ஒன்றிற்கு ஒழுங்கு செய்தது. 1984ம் ஆண்டு நளீமிய்யா இஸ்லாமிய ஆய்வு நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இலங்கை முஸ்லிம்களின் வரலாறு பற்றிய ஆய்வுக் கருத்தரங்கிற்கு ''இலங்கை முஸ்லிம்கள்- ஒரு பண்பாட்டுக் கண்ணோட்டம்'' என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்தேன். இந்த ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைக்கான ஒரு விமர்சன ரீதியான, நீண்ட முன்னுரையுடன் தொகுத்து பதிப்பித்து Muslims of Sri Lanka - Avenues to Antiquity என்ற நூல் வெளியிடப்பட்டது.

1986ம் ஆண்டு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மிகச் சிறப்பாக இந்நூல் வெளியிடப்பட்டது. இந் நாட்டின் மிகப் புலமைபெற்ற வரலாற்று ஆய்வாளர்களுள் ஒருவரான கலாநிதி கொல்வின் ஆர்.டீ. சில்வா இந்த நூல்பற்றி மிகச் சிறப்பான ஓர் ஆய்வுரை நிகழ்த்தினார்.

இந்நூல் வெளியிடப்பட்டதானது இலங்கை முஸ்லிம்களின் வரலாற்று ஆய்வின் வளர்ச்சியில் ஒரு முக்கிய மைல்கல்லாக விளங்கியது. இதனைத் தொடர்ந்து இலங்கை முஸ்லிம்களின் ஆய்வு பற்றி வெளிவந்த நூல்கள், கட்டுரைகளுக்கு முக்கிய மூலாதாரமாக இது விளங்கியது. இதனைத் தொடர்ந்து முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு பற்றி பல்வேறு மட்டங்களில் தேசிய, சர்வதேசிய மட்டத்தில் ஆய்வுரைகள் நிகழ்த்தும் வாய்ப்பும், ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது.

1990ம் ஆண்டு இலங்கை தொல்பொருள் திணைக்களமும் கலாசார முக்கோண அமைப்பும் இணைந்து ஒழுங்கு செய்த 'பட்டுப் பாதை' பற்றிய சர்வதேச மாநாட்டில் Arab contact with Sri Lanka - என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரையைச் சமாப்பித்தேன். இம்மாநாட்டின் நினைவாக வெளியிடப்பட்ட Sinbad and Ibn Batuta " Silk Road of The Sea" என்ற ஆய்வுச் சஞ்சிகையில் இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட அரபுச் சிலாசனங்கள் பற்றி

"Arabic Inscriptions in Sri Lanka என்ற தலைப்பில் எனது ஆய்வுக் கட்டுரை பிரசுரமாகியது.

1999ம் ஆண்டு இலங்கையின் சுதந்திரப் பொன் விழாவின் நிமித்தம், அப்போது இலங்கை வெளிநாட்டமைச்சராகப் பணிபுரிந்த திரு. லக்ஷ்மன் கதிர்காமர் இலங்கை வரலாறு பற்றிய ஒரு விரிவுரைத் தொடரை Golden Jubilee Lecture- சுதந்திரப் பொன்விழா விரிவுரைகள் என்ற தலைப்பில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற விரிவுரைகள் இலங்கை வரலாற்று ஆரம்ப காலம் முதல் நவீன காலம் வரை உள்ளடக்கியிருந்தது. இத் தொடரில் " Arabia and Persia in Sri Lankan History"- "இலங்கை வரலாற்றில் அரேபியாவும் பாரசீகமும் என்ற எனது உரை இடம்பெற்றது.

இக்காலப் பிரிவில் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு பற்றி சர்வதேசிய ரீதியாக பல்வேறு அமைப்புக்களில் உரை நிகழ்த்தும் வாய்ப்புக் கிடைததது. 2001ம் ஆண்டு செப்டம்பர் மாதம் மலேசியாவிலுள்ள இஸ்லாமிய கலைகளுக்கான அரும்பொருட்காட்சிசாலை (Islamic Art Museum) '' தென், தென்கிழக்காசியாவில் இஸ்லாம்" என்ற தொனிப்பொருளில், துறை சார்ந்த அறிஞர்களை அழைத்து ஒரு விரிவுரைத் தொடரையும் கண்காட்சியையும் ஏற்பாடு செய்தது. இத் தொடரில் "இலங்கையின் இஸ்லாமியப் பாரம்பர்யம் - தென் கிழக்காசியாவுடனான அதன் தொடர்புகள்" என்ற தலைப்பில் உரை நிகழ்த்த எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அங்கு நடைபெற்ற கண்காட்சியில் அரபுத் தமிழ் நூல்களை உள்ளடக்கிய ஒரு பகுதியில் உள்ளடக்கப்பட ஏற்பாடு செய்ததுடன் ''அரபுத் தமிழின் தோற்றமும், வளர்ச்சியும்" பற்றிய எனது உரையும் இடம்பெற்றது.

2002ம் ஆண்டு பஹ்ரைனில் தாருல் ஈமான் அமைப்பின் அழைப்பின் பேரில் ஒரு விரிவுரைத் தொடரை நிகழ்த்தச் சென்றேன். அச் சந்தர்ப்பத்தில் பஹ்ரைனில் உள்ள இலங்கையர் சங்கம் (Sri Lankan Association) இலங்கை முஸ்லிம்களின் வரலாறு பற்றிய எனது உரை ஒன்றுக்கு ஏற்பாடு செய்தது. கத்தார்

நாட்டிலுள்ள இலங்கை முஸ்லிம்களது அமைப்பானது அவர்களது ஆண்டு விழாவில் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு பற்றிய ஒரு சிறப்புரை நிகழ்த்த என்னை அழைத்திருந்தது.

இவற்றையெல்லாம் ஒரு சுய புராணமாக இங்கு குறிப்பிடவில்லை. இலங்கை முஸ்லிம்களின் வரலாறு என்ற பொருள் எவ்வாறு பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவனாக இருக்கின்ற காலப் பிரிவிலேயே என்னுள் கருக்கொண்டு கால வளர்ச்சியில் பல பரிமாணங்களைப் பெற்று வளர்ந்தது என்ற வரலாற்றின் பதிவாகவே இதனை இங்கு குறிப்பிடுகிறேன். அல்ஹம்துலில்லாஹ்.

இலங்கை முஸ்லிம்களின் வரலாறு பற்றிய இந்நூல் இப் பொருள் தொடர்பாக ஆவணப்படுத்தப்பட்ட ஒரு நூலுக்கான முயற்சியாகும். இலங்கை முஸ்லிம்கள் வரலாறு பற்றிய ஆவணப்படுத்தப்பட்ட ஒரு நூல் தமிழில் காணப்படாமை ஒரு குறையாகவே உள்ளது. இதனை இந்நூல் ஓரளவு நிறைவு செய்கின்றது.

இலங்கை முஸ்லிம்களின் வரலாறு பற்றி இதுவரை பல்வேறு ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் உள்ளிட்ட பல புதிய தகவல்கள் இதில் இணைக்கப்பட்டுள்ளன. இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட அரபுச் சிலாசனங்கள் பற்றிய ஆய்வும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றோடு தொடர்புடைய, தொல்பொருள் சான்றுகள் உள்ளன. மாந்தையில் கண்டெடுக்கப்பட்ட மத்திய கிழக்கைச் சார்ந்த மட்பாண்டங்கள் (Middle Eastern Ceramics) இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட அரபு நாணயங்கள் ஆகியன இன்னும் உரிய முறையில் ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. இது தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். துறைசார்ந்த ஆய்வாளர்கள் இத்துறைகளில் உருவாக்கப்படல் வேண்டும்.

இந் நூலின் கையெழுத்துப் பிரதியை கணனி வடிவமைப்பதில் துணைபுரிந்த எம்.ஆர்.எம் முஸம்மில் அவர்களுக்கும். ஏ.ஆர். றிஸ்வி மொஹமட் அவர்களுக்கும் எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி Ph.D(Edin)

16/3A, மெனேரிகம ப்ளேஸ்
கல்கிஸ்ஸ.

கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி

இலங்கை முஸ்லிம்களின் ஆரம்பக் குடியேற்றமும் பரம்பலும்

(கி.பி 8ம் நூற்றாண்டு முதல் 14ம் நூற்றாண்டு வரை)

இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, இந்து சமுத்திர வணிகத்தின் பகைப்புலனில் ஆராயப்படுதலே பொருத்தமாக உள்ளது. புராதன காலப்பிரிவிலும், மத்திய காலப்பிரிவிலும் நடைபெற்ற கடல் வணிகமானது, பல்வேறு வணிகக் குழுவினர்களால் இந்த வணிகம் மேற்கொள்ளப்பட்ட கடல் பாதையில் அமைந்திருந்த துறைமுகங்களின் ஊடாகவே நடைபெற்றது. இலங்கையுடன் அரபு வணிகத்தினடியாக துறைமுகங்களை மையமாக வைத்து தோன்றிய அரபுக் குடியேற்றங்களே ஆரம்பகால முஸ்லிம் குடியேற்றங்களாக விளங்கின.

இந்து சமுத்திரத்தில் கேந்திரநிலையில் அமைந்துள்ள இலங்கையின் புவியியல் நிலையும், பசுமையும், செழிப்பு மிக்க இத்தீவில் காணப்பட்ட வணிகப் பொருட்களும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே பிறநாட்டு வணிகர்களின் கவனத்தை அதன்பால் ஈர்த்தன. ரோமர், பாரசீகர், அபீஸீனியர், அரேபியர் ஆகியோர் இந்து சமுத்திர வணிகத்தில் முக்கிய இடம் வகித்தனர். கி.பி. 4ம்-7ம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பிரிவில் இலங்கைத் தீவானது பாரசீகம், எதியோப்பியா, சீனா, இந்தியா ஆகிய நாடுகளின் வணிகர்கள் ஒன்றுகூடும் ஒரு முக்கிய மத்திய வணிகத் தலமாக விளங்கியது. கி.பி. 6ம் நூற்றாண்டைச் சேர்ந்த எகிப்திய மதகுருவான கொஸ்மொஸ் அவரது Topographia

Chiristiana எனும் நூலில் இந்தியா, பாரசீகம், எதியோப்பியா ஆகிய நாடுகளின் வணிகக் கப்பல்கள் இலங்கைத் துறைமுகங்களை வணிக நோக்கம் கருதி தரிசித்ததாக குறிப்பிடுகின்றார்.(1)

இந்து சமுத்திர வணிகத்தில், குறிப்பாக தூரகிழக்குடனான வணிகத்தில், அராபியர்களுக்கு முன்னரே பாரசீகர்கள் ஈடுபட்டிருந்தனர். தூரகிழக்கு வணிகத்தில் கி.பி. ஆறாம் நூற்றாண்டளவில் இலங்கை மன்னர்களுக்கும் பாரசீக மன்னர் அனுசர்வனுக்குமிடையில் ராஜதந்திரத் தொடர்புகள் நிலவியதாக அரபு வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவதும் இது தொடர்பாக கவனிக்கத்தக்கதாகும்.(2)

மேற்கிலிருந்து கிழக்கிற்கான கடல் பயணத்தை மேற்கொள்வதற்கு நன்னம்பிக்கை முனையினூடான (Cape route) பாதை கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர் மேற்கையும் கிழக்கையும் இணைக்கும் இரண்டு கடற்பாதைகளாக பாரசீக வளைகுடாப் பாதையும், செங்கடல் பாதையும் விளங்கின. இது இந்து சமுத்திரத்தை மையமாகக்கொண்டு நடைபெற்ற கிழக்கிற்கும் மேற்கிற்குமிடையிலான வணிகத்தில் அரபிகள் முக்கிய பங்கை வகிக்கும் நிலையை உருவாக்கியது. இதுபோன்றே இந்து சமுத்திரத்தில் இலங்கை வகிக்கும் மத்திய பூகோள நிலையும் அதன் கேந்திர அமைப்பும் அரேபியாவிலிருந்தும், பாரசீகத்திலிருந்தும் வரும் கப்பல்கள் தங்கிச் செல்லும் மத்திய தலமாக இலங்கையை ஆக்கின. இப்புவியியல் காரணிகள் இந்து சமுத்திர வணிகத்தில் துறைமுகங்களின் அமைப்பிடத்தை நிர்ணயிப்பதிலும் மிக முக்கிய இடத்தை வகித்தன.

ஏலவே குறிப்பிடப்பட்டவாறு கிழக்கிற்கும் மேற்கிற்குமிடையிலான இந்தக் கடல் வணிகத்தில் துறைமுகங்கள் முக்கிய இடத்தை வகித்தன. இந்தத் துறைமுகங்கள் வணிக மத்திய தலங்களாக விளங்கின. இந்த வணிக மத்திய நிலையங்களின் அமைப்பு, முக்கியத்துவம் என்பவற்றை இந்து சமுத்திரத்தின் காற்று வீசும் முறையே நிர்ணயித்தது. உதாரணமாக பாரசீக வளைகுடாவிலிருந்து, சுமாத்திராவிற்கு ஒரே காற்றைப் பயன்படுத்திப் பயணத்தை மேற்கொள்வது சாத்தியமற்றதாகக் காணப்பட்டது. எனவே இக் கப்பல்கள் தென் இந்தியாவின் மேற்குக்

கரையோரப் பகுதிகளிலுள்ள துறைமுகங்களிலோ அல்லது இலங்கைக் கரையிலுள்ள துறைமுகங்களிலோ தரித்துச் செல்லவேண்டிய நிலை காணப்பட்டது. மேலும் இத்துறைமுகப் பிரதேசங்களில் வணிகப் பொருட்களை பெற்றுக்கொள்ள முடிந்தமை, பாதுகாப்பான துறைமுகங்களாக இவை இருந்தமை, உணவும் குடிநீரும், கப்பல்களைப் பழுதுபார்ப்பதற்கான வசதிகளும் காணப்பட்டமை ஆகிய காரணங்கள் இத்துறைமுகங்களில் வணிகர்கள் தங்கிச் செல்லும் நிலையை உருவாக்கின.(3)

பண்டுகாபய மன்னன் அநுராதபுரத்தை ஆட்சிபுரிந்த காலப்பிரிவில், அராபியர்கள் வணிகர்கள் என்ற வகையில் இலங்கையில் அறிமுகமாகியிருந்தனர். பண்டுகாபய மன்னன் தலைநகரான அநுராதபுரியில், பல்வேறு வணிகர்களுக்குமாக சில குறிப்பிட்ட பகுதிகளை ஒதுக்கியிருந்தான். அநுராதபுரத்தின் மேற்குவாயில் பகுதி யவன வணிகர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது என மகாவம்சம் குறிப்பிடுகின்றது. யவனர் என்ற பதம் மிக ஆரம்ப காலத்தில் கிரேக்கர்களைக் குறித்தாலும், இது பிற்காலத்தில் அராபியரைக் குறித்ததாக மகாவம்சத்தை மொழிபெயர்த்த கலாநிதி ஆனந்த குருகே கருத்துத் தெரிவிக்கின்றார். மகாவம்சம் குறிப்பிடும் பண்டுகாபய மன்னரின் காலப்பிரிவில் காணப்பட்ட யோனர்கள் (Yonas) அரபு வணிகர்களே என மகாவம்சத்தை மொழிபெயர்த்த Willeym Geiger கருதுகின்றார்.(4)

இஸ்லாத்துக்கு முந்தைய காலப்பிரிவிலேயே தென் இந்தியக் கரையோரங்களில் அரபுக் குடியேற்றங்கள் காணப்பட்டதாக ஸுலைமான் நத்வி குறிப்பிடுகின்றார்.(5) இஸ்லாத்திற்கு முந்தைய காலப்பிரிவைச் சார்ந்த ஜாஹிலிய்யா அரபுக் கவிதைகளில் குறிப்பாக இம்ரஉல் கைஸின் முஅல்லகாவில் கற்பூரம், இஞ்சி, கராம்பு போன்ற வாசனைத் திரவியங்கள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இந்தியாவின் தென்மேற்குக் கரையோரத்திலுள்ள கேரளப் பிரதேசம், இலங்கை போன்ற இடங்களுக்கும், அரபு நாட்டிற்குமிடையே நிலவிய வணிகத் தொடர்பிற்கு இது ஒரு முக்கிய ஆதாரமாக அமைகின்றது. ஏனெனில் இந்த வாசனைத் திரவிய வணிகம், இலங்கையுடனும், மேற்கிந்தியக் கரையுடனும் தொடர்புடைய வணிகமாக விளங்கியது.

கி.பி. ஆறாம் நூற்றாண்டில் இஸ்லாத்தின் தோற்றமானது அரபுத் தீபகற்பத்தின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்கி வைத்தது. நபி (ஸல்) அவர்களின் மறைவைத் தொடர்ந்து குலபாஉர் ராஷிதீன்களின் காலப்பிரிவில் சிரியா, பாரசீகம், ஈராக், எகிப்து ஆகிய நாடுகள் வெற்றிகொள்ளப்பட்டதுடன், இப்பிரதேசங்கள் இஸ்லாத்தினதும், அரபு மொழியினதும் செல்வாக்கிற்கு உட்பட்டன. இஸ்லாத்தின் பரவலானது, அராபிய வணிகத்தின் மிக வேகமான செயல்பாட்டுக்கும் ஓர் உந்துதல் சக்தியாக அமைந்தது. இஸ்லாம் பரவிய இந்த நாடுகளில் வாழ்ந்த மக்கள், இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு, அரபு மொழியின் செல்வாக்கிற்கு ஆளாகினர். இவர்கள் அனைவரும் அராபியராகவே இனங்காணப்பட்டனர். இந்த அராபிய- பாரசீக வணிகர்கள் சீனாவில் கண்டனில் (Cantun) கி.பி. 8ம் நூற்றாண்டளவில் கணிசமாகக் காணப்பட்டதை கி.பி. 758ல் நடைபெற்ற கண்டன் கலவரம் மூலம் நாம் அறிய முடிகின்றது. அராபிய-பாரசீக வணிகர்கள் கிளர்ச்சி செய்து கண்டன் நகரையே எரித்ததாக டாங் வம்சத்தின் (Tang dynasty) வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. இது அராபிய- பாரசீக வணிகர்களின் செல்வாக்கு கி.பி. 8ம் நூற்றாண்டளவில் பாரசீக வளைகுடா முதல் சீனாவரை பரந்து காணப்பட்டதையே எடுத்துக் காட்டுகின்றது. அவர்களது பொருளாதார பலத்தையும் இது உணர்த்துகின்றது. (6)

இலங்கையில் முதன்முதலாக முஸ்லிம்களது குடியேற்றம் எப்போது நடைபெற்றது என்பது பற்றி ஏகோபித்த கருத்துக் காணப்படவில்லை. ஸேர். அலெக்சாண்டர் ஜோன்ஸ்டன் கி.பி. எட்டாம் நூற்றாண்டளவில் உமையாக்களால் கொடுமைப்படுத்தப் பட்ட பனூஹாஷிம் குடும்பத்தவர்களில் ஒரு பிரிவினர் இலங்கையில் வந்து குடியேறியதுடன் இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகம் ஆரம்பமாகின்றது எனக் குறிப்பிடுகின்றார்.(7)

இலங்கைக்கும் அரபுத் தீபகற்பத்திற்குமிடையிலான தொடர்பு, இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலேயே ஆரம்பமாகியதை குறிக்கும் ஒரு முக்கிய வரலாற்று ஆதாரம் உள்ளது. கி.பி. 953ம் ஆண்டு எழுதப்பட்ட 'அஜாஇபுல் ஹிந்த்' எனும் நூலின் ஆசிரியர் அல் கஸ்வீனி பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'நபி (ஸல்) அவர்களின்

போதனைகள் பற்றி கேள்வியுற்ற இலங்கை மக்கள், அவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அவர்களது போதனைகள் பற்றி மிக ஆதாரபூர்வமான செய்தியை அறிந்துவர அரபுநாட்டுக்கு அனுப்பினார்கள். மிக நீண்ட, அபாயமான பயணத்தின் பின்னர் அத்தூதுவர் மதினாவை அடைந்தபோது நபி (ஸல்) அவர்களது மரணம் நிகழ்ந்து, கலீபா உமரின் (கி.பி. 635-644) காலப்பிரிவாக இருந்தது. அந்தத் தூதுவர் கலிபா உமரைச் சந்தித்து நபி (ஸல்) அவர்கள் பற்றியும், அவரது போதனைகள் பற்றியும் விரிவாக அறிந்து நாடு திரும்பும் வழியில் மரணித்தார். எனினும் அவருடன் துணைக்குச் சென்ற பணியாள் இலங்கைக்குத் திரும்பிவந்து இஸ்லாத்தைப் பற்றியும், அதன் ஆரம்பகால வரலாறு பற்றியும் எடுத்துக்கூறினார். நிச்சயமாக இது இலங்கை மக்கள் மத்தியில் இஸ்லாத்தைப் பற்றிய ஒரு நல்ல கருத்தைத் தோற்றுவித்திருக்கலாம் எனவும், முஸ்லிம்கள் சுதேச ஆட்சியாளர்களால் வரவேற்கப்பட இதுவும் ஒரு முக்கிய காரணியாக அமைந்திருக்கலாம் எனவும் நாம் அனுமானிக்க இடமுள்ளது.(8)

கி.பி. பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த பாரசீக வரலாற்றாசிரியர் பிரிஷ்தேயும் முஸ்லிம்களுக்கும், இலங்கைக்குமிடையிலான தொடர்பு ஆரம்பகால கலீபாக்களின் காலப் பிரிவிலேயே ஆரம்பமாகின்றது எனக் குறிப்பிடுவதும் இது தொடர்பாக கவனிக்கத்தக்கதாகும்.(9)

கி.பி. எட்டாம் நூற்றாண்டளவில் இலங்கையில் முஸ்லிம் குடியேற்றங்கள் காணப்பட்டதை அரபு வரலாற்றாசிரியர் அல்-பலாஸ்ரி (கி.பி. 892) குறிப்பிடும் ஒரு வரலாற்று நிகழ்வு மூலம் நாம் மிக உறுதியாக அறிய முடிகின்றது. முஸ்லிம்களால் கி.பி. 715ம் ஆண்டு சிந்துப் பிரதேசம் கைப்பற்றப்பட முன்னர், "ஜெஸீரதுல் யாகூத்" (மாணிக்கத் தீவு) என அழைக்கப்படும் இலங்கைத் தீவின் மன்னன் உமையா ஆட்சியில் ஈராக் பிரதேசத்தின் மாகாண அதிபதியாக விளங்கிய ஹஜ்ஜாஜ் இப்னு யூஸுபிடம், இலங்கையில் பிறந்த, அவர்களது தந்தையரை இழந்த, சில அனாதைப் பெண்களை அனுப்பிவைத்தார். இந்த அனாதைப் பெண்களைச் சுமந்து சென்ற கப்பல் இந்தியாவில் தேபல் (நவீன கராச்சி) என்னுமிடத்தில் கடற்கொள்ளைக்காரர்களால் தாக்கப்பட்டு, அப்

பெண்கள் சிறைபிடிக்கப்பட்டனர். அவர்களில் பனூ யர்பூ குழுவைச் சார்ந்த ஒரு பெண் "யா ஹஜ்ஜாஜ்" என சத்தமிட்டாள். இந்த விடயத்தை ஹஜ்ஜாஜ் இப்னு யூசுப் கேள்வியுற்றதும் சிறைபிடிக்கப்பட்ட அப்பெண்களை விடுதலை செய்யும்படி சிந்தின் ஆட்சியாளரான ராய் தாஹிருக்கு (Rai Dahir) ஒரு செய்தி அனுப்பினார். இதற்கு எத்தகைய பதிலும் கிடைக்காததால், அவரது ஆட்சிக்கெதிராக தொடர்ச்சியாகப் பல முற்றுகைகள் மேற்கொள்ளப்பட்டு கி.பி. 715ம் ஆண்டு சிந்து கைப்பற்றப்பட்டது, வரலாற்றாசிரியர் அல் பலாஸூரி தனது "புதூஹூல் புல்தான்" எனும் நூலில் குறிப்பிடும் இச்சம்பவமானது கி.பி. எட்டாம் நூற்றாண்டளவில் இலங்கையில் அரபுக் குடியேற்றங்கள் காணப்பட்டதையும், இலங்கை மன்னன், இந்த அனாதைப் பெண்களை உமையா மாகாண அதிபருக்கு அனுப்பியதன் மூலம், இஸ்லாமிய உலகுடன் நல்லுறவை வளர்க்க மேற்கொண்ட ஆக்கமான முயற்சிகள் பற்றியும் நாம் அறிய முடிகின்றது.(10)

அரபு வணிகர், தென்னாசிய, தென்கிழக்காசிய நாடுகளுடன் வணிகத்தில் ஈடுபட்ட காலப்பிரிவில், அவர்களது மனைவிமார்களை அழைத்துவரும் வழக்கம் இருக்கவில்லை. எனவே, இந்நாடுகளில் சுதேசிப் பெண்களையே அவர்கள் திருமணம் முடித்திருத்தல் வேண்டும் என நாம் அனுமானிக்க முடியும்.

கி.பி. ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகள் முஸ்லிம் வணிகர்கள் பாரசீக வளைகுடாவிலிருந்து சீனாவின் கண்டன் வரை பரந்து வணிகத்தில் ஈடுபட்டு, இந்து சமுத்திர வணிகத்தில் மிகச் செல்வாக்கும், பலமும் பெற்று விளங்கினர். இக்காலப்பிரிவில் இலங்கையில் முஸ்லிம்களின் வணிகச் செயல்பாடுகள் அதிகரித்து, துறைமுக நகரங்களில் முஸ்லிம் குடியேற்றங்களும் வளர்ச்சியடைந்தன. இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட கி.பி. எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டுகளைச் சார்ந்த அரபு நாணயங்கள், பிரித்தானிய நூதனசாலையிலும் இலங்கை அரும்பொருட் காட்சிசாலையிலும் உள்ளன. இவை கி.பி. எட்டாம் ஒன்பதாம் நூற்றாண்டுகளில் அரபு வணிகர் செயல்பட்டதனை உறுதிப்படுத்தும் தொல்பொருள் சான்றுகளாகும்.

நாம் ஏற்கனவே நோக்கியவாறு பாரசீக வளைகுடாவிலிருந்து, தூரகிழக்கு நோக்கிப் புறப்பட்ட கப்பல்கள் இந்தியக் கரையில் அல்லது இலங்கைக் கரையில் உள்ள துறைமுகங்களில் தங்கிச்செல்ல வேண்டிய நிலை காணப்பட்டது. கடல் பயணத்தில் மிகத் தேர்ச்சிபெற்ற அராபியர் தென்மேற்கு-வட கிழக்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றுகளை தமது கப்பல் பயணத்திற்கு மிகத் திறமையாகப் பயன்படுத்தினர். பாரசீக வளைகுடாவிலிருந்து ஒரு காற்றைப் பயன்படுத்தி தென் இந்திய, இலங்கைத் துறைமுகங்களை அடைந்து, அடுத்த காற்று வீசும்வரை காத்திருந்து, அதனைப் பயன்படுத்தி தூரகிழக்கிற்கான பயணத்தை மேற்கொண்டனர். இதன் மூலம் அவர்கள் தூரகிழக்கிலிருந்து பாரசீக வளைகுடா விலுள்ள பஸ்ரா வரை நேரடியான ஒரு கடல் வணிகப் பாதையை ஏற்படுத்தி கீழைத்தேய நாடுகளில் தாம் பெற்றுக்கொண்ட வணிகப் பொருட்களை அங்கு சுமந்துசென்று, மத்தியதரைக் கடலின் கிழக்குக் கரையில் அமைந்திருந்த நகரங்களான டமஸ்கஸ், அலெப்போ ஆகிய இடங்களுக்குத் தரைமார்க்கமாக எடுத்துச் சென்றனர்.(11)

அநுராதபுர ஆட்சியில் அரபு வாணிகம்

இலங்கை வரலாற்றில் அநுராதபுர ஆட்சிக்காலப்பிரிவில் முக்கிய துறைமுகமாக மாந்தைத் துறைமுகம் விளங்கியது. 1887ல் W.J.S போக் (Boake) 1907, 1927, 1928ம்ஒ ஆண்டுகளில் A.M. ஹோகாட் (Hokat) ஆகியோர் நடத்திய தொல்பொருள் ஆய்வுகள் இலங்கையின் வெளிநாட்டு வணிகத்தில் மாந்தை பெற்றிருந்த முக்கியத்துவத்தை உணாத்தி நிற்கின்றன.(12)

இலங்கையின் வடகிழக்கில் மன்னாருக்கு அண்மையில் அமைந்திருந்த மாந்தைத் துறைமுகம், மஹாதொட்ட, மஹாதித்த, மான்தொட்ட எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டது. கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்தே இலங்கையுடனான சர்வதேசிய வணிகத்தின் முக்கிய துறைமுகமாக அது விளங்கியது.

அராபியர்களின் வணிகம் மிக உச்ச நிலையிலிருந்த கி.பி. 9ம், 10ம் நூற்றாண்டுகளிலும் மாந்தைத் துறைமுகம் ஒரு பிரதான

பாதை மூலம் தலைநகரமான அநுராதபுரத்துடன் இணைக்கப்பட்டிருந்து. அத்துடன் அது இந்து சமுத்திர வணிகத்துடன் தொடர்புற்றிருந்த இரண்டு சர்வதேசிய வணிகப் பாதைகளுடனும் இணைந்திருந்தது. இதில் ஒரு பாதை மலபார் கரையிலிருந்து புறப்பட்டு அரபுத் தீபகற்பம், பாரசீகம், எகிப்தைச் சென்றடைந்தது. மற்றைய பாதை சோழமண்டலக் கரை வழியாக வங்காள விரிகுடா, மலாக்கா, சுமாத்திரா, ஜாவா, மொலூக்கஸ், சீனா ஆகிய இடங்களுக்குச் சென்றது. இந்த இரண்டு பாதைகளையும் இணைத்த மாந்தைத் துறைமுகமானது கிழக்கிற்கும் மேற்கிற்குமிடையிலான வணிகத்தில் ஒரு மத்தியநிலையமாக விளங்கியது. மாந்தையிலும், அதனைச் சூழ உள்ள பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின்போது கண்டெடுக்கப்பட்ட கி.பி. 8ம்–11ம் நூற்றாண்டுகளுக்கிடையிலான மத்திய கிழக்கு நாடுகளைச் சார்ந்த மட்பாண்டங்களும் சீனாவைச் சார்ந்த மட்பாண்டங்களும் இவ்வணிகத்தில் அராபியா, சீனா வகித்த பங்கை விளக்குகின்றன.

மாந்தைக்கு அண்மையில் காணப்படுகின்ற பாவோபாப் மரங்கள் பற்றிய குறிப்பும் இது தொடர்பாகக் கவனிக்கத்தக்க தாகும். Adar Ponik digitata என்ற தாவரவியல் பெயரைக்கொண்ட அம் மரம் கிழக்காபிரிக்காவிற்கே உரியதென்றும், அரபு வணிகத் தொடர்பு மூலமாகவே இது இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது எனவும் கருதப்படுகின்றது.(13)

மன்னார் மாவட்டத்தில் திருக்கேதீஸ்வரம், எல்லுபிட்டிய, புளியந்தீவு ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட மூன்று அரபுச் சிலாசனங்கள் கி.பி. 9ம், 10ம் நூற்றாண்டுகளில் அநுராதபுர ஆட்சியின் இறுதிக் காலப்பிரிவில், துறைமுகங்களை அண்டிய பிரதேசங்களில் அரபுக் குடியேற்றங்கள் காணப்பட்டதையும் அரபு வணிகர்கள் வியாபார நோக்கத்திற்காக உள்நாட்டை நோக்கி பயணம் செய்ததையும் காட்டுகின்றன. இவை ஸாஸானிய இஸ்லாமிய மட்பாண்டங்கள் (Sasanian Islamic) என ஆய்வாளர்களால் இனங்காணப்பட்டுள்ளன. இந்நூலில் இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட அரபுச் சிலாசனங்கள் பற்றிய அத்தியாயத்தில் இதுபற்றிய விரிவான விளக்கம் இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகளின் கல்வி-விஞ்ஞான கலாசார நிறுவனம் (UNESCO) கலாசார முக்கோணத் திட்டத்தின்கீழ் அண்மையில் மேற்கொண்ட அகழ்வாய்வுகளின்போது கி.பி. 7ம் நூற்றாண்டிற்கும் 9ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பிரிவைச் சார்ந்த மட்பாண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் சில மிஹிந்தலையிலிருந்த புராதன மருந்துசாலையொன்றின் இடிபாடுகளிடையே கண்டெடுக்கப்பட்டன. இந்த மட்பாண்டங்களில் இம் மருந்துசாலைக்கு மருந்துகள் இறக்குமதிசெய்யப்பட்டிருக்கலாம் அல்லது சில மருந்துப் பொருட்களை பாதுகாக்க அவை பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என அனுமானிக்க முடிகின்றது. இது தவிர கி.பி. 12ம் 13ம் நூற்றாண்டைச் சார்ந்த மத்திய கிழக்கு மட்பாண்டங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது அநுராதபுர ஆட்சிக்காலப்பிரிவில் நிலவிய இந்த வணிகத் தொடர்புகளும் செயல்பாடும் பொலன்னறுவை ஆட்சிக்காலப்பிரிவிலும் தொடர்ந்து நிலைத்ததைக் காட்டுகின்றது.(14)

இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, வணிகக் குடியேற்றம், பரம்பல் ஆகியவற்றோடு தொடர்புடைய அம்சங்கள் முஸ்லிம் உலகின் அரசியல் நிகழ்வுகள், மாற்றங்களின் பின்னணியில் ஆராயப்படுதல் அவசியமாகும். ஏனெனில் இலங்கையின் உள்நாட்டு அரசியல் மாற்றங்கள் மட்டுமன்றி, முஸ்லிம் உலகில் நடைபெற்ற முக்கியமான அரசியல் மாற்றங்களும் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் செல்வாக்குச் செலுத்தின.

பொலன்னறுவை ஆட்சியில் முஸ்லிம் வாணிகம்

கி.பி. 9ம் 10ம் நூற்றாண்டு காலப்பிரிவு இஸ்லாமிய உலகில் அப்பாஸிய ஆட்சி மிக எழுச்சிபெற்று விளங்கிய ஒரு காலப்பிரிவாகும். இக்காலப்பிரிவு இலங்கையில் பொலன்னறுவை ராச்சியத்தின் ஆட்சிக்காலப்பிரிவாக விளங்கியது. அப்பாஸிகளின் இந்த உன்னத ஆட்சிக்காலப்பிரிவை பேராசிரியர் ஹிட்டி Golden Prime of Abbasiads அபபாஸிகளின் பொற்காலம் என வர்ணிப்பது போன்று பேராசிரியர் அரசரட்னம் பொலன்னறுவை ஆட்சியில்

இந்த உன்னத காலப்பிரிவை (Classical age of Sinhala power) சிங்கள ஆட்சியின் உன்னத காலம் என வர்ணிக்கின்றார்.(15)

பொலன்னறுவை ஆட்சிக்காலப்பிரிவில் முஸ்லிம்கள் நாட்டின் சர்வதேசிய வணிகத்தில் படிப்படியாக மிக முக்கிய இடத்தைப் பெறலாயினர். வெளிநாட்டு வணிகத்தின் வளர்ச்சியோடு முஸ்லிம்கள் கரையோரப் பகுதிகளில், குறிப்பாகத் துறைமுக நகரங்களில் பெருமளவு குடியேறலாயினர். அரபு வணிகத்தில் மாந்தைத் துறைமுகம் வகித்த முக்கிய இடத்தையும், அரபுக் குடியேற்றங்கள், அதனை அண்டிய பிரதேசங்களில் காணப்பட்டதற்கான தொல்பொருள் சான்றுகளையும் மேலே நோக்கினோம்.

இக்காலப்பிரிவில் அரபு வணிகர்களின் முக்கிய துறைமுகங்களுள் ஒன்றாகவும், அவர்களது முக்கிய குடியேற்றங்களில் ஒன்றாகவும் கொழும்பு விளங்கியது. கொழும்பில் அரபு வணிகர்கள் காணப்பட்டதையும், அவர்களது குடியேற்றம் நிலவியதையும் அப்பாஸிய ஆட்சியின் தலைநகரான பக்தாதுடன் அவர்கள் கொண்டிருந்த தொடர்பையும் வரலாற்றுக் குறிப்புகளும், தொல்பொருள் சான்றுகளும் நிரூபிக்கின்றன. மத்திய காலப்பிரிவில் கொழும்பில் மாணிக்க வியாபாரிகள் காணப்பட்டதை கி.பி. 971-1051க்கும் இடைப்பட்ட காலப்பிரிவைச் சார்ந்த அறிஞர் அல் பெரூனி அவரது "கிதாபுல் ஜமாஹிர் ப மஃரிபதில் ஜவாஹிர்" என்னும் நூலில் குறிப்பிடும் ஒரு சம்பவம் மூலம் அறிய முடிகின்றது. அல்-பெரூனி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

'அபூ பிஷ்ர் அஸ்-ஸீராபி, ஸெரன்தீபில் அவரது மாமனாரது வீட்டில் இருந்தபோது, அவரது மாமனார் ஒரு சிவப்பு மாணிக்கக் கல்லை வரவழைத்து இந்த மாணிக்கக் கல்லிலிருந்து பரவிய ஒளியின் துணைகொண்டு ஒரு புத்தகத்தைப் படித்ததாக குறிப்பிடுகின்றார். இது உண்மையில் அவருக்கு ஆச்சரியத்தை அளித்த, நம்ப முடியாத ஒரு விடயமாகக் காணப்பட்டது. ஏனெனில் வேறு எந்த வெளிச்சத்தின் துணையுமின்றி இரவில் மாணிக்கக் கல்லின் வெளிச்சத்தின் துணைகொண்டு மட்டும் ஒருவன் பார்த்தல் முடியாது." ஆனால் அம்மாணிக்கக் கல் அரைச் சதுர வடிவமாக அமைந்திருந்ததால் அதன் ஒளி புத்தகத்தில் காணப்பட்ட

வார்த்தைகளில் பரவி ஒளிபெருக்கியிருக்கலாம் என அல்-பெரூனி விளக்கமளிக்கின்றார்.(16)

கொழும்பு முக்கிய துறைமுகமாக விளங்கினாலும் கொழும்புக்கு அண்மையில் காணப்பட்ட நீர்கொழும்பு முக்கிய சிறுதுறைமுகங்களுள் ஒன்றாக விளங்கியது. நீர்கொழும்பு, ஒரு களப்பாக இருந்ததால் அரபு வணிகர்கள் தங்களது கப்பல்களை நங்கூரமிட்டு மிக ஆறுதலாகப் பழுதுபார்க்கும் வசதி காணப்பட்டது. நீர்கொழும்பைச் சூழ உள்ள சில இடங்கள் பலகத்துறை, கம்மல்துறை போன்ற பெயர்களைப் பெற்றிருப்பதானது அரபு வணிகர்கள் இப்பகுதிகளில் அவர்களது கப்பல்களைக் கட்டும் பணியிலும், பழுதுபார்க்கும் பணியிலும் ஈடுபட்டிருந்தார்கள் என அனுமானிக்க இடமளிக்கின்றது.(17)

கி.பி. 10ம் நூற்றாண்டில் கொழும்பில் கணிசமான ஒரு முஸ்லிம் குடியேற்றம் காணப்பட்டதையும் அவர்கள் அப்பாஸியத் தலைநகரான பக்தாதுடன் வணிகத் தொடர்பு மட்டுமன்றி, கலாசார உறவையும் ஏற்படுத்திக்கொண்டிருந்ததையும் கொழும்பில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி. 9ம் நூற்றாண்டைச் சார்ந்த கூபி எழுத்து வடிவான அரபுச் சிலாசனம் மூலம் நாம் அறிய முடிகின்றது.

கொழும்பில் வாழ்ந்த முஸ்லிம்கள் இஸ்லாத்தின் கோட்பாடுகள், கிரியைகள் பற்றித் தமக்குப் போதிப்பதற்காக ஒரு மார்க்க அறிஞரை அனுப்பிவைக்கும்படி பக்தாதிலுள்ள கலீபாவுக்கு வேண்டுகோள் விடுத்தனர். இந்த வேண்டுகோளுக்கிணங்க காலித் பின் அபூபகாயா என்னும் மார்க்க அறிஞரை கலீபா அனுப்பி வைத்தார். அவர் இலங்கைக்கு வந்து ஒரு மஸ்ஜிதை நிறுவி தனது சன்மார்க்கப் பணியை சிறப்பாக நிறைவேற்றி ஹிஜ்ரி 317ல் (கி.பி. 929) மரணித்தார். அவர் கட்டிய பள்ளிவாசலின் அண்மையில் அவர் அடக்கம் செய்யப்பட்டார். அவரது மரணத்தின் பின்னர், அவரது அடக்கஸ்தலத்தில் பதிப்பிப்பதற்காக கலீபா ஒரு சிலாசனத்தை அனுப்பிவைத்தார்.

இச்சிலாசனம் அவரது அடக்கஸ்தலத்தில் 800 ஆண்டுகள் வரை காணப்பட்டது. இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலப்பிரிவில் (கி.பி. 1658-1796) ஓர் ஒல்லாந்து அதிகாரி,

அதனை அந்த இடத்திலிருந்து எடுத்துச் சென்று அவரது வீட்டின் படிக்கட்டாக அதனைப் பயன்படுத்தினார். பிரித்தானிய காலப்பிரிவில் இலங்கையில் பிரதம நீதியரசராகப் பணிபுரிந்த ஸேர் அலெக்சாண்டர் ஜோன்ஸ்டனின் காலப்பிரிவு வரை அது அந்த இடத்திலேயே காணப்பட்டது. அதனை ஓர் அரபுச் சிலாசனம் என இனம் கண்ட அலெக்சாண்டர் ஜோன்ஸ்டன் அதனை அங்கிருந்து அகற்றி கொழும்பு தேசிய நூதனசாலைக்கு எடுத்துச்செல்ல ஏற்பாடு செய்தார். அதன் பின்னர் அதன் பிரதி ஒன்று பெறப்பட்டு கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தின் அரபுப் பேராசிரியர் ஸமுவெல் லீ (Samuwal Lee) அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அவர் அதனை வாசித்து அதுபற்றிய அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தார். ஸேர். அலெக்சாண்டர் ஜோன்ஸ்டன் 1827ம் ஆண்டு பிரிட்டனிலுள்ள ரோயல் ஆராய்ச்சிக் கழகத்தில் சமர்ப்பித்த ஓர் ஆய்வுக் கட்டுரையில் இந்த மிஸான் பற்றிய ஒரு விளக்கத்தை அளித்துள்ளார்.(18)

இலங்கையின் வெளிநாட்டு வணிகத்தில் அரபு வணிகர்கள் மிகப் பாரிய செல்வாக்கைச் செலுத்தியதுடன். கொழும்பு அவர்களின் மிக முக்கிய வணிக மத்திய நிலையமாக மிக நீண்டகாலமாக விளங்கிவந்துள்ளது என R.L. புரோஹியர் குறிப்பிடுவது இங்கு கவனிக்கத்தக்கதாகும்.(19)

கொழும்பு சிலாசனம் கி.பி. 10ம் நூற்றாண்டின் அரபுக் குடியேற்றம் பற்றி பல முக்கிய உண்மைகளை விளக்குகின்றது. கொழும்பில் வாழ்ந்த முஸ்லிம்கள் தங்களது சன்மார்க்கப் போதனைக்காக ஒரு மார்க்க அறிஞரை அனுப்பும்படி பக்தாதின் கலீபாவுக்கு வேண்டுகோள் விடுக்கக்கூடிய அளவுக்குச் செல்வாக்குப் பெற்றிருந்ததையும், முஸ்லிம்கள் ஒரு க்ணிசமான தொகையினராகக் காணப்பட்டதையும், பக்தாதுடன் அவர்கள் மிக நெருக்கமான தொடர்பு கொண்டிருந்ததையும் இது காட்டுகின்றது. மேலும், இந்நாட்டின் சிங்கள மன்னர்கள் முஸ்லிம்களுக்குப் பூரண மதசுதந்திரத்தை வழங்கியிருந்ததானது மத சகிப்புத் தன்மைக்கு ஒரு சிறந்த சான்றாக விளங்குகின்றது.(20) இலங்கையில் காணப்பட்ட மத சகிப்புத்தன்மை, தாராளத் தன்மை பற்றி அரபு வரலாற்றாசிரியர் கள், பயணிகளின் அவதானங்கள் இது தொடர்பாக கவனிக்கத் தக்கதாகும். கி.பி. 12ம் நூற்றாண்டைச

சேர்ந்த அல்-இத்ரீஸ் இலங்கை மன்னனின் ஆலோசனை சபையில் நான்கு பௌத்தர்களும், நான்கு முஸ்லிம்களும், நான்கு கிறிஸ்தவர்களும், நான்கு யூதர்களும் காணப்பட்டதாகவும் எல்லா மதங்களைச் சார்ந்தவர்களும் வரவேற்கப்பட்டு மதிக்கப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றார்.(21)

முஸ்லிம்கள்பால் இலங்கை ஆட்சியாளர்கள் கொண்டிருந்த நம்பிக்கையும், நல்லெண்ணமும் முஸ்லிம்கள் இலங்கை மன்னனுடன் ஏற்படுத்திக்கொண்ட நல்லுறவும் அப்பாஸியத் தலைநகரான பக்தாதுடன் மிக நெருங்கிய தொடர்பை அவர்கள் ஏற்படுத்திக்கொள்ளவும் அதன் மூலம் பல்வேறு பயன்களைப் பெறவும் வழிகோலியது.

அப்பாஸிய ஆட்சியின் கீழ் குறிப்பாக கலீபா ம.ீமூனின் (கி.பி. 813) காலப்பிரிவில் பக்தாத் முஸ்லிம் உலகின் மிக வளமமிக்க கலாசார மத்திய நிலையமாக வளர்ச்சியடைந்தது. பக்தாத் நகரம் நிர்மாணிக்கப்பட்டு மூன்று நூற்றாண்டுகளில் கலீபா ம.ீமூன் அறிவுக்கு அளித்த தூண்டுதலினால் "பைத்துல் ஹிக்மா" என்ற மொழிபெயர்ப்பு நிலையம் நிறுவப்பட்டு, அக்காலப்பிரிவில் கிரேக்க மொழியில் காணப்பட்ட அறிவியல், தத்துவ நூல்கள் அரபு மொழியில் பெயர்க்கப்பட்டன. அரிஸ்டாட்டில், கெலன் (Galen) போன்றவர்களின் அறிவியல் தத்துவ நூல்கள் அரபுமொழியில் பெயர்க்கப்பட்டன. இம்மொழிபெயர்ப்பு முயற்சிகளைத் தொடர்ந்து அல்ராஸி (கி.பி. 865-965), அலி இப்னு ஸீனா (980-1037) போன்ற மருத்துவ மேதைகள் மூல நூல்கள் எழுதினர்.

இக்காலப்பிரிவில் இலங்கை முஸ்லிம்கள் அப்பாஸிய ஆட்சியின் தலைநகரான பக்தாதுடன் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பு காரணமாக இந் நூல்கள் பற்றிய அறிவையும், பரிச்சயத்தையும் அவர்கள் பெற்றிருந்ததை நாம் அறிய முடிகின்றது. அந்த நூல்களை விளங்குமளவுக்கு அரபு மொழியில் புலமை உள்ளவர்களும் அவர்கள் மத்தியில் காணப்பட்டிருத்தல் வேண்டும். பிரித்தானிய ஆட்சியில் இலங்கையில் பிரதம நீதியரசராக இருந்த ஸேர் அலெக்சாண்டர் ஜோன்ஸ்டன் இங்கிலாந்திலுள்ள அரசாங்க செயலாளருக்கு அனுப்பிய ஓர் அறிக்கையில், அவரது காலப்பிரிவில் முஸ்லிம் மருத்துவர்கள் அத்துறையில் பெற்றிருந்த அறிவையும்

திறமையையும் பாராட்டிக் குறிப்பிடுவதோடு, அவர்கள் இந்நாட்டுக்கு அறிமுகப்படுத்திய நூல்கள் பற்றியும் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> 'இலங்கையில் அவர்கள் அறிமுகப்படுத்திய மருத்துவம் பற்றிய நூல்களில் அவிசென்னாவின் (அலி இப்னு ஸீனா) நூல்கள் முக்கிய இடத்தைப் பெற்றன. மேலும் அவர்கள் அரிஸ்டோடில், பிளேட்டோ, யுக்லிட், கேலன், டொலமி ஆகியோர்களின் நூல்களையும் அறிமுகப்படுத்தினர். நான் இலங்கையில் இருக்கும்போது முஸ்லிம் மார்க்க அறிஞர்களும், வணிகர்களும் அடிக்கடி என்னிடம் இந்நூல்களில் இருந்து பெறப்பட்ட சில பகுதிகளைக் கொண்டுவந்து காட்டுவார்கள். இந்தப் பகுதி களைக் கொண்டுள்ள மூல நூலை அவர்களது மூதாதையர்கள் பக்தாதிலிருந்து பெற்றுக்கொண்டனர் என்றும், அவர்களது குடும்பங்களில் பல நூற்றாண்டுகளாக அவை பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளதெனவும் அவர்கள் கூறினார்கள்.(22)

கி.பி. 10ம் 11ம் நூற்றாண்டுகள் இலங்கை முஸ்லிம்கள் அப்பாஸியத் தலைநகரமான பக்தாதுடன் கொண்டிருந்த கலாசார உறவுக்கு இது ஒரு சிறந்த சான்றாக விளங்குவது மட்டுமன்றி இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் இப்னு ஸீனாவின் மருத்துவ நூல்கள், கிரேக்க தத்துவ நூல்களில் ஆர்வம் காட்டி அவற்றை விளங்கும் ஆற்றல் படைத்த ஒருசிலரேனும் காணப்பட்டதையும் இது உறுதிப்படுத்துகின்றது. இலங்கை முஸ்லிம்கள் கி.பி. 10ம், 11ம் நூற்றாண்டுகளில் வெறும் வணிகச் சமூகமாக மட்டும் விளங்கவில்லை. கலாசார, பண்பாட்டு ரீதியிலும் கணிசமான வளர்ச்சியினைக் கொண்டிருந்தனர். இஸ்லாமிய உலகோடு கலாசார உறவை ஏற்படுத்தி அதனால் ஆக்கபூர்வமான பயனடைந்து தமது கலாசார பண்பாட்டுக்கு வளம் சேர்த்துக்கொண்டவர் களாகவும் அவர்கள் விளங்கினார்கள்.

அரபுப்பயணிகளின் இலங்கை பற்றிய குறிப்புகள்

கி.பி. 10ம், 11ம் நூற்றாண்டுகளில் அரபுப் புவியியலாளர்களின்

நூல்களிலும் இலங்கையைத் தரிசித்த பயணிகளின் நூல்களிலும் இலங்கை பற்றிய குறிப்புக்கள் அதிகமாக இடம்பெறுவதை நாம் காண முடிகின்றது. ஸுலைமான் தாஜிர் என்ற அரபுப் பயணி கி.பி. 850ம் ஆண்டுகளில் இலங்கையைத் தரிசித்தார். இலங்கை பற்றிய அவரது அவதானங்களும் அவர் ஆதம் மலைக்கு மேற்கொண்ட பயணம் பற்றிய குறிப்புக்களும் அபூ ஸெய்த் அஸ்-ஸிராபியின் "ஸில்ஸிலதுத் தவாரிக்" என்னும் நூலில் காணப்படுகின்றன. அல்-மஸ்ஊதி கி.பி. 930ம் ஆண்டளவில் இலங்கையைத் தரிசித்தார். அவரது புகழ்பெற்ற பயண நூலான "முருஜுஸ் ஸஹப்" என்னும் நூலில் இலங்கை மக்களின் பழக்க வழக்கங்கள் பற்றி மிகச் சிறந்த விளக்கமொன்றை அளிக்கிறார். இலங்கையில் அவர் அவதானித்த அரசனின் மரண ஊர்வலம் பற்றிய அவரது வர்ணனை மிகத் தத்ரூபமானது. அரபுப் புவியியலாளர்களுள் அல்-இஸ்தக்ரீர் (கி.பி. 950), இப்னு ஹவ்கல் (கி.பி. 973), அல்-மக்ரிஸி (கி.பி. 985) ஆகியோர் இலங்கையைத் தரிசிக்காவிட்டாலும், இலங்கையைத் தரிசித்த ஏனைய கடல் பயணிகள், யாத்ரீகர்கள் மூலம் பெற்ற செய்திகளை தமது நூல்களில் உள்ளடக்கியுள்ளனர். அல் இஸ்தக்ரியின் "நுஸ்ஹதுல் முஷ்தாக் பீ இக்திராகில் ஆபாக்", இப்னு ஹவ்கலினதும் அல்-மக்திஸியினதும் "அஹ்ஸனுத் தகாஸிம் பீ ம.ஃரிபதில் அகாலிம்" ஆகிய நூல்களிலும் இக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. இந்நூல்கள் குறிப்பிடும் தகவல்கள் மூலம் கி.பி. 10ம், 11ம் நூற்றாண்டுகளில் இலங்கை அரபு வணிகர்களின் செயல்பாடுகள், அவர்களது வணிகப் பொருட்கள் பற்றிய விவரங்களை நாம் பெற்றுக்கொள்ள முடிகின்றது.(23)

"அல்பு லைலா வலைலா" எனப் புகழ்பெற்ற ஆயிரத்தோர் இரவுக் கதைகளில் காணப்படும் சிந்துபாத்தின் வீரச் செயல்கள் பற்றி விளக்கும் கதையில் "செரந்தீப்" என அழைக்கப்பட்ட இலங்கை பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. அரபுக் கடல் பயணிகளின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட இக்கதைகள் அப்பாஸிய கலீபா ஹாரூன் அல் ரஷீதின் (கி.பி. 786-809) காலப்பிரிவில் தொகுக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. இக்காலப்பிரிவில் முக்கிய வணிகத் துறைமுகமாக பாரசீக வளைகுடாவிலுள்ள பஸ்ரா விளங்கியது. பஸராவிலிருந்து தெற்காசியா, கிழக்கிந்தியத் தீவுகள், சீனாவை நோக்கி வணிகக்

கப்பல்கள் பயணம் செய்தன. இலங்கை இந்த வணிகத்தில் பெற்றிருந்த முக்கியத்துவத்தை சிந்துபாத்தின் பயணங்களிலிருந்து நாம் அறிய முடிகின்றது. இலங்கை 'ஜஸீரதுல் யாகூத்' (மாணிக்கத் தீவு) எனக் குறிப்பிடப்படுகின்றது. சிந்துபாத்தின் ஏழாவது பயணத்தில் அவர் இலங்கை மன்னனிடமிருந்து பக்தாதின் கலீபாவுக்கு சில அன்பளிப்புகளை எடுத்துச் சென்றதாகவும் அதனை ஏற்றுக்கொண்ட அரசர் அதற்குப் பிரதியாக இலங்கை மன்னனுக்கு சில அன்பளிப்புக்களை அனுப்பியதாகவும் அது குறிப்பிடுகின்றது. சிந்துபாத் இலங்கையிலிருந்து எடுத்துச் சென்ற வணிகப் பொருட்களில் மாணிக்கக்கற்கள், சந்தனக் கட்டைகள், கற்பூரம்,ஏலம், கறுவா, மிளகு, தேங்காய், யானைத்தந்தம் ஆகியன குறிப்பிடப்படுகின்றன.(24)

இலங்கையுடன் இக்காலப்பிரிவில் அராபியர்கள் கொண்டிருந்த வணிகத்தொடர்பு, இலங்கை வணிகப் பொருட்கள் பற்றிய அவர்களது அறிவு, பரிச்சயம் பற்றியும் இதன்மூலம் நாம் அறியமுடிகின்றது.

மத்திய காலப்பிரிவில் நடைபெற்ற இக் கடல்பயணங்கள் ஆழ்கடலில் பெரும் அபாயங்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டன. டிம் ஸெவ்ரின் (Tim Severin) என்பார் மத்தியகால அரபு வணிகர்களால் பயன்படுத்தப்பட்டது போன்ற ஒரு பலகைக் கப்பலைச் செய்து 1980-81க்கும் இடைப்பட்ட காலப்பிரிவில் ஓமானிலிருந்து சீனா வரையிலான பயணம் மேற்கொள்ளப்பட்ட கடல்பாதையில் பருவப் பெயர்ச்சிக் காற்றைப் பயன்படுத்தி ஓமானிலிருந்து கண்டன் வரை பயணம் செய்தார். "The Sindbad Voyage" என்ற தனது நூலில் அவர் குறிப்பிடும் பயண அனுபவங்கள் அக்காலப்பிரிவில் முஸ்லிம் பயணிகள் மேற்கொண்ட அபாயகரமான கடல் பயணத்தைப் பற்றிய ஓர் அனுமானத்தை நாம் பெறத் துணைபுரிகின்றன. (25)

ஆதம் மலை பற்றிய நம்பிக்கை

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டளவிலேயே முஸ்லிம்கள் மத்தியில் ஆதம் (அலை) அவர்களின் பாதச்சுவடு, ஆதம் மலை என

அழைக்கும் ஒரு மலையில் காணப்படுகிறது என்ற கருத்துப் பரவி, இதனைத் தரிசிக்க முஸ்லிம் உலகின் பல பகுதிகளிலிருந்தும் யாத்திரிகர்கள் வரலாயினர் எனப் பொதுவாகக் கருதப்படுகின்றது.

ஆனால் பேராசிரியர் இமாம், இந்த நம்பிக்கை கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலத்திலிருந்தே முஸ்லிம்கள் மத்தியில் காணப்படுவதாகக் கருதுகின்றார். பிரபல வரலாற்று நூலாசிரியர் இப்னுல் அஸீர் (1234) அலி (றழி) அவர்கள் மூலமாகவும், நபித்தோழர் கதாதா (றழி) மூலமாகவும் அறிவிக்கும் ஒரு ஹதீஸில் ஆதம் (அலை) அவர்கள் இலங்கையில் ஒரு மலையில் இறங்கியதாகக் குறிப்பிடுவதால் இந்த நம்பிக்கை மிகப் பழமையானது எனப் பேராசிரியர் இமாம் கருதுகின்றார்.[26] ஆனால் இது ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. இது பற்றிய வேறு எந்த ஆதாரபூர்வமான அறிவிப்பும் காணப்படவில்லை. எனவே, ஏதோ ஒரு வகையில் பரவிய நம்பிக்கைக்கு நியாயம் கற்பிக்க புனைந்துரைக்கப்பட்ட ஒரு ஹதீஸாக இது இருக்கலாம் எனக் கொள்வதில் தவறில்லை.

ஆதம் (அலை) அவர்களின் பாதச்சுவடு, ஆதம் மலையில் உள்ளது என்ற பாரம்பரிய நம்பிக்கை பற்றி எதையும் உறுதியாகக் கூறமுடியாவிட்டாலும் இந் நம்பிக்கை கி.பி. 10ம் நூற்றாண்டளவில் முஸ்லிம் உலகில் பரவலாகக் காணப்பட்டதையும், முஸ்லிம் உலகின் பல பகுதிகளிலிருந்தும் அப்பாதச் சுவட்டை தரிசிக்க யாத்திரிகர்கள் இலங்கைக்கு வந்தமை பற்றியும் வரலாற்றுக் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

பிரபல அரபுப் பயணி ஸுலைமான் தாஜிர் கி.பி. 850ல் ஆதம் மலைக்கு அவர் மேற்கொண்ட யாத்திரை பற்றி அவரது பயண நூலில் விளக்கியுள்ளார். ஆதம் மலையைத் தரிசிக்கச் செல்வதில் ஆரம்ப கால அரபுப் பயணிகள் பல கஷ்டங்களையும், சிரமங்களையும் சிலபோது ஆபத்துக்களையும் எதிர்நோக்கியதை சில குறிப்புக்கள் மூலம் நாம் அறிய முடிகின்றது.

நாட்டின் கரையோரப் பகுதிகளில் குறிப்பாகத் துறைமுக நகரங்களை அண்மித்து வாழ்ந்த சிங்கள மக்களுக்கு முஸ்லிங்களைப் பற்றிய அறிவும பரிச்சயமும் இருந்தாலும்

உள்நாட்டில் வாழ்ந்த சிங்களவர்களுக்கு முஸ்லிம்களுடன் அத்தகைய பரிச்சயமும் பழக்கமும் இருக்கவில்லை. எனவே, அவர்கள் உள்நாட்டுப் பிரதேசங்களில் பயணம் செய்ய முனைந்தபோது அரபு வணிகர்கள் பயணிகளை ஓரளவு சந்தேகத்துடனும் அச்சத்துடனும் நோக்கியதில் எத்தகைய வியப்பும் இல்லை. ஆரம்பத்தில் முஸ்லிம்கள் உள்நாட்டில் பிரவேசிக்க முனைவதை சிங்களவர் தடுத்து நிறுத்தியதாக இப்னு பதூதா குறிப்பிடும் கருத்தும் இங்கு கவனிக்கத்தக்கது. இலங்கைக்கு 929 வந்த அரபுப் பயணியான ஷெய்க் அபூ அப்துல்லா பின் கபீப் என்பவரே ஆதம் மலைக்கான பாதையை முதலில் திறந்துவிட்டவராவார் என இப்னு பதூதா குறிப்பிடுகின்றார்.(27)

அப்துல்லா பின் கபீபுக்கு முன்னதாகவும், யாத்திரிகர்கள் ஆதம் மலைக்கு யாத்திரை மேற்கொண்டிருந்ததால் சிங்களவர் மத்தியில் இருந்த அச்சத்தை அகற்றி எதிர்கால யாத்ரிகர்களுக்கு அவர் வழியமைத்துக் கொடுத்ததையே இப்னு பதூதா இதன் மூலம் கருதுகிறார் என நாம் கொள்ள இடமுள்ளது. பாரசீகத்தில் மிக மதிக்கப்பட்ட ஷெய்க் அப்துல்லாஹ் பின் கபீப் முப்பது தர்வேஷ்களுடன் ஆதம் மலையைத் தரிசிக்கச் சென்றபோது அந்நியர்களான அவர்களுடன் தொடர்புகொள்ள உள்நாட்டில் வசித்த சிங்களக் கிராமவாசிகள் தயங்கினர். அவர்களுக்குச் செல்லும் வழியில் கடுமையான பசியின் காரணமாக உண்பதற்கு எதுவும் இல்லாத நிலையில் ஒரு யானைக் கூட்டத்தைக் கண்டனர். அதில் ஒரு குட்டி யானையைப் பிடித்து உணவாகக்கொள்ள தர்வேஷ்கள் விருப்பம் தெரிவித்தபோது, ஷெய்க் அதனை ஆட்சேபித்தார். ஆனால் களைப்பும், கடுமையான பசியும் மிக்க நிலையில் அவரது சீடர்கள் அதில் ஒரு குட்டியானையைக் கொன்று சாப்பிட்டனர். ஷெய்க் அவர்கள் அந்த உணவில் பங்கு கொள்ளவில்லை. இரவின் நடுப்பகுதியில் அனைவரும் உறங்கிக்கொண்டிருக்கும் நிலையில் யானைக்கூட்டம் வந்து உறக்கத்திலிருந்த சீடர்கள் அனைவரையும் கொன்று பழிதீர்த்துக்கொண்டது. அக் கூட்டத்தில் ஷெய்க் அப்துல்லா பின் கபீபை முகர்ந்துபார்த்து, அவரது குற்றமற்ற தன்மையை உணர்ந்து அதில் ஒரு யானை துதிக்கையால் அவரைத் தூக்கி அதன் முதுகில் அமரச்செய்து, மக்கள் வாழும் பகுதிக்கு அழைத்துச் சென்றது.

அக்காட்சியைக் கண்டு ஆச்சரியமுற்ற மக்கள் முன்னிலையில் அனைவரும் காணும் வகையில் துதிக்கையால் அவரைத் தூக்கி கீழே வைத்தது. அப்போது ஆச்சரியமடைந்த மக்கள் ஷெய்க்கை அரசரிடம் அழைத்துச் சென்று அந்த அற்புத நிகழ்வை எடுத்துக்கூறினர். இலங்கையிலுள்ள யானைகள் நன்றியுணர்வுக்கும் பழிவாங்குதலுக்கும் மிகப் பிரசித்திபெற்றமையாகக் கருதப்படுவதால் இப்னு பதூதா குறிப்பிடும் இச்சம்பவம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சம்பவமாகும் என வரலாற்றாசிரியர் லோனா தேவராஜ் கருதுகிறார்.(28)

சிலாபத்திலுள்ள சிங்களவர்கள் மத்தியில் சிலகாலம் வாழ்ந்த ஷெய்க் அப்துல்லா பின் கபீப் அவரது தாயகத்திற்குத் திரும்பிச் சென்று கி.பி. 943ல் மரணித்தார். அவரின் புகழும், பக்தியும், நாட்டின் பல பகுதிகளிலும் பரவி, அதன் காரணமாக மக்கள் மத்தியில் ஆதம் மலைக்குச் செல்லும் யாத்ரீகர்கள் பற்றிய ஒரு மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டதாக இப்னு பதூதாவின் குறிப்புகள் உணர்த்துகின்றன.

அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "அன்று முதல் அவர்கள் முஸ்லிம்களுக்கு மதிப்பும் மரியாதையும் அளிக்க ஆரம்பித்தனர். தங்களது வீடுகளுக்குள் அவர்களை அனுமதிக்கவும், அவர்களுடன் உணவருந்தவும் செய்தனர். இன்று வரை அவர்கள் ஷெய்க்கிற்கு மதிப்பளித்து 'மாபெரும் ஷெய்க்' என மரியாதையோடு அவரைக் குறிப்பிடுகின்றனர்." (29)

இப்னு பதூதா அவரது சமகாலத்தவர்களாக விளங்கிய பல முஸ்லிம் பெரியார்கள் பற்றிக் குறிப்பிடுகிறார்: 'குணாகர்' என்ற இடத்தில் பள்ளிவாசலில் இருந்த ஷெய்க் உஸ்மான் என்பவரே இப்னு பதூதாவிற்கு, ஆதம் மலைக்கு வழிகாட்டியாக இருந்தார். அரசரும் மக்களும் சென்று இப்பெரியாரைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். நகருக்கு அண்மையில் இருந்த ஒரு குகையில் வாழ்ந்த உஸ்தாத் முஹம்மத் லூரி, பாபா தாஹிர், பாபா கூஸி ஆகியோர் பற்றியும் பதூதா குறிப்பிட்டுள்ளார். மன்னார் முந்தலி என்னுமிடத்தில் குராஸானைச் சேர்ந்த, நோயினால் பாதிக்கப்பட் டிருந்த ஒரு முஸ்லிமைத் தாம் சந்தித்ததாகவும் அவர் கூறுகின்றார்.

கி.பி. 9ம் - 14ம் நூற்றாண்டுகளுக்கிடையில் ஆதம் மலைக்கு யாத்திரை செல்வோரின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தது. ஆதம் மலை உச்சிக்கு நூறு அடியின் கீழ் பகவா லென என்ற குகையில் கண்டெடுக்கப்பட்ட கி.பி. 13ம் நூற்றாண்டைச் சார்ந்த அரபுச் சிலாசனம் இது தொடர்பாகக் கவனிக்கத்தக்கது. "..... அபுல் பஷர்" (மனித இனத்தின் தந்தை) என்ற சொற்கள் பொறிக்கப்பட்ட இச்சிலாசனம், ஆதம் மலைக்கு யாத்திரை மேற்கொண்ட ஒருவரின் நினைவாகப் பொறிக்கப்பட்டிருக்கலாம் என ஊகிக்க இடமுள்ளது. இவ் அரபுச் சிலாசனத்தின் விஷேடம் என்னவெனில் நிஸ்ஸங்கமல்ல மன்னன் (1187-1196) ஆதம் மலைக்கு மேற்கொண்ட யாத்திரை யையும், அதன் பரிபாலனத்திற்காக பல கிராமங்களை மானியமாகக் கொடுத்ததையும் குறிப்பிடும் சிங்கள சிலாசனம், அரபுச் சிலாசனத் திற்கு அணித்ததாகக் காணப்படுவதாகும்.

கி.பி. 10ம் நூற்றாண்டளவில் அப்பாஸிய கிலாபத் பலவீனமடைந்ததைத் தொடர்ந்து முஸ்லிம் உலகின் அரசியல் ஒருமைப்பாடு சீர்குலைந்தது. இதன் விளைவாக முஸ்லிம் உலகின் கிழக்கு, மேற்குப் பகுதிகளில் சிற்றாட்சிகள் தோன்ற ஆரம்பித்தன. அப்பாஸிய ஆட்சியின் தலைநகராக விளங்கிய பக்தாதின் பின்னடைவோடு பாத்திமிகளின் ஆட்சியின் கீழ் ஒரு முக்கிய அரசியல், கலாசார மத்திய நிலையமாக எகிப்து எழுச்சிபெற்றது. எகிப்தில் ஆட்சிபுரிந்த பாத்திமீ ஆட்சியாளர்கள் பக்தாதின் அப்பாஸிய ஆட்சியாளர்களின் கையிலிருந்து இந்து சமுத்திர வணிகத்தைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டனர். இக்காலப்பிரிவில் ஏடன் போன்ற செங்கடல் துறைமுகங்களுக்கும், இந்தியாவுக்குமிடையிலும் எகிப்திற்கும், இந்துசமுத்திரத்திலுள்ள ஏனைய நாடுகளுக்கு மிடையிலும் வணிகத் தொடர்புகள் மிக வளர்ச்சியடைந்ததை வரலாற்று ஆவணங்கள் மூலம் நாம் அறிய முடிகிறது.

கெய்ரோ ஜெனீஸா பத்திரங்கள் (Geniza Papers) என அழைக்கப்படும் பத்திரங்கள், இக்காலப்பிரிவில் இஸ்லாமிய நாடுகளுக்கும், இந்துசமுத்திர, தூரகிழக்கு நாடுகளுக்குமிடையில் காணப்பட்ட சர்வதேசிய வணிகத்தைப் பற்றிய பல முக்கிய

தகவல்களைக் கொண்டுள்ளன. ஏற்கனவே குறிப்பிடப்பட்டவாறு பக்தாதின் பின்னடைவோடு எகிப்து முக்கிய வணிக கலாசார மத்திய தலமாக மாறியதைத் தொடர்ந்து, இன்னொரு முக்கிய மாற்றம் நிகழ்ந்தது. பாரசீக வளைகுடாவிலுள்ள துறைமுகங்களை மிகைத்து செங்கடலிலுள்ள துறைமுகங்கள் வணிக மத்திய தலங்களாக விளங்க ஆரம்பித்தன. ஒரு காலப்பிரிவில் பாரசீக வளைகுடாவிலுள்ள ஸீராப், ஓமான், பஸரா போன்ற துறைமுகங்கள் பெற்றிருந்த இடத்தை இப்போது ஏடன் பெற்றது.(30)

கி.பி. 10ம் நூற்றாண்டில் இலங்கையின் அரசியலில் நடைபெற்ற முக்கிய நிகழ்வு சோழர்களின் படையெடுப்பாகும். கி.பி. 10ம் நூற்றாண்டின் மத்திய காலப்பிரிவில் சில நோக்கங்கள் கருதி சோழர்களின் சிறு சிறு படையெடுப்புக்கள் நடைபெற்றாலும், அந்த நோக்கங்கள் நிறைவேறிய பின்னர் அவர்கள் நாட்டுக்கு மீண்டனர். ஆனால் சோழ மன்னன் ராஜராஜன் (983-1014) ஆட்சியில் நாட்டை தமது அதிகாரத்திற்குட்படுத்தும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட மிக ஒருமுகப்படுத்தப்பட்ட சோழர் களின் படையெடுப்பு நடைபெற்றது. அதன் விளைவாக சிங்கள ஆட்சி முறியடிக்கப்பட்டது. அவர்களது ஆதிக்கம் பரவியதோடு பிரதேசங்கள் அனைத்தும் சோழர்களால் வெற்றிகொள்ளப்பட்டு அநுராதபுரத்தின் கடைசி மன்னன் 5ம் மிஹிந்து 1017ம் ஆண்டு சோழர்களால் சிறைபிடிக்கப்பட்டான். அவனே அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்த கடைசி சிங்கள மன்னனாகும். ராஜராஜனின் புதல்வன் ராஜேந்திரனின் கீழ் நாடு முழுவதும் சோழர் ஆட்சிக்கு உட்பட்டது. நாட்டின் தென்பகுதி யான உருகுணை மிகக் குறுகிய காலப்பிரிவில் சோழ ஆதிக்கத்திலிருந்து விடுதலைபெற்றாலும், சிங்கள மன்னர்களது ஆதிக்கம் ஒரு காலப்பிரிவில் நிலவிய ராஜரட்டை சோழ ஆட்சியின் ஒரு மாகாணமாக மாறியது. சோழர்கள் ஆட்சியில் நடைபெற்ற மிக முக்கியமான அரசியல் மாற்றம், அவர்களது தலைநகரை அநுராதபுரத்திலிருந்து, பொலன்னறுவைக்கு மாற்றியதாகும்.

முதலாம் விஜயபாகு மன்னன் (கி. பி. 1055) கி. பி. 1070ம் ஆண்டு சோழர்களை வெளியேற்றி சிங்கள ஆட்சியை மீண்டும் நிலைபெறச் செய்து பொலன்னறுவையை தலைநகராகக் கொண்டு

ஆட்சி செய்தான். விஜயபாகு மிகத்தீவிரமான ஒரு வணிகக் கொள்கையை கடைப்பிடித்ததால் அவன் வட இலங்கையை கைப்பற்ற முன்னரே அவனது ஆரம்பகால அரசியல் தளமான ருகுணையில் அமைந்திருந்த துறைமுகங்கள் மூலமாக வங்காள விரிகுடாப் பகுதியில் வணிகத்தில் ஈடுபட முயற்சிகள் மேற்கொண்டான். சோழர்களுடன் நடைபெற்ற அவனது போரில், வணிகத்தின் மூலம் கிடைத்த வருமானம் அவனுக்கு மிகவும் துணைபுரிந்தது. சோழர்களை நாட்டை விட்டும் வெளியேற்றி பொலன்னறுவையைக் கைப்பற்றி திரிகோணமலையை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தபின்னர் வணிகத்திற்கான சாதகமான சூழல் இன்னும் அதிகரித்தது.

முதலாம் விஜயபாகு மன்னரின் காலப்பிரிவில் பெரியதம்பி மரிக்கார் என்னும் முஸ்லிம் வணிகர் மிகமுக்கிய இடத்தை வகித்தார். மன்னனின் முடிசூட்டு விழாவிற்கான கிரியைகளைச் செய்வதற்கு இந்தியாவிலிருந்து பிராமணர்கள் வரவழைக்கப்பட்ட தாகவும், அவர்கள் இலங்கைக்கு பெரிய தம்பிமரிக்காரின் கப்பலில் அழைத்து வரப்பட்டு அநுராதபுரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட தாகவும் கூறப்படுகின்றது. அவர்கள் விஜயபாகு மன்னனால் குடியேற்றப்பட்ட பிரதேசம் இன்று பலப்பிட்டியில் 'பிரஹ்மனவத்த' என அழைக்கப்படுகிறது.

தம்பதெனியவை ராஜதானியாகக் கொண்டு ஆட்சிசெய்த மூன்றாம் விஜயபாகு (1220-1224) மன்னனின் காலப்பிரிவில் பேருவலையைச் சேர்ந்த மீராலெப்பை என்ற வணிகத்தலைவர் சாலியர் என்னும் நெசவாளர்களைக் கொண்டு வர காரணமாக விளங்கினார்.

சாலியர் உட்பட இலங்கையில் போர்த்துக்கேயர் காலப்பிரிவில் காணப்பட்ட ஏனைய சாகியத்தவர் போர்த்துக்கேய கப்டன் டியோ கோடி மேலோவிற்கு சமர்ப்பித்த முறைப்பாட்டு மனுவில் அவர்கள் சோனகர்களின் படகுகளால் இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட தாக குறிப்பிட்டுள்ளனர்.

மூன்றாம் விஜயபாகு மன்னனின் பேருவலை முஸ்லிம் மனைவிக்குப் பிறந்த வத்திமி (வத்ஹிமி பண்டார) என்ற இளவரசன்

குருநாகலையில் ஆட்சிபீடத்தில் அமர்ந்தான் என வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன.

கி.பி. பதினொராம் நூற்றாண்டில் இலங்கையில் சோழர்களின் ஆதிக்கம் நிலவிய காலப்பிரிவில் முஸ்லிம்களின் வணிக முயற்சிகள், செயல்பாடுகள் பற்றி அறிவதற்கு மிகக் குறைந்த சான்றுகளே காணப்படுகின்றன. சோழர் படையெடுப்புக்கு ராஜரட்டைப் பிரதேசம் ஆளாகியதைத் தொடர்ந்து, சிங்கள ஆட்சியாளர்கள் தெற்கு நோக்கி நகர்ந்தனர் முஸ்லிம் வணிகர்களும் அவர்களுடன் தெற்கு நோக்கி நகர்ந்திருக்கலாம் என நாம் அனுமானிக்கலாம். அநுராதபுர ஆட்சியில் மிக வளம்பெற்று விளங்கிய மாந்தைத் துறைமுகமும் கி.பி. 11ம் நூற்றாண்டின் இறுதியில் அதன் முக்கியத்துவத்தை இழந்ததை 1980ல் மாந்தையில் மேற்கொள்ளப் பட்ட அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. சோழர்களின் வணிக முயற்சிகள் வங்காள விரிகுடாவை மையமாக வைத்தே நடைபெற்றன. அவர்கள் தங்களது தலைநகரை அநுராதபுரத்திலிருந்து, பொலன்னறுவைக்கு மாற்றுவதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும். இதன் காரணமாகவே மாந்தைத் துறைமுகம் அதன் முக்கியத்துவத்தை இழந்து பொதுவாக முஸ்லிம்களது வணிகம் சோழர்களின் காலப்பிரிவில் மிகவும் பாதிக்கப்பட்டது என்ற முடிவுக்கு தயக்கமின்றி நாம் வர முடியும்.[31]

இரண்டாம் பராக்கிரமபாகு (1236 - 1270) வின் தம்பதெனிய ஆட்சிக் காலப்பிரிவில் வைத்தியரத்ன கோபால முதலிகே அன்ஸார் இப்னு துபைல் உடையார் அரச வைத்தியராக பணிபுரிந்துள்ளார். அத்துடன் இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் ஆட்சியின் போது காதர்ஷா என்ற தளபதியின் கீழ் சோழமண்டலக் கரையிலிருந்து ஒரு முஸ்லிம் படை இலங்கையில் கரையிறங்க முனைந்தது. இப்படையெடுப்பு தோல்வியில் முடிவடைந்தபோதும் பின்வாங்கிச் செல்ல முடியாத முஸ்லிம்கள் இந்நாட்டில் குடிபதியாக வாழ அனுமதிக்கப்பட்டதால் சில வரலாற்றாசிரியர்கள குறிப்பிடுகின் றனர். இதற்கு நன்றிக் கடனாக தமது கால்நடைகளுடன் அரசனுக்காக போக்குவரத்து சேவையில் ஈடுபட்டுவந்தனர். இவர்கள் மடிகே பத்தே நிலமேயின் கீழ் அமர்த்தப்பட்டதாக திரு. போல் பீரிஸ் குறிப்பிடுகிறார்.

முதலாம் விஜயபாகு (1055-116) மன்னனின் காலப்பிரிவில் சோழர்கள் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து, நாட்டில் அரசியல் ஸ்திர நிலைமை உருவாகியது.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் (1153-86) ஆட்சியில் ஏற்பட்ட அரசியல் ஒருமைப்பாடும், உறுதியும் நாட்டின் சர்வதேசிய வணிகத்தின் வளர்ச்சிக்கான சாதகமான ஒரு சூழலை உருவாக்கியது. பராக்கிரமபாகு நாட்டின் வணிகத்தை ஒழுங்குபடுத்துவதற்காக அந்தரங்காதுர (Antarangadura) என ஒரு தனிப்பட்ட திணைக்களத்தையே நிறுவினார். இந்த திணைக்களம் பிறநாடுகளில் அதிக கேள்வியிருந்த வணிகப் பொருட்கள் இலங்கையில் காணப்படும் பிரதேசங்களுக்குப் பொறுப்பாக இருந்தது. இலங்கையில் நடைபெற்ற வெளிநாட்டு வணிகத்தில் சமகாலப்பிரிவில் முஸ்லிம்கள் மிக முக்கிய இடம் வகித்தனர். இக்காலப்பிரிவில் பிறநாட்டு வணிகர்கள் ஒன்றுபடும் ஒரு முக்கிய துறைமுகமாக திருகோணமலை விளங்கியது. திருகோணமலைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட இரண்டு அரபு சிலாசனங்கள் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் அங்கு பரவலாக முஸ்லிம் குடியேற்றங்கள் காணப்பட்டதை உறுதிப்படுத்துகின்றன. இதில் ஒரு சிலாசனம் கி.பி. 1211ல் மரணித்த காஸி யூஸுப் அல்-அலவி என்பாரின் அடக்கஸ்தலத்தில் கண்டெடுக்கப்பட்டது. அடுத்த சிலாசனம் அலி அல்- ஹலபியின் புதல்வரான அமீர் பத்ருத்தீன் ஹுஸைனின் புதல்வியின் அடக்கஸ்தலத்தில் கண்டெடுக்கப் பட்டது. அக்காலப்பிரிவில் திருகோணமலைக்கு அண்மித்த பகுதிகளில் செல்வாக்கு மிக்க முஸ்லிம் குடியேற்றங்கள் காணப்பட்டதையே இது எடுத்துக்காட்டுகின்றது. கப்பல் கட்டுவதற்காக கயிறு, தென்னம்பலகை போன்றவற்றைப் பெறுவதற்காக கி.பி. பதினொராம் நூற்றாண்டு முதல் ஓமான், யெமன் போன்ற நாடுகளிலிருந்து வணிகர்கள் இலங்கைக்கு வந்ததாக புகழ்மிக்க அரபுப் புவியியலாளர் இத்ரீஸி குறிப்பிடுவது இது தொடர்பாகக் கவனிக்கத்தக்கது.

பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் கி.பி. 1258ல் முஸ்லிம் உலகில் நடைபெற்ற மங்கோலியப் படையெடுப்போடு பக்தாதின்

வீழ்ச்சியும், முஸ்லிம் உலகில் அரசியல் ஸ்திரமற்ற ஒரு குழப்ப நிலையைத் தோற்றுவித்தது போன்று, இலங்கையிலும் இதே காலப்பிரிவில் அரசியல் ஸ்திரமற்ற ஒரு குழப்பநிலையை நாம் அவதானிக்க முடிகின்றது. இக்காலப்பிரிவில் பொலன்னறுவையைத் தலைநகராகக்கொண்டு ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர்கள் தொடர்ச்சியாகப் பல வெளிநாட்டுப் படையெடுப்புக்களுக்கும் ஆக்கிரமிப்புகளுக்கும் ஆளாயினர்.

1215ல் கலிங்கத்திலிருந்து மாகோனும் 1247ல் மலாயா தீபகற்பத்திலிருந்து சந்திரபானுவும் இலங்கைக்குப் படையெடுத்தனர். 1284ல் சிங்கள ஆட்சியாளர்கள் பாண்டிய தளபதி ஆரிய சக்கரவர்த்தியின் படையெடுப்பை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இந்த வெளிநாட்டுப் படையெடுப்புக்கள், உள்நாட்டு அரசியல் குழப்ப நிலைகள் காரணமாக சிங்கள ஆட்சியாளர்கள் ரஜரட்டையை விட்டு தென்மேற்குப் பகுதி நோக்கி நகர்ந்தனர். பல நூற்றாண்டு காலமாக நாட்டின் விவசாய வளர்ச்சி பொருளாதார வளத்திற்கும் காரணமாக அமைந்த விவசாய முயற்சிகளுக்குக் காரணமாக அமைந்த நீர்ப்பாசனக் கால்வாய்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் விவசாய வளம் பொருந்திய ரஜரட்டைப் பிரதேசம் புறக்கணிக்கப்பட்ட காலகட்டத்தில் பசுமையான வயல்களின் இடத்தை காடுகள் ஆக்கிரமித்துக் கொண்டன.(32)

இலங்கை வரலாற்றில் இக்காலப்பிரிவில் நிகழ்ந்த இன்னொரு முக்கிய நிகழ்வு இலங்கையின் வடக்குப் பகுதியில் ஆரிய சக்கரவர்த்திகள் வரிசையில் தோன்றிய ஆட்சியாளர்களின் ஆரம்பமாகும்.

தென் இந்தியாவில் பாண்டியர்களின் தலைநகரில் ஆட்சி உரிமை பற்றிய போராட்டம் ஒன்று தோன்றிய நிலையில் ஆட்சிக்கு உரிமை பாராட்டிய ஒருவர் டில்லியில் ஆட்சிபுரிந்த அலாவுத்தீன் கில்ஜியின் (1296-1316) உதவியை வேண்டினார். இக்காலப்பிரிவில் வட இந்தியா முழுவதினதும் ஆட்சி அவரது கையிலிருந்தது. தனக்கு உதவிக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்குப் பதிலளிக்கும் வகையில் அலாவுத்தீன் கில்ஜி தனது ஆட்சிப் பிரதானிகளில் ஒருவராகிய மலிக் கபூரை கி.பி. 1311ல் தக்கணத்தை முற்றுகையிட

அனுப்பினார். பாண்டிய ஆட்சியாளர்கள் அடைந்த தோல்வியும், சிங்கள ஆட்சியாளர்கள் ராஜரட்டையிலிருந்து தென்மேற்குப் பகுதிநோக்கி நகர்ந்தமையும் வடக்கில் ஆரிய சக்கரவர்த்தியின் கீழ் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஆட்சி சுதந்திரமாக செயல்படும் வாய்ப்பை ஏற்படுத்தியது.

இத்தகைய சூழல் நாட்டின் பிறநாட்டு வணிகத்தின் வளர்ச்சிக்குப் பெரும் தூண்டுதலாக அமைந்தது. ஏனெனில் விவசாய வளம் காணப்பட்ட காலப்பிரிவில் நாட்டின் திறைசேரிக்கான வருமானம் நிலவரி மூலமும் பெறப்பட்டது ஆனால் ராஜரட்டையின் விவசாய நிலங்களை விடுத்து சிங்கள மன்னர்கள் தெற்கு நோக்கி நகர்ந்ததனால் இதனை இழக்கும் நிலை ஏற்பட்டது. எனவே அரசாங்கம் வேறு வழிகளில் திறைசேரியின் வருமானத்தைத் தேடவேண்டியிருந்தது. இத்தகைய சூழலில் வெளிநாட்டு வணிகத்தை ஊக்குவித்து அதன் மூலமாக நாட்டின் வருவாயைப் பெறுவதே ஒரே வழியாகக் காணப்பட்டது. வெளிநாட்டு வணிகம் ஏற்கனவே முஸ்லிம்கள் வசம் இருந்தது. எனவே, இக்காலப்பிரிவில் முஸ்லிம்கள் நாட்டின் துறைமுக நகரங்களில் தங்களது நிலையை ஸ்திரப்படுத்தி உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்தில் மிக மும்முரமாக ஈடுபட்ட நிலையில் காணப்பட்டனர்.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் இலங்கைக்கு வெளியில் நடைபெற்ற, பரஸ்பரம் ஒன்றுக்கொன்று தொடர்புடைய அரசியல் நிகழ்வுகள், தேசியரீதியாக அதன் தாக்கத்தை ஏற்படுத்தி சிங்களவருக்கும், முஸ்லிம்களுக்குமிடையிலான உறவை வலுப்படுத்தியதாக கலாநிதி லோனா தேவராஜா குறிப்பிடும் கருத்து இது தொடர்பாக கருத்தில்கொள்ளத்தக்கதாகும்.(33)

ரஜரட்டையிலிருந்து சிங்கள மன்னர்கள் விவசாய நிலங்களைக் கைவிட்டு நாட்டின் மேற்குத் திசையை நோக்கி நகர்ந்தமை இலங்கையின் வெளிநாட்டு வணிகத்துக்கு ஓர் உந்துதல் சக்தியாக அமைந்தமை பற்றி ஏற்கனவே நாம் நோக்கினோம். அலாவுத்தீன் கில்ஜியின் (1296-1316) பிரதிநிதியான மலிக் கபூரின் தாக்குதல் காரணமாக பாண்டியர்கள் அடைந்த தோல்வியும், சிங்கள மன்னர்கள் தெற்குநோக்கி நகர்ந்தமை காரணமாக அவர்களது அச்சுறுத்தல் காணப்படாத

நிலையில் வடக்கில் ஆரிய சக்கரவர்த்தி சுதந்திரமாக செயல்படும் சூழல் உருவாகியது பற்றியும் ஏலவே குறிப்பிடப்பட்டது. இந்நிகழ்வுகள் வணிகத்துறையில் மிக முக்கியமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. ஏனெனில் கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் ஆரிய சக்கரவர்த்தி வரிசையில் தோன்றிய ஆட்சியாளர்கள் ஒரு சுதந்திர ஆட்சியை நிறுவியதும் அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து சிலாபம், வத்தளை, கொழும்பு வரையுள்ள கரையோரப் பகுதியை தங்களது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர முயற்சித்தனர். இலங்கையின் வெளிநாட்டு வணிகத்தை தங்களது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவதே இதன் பின்னாலுள்ள நோக்கமாகும்.

இலங்கையில் பிறநாட்டு வணிகத்தில் ஏலம், கராம்பு முதலிய வாசனைத் திரவியங்கள் மிகப் புராதன காலத்திலிருந்தே மிக முக்கிய இடத்தை வகித்தன. மத்தியகாலப்பிரிவில் இவ்வணிகப் பொருட்களுடன் கறுவா ஒரு முக்கிய இடத்தைப் பெற்றது. கி.பி. 10ம் நூற்றாண்டு எழுதப்பட்ட இப்னு ஷஹ்ரயாரின் "அஜாஇபுல் ஹிந்த்'' என்னும் நூலிலேயே கறுவா பற்றி முதலாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கெய்ரோ ஜெனிஸா பத்திரங்களில் காணப்பட்ட யூத வணிகர்களின் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த சில கடிதங்களிலும் இலங்கையின் முக்கிய வணிகப் பொருளாக கறுவா குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு முதல் முஸ்லிம்கள் மொலுக்கஸில் வாசனைத் திரவிய உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் ஈடுபட்டனர். ஐரோப்பிய நாடுகளில் மிக அதிகமான கேள்வியிருந்த இந்த வாசனைத்திரவிய வணிகத்தில் இக்காலப்பிரிவில் முஸ்லிம்கள் முக்கிய இடத்தை வகித்தனர். எனவே, இக்காலப்பிரிவில் வாசனைத் திரவிய வணிகத்தில் முஸ்லிம்களின் செயல்பாடும், செல்வாக்கும் அதிகரித்தது. இந்நிலையில் யாழ்ப்பாணத்தின் ஆரியச் சக்கரவர்த்தி வாசனைத்திரவிய வணிகத்தில் ஆர்வங்காட்டி, அதனைத் தங்களது ஆதிக்கத்திற்குட்படுத்த முயற்சித்தமையானது முஸ்லிம்களின் வணிக செயல்பாடுகளுக்கு ஓர் அச்சுறுத்தலாக அமைந்தது. எனவே, முஸ்லிம்கள் சிங்களவரோடு இணைந்து இந்த நோக்கத்திற்கு எதிராகச் செயற்பட ஆரம்பித்ததாகவும் இது சிங்கள முஸ்லிம் உறவைப் பலப்படுத்தியது எனவும் கூறப்படுகின்றது

ஏனெனில் நாட்டின் வெளிநாட்டு வணிகத்துக்கு சிங்கள மன்னர்கள் முஸ்லிம்களிலேயே தங்கியிருந்தனர்.

கி.பி. பதினொராம் நூற்றாண்டில் இலங்கைக்கு சோழர்கள் மேற்கொண்ட படையெடுப்புக்களின் நோக்கங்களின் பின்னால் அரசியல் காரணங்கள் காணப்பட்டாலும் மன்னாரில் முத்துக் குளித்தலையும், மாணிக்க வியாபாரத்தையும், வாசனைத்திரவிய வணிகத்தையும் தங்களது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவது அதன் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாக விளங்கியது.

இந்த வரலாற்றுப் பின்னணியிலேயே யப்பாஹுவவில் ஆட்சிபுரிந்த முதலாம் புவனேகபாகு (1273-1284) மன்னன் எகிப்தில் ஆட்சிபுரிந்த மம்லூக் மன்னனின் அரசவைக்கு கி.பி. 1283ம் ஆண்டு அபூ உஸ்மானின் தலைமையில் அனுப்பிய ராஜதந்திரக் குழுவின் நோக்கத்தினை நாம் அணுகுதல் வேண்டும். மம்லூக் மன்னருக்கு இலங்கை மன்னன் புவனேகபாகு தனது தூதுவர் மூலம் அனுப்பிய கடிதம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

> 'இலங்கை என்பது எகிப்து. எகிப்து என்பது இலங்கை. நான் அனுப்பும் தூதுவரைத் தொடர்ந்து எகிப்திலிருந்து ஒரு தூதுவர் இங்கு வருவதை நான் விரும்புகின்றேன். இன்னொரு தூதுவரை நான் நடுக்கடலில் தங்குவதற்காக அனுப்புகின்றேன். என்னிடம் எல்லா வகையான முத்துக்களும், மாணிக்கக் கற்களும் பெருமளவில் உள்ளன. என்னிடம் படகுகள், யானைகள், பருத்தித் துணிகள், கறுவா போன்ற, உங்களிடம் "பனியன்" வணிகர்கள் கொண்டு வரும் வணிகப் பொருட்கள் அனைத்தும் உள்ளன. ஈட்டிகளைச் செய்யப் பொருத்தமான மரங்கள் எனது ராஜதானியில் காணப்படுகின்றன. சுல்தான் அவர்கள் என்னிடம் வருடந்தோறும் இருபது கப்பல்களில் பொருட்கள் அனுப்பும்படி கேட்டாலும் என்னால் அதனைச் செய்ய முடியும். சுல்தானின் ஆட்சியின் கீழ் உள்ள வியாபாரிகள் எனது ராஜதானிக்கு வந்து மிகக் சுதந்திரமாக வியாபாரத்தில் ஈடுபட முடியும். யெமன் நாட்டின் இளவரசர் அவருடன் இணைந்து செயல்படுவதற்கான ஆலோசனைகளுடன் என்னிடம் ஒரு தூதுவரை அனுப்பியிருந்தார். நான் சுல்தானாகிய உங்கள்பால்

உள்ள அன்பும், அபிமானமும் காரணமாக அவரைத் திருப்பி அனுப்பிவிட்டேன். என்னிடம் எல்லா வகையான மாணிக்கங்களையும் உள்ளடக்கிய புதையல்களைக் கொண்ட ஏழு மாளிகைகள் உள்ளன. முத்துக்குளித்தல் எனது ராஜதானியில் நடைபெறுகின்றது. அதன் மூலம் பெறப்படும் முத்துக்கள் அனைத்தும் எனக்குச் சொந்தமானவையாகும்."

புவனேகபாகு மன்னனின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'யெமனின் சுல்தான்' என்பது ஏடனில் கி.பி. 1249-1295க்கு இடையில் ஆட்சி புரிந்த யூஸுப் இப்னு உமர் என்ற பெயருடைய ஆட்சியாளரையே குறிப்பதாகக் கருதப்படுகின்றது.

ஹிஜ்ரி 682ம் (கி.பி. 1283) ஆண்டு, இலங்கை மன்னனிடமிருந்து ஒரு தூதுக்குழு எகிப்திய மன்னனின் அரசவை வந்தடைந்தது. அல்ஹஜ் அபூ உஸ்மான் என்னும் பெயருடைய அத்தூதுவருடன் பலர் தூதுக்குழுவில் வந்திருந்தனர். அவர்களது கூற்றுப்படி, இவர்கள் இலங்கையிலிருந்து ஓர் கப்பலில் பயணம் செய்து ஓர்முஸ் (Ormus) துறைமுகத்தை அடைந்து யூப்பிரடீஸ் வரை சென்று பக்தாதைச் சென்றடைந்து, அங்கிருந்து கெய்ரோவை அடைந்தனர். இலங்கை மன்னன், எகிப்திய ஸுல்தானுக்கு அனுப்பிய கடிதம் ஒரு மரத்தின் பட்டையை ஒத்த ஒரு பொருளால் மூடப்பட்டு தங்கப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்தது. கடிதத்தின் எழுத்துக்களும் சுதேச எழுத்தில் ஒரு மரப்பட்டையில் எழுதப்பட்டிருந்தன. கெய்ரோவில் அக்கடிதத்தினை வாசிக்கக்கூடிய எவரும் காணப்படாததால் தூதுவர் ஸுல்தானுக்கு அக்கடிதத்தின் உள்ளடக்கத்தை விளக்கினார்.(34)

இக்காலப்பிரிவில் பக்தாதை மிகைத்திருந்த எகிப்தோடு நேரடி வணிகத் தொடர்பை ஏற்படுத்தி, அங்கிருந்து முஸ்லிம் வணிகர்களை ஈர்க்கும் ஒரு முயற்சியாகவே இது விளங்கியது. இத்தூதுக் குழுவை அனுப்புவதற்கு, அரசனின் அரபு ஆலோசகர்களே காரணமாக இருந்திருக்கலாம் எனவும், தளர்ந்த நிலையிலிருந்த பொருளாதாரத்தை மேம்படுத்தி நாட்டின் அரசியல் மதிப்பை, உயர்ச்சியடையச் செய்வது இதன் நோக்காக அமைந்திருக்கலாம் எனவும் சில வரலாற்றாசிரியர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். தென் இந்தியாவிலிருந்து அடிக்கடி நடைபெற்ற

படையெடுப்புக்களை எதிர்கொள்வதற்கு ஒரு கூட்டிணைப்பை ஏற்படுத்துவதும் இதன் நோக்காக விளங்கியிருக்கலாம் எனவும் ஒரு கருத்துள்ளது. இந்தத் தூதின் பலனாக ஏற்பட்ட விளைவுகள் பற்றி எதுவும் அறியமுடியவில்லை. ஆனால் இலங்கைக்கும் எகிப்துக்குமிடையிலான இத் தொடர்புகள் சில காலங்கள் தொடர்ந்து நிலைத்திருந்ததை கொழும்புக்கும்- கண்டிக்கும் இடையில் கண்டெடுக்கப்பட்ட மம்லூக் காலப்பிரிவைச் சேர்ந்த நாணயங்கள் குறிக்கின்றன. இலங்கை மன்னர்கள் கடல்கடந்த நாடுகளுடன் நாட்டின் சார்பில் பல முக்கிய பொறுப்புக்களை நிறைவேற்ற முஸ்லிம்களிடம் ஒப்படைத்ததை இது எடுத்துக் காட்டுகின்றது. முஸ்லிம்களின் சர்வதேசிய தொடர்புகள், கடல் பயணத்தில் அவர்களுக்கிருந்த தேர்ச்சி அனுபவம் ஆகியன இதற்கு முக்கிய காரணிகளாக விளங்கின. அதிலும் இந் நாணயங்களுள் பல புவனேகபாகு மன்னன் தூதனுப்பிய மம்லூக் ஸுல்தான் காலூனின் (1279-1296) காலப்பிரிவைச் சார்ந்ததாகும்.(35)

பதின்மூன்றாம் நூற்றாண்டில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பான நிலை நாட்டின் பொருளாதாரத்தைப் பாதித்தாலும், பிறநாட்டு வணிகம் முக்கிய இடத்தை வகித்தது. இந்த வெளிநாட்டு வணிகத்தில் முஸ்லிம்கள் பெரும்பங்கு வகித்தனர். இக்காலப்பிரிவில் கல்பிட்டி, புத்தளம், நீர்கொழும்பு போன்ற துறைமுகங்களும் தெற்கில் கொழும்பு,களுத்துறை, பேருவலை, காலி, வெலிகாமம், தேவந்துறை போன்ற துறைமுகங்களும் வணிகத்தில் முக்கிய இடத்தை வகித்தன.

இக்காலப்பிரிவில் பேருவலை, காலி. வெலிகாமம், மாத்தறை போன்ற தென்மேற்கு, தெற்குத் துறைமுகங்களில் முஸ்லிம் வணிகர்கள் பெருமளவு குடியேற ஆரம்பித்தனர். சீனாவிலிருந்து பாரசீக வளைகுடா வரை ஒரு சீனக் கப்பலில் பணயம் செய்த மார்க்கோபோலோ இலங்கையின் கரையோரப் பகுதிகளில் பெருமளவு அரபு வணிகர்கள் காணப்பட்டதாகவும் குறிப்பிடுகின்றார்.(36)

இலங்கையின் இயற்கைத் துறைமுகங்களுள் ஒன்றான காலி, பதினான்காம் நூற்றாண்டின் மிக முக்கிய துறைமுகங்களுள் ஒன்றாக வளர்ச்சியடைந்திருந்ததை வரலாற்று ஆவணங்கள்

எடுத்துக் காட்டுகின்றன. 1344ல் இலங்கையைத் தரிசித்த அரபுப் பயணி இப்னு பதூதா தெவிநுவரையிலிருந்து (தீனவர்) காலி வரை பயணம் செய்தார். அவர் காலியில் இப்ராஹிம் என்னும் பெயருடைய கப்பல் தலைவரொருவரைச் சந்தித்ததாகவும் அவரது விருந்தினராகத் தங்கியிருந்ததாகவும் தனது பயண நூலில் குறிப்பிடுகின்றார். இப்னு பதூதாவின் குறிப்புக்கள் காலி முஸ்லிம்களின் முக்கிய வணிகத்தலங்களுள் ஒன்றாக விளங்கியதை எடுத்துக்காட்டுகின்றன.(37)

இக்காலப்பிரிவில் மலாக்கா நீரிணையினூடாக வந்த கப்பல்கள் மலபாருக்கும் ஆபிரிக்கக் கரைக்கும் செல்லும் வழியில் காலித்துறைமுகத்தில் தங்கிச் சென்றன. கி.பி. 1410ம் நூற்றாண்டில் சீனாவைச் சேர்ந்த செங்ஹோவினால் பொருத்தப்பட்ட சீன, பாரசீக, தமிழ்மொழியிலான மும்மொழிச் சிலாசனம் சீனர்கள், முஸ்லிம்கள், தென் இந்திய சமண(ஜைன) வணிகர்கள் காலித்துறைமுகத்தைத் தரிசித்ததை எடுத்துக்காட்டுகின்றன. பதினைந்தாம் நூற்றாண்டளவில் காலி மிகப் பிரபலமான வணிகஸ்தலமாக விளங்கியதையும், இரு பகுதிகளிலும் விசாலமான வீதிகளையும், எல்லா வகையான பொருட்களையும் விற்பனை செய்யும் கடைகளையும் கொண்டிருந்ததை சந்தேஸ கவிதைகள் மூலம் நாம் அறிய முடிகின்றது.

தெற்கில் புகழ்பெற்ற இன்னொரு துறைமுகமாக வெலிகம துறைமுகம் காணப்பட்டது. பன்னிரண்டாம் நூற்றாண்டு முதல் இத்துறைமுகம் முக்கியத்துவம் பெற்று விளங்கியது. முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் காலப்பிரிவில் வசதியுள்ள வணிகர்களின் வசிப்பிடமாக அது விளங்கியது என சூலவம்சம் குறிப்பிடுகிறது.(42) கோட்டேயில் ஆட்சிபுரிந்த ஆறாம் பராக்கிரமபாகுவின் காலப்பிரிவில் இயற்றப்பட்ட பரவி சந்தேசய, கோகில சந்தேசய ஆகிய சிங்களத் தூதுப் பிரபந்த நூல்கள் வெலிகாமம் ஒரு செழிப்பு மிக்க முஸ்லிம் குடியேற்றமாக விளங்கியதைக் குறித்துநிற்கின்றன. இந்நூல்கள் சோனகப் பெண்களை ''யொன்லியன்'' எனக் குறிப்பிடுவதுடன், மஹாவெலிகம (வெலிகாமம்) குடியேற்றம் பற்றியும் பேசுகின்றன. அது முஸ்லிம்களின் முக்கிய வணிகக் குடியேற்றமாக

விளங்கியதையும் அங்கு வாழ்ந்த முஸ்லிம்கள் தமிழ் மொழியைப் பேசி தமிழில் பாடல்களைப் பாடினர் எனவும் சந்தேச கவிதைகள் குறிப்பிடுகின்றன.

கி.பி. பதின்மூன்று, பதினான்கு, பதினைந்தாம் நூற்றாண்டுகளில் தெற்கில் இன்னொரு முக்கிய துறைமுகமாக தேவந்துறை துறைமுகம் விளங்கியது. பிறநாட்டு வணிகர்கள் ஒன்றுகூடும் ஒரு முக்கிய துறைமுகமாக தேவந்துறை காணப்பட்டதை வரலாற்றுக் குறிப்புக்கள், சிலாசனங்கள் மூலம் நாம் அறிய முடிகின்றது. தேவந்துறையில் பிறநாட்டு வணிகர்கள் பெருமளவு காணப்பட்டதற்கு தேவந்துறைக் கோயிலின் முன்னால் இரண்டாம் பராக்கிரமபாகு (1236-70) மன்னனின் அமைச்சரான தேவபிரதிராஜா பொருத்திய கல்வெட்டு மிகச் சிறந்த சான்றாகும். தம்பதெனியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த இரண்டாம் பராக்கிரமபாகுவின் காலப்பிரிவில் வெளிநாடுகளின் பாய்மரக் கப்பல்கள் வந்திறங்கும் புகழ்பெற்ற ஒரு துறைமுகமாக தேவந்துறை விளங்கியதை இக் கல்வெட்டு உறுதிப்படுத்துகின்றது. பிறநாட்டு வணிகர்கள் மீது வரிகள் விதிப்பதற்காக மஹாபண்டிதே என்ற ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டதையும், பிறநாட்டு வணிகர்கள் தங்களது வணிகச் செயற்பாட்டிற்கு மஹாபண்டிதவின் அனுமதிபெறல் வேண்டும் எனவும் அச்சிலாசனம் குறிப்பிட்டது. இச்சிலாசனம் விகாரை, தேவாலயம், அக்கிரகாரம், கோவில் பற்றிக் குறிப்பிடுவதிலிருந்து, தேவந்துறையில் ஜைன, சீன வணிகர்கள் காணப்பட்டதை நாம் அனுமானிக்க முடிகின்றது.

இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் பிரதம அமைச்சரான தேவபிரதிராஜனால் நிறுவப்பட்ட இச் சிலாசனம் மூலம் தென்னிலங்கை வணிகத்தில் முஸ்லிம்கள், தமிழர், பிராமணர், சீனர் ஆகிய பல இனத்தினர் பங்குகொண்டதையும், கி.பி. 13,14,15ம் நூற்றாண்டில் தமிழ்மொழி தென்னிலங்கையில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டதையும் நாம் அறிய முடிகின்றது. வெலிகமையில் முஸ்லிம் பெண்கள் தமிழில் பேசி, தமிழ் பாடல்களை பாடினர் என திஸர சன்தேசய, பரவி சந்தேசய போன்ற தூதுப் பிரபந்தங்கள் குறிப்பிடுவதும் இங்கு கவனிக்கத்தக்கதாகும். இந்தப் பின்னணியிலேயே சீனத் தளபதி செங்கோவின் மும்மொழிச்

சிலாசனத்தில் சீனம், பாரசீகம், தமிழ் ஆகிய மொழிகள் இடம்பெற்றிருப்பதற்கான காரணத்தை நாம் விளங்க முடியும். இக்காலப்பிரிவில் இந்து சமுத்திர வணிகத்தில் தமிழ், பாரசீகம் ஆகிய தமிழ் மொழிகள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். கி.பி. 1344ல் இலங்கையைத் தரிசித்த இப்னு பதூதாவின் பயணக் குறிப்புகளும் தேவந்துறையின் முக்கியத் துவத்தை எடுத்துக் காட்டுகின்றன. அவர் தேவந்துறையை 'தீனவார்' என அழைப்பதுடன் அதனை ஒரு பெரிய நகரம் எனவும் வர்ணிக்கின்றார். இப்னு பதூதா ஆரியச் சக்கரவர்த்தியுடன் பாரசீக மொழியில் உரையாடினார் என்பதும் இது தொடர்பாக கவனிக்கத்தக்கதாகும்.

தேவந்துறை தேவ பிரதிராஜா கல்வெட்டை நிறுவிய இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன், பேருவலை முஸ்லிம் இளவரசன் வத்தமிகுமாரனின் படுகொலைக்குப் பின்னர் அரச கட்டிலில் ஏறியவன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் ஆரம்ப முஸ்லிம் குடியேற்றங்களுள் ஒன்றாகக் கருதப்படும் பேருவலை முஸ்லிம் குடியேற்றம் பற்றி இங்கு ஆராய்வது பொருத்தமாகும். பேருவலை கி.பி. 12, 13, 14ம் நூற்றாண்டுகளில் தென்மேற்குக் கரையில் முக்கிய முறைமுகமாக விளங்கியது. பேருவலையில்தான் இலங்கையில் முதல் முஸ்லிம் குடியேற்றம் ஏற்பட்டது என்பதற்கு வரலாற்று ரீதியாக எத்தகைய உறுதியான சான்றுகளையும் காணமுடியவில்லை. ஆனால் பேருவலை ஆரம்பகால முஸ்லிம் குடியேற்றங்களுள் ஒன்று என பாரம்பர்யமாகக் கருதப்பட்டு வருகின்றது. இதுபற்றி வித்தியாசமான கருத்துக்கள் உள்ளன.

இலங்கை முஸ்லிம்களின் முன்னோர்கள் ஆரம்பத்தில் ஒன்பதாம் நூற்றாண்டில் காயல்பட்டணத்தில் குடியேறினர் என்றும் கி.பி. 1024ம் ஆண்டளவில் அவர்களில் ஒரு பிரிவினர் வந்து பேருவலையில் குடியேறினர் எனவும் காஸி செட்டி குறிப்பிடுகின்றார்.(39)

காயல் பட்டணத்தில் ஏற்கனவே குடியேறியிருந்த முஸ்லிம்களில் ஒரு பிரிவினரே இலங்கையில் பிற்காலப்பிரிவில் பேருவலையில் குடியேறினர் என்ற கருத்தையே பொன்னம்பலம் ராமநாதனும் தனது The Ethnology of Ceylon Moor என்ற கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

ஆனால் ராமநாதன் இவ்வாறு இலங்கையில் காயல்பட்டணத்திலிருந்து வந்து குடியேறியோர் அராபியர்களன்றி, இனத்தால் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட தமிழர்கள் என்ற வாதத்தை முன்வைத்ததோடு, இக் குடியேற்றம் 1350ம் ஆண்டு நடைபெற்றது எனவும் கூறுகின்றார். அவரது கருத்துப்படி 1350க்கு முன்னர் இலங்கைக்கு வந்த அராபியர், எகிப்தியர், அபீஸீனியர் ஆகியோர் வணிக நோக்கமாகவும், யாத்திரை நோக்கமாகவும் இலங்கைக்கு வந்து சிலகாலம் தங்கிச் சென்றவர்களாகும். அவர்களில் மிகச் சிலரே இங்கு நிரந்தர குடியேற்றங்கள் ஏற்படுத்திக்கொண்டனர் எனக் குறிப்பிடும் திரு ராமநாதன் 1350ம் ஆண்டிலேயே முஸ்லிம்களின் நிரந்தரமான குடியேற்றம் பேருவலையில் அமைந்தது எனக் கருதுகின்றார். இவ்வாறு குறிப்பிடுவதன் மூலம் இலங்கை முஸ்லிம்கள் இனரீதியாகத் தமிழர்களின் வழித்தோன்றல்கள் என்பதை அவர் நிறுவ முனைந்தார்.(39)

ஆனால் இலங்கையில் பேருவலையிலும் ஏனைய கரையோரப் பகுதிகளிலும் கி.பி. 1350ம் ஆண்டுக்கு முன்னரே முஸ்லிம் குடியேற்றங்கள் காணப்பட்டதை வரலாற்று ஆவணங்களும், தொல்பொருட் சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன. ஜே.ஸீ. வான் ஸன்டேன் (Van Santen) அவரது "சோனகர்" - SONAHAR என்னும் நூலில், பேருவலையில் ஒரு பாரம்பரிய முஸ்லிம் குடும்பத்தினரிடம் காணப்பட்ட ஓர் ஆவணத்தின் அடிப்படையில் தெரிவிக்கும் ஒரு கருத்து இது தொடர்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். கி.பி. 604ல் யெமன் நாட்டின் அரச குடும்பத்தைச் சார்ந்த இரு புதல்வர்கள் இலங்கைக்கு வந்தனரென்றும் அவர்களில் ஒருவர் மன்னாருக்குச் சென்று குடியேற அடுத்தவர் பேருவலையை வந்தடைந்து குடியேறினர் என்றும் அந்த ஆவணத்தில் காணப்படுவதாகவும். பேருவலையில் அவரது பரம்பரையைச் சார்ந்தவர்கள் எனத் தங்களை அழைத்துக்கொள்ளும் சில முஸ்லிம்கள் இருந்தனர் என்றும் வான் ஸன்டேன் குறிப்பிடுகின்றார்.(40)

ஸேர் அலெக்ஸான்டர் ஜோன்ஸ்டன் குறிப்பிடும் ஒரு சம்பவம் பேருவலையில் முஸ்லிம் குடியேற்றங்கள் கி.பி. 11ம் நூற்றாண்டளவில் காணப்பட்டதை உறுதிப்படுத்துகின்றது. பேருவலையில் கொரகதுவ

(Gorakaduwa) என்னும் இடத்தைச் சார்ந்த பெரிய முதலி மரிக்கார் என்னும் மிகப் பெரிய முஸ்லிம் வணிகர் ஒருவருக்கு வழங்கிய 'செம்பொட்டுப் பாத்திரம்' என வழங்கப்படும் ஸன்னஸ பற்றி அவர் குறிப்பிடுகின்றார். இந்தியாவில் உள்ள சாலிய பட்டணம் (Saliya Pattana) என்னும் கிராமத்திலிருந்து ஏழு நெசவாளர்களை அழைத்துவந்தமைக்காக அது அவருக்கு வழங்கப்பட்டது. இந்த செம்பொட்டுப் பத்திரம் தன்னிடம் உள்ளதாகவும் அவரது காலத்துக்கு ஏழு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இது வழங்கப்பட்டுள்ளது எனவும் ஸேர் அலெக்சாண்டர் ஜோன்ஸ்டன் கூறுகிறார்.

அந்த செம்பொட்டுப் பத்திரம் வழங்கப்பட்டதாக ஸேர் அலெக்ஸான்டர் ஜோன்ஸ்டன் குறிப்பிடும் கி.பி. 1010ம் ஆண்டு 5வது மகிந்தனின் ஆட்சிக்காலமாகும். 1017ம் ஆண்டு சோழ மன்னன் ராஜேந்திர சோழனால் அவன் கைது செய்யப்பட்டு இந்தியாவில் சிறைவைக்கப்பட்டு இறந்தான்.

பெரிய முதலி மரிக்காருக்கு வழங்கப்பட்ட செம்பொட்டுப் பத்திரத்தில் இந்தியாவில் சாலிய கிராமத்திலிருந்து அவரால் இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட ஏழு சாலியர்களின் பெயர்களும் பெரிய முதலி மரிக்காருக்கும் அவரது பரம்பரையினருக்கும் வழங்கப்பட்ட சலுகைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. அச் செம்பொட்டுப் பத்திரத்தில் பின்வரும் வாசகங்கள் காணப்படுகின்றன.

> 'வள்ளியம் அலைமுனி வள்ளியம்மை வளிஸலமன் வெடியரசன் பரமுத்து மல்லியன்
> ஆகிய ஏழுபேரையும் அரசன் பொறுப்பேற்றான். அரசனுக்கு அவர்கள் தேவைப்படுவதாகவும் அவர்கள் நன்கு கவனிக்கப்பட்டு எவ்வித குறைவுமின்றி பரிசில்கள், காணிகள் வழங்குவதாகவும் அரசர் தெரிவித்துக்கொள்கின்றார்.'

பெரிய முதலி மரிக்காரின் பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் வாழும் காலம் வரை அவர்கள் 'ராஜ காரியமாக' பல்லாக்குத் தூக்கிச் செல்லும் சேவைகளில் ஈடுபடுத்தப்படக்கூடாது, பணவரி

செலுத்தக்கூடாது. எப்பொழுதும் குறைவின்றி அவரது பெருமையும், கௌரவமும் பாதுகாக்கப்பட வேண்டும்.

அவர்கள் விண்ணப்பம் விடுக்கும்போது அவர்களது சமய சடங்குகளை மேற்கொள்ள பள்ளிவாசல்களைக் கட்ட அனுமதி வழங்கப்படுகின்றது. அவர்கள் பாதுகாக்கப்படுவதுடன் அவர்கள் விண்ணப்பிக்கும் எந்தவொரு நிலமும் வழங்கப்படல் வேண்டும். இம் முதலி மரிக்காரின் வழித்தோன்றல்கள் பல்லாக்குத் தூக்கும் அரச பணியிலிருந்து விடுவிக்கப்படுவதுடன் அவர்கள் விரும்பும் எந்தவொரு துறைமுகத்திலும் கப்பல் சரக்கு வியாபாரத்தில் ஈடுபட அனுமதி வழங்கப்படுகின்றது.

இந்த ஸன்னஸ வாசகங்கள் மகா முதலியார் ஏ.டி சேரம் அவர்களின் "இலங்கைத் தீவின் சாதிகள் பற்றிய விவரம்" (Description of castes in the Island of Ceylon) என்ற நூலிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை என ஸேர் அலெக்கான்டர் ஜோன்ஸ்ட்டன் குறிப்பிட்டுள்ளர்.

"பெரிய முதலி மரிக்காரின் குடும்பத்தின் கண்ணியமும், மதிப்பும் பல வருடகாலம் தொடர்ந்து நிலைத்திருந்தது. அறுநூறு வருடங்களின் பின்னர் பெரிய முதலி மரிக்காரின் பரம்பரையில் வந்த ஒருவர் ஸேர் அலெக்ஸான்டர் ஜோன்ஸ்டனினால் மருத்துவ இலாகாவின் மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.(41)

தம்பதெனியில் ஆண்ட மூன்றாம் விஜயபாகு (கி.பி. 1220-1224) மன்னனின் வேண்டுகோளின்பேரில், பேருவலையைச் சேர்ந்த ஒரு வணிகர் தென் இந்தியாவிலிருந்து ஏழு நெசவாளர்களை அழைத்துவந்ததாகவும் அவர்களே இந்நாட்டில் மிகச் சிறந்த ஆடைகளை நெய்யும் முறையை அறிமுகப்படுத்திய தாகவும் கூறப்படும் ஒரு கருத்தும் இதனை உறுதி செய்கிறது.(42)

கி.பி. 1024ம் ஆண்டளவில் காயல்பட்டணம் மலபார் பகுதிகளிலிருந்து முஸ்லிம்கள் பேருவலையில் குடியேறினர் எனவும் அவர்களின் வழித்தோன்றல்களே கெச்சிமலைப் பள்ளிவாசலைக் கட்டினர் எனவும் புரோஹியர் குறிப்பிடுகின்றார்.(43)

எனவே, 1350ம் ஆண்டுதான் இலங்கையில் முஸ்லிம் குடியேற்றம் பேருவலையில் ஏற்பட்டது என்ற ராமநாதனின் கருத்து இதுவரை நாம் விளங்கிய வரலாற்று ஆதாரங்களின் வெளிச்சத்தில் ஏற்புடையதன்று. கி.பி. 1344ம் ஆண்டு இலங்கையைத் தரிசித்த அரபுப் பயணி இப்னு பதூதா காலி, தேவந்துறை போன்ற தெற்குப் பிரதேசத்தின் முக்கிய நகர்கள் பற்றிக் குறிப்பிட்டதுடன், பேருவலை பற்றி எத்தகைய குறிப்பும் அவரது நூலில் கணப்படாததை அடிப்படையாக வைத்து அக்காலப்பிரிவில்கூட பேருவலையில் ஒரு முஸ்லிம் குடியேற்றம் காணப்படவில்லை எனச் சிலர் கருதுகின்றனர். ஆனால் இதே காலப்பிரிவைச் சேர்ந்த இன்னொரு பிரயாணியின் அவதானம் பேருவலை அக்காலப்பிரிவில் முக்கிய குடியேற்றங்களுள் ஒன்றாக விளங்கியதை உறுதிப்படுத்துகின்றது. ஜோன் டீ மறிக்னொல்லி (John de Marignolli) என்னும் இத்தாலிய கடல் பயணி பதினான்காம் நூற்றாண்டளவில் சீனாவுக்குச் செல்லும் வழியில் ஒரு கப்பலில் இலங்கையில் பெர்விலிஸ் துறைமுகத்தை வந்தடைந்தார். பெர்விலிஸ் (Perivills) என்பது பேருவலைத் துறைமுகம் என ஹென்றி யூல் குறிப்பிடுகின்றார்.(44)

மரிக்னொலி பேருவலை துறைமுகம் பற்றி அளிக்கும் விளக்கங்களிலிருந்து அங்கு ஒரு முஸ்லிம் குடியேற்றம் காணப்பட்டது என்பதை அறியமுடிகின்றது. கோயா ஜான் என்பவர் பெர்விலிஸை பரிபாலனம் செய்தார், என மரிக்னொலி குறிப்பிடுகின்றார். இது ஒரு முஸ்லிம் பிரதானியின் பெயராக இருக்கலாம். பதினைந்தாம் நூற்றாண்டில் பேருவலை ஒரு முஸ்லிம் வணிக மத்திய நிலையமாக விளங்கியதையும், அங்கு அழகிய வீடுகளும், பெரும் வியாபாரத் தலங்களும் காணப்பட்டதையும் அக்காலப்பிரிவின் சிங்கள தூதுப் பிரபந்தங்களான கிரா சந்தேசய, பரவி சந்தேசய, கஹகுருலு சந்தேசய ஆகியவற்றில் காணப்படும் குறிப்புக்கள் மூலம் அறிய முடிகின்றது.

திஸா சந்தேசய பேருவலை, மக்கொனை ஆகிய இடங்களைப் பின்வருமாறு வர்ணிக்கின்றது.

"செல்வம் கொழிக்கும் பேருவலை நகரத்திற்குப் பறந்து செல்வாயாக, எண்ணற்ற சேருவ பறவைகளையும், தேவப்

பெண்கள் போன்ற அழகிகள் பலரையும் அங்கு காணலாம்."

நான்காவது பராக்கிரமபாகுவின் (கி.பி. 1440-1450) ஆட்சிக் காலப்பிரிவில் இயற்றப்பட்ட கிரா சந்தேசய எனும் தூதுப் பிரபஞ்சத்தில் பின்வரும் கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

"கடலையடுத்துள்ள பேருவலைக்கு களிப்புடன் வருவாயாக! இங்கு அழகிய சோனக வனிதைகள் வாழுகின்றார்கள். அங்காடிகளில் பொன்னும், வெள்ளியும் மினுங்குகின்றன. பன்னிறக் கொடிகள் வீடுகளை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன."

முதலாம் பராக்கிரமபாகு மன்னன் எகிப்தில் ஆட்சி புரிந்த மம்லூக் ஸுல்தான் குலா உனுக்கு தூதனுப்பிய நிகழ்வுக்கு ஏழு நூற்றாண்டு காலப்பிரிவிற்குப் பின்னர் எழுதப்பட்ட 'கிராசந்தேச' என்ற தூதுப் பிரபந்தம் குறிப்பிடும் சில செய்திகள் பதினைந்தாம் நூற்றாண்டளவில் எகிப்துக்கும். பேருவலைக்குமிடையில் நிலவிய தொடர்புகளைக் குறிப்பதாக கலாநிதி குணவர்தன அவரது "Seaways to Seelediba & changing patterns of navigation in the India ocean and their impacts" என்னும் ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிடுகின்றார். 'கிராசந்தேச' என்னும் துதுப்பிரபந்தம் பேருவளையில் அக்காலப்பிரிவில் காணப்பட்ட ஒரு மக்கள் பிரிவினரை "பபுரன்" (Baburan) எனக் குறிப்பிடுகின்றது பேருவலையைக் கடந்து செல்லும் தூதுவரை நோக்கிப் பின்வருமாறு கவிஞர் கூறுகின்றார்.

"பபுரன்களைப் பாருங்கள், அவர்கள் எவ்வாறு
போதையடைந்து, கைதடிகளைச் சுழற்றிய வண்ணம்
சுற்றிச் சுற்றி நடனமாடுவதை நீங்கள் காண்பீர்கள்."

இங்கு 'பபுரன்' என்ற பதத்திற்கு விளக்கம் கொடுக்க முனையும் ஆய்வாளர்கள் சிங்களத்தில் "பர்பரதேஸவாஸின்" - பெர்பர் நாட்டைச் சார்ந்தவர்கள் எனக் குறிப்பிடுகின்றனர். "தம்பதெனி அஸ்ன" என்னும் நூலில் "பர்பர" என்னும் சொல் பிறதேசத்தவரைக் குறிக்கப் பயன்படும் ஒரு சொல்லாகும் என

குணவர்தன கூறுகின்றார். இதற்குப் பிற்பட்ட காலத்தில் "ராஜவலிய" என்னும் நூல் பபுருவர்களின் தேசத்தை அரபிகளின் தேசத்திலிருந்து வித்தியாசப்படுத்திக் குறிப்பிட்டு, அது அரபிகளின் தேசத்திற்கும், போர்த்துக்கலுக்கும் இடையில் உள்ளது எனக் கூறுகின்றது.

எகிப்திலிருந்து மேற்கு நோக்கிச்செல்லும் ஆபிரிக்காவின் வடக்குக் கரைப் பிரதேசம் பர்பர் இனத்தின் பூர்வீகப் பிரதேசம் எனப் பொதுவாகக் கருதப்படுகின்றது. எகிப்திய இனத்தவர்கள் அராபியர் – பர்பர் ஆகிய இரு சாராரையும் உள்ளடக்கிய இனக்குழுவாகும் இக்காலப்பிரிவில் மம்லூக் ஸுல்தான்களின் ஆதரவில் 'மவ்லவியா' என்னும் ஸூபி தரீக்கா மிகப் பிரபல்யமடைந்திருந்தது. மௌலவியா தரீக்காவில் சுற்றி சுற்றி வட்டமாக அசைந்தாடும் ஒருவகை ஒத்திசையான ஆத்மீக நடனம் காணப்பட்டது. பேருவலையில் அரபிகள் – பெர்பர்கள், ஒத்திசையான ஆத்மீக நடனம் காணப்பட்டதானது மம்லூக் ஆட்சிக்கும், பேருவலைக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் காணப்பட்டதை குறிப்பதாக பேராசிரியர் குணவர்தன குறிப்பிடுகின்றார். எனவே, மம்லூக் கட்சியுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு முதலாம் புவனேகபாகு மன்னன் மேற்கொண்ட ஆரம்ப முயற்சிகள், மம்லூக் ஆட்சியிலிருந்து ஒரு வணிகக்குழு பேருவலையில் குடியேறக் காரணமாக இருந்திருக்கலாம் எனவும், அவர்கள் மூலமாக மௌலவியா தரீக்காவின் அறிமுகமும், செல்வாக்கும் பேருவலையில் காணப்பட்டிருக்கலாம் எனவும் குணவர்தன கருத்துத் தெரிவிக்கின்றார்.(45)

கி.பி. பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டுகள் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றைப் பொறுத்தளவில், அவர்களது வணிக, சமூக, கலாசார வாழ்வில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்த விடயம் தென் இந்திய தமிழ்பேசும் முஸ்லிம்களுடன் ஏற்பட்ட நெருக்கமான தொடர்பாகும். இலங்கையில் பரவலாக வணிகக் குடியேற்றங்களில் பரந்து, சிதறி வாழ்ந்த முஸ்லிம்கள் இஸ்லாமிய உலகுடன் ஏற்படுத்திக்கொண்ட வணிக, கலாசார தொடர்புகள் மூலம் தங்களது மத, கலாசார தனித்துவத்தைப் பேணி வாழும் ஒரு நிலை காணப்பட்டது. ஆனால் பக்தாதின் வீழ்ச்சியும், அதனைத்

தொடர்ந்து இஸ்லாமிய உலகில் தோன்றிய மம்லூக் ஆட்சி போன்ற சிற்றாட்சிகளுடன் தொடர்புகள் ஏற்படுத்திக்கொள்வதில் ஏற்பட்ட பின்னடைவும், இலங்கை முஸ்லிம்கள், இஸ்லாமிய உலகிலிருந்து துண்டித்து வாழும் ஒரு நிலையை உருவாக்கும் அபாய நிலையை உருவாக்கியது. இந்த நிலை தொடர்ந்து நீடித்தால், முஸ்லிம்கள் இஸ்லாமிய உலகிலிருந்து துண்டிக்கப்பட்டு, தங்களது கலாசார, பண்பாட்டுத் தனித்துவத்தையே இழக்கும் நிலை உருவாக வாய்ப்பிருந்தது. ஆனால் இந்த ஆபத்தானது, இக்காலப்பிரிவில் தென்னிந்தியாவின் சோழமண்டலக் கரையிலுள்ள ம.ஃபரில் ஏற்பட்ட வணிக வளர்ச்சி காரணமாக ஏற்பட்ட தென்னிந்திய முஸ்லிம்களின் தொடர்பினால் தடுக்கப்பட்டது. ம.ஃபர் என்பது பொதுவாக Coromondal coast என அழைக்கப்பட்ட சோழமண்டலக் கரையைக் குறிக்க அரபுப் புவியியலாளாகளால் பயன்படுத்தப்பட்டது. ம.ஃபர் எனில் வழி அல்லது பாதை எனப் பொருள்படும்.

கொல்லத்திலிருந்து நெல்லூர் வரை ம.ஃபர் 300 பர்ஸங் (3.5 மைல்) கரையோரமாக நீண்டு காணப்படுகின்றது என ரபிதுத்தீன் அவரது "ஜாமி உத் தவாரிகு" என்னும் நூலில் குறிப்பிடுகிறார். அபுல் பிதா என்னும் வரலாற்றாசிரியர் மலபார் முடிவதும் ம.ஃபர் தொடங்குவதும் குமரிமுனையில் எனக் குறிப்பிடுகின்றார். பொதுவாக ம.ஃபர் என்பது Coromondal coast என அழைக்கப்படும் சோழமண்டலக் கரையின் முழுவதையும் குறிக்கும்.

அரபிகள் மிக ஆரம்ப காலத்திலிருந்தே ம.ஃபர் பகுதியிலும், மலபார் கரையிலும் தங்களது வணிகக் குடியேற்றங்களை நிறுவியிருந்தனர். ம.ஃபரில் அவர்களது முக்கிய குடியேற்றமாகவும், வணிக மத்திய நிலையமாகவும் காயல்பட்டணம் விளங்கியது. இப்பகுதியில் கோல்ட்வெல் கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கும் பதின்மூன்றாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பிரிவைச் சார்ந்த அரபு நாணயங்கள் பலவற்றைக் கண்டுபிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தென்னிந்தியாவில் ம.ஃபருக்கும், மலபாருக்கும், முஸ்லிம் உலகிற்கு மிடையிலான வணிகம் கி.பி. 13,14,15ம் நூற்றாண்டுகளில் மிகக் கணிசமான வளர்ச்சியைக் கண்டது. ம.ஃபரில் காயல்பட்டணம் போன்று, மலபாரில் சிரங்கனூர் மிகப்

புராதன காலத்திலிருந்தே புகழ்பெற்ற ஒரு துறைமுகமாக வியங்கியது. ரோமப்பயணி ஹெரோடெடஸினால் Muziris என அழைக்கப்பட்ட இத் துறைமுகம் பதினான்காம் நூற்றாண்டளவில் யெமனின் ஹல்ரமௌத் பகுதியிலிருந்து வணிகர்கள் ஒன்றுகூடும் துறைமுகமாக விளங்கியது. மாப்பிள்ளை (Mapillay) என அழைக்கப்படும் மலையாள முஸ்லிம்களின் மூதாதையர்கள் இந்த வணிகர்களாவர்.(46)

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் முஸ்லிம் வணிகர்களின் முக்கிய துறைமுகமாகக் காயல்பட்டணம் விளங்கியது. இந்த வணிகர்கள் இலங்கையோடு வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டனர். இவர்களது வணிக முயற்சிகள் இலங்கைக் கரையில் புத்தளத்திலிருந்து பேருவலை வரையிலான துறைமுகங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாக அமைந்திருந்தன.

பக்தாதின் வீழ்ச்சியோடு முஸ்லிம் உலகின் தொடர்பிலிருந்து துண்டிக்கப்பட்ட இலங்கை முஸ்லிம்கள், முஸ்லிம் உலகுடன் தொடர்பிற்கு ம.ஃபரிலேயே தங்கியிருக்க ஆரம்பித்தனர். இக்காலப்பிரிவில் ம.ஃபரில் காணப்பட்ட முஸ்லிம் குடியேற்றங்கள் அரபிகள், இஸ்லாத்தைத் தழுவிய இந்தியர்கள் ஆகியோரை உள்ளடக்கிய, ஏனைய பிரதேசங்களிலிருந்து வித்தியாசமான சமூக, கலாசார தனித்துவங்களைக்கொண்ட ஒரு சமூக அமைப்பைக் கொண்டிருந்தன. இந்த முஸ்லிம்கள் தங்களது வணிகத் தொடர்பு காரணமாக இலங்கையில் வந்து குடியேறி இலங்கை முஸ்லிம் சமூகத்துடன் இரண்டறக் கலந்தனர். இதன் காரணமாக இலங்கை முஸ்லிம் சமூகம், அதில் இதுவரை காணப்பட்ட அதன் அரபுத் தன்மையை இழந்து, இந்தோ- அரேபியத் தன்மையைப் பெற்றது.(47)

அவர்களது சமூக அமைப்பில், ஒரு புதிய இனம் இணைக்கப்பட்டு, புதிய பழக்கவழக்கங்கள் பாரம்பரியங்கள் அவர்களில் பெற்றாலும், அவர்கள் அனுபவித்த மத சுதந்திரமானது அவர்கள் தங்களது மூல அரபு இனப் பூர்வீகத்தின் நினைவைப் பாதுகாத்து தங்களது சமூக அமைப்பின் அடிப்படையாக இஸ்லாத்தைப் பேணி வாழுவதற்குத் துணைபுரிந்தது.

கி.பி. பதினான்காம் நூற்றாண்டளவில் இலங்கை முஸ்லிம்கள் இலங்கையில் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகத்தில் மிக முக்கிய இடத்தை வகித்து, இத்துறையில் மிகச் செல்வாக்கும் பலமும் பெற்று விளங்கினர். நாட்டின் கரையோரப் பகுதிகளில் மட்டுமன்றி, உள்நாட்டிலும் அவர்கள் தங்களது குடியேற்றங்களை நிறுவியிருந்தனர். புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, கொழும்பு, களுத்துறை, பேருவலை, மக்கொனை, பயாகல, அளுத்கம, காலி, வெலிகம, மாத்தறை, ஆகிய இடங்களில் கணிசமான எண்ணிக்கை கொண்ட முஸ்லிம் குடியேற்றங்கள் காணப்பட்டன. சிலாபம், நீர்கொழும்பு, களுத்துறை போன்ற துறைமுக நகரங்களில் முஸ்லிம்கள் அவர்களுக்கென உரிய ஒரு கிராமத்தலைவரைப் பெற்றிருக்கக்கூடிய அளவு செல்வாக்குப் பெற்றிருந்தனர். அளுத்கமையில் அவர்கள் மூன்று கிராமத் தலைவர்களைப் பெற்றிருந்தனர். நீர்கொழும்பிலும் வெலிகாமத்திலும் அவர்களுக்கே உரிய வீதிகள் இருந்தன. மாத்தறையில் நகரின் பிரதான பகுதியில் கடைத் தெரு வீதிகளை அண்மித்ததாக முஸ்லிம் குடியேற்றங்கள் இருந்தன. கொழும்பில் தற்போது காணப்படும் புதிய சோனகத்தெரு, பழைய சோனகத்தெரு போன்ற வீதிகள் பல நூற்றாண்டுகளாக இப்பகுதியில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்ந்ததைக் குறிக்கின்றன.[48].

முஸ்லிம்கள் சிங்கள ஆட்சியில் மதிப்பும் செல்வாக்கும் பெற்று அவர்களது வியாபாரங்களை சுதந்திரமாக நிர்வகிக்கும் உரிமையைப் பெற்றிருந்தனர். துறைமுகங்களில் கப்பல்கள், கடல் வியாபாரம், தொடர்பாக எழுந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவர்களுக்கே உரிய நீதிமன்றங்கள் இருந்தன. திருமணம், விவாகரத்து, வாரிசுரிமையைப் பொறுத்தளவில் அவர்களது சட்டத்தைப் பின்பற்றும் உரிமை இருந்தது. காணிகள் வழங்கப்பட்டு பள்ளிவாசல்கள் கட்டுவதற்கும் அனுமதிக்கப்பட்டது. இவ்வாறு முஸ்லிம்கள் சிங்கள மன்னர்களின் மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்று மிகச் செல்வாக்கும், பலமும், சுதந்திரமும் படைத்த ஒரு சமூகமாக விளங்கிய இந்நிலையிலே போர்த்துக்கேயரின் பிரவேசம் நிகழ்கிறது.

போர்த்துக்கேயரின் வருகையும் ஆதிக்கமும் முஸ்லிம்களின்

வணிக முயற்சிகளிலும் செல்வாக்கிலும் ஒரு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது மட்டுமன்றி அவர்களது வரலாற்றில் சோதனை மிக்க காலகட்டத்தை எதிர்கொள்ளச் செய்தது.

போர்த்துக்கேயரின் வருகை ஏற்படுத்திய மாபெரும் தாக்கத்தினை மெர்ஸன் டெனைட் பின்வருமாறு குறிப்பிடுகிறான்: "இந்த காலகட்டத்தில்ஈ ஒரு கிறிஸ்தவ அரசியல் பலம் மட்டும் தோன்றிராவிட்டால் இலங்கையானது பிரிட்டி மன்னனின் உடைமையாக மாறுவதற்குப் பதிலாக ஓர் அராபிய ஆட்சியாளனின் கீழ் ஒரு முஹம்மதிய ஆட்சி உருவாகியிருக்கும்." (49)

Footnotes

1. Cosmas Indicopleustes, **The Christian Topography,** (Ed) F.Q. Winstedt, Oxford University Press, 1909,322.
2. S.A Imam, "Ceylon- Iran Cultural Relationship", **2500th Anniversary of the Monarchy of Iran, 1971** (Brochure issued by the National Committee of Ceylon)
3. Sirima Kiribamune, Muslims And The Trade of The Arabian Sea with Special Reference To Sri Lanka From The Birth of Islam To The Fifteenth Century, in **Muslims of Sri Lanka,** (Ed) M.A.M Shukri, Colombo 1980, P.92
4. **Mahawamsa,** Ed. By W.Geiger, London 1950- XV-90.
5. Sulaiman Nadvi, Muslim Colonies in India Before The Muslim Conquests, **Islamic Culture**, Hyderabad VIII, P-35.
6. Sirima Kiribamune, **op.cit**, p-94.
7. Tennent, James, Emerson, **Ceylon**, London, 1859 Vol-I. p- 582.
8. S.A Imam, Ceylon- Arab Relation, **MICH- Souvenir**, 1944-65, pp-10-13.
9. Ibid, p-11.
10. Sirima Kiribamune, **op.cit**,
11. Sirima Kiribamune, **op.cit**,
12. John Carswell, The Excavations at Manthai, Ancient Ceylon, No.07 Vol. I. pp 17-13. Sirima Kiribamune, **op.cit**, p-97.
14. Lorna Davaraja, **The Muslim of Sri Lanka- One Thousand Years of Ethnic Harmony** - Colombo 1994, p-27.
15. S.Arasaratnam. **Ceylon**, New Gersy, 1964, p-53.
16. Hakim, Mohamed, Said and M.D Baloch (Trans. And Ed) **Kithab Al Jamahir Fi Marifat Al Jawahir,** Islamabad 1989, p-54.
17. M.M.M Mahroof, The Early Arab Trade in Sri Lanka, **MICH- Souvenir, VI.1990,** p.24

18. Mohamed Sameer, Archeological Evidence of Early Arabs in Ceylon, **MICH First Twenty One Years Souvenir,** Colombo 1981, P-2.
19. R.L. Brohier, **Changing Face of Colombo 1981,** P-2.
20. Lorna Davaraja, **op.cit,** p.27
21. **History of Ceylon,** University of Ceylon, Vol- I, p-706.
22. Sir Alexander Johnston. Footnotes to his dispatch to the secretary of State dated 03rd February 1827, **Transaction of the Royal Asiatic Society of Great Britain and Ireland,** Vol.1 p-537.
23. S.A Imam, Ceylon- Arab Relation op. cit.
24. *M.A.M. Shukry, Sinbad and Ibn-Batuta.*
25. Tim Savrin, **The Sinbad Voyage,** London 1982, pp.16-17.
26. S.A Imam, Ceylon-Iran Cultural Relationship, **op.cit.**
27. **The Rihla of Ibn Batuta,** Tr. & Commentry by Mahidi Hussain, Baroda 1953, p-219.
28. Lorna Davaraja **op.cit.** P-32
29. Ibn- Batuta **op.cit.**
30. Bernard Louis, The Fatimids and the rout to India, **in Studies in Islamic History and Institution**. Leiden, 1968. p 344.
31. Sirima Kiribamuna, **op.cit,** p-184.
32. Lona Davaraja **op.cit.** P-127.
33. bid, p-37.
34. H.W. Codrington, A Sinhalese embassy of Egypt, **JRASCB**, Vol-III, No.72, 1919 pp-82-84.
35. Codrington H.W, **Ceylon Coins and Currency** p- 158 ff.
36. **The Travels of Marco polo,** Trans. by R.E. latham, London 1951, p-66.
37. **Rihla Ibn Batuta,** Cairo 1948. Vol- II, pp-109-110.
38. Casse Chetty, **The Ceylon- Gazetteer.**
39. P.Ramanathen, The Ethnology of Moors of Ceylon, JRAS, Ceylon Branch-x (36) 1888. Pp-234-262.
40. Van Sanden J.C, **Sonahar, A Brief History of the Moors of Ceylon,** 1926, p-95.
41. Lona Davaraja **op.cit.** P-33.
42. Ananda Coomarasuwamy K., **Medieval Sinhalese Art,** 1979, p232.
43. R.L. Brohier, **Seeing Ceylon,** Colombo 1981, p.135.
44. Henry Yule (Ed) **Cathay and The Way Thither,** p-357.
45. RA.L.H Gunavardana, Sea ways of Seladibe, **Kalyani,** Vol:V, 1986-87, p-13
46. K.A. Neelakanda Sasthri, **Foreing Notices of South India,** Madras 1939, p-162.
47. Tarachand, **Influence of Islam on Indian Culture,** Lahore 1979, p-34.
48. T.R.H Abeyasighe Muslim of Sri Lanka. **op.cit. pp**-129-145.
49. Tennant James Emerson, **Ceylon** , Vol; I London (1859)

ஐரோப்பியர் ஆட்சியில் முஸ்லிம்கள்

போர்த்துக்கேயர் காலம் (கி.பி.1505-1658)

கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஐரோப்பியர் நன்னம்பிக்கைமுனை ஊடாக இந்தியாவிற்கான கடல் பாதையைக் கண்டுபிடித்து இந்து சமுத்திரத்தில் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்ட முனைந்ததானது இந்து சமுத்திர கடல் வணிகத்தில் மட்டுமன்றி, ஆசிய அரசியலில்கூட மிகப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது. இதுவரை இந்து சமுத்திரத்தில் நடைபெற்ற அமைதியான வணிகச் செயல்பாட்டின் இடத்தில் மிக உக்கிரமான வன்முறைசார்ந்த ஓர் போட்டி வணிகம் ஆரம்பித்தது. இது இந்து சமுத்திரத்தில் முஸ்லிம்களின் வணிக ஆதிக்கத்தின் வீழ்ச்சியையும் ஐரோப்பிய கடல் ஆதிக்கத்தின் எழுச்சியையும், பலத்தையும் முன்னறிவிப்புச் செய்தது.

போர்த்துக்கேய கடல் பயணியான வஸ்கோடகாமா கிழக்காபிரிக்காவிலிருந்து தென் இந்தியாவில் கள்ளிக் கோட்டையை அடைவதற்கு கடல் பயணத்தில் மிகப் புகழ் பெற்றவராகவும் கடல்பாதை பற்றிய அறிவில் மிகத் தேர்ச்சி பெற்றவராகவும் விளங்கிய இப்னு மாஜித் என்னும் புகழ்பெற்ற முஸ்லிம் மாலுமியே காரணமாக அமைந்தார். "அஸதுல் பஹ்ர்"- கடல் சிங்கம் - என அழைக்கப்பட்ட இப்னு மாஜித் கடல் பயணங்களில் மிக ஆழ்ந்த அனுபவம் பெற்றவராக விளங்கினார். அவரது "கிதாபுல் பவாஇத்" என்னும் நூல் செங்கடலிலும், இந்து

சமுத்திரத்திலும் பயணம் செய்வதற்கான கடல் பாதைகள் பற்றிய விரிவான விளக்கங்களைக் கொண்டிருந்தது. இந்து சமுத்திரத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த அமைதியான வணிகத்தில் வன்முறையான போட்டியையும், ஆக்கிரமிப்பு உணர்வையும் தோற்றுவித்த போர்த்துக்கேயருக்கு இந்து சமுத்திர கடல் பாதை பற்றிய வழிகாட்டுதலை வழங்கியமைக்காக இப்னு மாஜித் பிற்காலத்தில் மிக வேதனைப்பட்டதை கிதாபுல் பவாஇதில் அவரது குறிப்புக்கள் உணர்த்துகின்றன.

போர்த்துக்கேயரின் வருகையின்போது இலங்கை முஸ்லிம்களின் அரசியல், பொருளாதார சமூக நிலையை ஓரளவு நோக்குதல் பொருத்தமாகும். ஏலவே விளக்கப்பட்டவாறு இக் காலப்பிரிவில் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் முஸ்லிம்கள் மிக வளமான குடியேற்றங்களை ஏற்படுத்தி மிகத் தீவிரமாக வணிக முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, கொழும்பு, களுத்துறை, பேருவலை, மக்கொனை, அளுத்கமை, காலி, வெலிகம, மாத்தறை ஆகிய நகரங்களில் மிகக் கணிசமான முஸ்லிம் குடியேற்றங்கள் காணப்பட்டன. சிலாபம், நீர்கொழும்பு, களுத்துறை போன்ற துறைமுக நகரங்களில் அவர்கள் மிகச் செல்வாக்குப் பெற்றிருந்தனர்.

இந்த முஸ்லிம் குடியேற்றங்களின் பொருளாதார செழிப்பிற்கு அவர்கள் கையிலிருந்த ஏற்றுமதி, இறக்குமதி வணிகமும், அதன் விநியோகமும் அடிப்படைக் காரணமாக அமைந்தது. உள்நாட்டு வணிகத்திலும் முஸ்லிம்கள் ஈடுபட்டனர். கண்டி ராச்சியம், சுதந்திர ராச்சியமாகச் செயல்பட ஆரம்பித்ததும் முஸ்லிம் வணிகர்கள் புத்தளம், திருகோணமலை, கொட்டியாரம், மட்டக்களப்பு, ஆகிய இடங்களிலிருந்து தங்களது இறக்குமதிப் பொருட்களை மத்திய மலைநாட்டுக்குப் பரிமாற்றம் செய்தனர். முஸ்லிம் வணிகர்கள் கரையோரத் துறைமுகங்களிலிருந்து உள்நாட்டுக்கு வணிகப் பொருட்களைச் சுமந்து செல்ல 'தவளம்' என்னும் மந்தைப் பொதிகளை பயன்படுத்தினர்.(1)

கி.பி. 15ம் நூற்றாண்டில் இலங்கையை அடைந்த போர்த்துக்கேயர் நாட்டின் ஏற்றுமதி இறக்குமதி வணிகம் முழுவதும் முஸ்லிம்கள் கையில் இருப்பதை அவதானித்தனர். யானை,

முத்துக்கள், பாக்கு, ஏலம் முதலான வணிகப் பொருட்களின் வணிகம் முழுவதும் முஸ்லிம்கள் வசம் இருந்தது. இலங்கையில் போர்த்துக்கேயர் வணிக, அரசியல் செல்வாக்குப் பெற்றுள்ள முஸ்லிம்களையே தாங்கள் எதிர்கொள்ளவேண்டிய முக்கிய போட்டியாளர்களாகக் கருதினர். எனவே முஸ்லிம்களின் வணிக ஆதிக்கத்தை முறியடித்து அதனை முற்றிலும் தம்வசமாக்கிக்கொள்வதே போர்த்துக்கேயரின் முக்கிய குறிக்கோளாக அமைந்தது.

கி.பி. 1505ல் இலங்கைக்குப் போர்த்துக்கேயரது வருகையானது, முஸ்லிம்கள் மத்தியில் பீதியையும் அச்சத்தையும் தோற்றுவித்தது. போர்த்துக்கேயர்கள் இலங்கையில் முஸ்லிம்களைப் பொறுத்தளவில் கடைப்பிடித்த கொள்கை அவர்கள் ஏனைய நாடுகளில் முஸ்லிம்களைப் பொறுத்தளவில் கடைப்பிடித்த கொள்கையின் தொடர்ச்சியாகவே விளங்கியது. ஸ்பெயினில் முஸ்லிம்களின் எண்ணூறு வருடகால ஆட்சியை முற்றுப் பெறச் செய்யும் வகையில் கி.பி. 1492ம் ஆண்டு கிரனடா கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து முஸ்லிம்களுக்கு எதிரான மிகக் கடுமையான போக்கை அவர்கள் கடைப்பிடித்து இறுதியாக முஸ்லிம்கள் ஸ்பெய்னிலிருந்து வெளியேற்றப்பட்டனர். கி.பி. 1580ல் போர்த்துக்கேய நாடும் ஸ்பெயினின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. ஸ்பானியர்கள் முஸ்லிம்களைப் பொறுத்தளவில் கடைப்பிடித்த முஸ்லிம்களுக்கெதிரான செயல்பாடுகளையும் நடைமுறைகளை யுமே போர்த்துக்கேயர் இலங்கையில் கடைப்பிடித்தனர். மதத்தைப் பொறுத்தளவிலும், வணிகத்துறையிலும் முஸ்லிம்கள் போர்த்துக் கேயருக்குப் போட்டியாளர்களாக விளங்கினர். இலங்கைக்குப் போர்த்துக்கேயரின் வருகையின் நோக்கங்களாக வணிகத்துறை யில் மேலாதிக்கம் செலுத்துவதும், கிறிஸ்தவ மதப் பிரசாரமும் அமைந்தன.

அவர்களது இந்நோக்கத்திற்கு முக்கிய தடையாக முஸ்லிம்கள் விளங்கினர். நாம் ஏற்கனவே நோக்கியவாறு போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த காலப்பிரிவில் முஸ்லிம்கள் வணிகத்தில் மிகப் பலம்பெற்று விளங்கினர். இலங்கையில் இக்காலப்பிரிவில் மிக நீண்ட காலமாக குடியேறியிருந்த நிரந்தரக்

குடிகளான முஸ்லிம்கள் காணப்பட்டதோடு, வியாபார நோக்கமாக இலங்கைக்குவந்து சில காலம் தங்கிவிட்டு தென்னிந்தியாவுக்குத் திரும்பிச் செல்லும் வழக்கமுடைய தென்னிந்திய முஸ்லிம்களும் இருந்தனர். இவ்வாறு இலங்கைக்கு வணிகத்திற்காக வந்த தென்னிந்திய முஸ்லிம்களில் பலர் அவர்களது வியாபார நிறுவனங்களை ஏற்படுத்தி, திருமணம் முடித்து, சொத்துக்கள் வாங்கி நிரந்தரக் குடியேற்றங்களைக் கொண்டிருந்தனர்.

கி.பி. 1507-9 க்கும் இடைப்பட்ட காலப்பிரிவில் போர்த்துக்கேயர் இந்து சமுத்திரத்தில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டும் முயற்சியில் ஈடுபட்டனர். அவர்களது ஆதிக்கப் பரவலின் இந்த ஆரம்ப காலப்பிரிவில் இலங்கையுடன் அவர்களது தொடர்பு மிகவும் குறைவாகவே காணப்பட்டது. ஒவ்வொரு வருடமும் அவர்களது சில கப்பல்கள் இலங்கைக்கு வந்து கறுவா போன்ற பொருட்களை பெற்றுச் செல்லும் நிலையே இருந்தது. கி.பி. 1517ம் ஆண்டளவில் அவர்கள் கீழைத்தேய நாடுகளில் தங்களது ஆதிக்கத்தை மிக உறுதியாக நிலைநாட்டிய பின்னரே இலங்கையில் தங்களது அரசியல், பொருளாதார நலன்களுக்காக சில நிரந்தர முயற்சிகள் மேற்கொள்ள முனைந்தனர்.

கி.பி. 1518ல் போர்த்துக்கேயர் இலங்கையில் ஒரு கோட்டையை நிர்மாணிக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது முஸ்லிம்கள் அதன் அபாயத்தை உணர்ந்தனர். கோட்டே இராச்சியத்தின் மன்னருக்கு போர்த்துக்கேயர் அக்கோட்டையை நிர்மாணித்ததானது ஓர் அறைகூவலாக அமைந்தது. முஸ்லிம்களைப் பொறுத்தளவில் அவர்களது வணிகத்திற்கும், நிலைப்பாட்டிற்கும் அச்சுறுத்தலாக அது விளங்கியது. இந்நிலையில் கோட்டே மன்னன் முஸ்லிம்களினதும், கள்ளிக்கொட்டை மன்னன் ஸமோரினதும் (Zamoran) உதவியுடன் போர்த்துக்கேயரை நெருக்கத்திற்கு ஆளாக்கினான். இதன் விளைவாக போர்த்துக்கேயர் 1524ல் அக்கோட்டையை உடைக்க முடிவுசெய்தனர்.(2)

இதற்கிடையில் இலங்கையின் ஆட்சியில் ஒரு முக்கிய மாற்றம் நடைபெற்றது. கோட்டே இராச்சியத்தில் ஏற்பட்ட அரசியல் குழப்பநிலை காரணமாக அது மூன்று ராச்சியங்களாகப்

பிரிக்கப்பட்டது. மூன்று சகோதரர்களில் மூத்தவரான புவனேக பாகுவிற்கு (1521-1551) கோட்டேயும் அதற்கு அணித்துள்ள கடல் பிரதேசங்களும் வழங்கப்பட்டன. இளையவரான மாயாதுன்னைக்கு (1521-1581) சீதாவக்கை, நான்கு கோரளைகள், தெனவக ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பிரதேசங்கள் சீதாவக்கை ராச்சியம் என்ற பெயரில் வழங்கப்பட்டதோடு, இரண்டாம் புதல்வரான மத்தும பண்டாரவிற்கு ரய்கம பிரதேசம் வழங்கப்பட்டு அவர் ரய்கம பண்டார என்ற பெயரைப் பெற்றார். இவ்வாறு கோட்டை இராச்சியம் துண்டாடப்பட்டதானது இலங்கையில் போர்த்துக்கேயரின் நிலையைப் பலப்படுத்தத் துணையாக அமைந்தது.

சீதாவகை மன்னன் மாயாதுன்னையிடம் பண்டைய கோட்டை இராச்சியம் முழுவதையும் தனது ஆதிக்கத்திற்குட் படுத்துதல் வேண்டும் என்ற திட்டம் காணப்பட்டது. இந்நிலையில் ஜயவர்தன கோட்டை ராஜதானியின் மன்னன் புவனேகபாகு, தனது ஆட்சியைப் பாதுகாப்பதற்கு போர்த்துக்கேயரின் உதவி இன்றியமையாதது என்பதை உணர்ந்து அவர்களின் ஆதரவைப் பெற முனைந்தான். இச்சந்தர்ப்பத்தை முஸ்லிம்களை ஒடுக்க உரிய வாய்ப்பாகப் பயன்படுத்திய போர்த்துக்கேயர், முஸ்லிம்களைக் கொழும்பிலிருந்து வெளியேற்றும்படி புவனேகபாகு மன்னனைத் தூண்டி அதற்கு அவரை இணங்க வைத்தனர். இவ்வாறு வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் சீதாவக்கை மன்னன் மாயா துன்னையினால் வரவேற்கப்பட்டனர். அவர்களில் கணிசமானோர் சீதாவக்கை ராஜதானியில் தஞ்சமடைந்தனர். அவர்கள் துறைமுக நகரங்களான நீர்கொழும்பு, புத்தளம், பேருவலை, அளுத்கமை ஆகிய பகுதிகளில் குடியேறினர். இவற்றுள் சில சீதாவக்கை ராஜதானிக்கு உட்பட்டதாக விளங்கின.(3)

தன்னிடம் தஞ்சமடைந்த முஸ்லிம்களின் ஆலோசனையின் பேரில் மாயாதுன்னை போர்த்துக்கேயருக்கு சார்பாகச் செயல்படும் அவரது சகோதரர் புவனேகபாகுவுக்கும் போர்த்துக்கேயருக்கும் எதிராக உதவிகேட்டு, சில முஸ்லிம் வணிகர்களை கள்ளிக்கோட்டை அரசனின் சபைக்கு அனுப்பினான். இதற்குப் பகரமாக இலங்கைத் தீவின் சில துறைமுகங்களை அவர்களுக்குக் கொடுப்பதாக உறுதி அளிக்கப்பட்டது. இது கள்ளிக்கோட்டை

அரசன் ஸமோரினின் நோக்கங்களுக்கு சாதகமாக அமைந்ததால் அவர் கொச்சினில் இருந்த பிரபல்யம்பெற்ற முஸ்லிம்களான பச்சி மரிக்கார், குஞ்சலி மரிக்கார், அலி இப்ராஹிம் ஆகிய மூவரையும் ஒரு கப்பற்படையுடன் அனுப்பினார். ஆனால் புவனேகபாகுவின் தலைமையிலான கோட்டையை முற்றுகையிடும் முயற்சி தோல்வியில் முடிந்தது. இறுதியில் மாயாதுன்னை சமாதானத்திற்கு உடன்பட்டார். சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முக்கிய நிபந்தனையாக, முஸ்லிம் தளபதிகளை கையளிக்கும்படி போர்த்துக்கேயர் வேண்ட, அவ்வாறே செய்யப்பட்டது.(4)

முஸ்லிம்கள் மாயாதுன்னைக்கும், பிற்காலத்தில் அவரது புதல்வரான ராஜஸிங்ஹ(1582-1592)வுக்கும் பல வகைகளில் உதவிபுரிந்தனர். அவர்கள் போர்த்துக்கேயருக்கு எதிரான போர்களில் பங்குகொண்டனர். கள்ளிக்கோட்டை ஆட்சியாளர்களின் உதவியைப் பெறும் முயற்சியில் அவரிடம் அனுப்பப்பட்ட தூதுவர்களாக செயல்பட்டனர். அத்தோடு போரின்போது துப்பாக்கி வீரர்களாகவும் பணிபுரிந்தனர். இத்தகைய துப்பாக்கி வீரர்கள் சிங்கள ராணுவத்தில் காணப்படவில்லை. சிங்கள ஆட்சியாளர்களுக்கு எதிராக மேற்கொண்ட எல்லாப் போர்களிலும் முஸ்லிம்கள் சிங்கள மன்னர்களுக்கு ஆதரவாக இருந்ததை மிக வெறுப்புணர்வோடு போர்த்துக்கேய வரலாற்றாசிரியர் கொய்ரோஸ் (Queyroz) குறிப்பிடுகின்றார்.(5)

போர்த்துக்கேயர் முஸ்லிம்களைப் பொறுத்தளவில் கடைப்பிடித்த கொள்கையும், போக்கும் எப்பொழுதும் ஒன்றாக இருக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் முஸ்லிம்கள் சிலர் போர்த்துக்கேய அதிகாரிகளின் பலவீனங்களைப் பயன்படுத்தி அவர்களுக்கு லஞ்சம் வழங்கி, கோட்டை இராச்சியத்தில் தங்கி, தங்களது வியாபார முயற்சிகளைத் தொடர்ந்தனர். இவ்வாறு போர்த்துக்கேயர்களின் பலவீனங்கள் ஒருபக்கமிருக்க, போர்த்துக்கேயருக்கும் சில விடயங்களில் முஸ்லிம்களின் ஒத்துழைப்பும், உதவியும் அவசியமாகியது. முஸ்லிம்களைவிட அவர்கள் ராணுவப் பலத்தைப் பெற்றிருந்தாலும், முஸ்லிம் வணிகர் இந்து சமுத்திரத்தில் கப்பலோட்டுவதிலும், காற்றுவீசும் திசைகள் பற்றிய அறிவிலும் அவர்களைவிட அனுபவமிக்கவர்களாக

விளங்கினர். எனவே முஸ்லிம்களின் உதவி அவர்களுக்கு சிலபோது அவசியமாகியது. இதன் காரணமாக போர்த்துகேயர் முஸ்லிம் களுக்கு அவ்வப்போது சில சலுகைகளை வழங்கத் தவறவில்லை.

ஆனால் பொதுவாக இலங்கையில் முஸ்லிம்கள் நிலையாக இருப்பது போர்த்துக்கேயருக்கு ஆபத்தானதாகக் கருதப்பட்டது. இதற்கு மூலகாரணம் முஸ்லிம்கள் கண்டி இராச்சியத்துடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பும், நல்லுறவுமாகும். இத் தொடர்பானது கண்டி இராச்சியத்திற்கு ஒரு பலமாகக் காணப்படுவதை உணர்ந்த போர்த்துக்கேயர், இது அவர்கள் கண்டியைக் கைப்பற்றுவதற்கு பெரும் தடையாக விளங்குவதாகக் கருதினர். எனவே படிப்படியாக முஸ்லிம்களை நசுக்கி ஒடுக்குவதற்கான பல நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டனர். கி.பி. 1597– 1600க்குமிடையில் இலங்கையில் போர்த்துக்கேய அதிபதியாக இருந்த விடிகூரியா(Vidiguria) இலங்கையிலிருந்து முஸ்லிம்கள் வெளியேறும்படி ஒரு கட்டளை பிறப்பித்தான். ஆனால் அதனை உறுதியாக நடைமுறைப்படுத்த முடியவில்லை. 1613ம் ஆண்டில் கோவாவில் போர்த்துக்கேய வைஸ்ரோயாக பணிபுரிந்த டொம் ஜெரோனி மோ டீ அஸெவிடோ 1613ம் ஆண்டு கொழும்பில் இரண்டு பருவப்பெயர்ச்சிக் காற்றுக்களுக்கிடையில் மட்டும்தான் முஸ்லிம்கள் தங்கமுடியு மென்றும் அதனை மீறுவோர் மரணதண்டனை விதிக்கப்படுவர் எனவும் கட்டளை பிறப்பித்தான். வணிக நோக்காகக் கொழும்புக்கு வந்து பருவப் பெயர்ச்சிக் காலப்பிரிவுகளில் தங்கி மீண்டும் தென் இந்தியாவுக்குத் திரும்புபவர்கள் கொழும்பில் நிரந்தரமாக தங்குவதைத் தடுக்கும் நோக்கத்துடனேயே இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இலங்கையில் நீண்டகாலமாகத் தங்கியிருக்கும் சுதேசிகளான முஸ்லிம்களை இது உள்ளடக்கவில்லை.

அஸவிடோவின் கட்டளைக்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் 1615ம் ஆண்டு போர்த்துக்கேய மன்னன் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் அனைத்தையும் நீக்கும்படியும், முஸ்லிம்கள் எவரும் புதிதாக நாட்டுக்குள் நுழைய அனுமதிக்கப்படக் கூடாதெனவும் மிகவும் பாரதூரமான ஒரு கட்டளை பிறப்பித்தான். ஆனால் இது மிக உறுதியாக செயல்படுத்தப்படவில்லை.

இந்தக் கட்டளைக்கு மத்தியில்கூட முஸ்லிம்கள் கரையோரப் பகுதிகளில் தங்களது வணிக முயற்சிகளை அவர்களது திறமையாலும் முயற்சியாலும் மேற்கொண்டுவந்தனர்.(6)

போர்த்துக்கேய மன்னன் முஸ்லிம்களை நாட்டைவிட்டு வெளியேறும்படி பிறப்பித்த கட்டளையை, மிக உறுதியாகச் செயல்படுத்துவதில் போர்த்துக்கேயத் தளபதி கொன்ஸ்டைன்டின் டி ஸொய்ஸா டி நொரொன்ஹா (Constaintni de soysa de Naroha) மிக உறுதியாகச் செயல்பட்டார். கி.பி. 1626ல் அவர் முஸ்லிம்கள் அனைவரையும் போர்த்துக்கேய ஆதிக்கத்தின் கீழ் இருந்த பிரதேசங்களிலிருந்து வெளியேற்றினார். இவர்களில் சிலர் இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல, ஏனையோர் கண்டி இராச்சியத்தை நோக்கிப் படிப்படியாக நகர ஆரம்பித்தனர். கண்டி இராச்சியம் விமலதர்மசூரிய மன்னனின் சகோதரரான செனரத்தின் (1604-1635) ஆட்சியின் கீழிருந்தது. ஸெனரத் மன்னனின் ஆதிக்கத்தின் கீழிருந்த கண்டி ராச்சியத்தில் முஸ்லிம்கள் பாதுகாப்புத்தேடி புகலிடம் அடைந்ததை கலாநிதி லோனா தேவராஜா பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "சுதந்திர பௌத்தத்தின் கடைசிக் கோட்டையான இது முஸ்லிம்களுக்கு அவர்களது சோதனை மிக்க காலகட்டத்தின் புகலிடமாக அமைந்தது. ஏனெனில் அரசனினதோ அல்லது பாப்பாண்டவரினதோ எத்தகைய தலையீடுமின்றி அவர்களது மார்க்கத்தைப் பின்பற்றும் வாய்ப்பு அங்கு மட்டுமே காணப்பட்டது."(7)

கண்டி இராச்சியத்திற்குப் புகலிடம் தேடிச் சென்ற முஸ்லிம்களைக் கண்டி மன்னன் வரவேற்றதற்கான பல காரணங்கள் இருந்தன. கண்டி இராச்சியம் பல போர்கள், படையெடுப்புக்கள் காரணமாக மனித வளத்தை இழந்திருந்த நிலையில் விவசாய முயற்சிகளுக்கு மனித சக்தி அவசியமாகியது. அத்தோடு வணிகர்கள் என்ற வகையில் முஸ்லிம்கள், பலவீனமடைந்திருந்த கண்டி இராச்சியத்தின் பொருளாதார வாழ்விற்கு பலமளிக்கும் ஒரு சக்தியாக விளங்கினர். மேலும், முஸ்லிம்களது வணிகத் தொடர்பு காரணமாக உலகின் பிற பகுதிகளில் நடைபெறும் நிகழ்வுகள் பற்றி அரசனால் அறிய முடிந்தது. அரசனுக்குப் பல வழிகளிலும் உதவிபுரிந்த அவர்கள், ஆட்சிக்கு

விசுவாசமாக வாழ்ந்தனர். ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கம் அவர்கள்பால் காணப்படவில்லை. எனவே கண்டி மன்னன் அவர்களை முழு மனதுடன் வரவேற்றான். செனரத் மன்னன் 4000 முஸ்லிம்களை மட்டக்களப்பில் குடியேற்றியதாக போர்த்துக்கேய வரலாற்றாசிரியர் கொய்ரோஸ் குறிப்பிடுகின்றார். அவர் இவ்வாறு முஸ்லிம்களை வளமான விவசாய நிலங்களைக் கொண்டிருந்த பிரதேசங்களில் குடியேற்றியதன் நோக்கம், போர்களின்போது தடையின்றி உணவைப் பெற வகைசெய்வதேயாகும் என வரலாற்றாசிரியர் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதுவே செனரத் மன்னன் 1628-1630க்கு இடையில் நடைபெற்ற போர்களில் வெற்றிபெற்று இழந்த பிரதேசங்களை மீண்டும்பெற வகைசெய்தது. எனவே செனரத் மன்னன் முஸ்லிம்களைப் பொறுத்தளவில் கடைப்பிடித்த கொள்கை இரு சாராருக்கும் பரஸ்பர நன்மை யாக்கக்கூடியதாக அமைந்தது. முஸ்லிம்கள் வணிகத்துறையில் வளர்ச்சியடைந்து பயன்பெற்றனர்.(8)

முஸ்லிம்களைப் போர்த்துக்கேய ஆட்சிப்பிரதேசங்களிலிருந்து வெளியேற்றும் கொள்கை மிக வன்மையாகக் கடைப்பிடிக்கப் பட்டாலும் கணிசமான அளவு முஸ்லிம்கள் மாத்தறை, காலி, அளுத்கமை, களுத்துறை ஆகிய கரையோரப்பிரதேசங்களில் வாழ்ந்தனர். இதற்கிடையில் 1640ம் ஆண்டு ஒல்லாந்தர் காலிக் கோட்டையைக் கைப்பற்றினர். போர்த்துக்கேயரின் நெருக்கு தலுக்கு ஆளான ஒல்லாந்தர் அவர்களுக்கு எதிரான போரில் முஸ்லிம்களின் உதவியை வேண்டியதோடு, மாத்தறை முஸ்லிம்கள் சிலரின் நட்பையும் அவர்கள் பெற்றனர். இதனைக் கேள்வியுற்ற போர்த்துக்கேயத் தளபதி அன்டொனியோ டி அமரோட் மாத்தறைக் கடைவீதியை சூழ்ந்து தாக்கும்படியும், எல்லா ஆண்களையும் கொலைசெய்து சொத்துக்களைப் பறிமுதல் செய்யும்படியும் கட்டளை பிறப்பித்தான். பெண்களும், சிறுவர்களும் சிறைக்கைதி களாகக் கொழும்புக்கு அனுப்பப்பட்டனர்.

மாத்தறையில் நடைபெற்ற இந்தப் பயங்கரமான படுகொலையின் காரணமாக மேலும் பல முஸ்லிம்கள் கண்டி இராச்சியத்திற்குத் தப்பிச் சென்றனர். செனரத் மன்னனின் புதல்வரான இரண்டாம் இராஜசிங்ஹ (1635-1687) முஸ்லிம்

களைப் பொறுத்தளவில் அவரது தந்தை கடைப்பிடித்த தாராளக் கொள்கையைப் பின்பற்றினார். அவரது காலப்பிரிவிலேயே அக்குரணையில் முஸ்லிம்களது குடியேற்றம் நடைபெற்றதாகக் கருதப்படுகின்றது.

இலங்கையில் போர்த்துக்கேயரது 150 வருட கால ஆட்சியில் முஸ்லிம்களைப் பொறுத்தளவில் காலத்திற்குக் காலம் வித்தியாசமான கொள்கைகளைக் கடைப்பிடித்தாலும், முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பும், பகைமையும் எல்லாக் காலப்பிரிவுகளிலும் காணப்பட்டது. போர்த்துக்கேயரின் முஸ்லிம்களை மதமாற்றம் செய்வதற்கான முயற்சிகள் அனைத்தும் வெற்றியளிக்கவில்லை. மார்க்கக் கிரியைகளைப் பொறுத்தளவில் முஸ்லிம்கள் போர்த்துக்கேயர்களால் பல அச்சுறுத்தல்களுக்கும், நெருக்கடிகளுக்கும் ஆளாக்கப்பட்டனர். கி.பி. 1540ம் ஆண்டு முதல் போர்த்துக்கேயரின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த பிரதேசங்களில் முஸ்லிம்கள், ஹிந்துக்கள், பௌத்தர்கள் ஆகியோர் தங்களது மதக்கிரியைகளைப் பகிரங்கமாக நிறைவேற்றுவதைத் தடுக்கும் பல சட்டங்கள் பிரகடனப்படுத்தப்பட்டன. ரோமன் கத்தோலிக்க மதத்தைத் தழுபவர்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டன. 1576ம் ஆண்டு டிசம்பர் 4ம் திகதி செய்யப்பட்ட ஒரு பிரகடனம் போர்த்துக்கேய ஆட்சியின் கீழிருந்த வணக்கஸ்தலங்களை அழிக்கும்படி கட்டளை பிறப்பித்தது. முஸ்லிம்களது தொழுகைக்கான அழைப்பில், முஹம்மத் (ஸல்) அவர்களது பெயர் கூறப்படுவது தடைசெய்யப்பட்டது. மதக் கீரந்தங்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்படல் வேண்டும் என உத்தரவிடப்பட்டது. இத்தகைய ஒரு சூழலில் தங்களது மதக் கடமைகளை சுதந்திரமாக நிறைவேற்றக் கூடிய ஒரு பாதுகாப்பான சூழலை நோக்கி குடிபெயர்ந்து செல்வதைத்தவிர வேறு வழி முஸ்லிம்களுக்குத் தென்படவில்லை. இத்தகைய பிரதேசமாகவே கண்டி இராச்சியம் விளங்கியது.

கண்டி இராச்சியத்தில் குடியேறிய முஸ்லிம்கள் கண்டியில் சிங்கள மன்னர்களுக்குப் பூரண விசுவாசத்துடன் செயல்பட்டதுடன் போர்த்துக்கேயர்களுக்கு எதிரான போர்களில் அவர்களுக்குப் பக்கபலமாக நின்றனர். 1638ம் ஆண்டில் கண்டிக்கு எதிராகப் போர் தொடுத்த போர்த்துக்கேயப் படைகளை ராஜசிங்ஹ மன்னன்

கன்னொருவ என்னுமிடத்தில் தோல்வியடையச் செய்தான். இப்போரில் முஸ்லிம்கள் கண்டி மன்னனின் வெற்றிக்கு முக்கிய பங்களிப்புச் செய்தனர். இப்போரில் முஸ்லிம்கள் காட்டிய விசுவாசத்தினாலும் அவர்களது போர்த்திறனாலும் கவரப்பட்ட ராஜசிங்ஹ மன்னன் முஸ்லிம்களை அக்குறணையில் குடியமர்த்திய தாகவும் அக்குறணை முஸ்லிம்கள் குடியேற்றம் தொடர்பான ஒரு கருத்து உள்ளது.

ஒல்லாந்தர் ஆட்சியில் முஸ்லிம்கள் (1658-1796)

கி.பி. 1658 ஆண்டளவில் இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சி ஏற்பட்டது. முஸ்லிம்களைப் பொறுத்தளவில் ஒல்லாந்தர் முஸ்லிம்களை வணிகத்துறையில் தங்களது போட்டியாளர் களாகவும், மதத்தைப் பொறுத்தளவில் வைரிகளாகவும் நோக்கினர்.

இலங்கையில் முஸ்லிம்களைப் பொறுத்தளவில் ஒல்லாந்தர் கடைப்பிடித்த கொள்கை அவர்கள் கிழக்கிந்திய தீவுகளில் முஸ்லிம்களைப் பொறுத்தளவில் பின்பற்றிய கொள்கையின் அடிப்படையிலேயே அமைந்தது. ஒல்லாந்தர்களைப் பொறுத்தளவில் அவர்களது நோக்கங்களுள் வணிகம் முதலாவது இடத்தையும், மதமாற்றம் இரண்டாம் இடத்தையும் பெற்றது.

கி.பி. பதினாறாம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பிரிவில் ஐரோப்பாவிற்கு கீழைத்தேய நாடுகளின் வணிகப் பொருட்களை எடுத்துச் செல்வதில் ஒல்லாந்தர் மிக முக்கிய இடத்தை வகித்தனர். கீழைத்தேய வணிகத்தில் மிக ஈடுபாடு காட்டிய அவர்கள் தங்களது வணிகத்தை மேற்கொள்ள பல சிறுசிறு வர்த்தகக் கம்பனிகளை உருவாக்கியிருந்தனர். ஆனால் இக்கம்பனிகளிடையே நடைபெற்ற பரஸ்பர போட்டியானது அவர்கள் கூடிய இலாபம் பெறுவதற்குத் தடையாக அமைந்ததைக் காலப்போக்கில் உணர்ந்தனர். எனவே இந்நிலையைத் தவிர்த்து தங்களது வணிகத்தைச் சிறப்பாக

நடத்தவும், அதில் கூடிய லாபம் பெறுவதற்கும் இச்சிறுசிறு கம்பனிகள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு பெரும் கம்பனியை உருவாக்கினர். ஐக்கிய கிழக்கிந்தியக் கம்பனி என அழைக்கப்பட்ட இந்த வணிக நிறுவனமே கிழக்கிந்தியத் தீவுகளையும், இலங்கையையும் அவர்களது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்தது. இலங்கையை ஆக்கிரமித்த போர்த்துக்கேயர், அந்நாட்டின் அரசாங்கத்தின் பணியாளர்கள் என்ற வகையிலே செயல்பட்டனர். அவர்கள் அந்நாட்டின் ஆட்சியையே பிரதிநிதித்துவப்படுத்தினர். ஆனால் ஒல்லாந்தர் VOC என அழைக்கப்பட்ட கிழக்கிந்திய கம்பனியின் சேவகர்களாகச் செயல்பட்டனர்.(9)

ஒல்லாந்தர் காலப்பிரிவில் இலங்கை முஸ்லிம்களின் குடியேற்றப் பரம்பல் பற்றி இங்கு நாம் அறிதல் பயனளிக்கும். இக்காலப்பிரிவில் தெற்குக் கரையோரப் பகுதிகளில் முஸ்லிம் குடியேற்றங்கள் பரவலாகக் காணப்பட்டன. குறிப்பாக துறைமுக நகரங்களை அண்டி முஸ்லிம்கள் செறிந்து வாழ்ந்தனர். கண்டி இராச்சியத்திற்கும் கரையோரக் குடியேற்றங்களுக்குமிடையில் உள்நாட்டுப் பிரதேசங்களிலும் அவர்களது குடியேற்றங்கள் இருந்தன. கண்டி மன்னனின் ஆட்சியில் முஸ்லிம் குடியேற்றங்கள் காணப்பட்டதோடு, கிழக்கு மாகாணத்திலும் முஸ்லிம்கள் இருந்தனா.

கி.பி. 17ம்,18ம் நூற்றாண்டுகளில் நாட்டின் உள்நாட்டு வெளிநாட்டு வணிகம் முஸ்லிம்களது கையிலேயே இருந்தது. போர்த்துக்கேயர் ஆட்சியில் முஸ்லிம்கள் அவர்களது கரையோரக் குடியேற்றங்களிலிருந்து பல தடவைகள் வெளியேற்றப்பட்டு பல இம்சைகளுக்கும் ஆளாக்கப்பட்டனர். ஆனால் இந்த அபாயம் நீங்கியதும் அவர்கள் போர்த்துக்கேய ஆதிக்கம் நிலவிய பகுதிகளில் மீண்டும் வந்து குடியேறி தங்களது நிலையை உறுதிப்படுத்திக் கொண்டனர். 1642ம் ஆண்டு ஒல்லாந்தர் போர்த்துக்கேயருக்கு எதிராக முஸ்லிம்களின் உதவியைக் கோரும் அளவிற்கு அவர்கள் பலம் பெற்றிருந்தனர். 17ம் நூற்றாண்டில் தென்னிந்தியத் துறைமுகங்களுக்கும் இலங்கைக்குமிடையில் கணிசமான வணிகத் தொடர்புகள் காணப்பட்டன.

இக்காலப்பிரிவில் மதுரையில் ஆட்சிசெய்த நாயக்க மன்னரின்

கீழ் ஒரு குறுநிலத் தலைவராக தேவர் என்பவர் விளங்கினார். தேவரின் செல்வாக்கும் அதிகாரமும் உள்ள பிரதேசமாக ராமநாதபுரம் விளங்கியது. தேவரின் வணிக ஆதிக்கம் நிலவிய பகுதியில் புகழும் செல்வாக்கும் மிக்க ஒரு வணிகராக பெரிய தம்பி மரிக்கார் என்னும் வணிகர் விளங்கினார். தென் இந்தியத் துறைமுகங்களுடனும், வங்காள விரிகுடாவின் கிழக்குப் பகுதியிலுள்ள மலாக்கா, கச்சின் போன்ற பிரதேசங்களுடனும், இலங்கைக்கும்-இந்தியாவுக்குமிடையிலான வணிகத்திலும் பெரியதம்பி மரிக்கார் ஈடுபட்டார்.(10)

தென்னிந்தியாவில் ராமநாதபுரத்தில் வாழ்ந்த பெரியதம்பி மரிக்கார், சீதக்காதி மரைக்கார் ஆகியோர் முக்கிய தமிழக வணிகர்களாக விளங்கினர். இலங்கையிலும் செங்கடல் துறைமுகங்களிலும் சீதக்காதி மரைக்கார் பல வர்த்தக நிறுவனங்களை அமைத்திருந்தார். அவரது மரக்கலங்கள் கீழ்க் கரையிலிருந்து புறப்பட்டு தொண்டி, பாசிப்பட்டணம் முதலிய துறைகளைக் கடந்து இலங்கையை வந்தடைந்தது. கொட்டைப் பாக்கு, உப்பு, உப்பிட்ட மீன், துணிமணிகள் போன்றவை கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம் வணிகர்களால் சேகரிக்கப்பட்டு சுதேச மன்னர்களால் ஆளப்பட்ட கண்டி ராச்சியத்திற்கு கொண்டுசெல்லப்பட்டன. அதேவேளை சாரம், கம்பாய சீலை போன்றவை இராமநாதபுர மாநிலத்திலிருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு முஸ்லிம்கள் கண்டி இராச்சியத்திற்கும் ஏனைய பிற பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டன. இந்த வணிகம் மூலம் முஸ்லிம்கள் பெற்ற இலாபமும், கண்டி மன்னர்களுடன் அவர்கள் கொண்டிருந்த தொடர்புமே ஒல்லாந்தர் முஸ்லிம்களுக்கு எதிராக , அவர்களது பொருளாதார முயற்சி களையும் செல்வாக்கையும் கட்டுப்படுத்தும் வகையில் பல அடக்குமுறைகளை மேற்கொள்ளக் காரணமாக அமைந்தன.

கண்டி இராச்சியத்தின் வணிகத்தில் முஸ்லிம்கள் வகித்த நிலை பற்றி நாம் ஓரளவு விரிவாக விளங்குதல் அவசியமாகும். ஏனெனில் முஸ்லிம்களின் வணிகத்தைப் பொறுத்தளவில் ஒல்லாந்தர் கடைப்பிடித்த அடக்குமுறை ரீதியான போக்கை விளங்க இது துணைபுரியும்.

கண்டியில் ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர்கள் 17ம் நூற்றாண்டளவில் அவர்களது அரசியல் பலம் அதிகரித்து வலுப்பெற்ற காலப்பிரிவில், நான்கு பகுதிகளாலும் மலைகளால் சூழப்பட்ட மலைநாட்டு இராச்சியத்திற்குள் முடங்கிக்கிடக்க விரும்பவில்லை. அவர்கள் வணிகத்தில் ஈடுபடவும், வெளியுலகத் தொடர்பையும் விரும்பினர். இதற்கு முஸ்லிம்கள் மிகவும் உதவியாக செயல்பட்டனர். போர்த்துக்கேயரின் அடக்குமுறைக்கு அஞ்சி முஸ்லிம்கள் கண்டி இராச்சியத்தில் புகலிடம் தேடினர். அங்கு சிங்கள மன்னர்களால் அவர்கள் வரவேற்கப்பட்டு காணிகள் வழங்கப்பட்டதையும் நாம் ஏலவே நோக்கினோம். கண்டியில் புகலிடம்பெற்ற முஸ்லிம்கள் அவர்களது வணிக பொருளாதார முயற்சிகளுக்கு மிக அனுகூலமான சூழல் அங்கு காணப்படுவதை உணர்ந்தனர். அத்தோடு அங்கு முஸ்லிம்களின் இருப்பானது கண்டி மன்னனுக்குப் பல வகைகளிலும் உதவியாகவும் நன்மை பயப்பதாகவும் அமைந்தது. குறிப்பாக கரையோரப் பகுதிகளுடனும் பிற நாடுகளுடனும் தொடர்புகொள்வதற்கு சிறந்த ஊடகமாக முஸ்லிம்கள் விளங்கினர்.(11)

காலி, வெலிகாமம், மாத்தறை, அளுத்கமை ஆகிய பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்கள் உள்நாட்டுக்குச் சென்று நெல், பாக்கு முதலியவற்றைப் பெற்று கண்டி இராச்சியத்திற்கு ஏற்றுமதி செய்யும் வணிகத்தில் ஈடுபட்டனர். சுமார் 1766ம் ஆண்டுவரை திருகோணமலை, கொட்டியாரம், மட்டக்களப்பு, கற்பிட்டி, புத்தளம் போன்ற துறைமுகங்கள் கண்டி மன்னனின் கட்டுப்பாட்டின் கீழேயே இருந்தன. முஸ்லிம் வணிகர்கள் பாக்கு போன்ற விளை பொருட்களை கண்டிப் பிரதேசங்களில் சேகரித்து கொட்டியாரம், கற்பிட்டி போன்ற துறைமுகங்களில் இந்திய வணிகர்களுக்கு விற்றனர். உள்நாட்டு வணிகத்தில் ஈடுபட்ட முஸ்லிம்கள் அங்கு அவர்கள் பெற்றுக்கொண்ட வணிகப் பொருட்களை கரையோரத் துறைமுகங்களுக்கு எடுத்துச் செல்வதற்கும் கரையோரத் துறைமுகங்களிலிருந்து பெற்றுக்கொண்டவற்றை உள்நாட்டுக்கு எடுத்துச் செல்வதற்கும் தவளம் என்ற போக்குவரத்து முறையை அறிமுகப்படுத்தினர். கொட்டியாரத்திலிருந்து மகாவலிகங்கை தீரத்தோடு இணைந்து கண்டி வரையிலான தரைமார்க்கப் பாதையைப் பயன்படுத்தி முஸ்லிம் வணிகர்கள் மூலம் கண்டி

மன்னர்களின் கரையோரத் துறைமுகங்களுடனான வணிகம் நடைபெற்றது. ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு வியாபாரப் பொருட்களை சுமந்து செல்ல முஸ்லிம்கள் மாடுகளைப் பயன்படுத்தினர். வணிகப் பொருட்கள் சுமந்துசெல்லும் மாடுகள் பிணைக்கப்பட்ட மந்தைக்கூட்டம் **தவளம** என அழைக்கப்பட்டது. இந்த முறையில் நடைபெற்ற வணிகம் **தவள வணிகம்** என அழைக்கப்பட்டது. 1762ம் ஆண்டு கண்டிக்கு வந்த ஆங்கிலேயத் தூதுவரான ஜோன் பைபஸ் தான் திருகோணமலையிலிருந்து கண்டிக்கு வரும் வழியில் மாடுகளின் மேல் வியாபாரப் பொருட்களை ஏற்றிக்கொண்டு துறைமுகத்தை நோக்கிச் செல்லும் முஸ்லிம் வியாபாரக் கூட்டம் ஒன்றைக் கண்டதாகக் குறிப்பிடுகின்றார்.

கண்டி ஆட்சிப் பரிபாலன அமைப்பின் ஒரு முக்கிய அங்கமாக விளங்கியது. மடிகே என்ற அமைப்போடும் கண்டி அரசனின் வணிக செயல்பாடுகளுக்குப் பொறுப்பாக 'மடிகே பத்த' என்ற அமைப்பு செயல்பட்டது. இது ஆரம்பத்தில் சிங்கள மீனவ சாதிகளை உள்ளடக்கியதாக விளங்கியது. கண்டியில் முஸ்லிம் குடியேற்றங்கள் ஏற்பட்டபோது கண்டி மன்னன் முஸ்லிம் வணிகர்களை மடிகே பத்த இலாக்காவுடன் இணைத்தான். மடிகே பத்த இலாக்காவுக்குப் பொறுப்பாக இருந்த அதிகாரி மடிகே பத்த நிலமே என அழைக்கப்பட்டார். அரசாங்கத்தின் தானியங்களையும் ஏனைய பொருட்களையும் விளைச்சல் நிலங்களிலிருந்து களஞ்சிய சாலைகளுக்கு எடுத்துச்செல்ல தவளம் மாடுகளை ஒழுங்கு செய்வது மடிகே இலாக்காவின் பொறுப்பாக இருந்தது. இந்த மடிகேக்களுக்குப் பொறுப்பாக முஸ்லிம்களே விளங்கினர். மடிகே பத்தே என்ற இந்த இலாக்காவுக்குப் பொறுப்பாக மடிகே பத்தே நிலமே இருந்தார். கீர்த்திஸ்ரீ ராஜசிங்ஹ மன்னனின் காலப்பிரிவில் 1747-81 ஷெய்க் ஆலிம் என்பார் மடிகே நிலமேயாகப் பணிபுரிந்தார். அவருக்குப் பின்னர் அவரது பேரரான சேக் அப்துல் காதர் என்பவர் இப்பொறுப்பை வகித்துள்ளார். (12)

ஒல்லாந்தர் முஸ்லிம்களைப் பொறுத்தளவில் கடைப்பிடித்த கொள்கையானது காலத்திற்குக் காலம் அவர்களது நன்மைகள், அனுகூலங்களுக்கு ஏற்ப மாற்றமடைந்தது. ஒல்லாந்தர், அவர்களது

ஆட்சியின் ஆரம்பகாலப்பிரிவில் போர்த்துக்கேயரிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததாலும், கண்டி இராச்சியத்துடன் அடிக்கடி முரண்பட்டு மோதும் நிலை ஏற்பட்டதாலும், மிக அவதானத்துடனேயே நடந்துகொண்டனர். போர்த்துக்கேயருக்கு எதிராக தமக்கு உதவிபுரிய உள்நாட்டு வாசிகளின் ஆதரவையும் பெற முயற்சித்தனர். 1640ல் காலி, மாத்தறை போன்ற பிரதேசங்கள் அவர்களது வசம் இருந்தன. அப்பிரதேசங்களில் அவர்களது பலம் இன்னும் உறுதியாகவில்லை. எனவே போர்த்துக்கேயருக்கு எதிராக முஸ்லிம்களின் ஆதரவைப் பெற அவர்கள் முயற்சித்தனர்.

பெரும்பாலும் கரையோரப் பகுதியில் குடியேறியிருந்த முற்றிலும் கரையோர வர்த்தகத்தில் தங்கியிருந்த முஸ்லிம்கள், இந்நிலையில் ஒல்லாந்தருக்கு ஆதரவாக செயற்படும் ஒரு நிர்ப்பந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டனர். ஏனெனில் காலி கோட்டையானது ஒல்லாந்தர் வசம் இருந்ததுடன், கடலோரக் கரையில் மிக ஆதிக்கம் செலுத்தும் பலம்பெற்ற கடற்படையும் ஒல்லாந்தரிடம் காணப்பட்டது. அப்போது காலியிலும், மாத்தறையிலும் பணிபுரிந்த போர்த்துக்கேயத் தளபதி அன்டொனியா டீ அமரல் டீ மென்ஸிஸ் (Antonio de Amaral de Menezas) முஸ்லிம்கள் ஒல்லாந்தருக்கு சார்பாக செயற்படுவதாக முடிவுசெய்து கி.பி. 1643 போர்த்துக்கேயரினால் இந்நாட்டில் கடைசியாக நடாத்தப்பட்ட பயங்கரமான மனிதப் படுகொலையை முஸ்லிம்களுக்கு இழைத்தனர். மாத்தறையில் ஏறக்குறைய எல்லா முஸ்லிம்களும் செறிந்து வாழ்ந்த முஸ்லிம் கடைப்பகுதிப் பிரதேசத்தை சூழ்ந்து 300 வரையிலான முஸ்லிம் ஆண்கள்- இளைஞர்களை வாளால் வெட்டிக் கொலைசெய்தனர். பெண்களும், பிள்ளைகளும் சிறைபிடிக்கப்பட்டு கொழும்புக்கு அடிமைகளாக அனுப்பி வைக்கப்பட்டனர்.(13)

போர்த்துக்கேயரின் இத்தகைய கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட தென்மேற்குக் கரையில் வாழ்ந்த முஸ்லிம்கள் போர்த்துக்கேயருக்கு எதிராக ஒல்லாந்தருக்கு ஆதரவாகவும் செயல்பட்டனர். ஆனால் இந்நிலை நீடிக்கவில்லை.

முஸ்லிம்களுக்கு எதிரான ஒல்லாந்தரின் வெறுப்புணர்ச்சி, பகைமையுணர்வு படிப்படியாகப் பல்வேறு வகையில் செயற்பட்டது.

வாணிபத்தில் தங்களது போட்டியாளர்களாகவும், மதத்தைப் பொறுத்தளவில் பகைவர்களாகவும் முஸ்லிம்களை அவர்கள் கருதினர். கண்டி இராச்சியத்துடன் முஸ்லிம்கள் கொண்டிருந்த வணிகத் தொடர்பும், அதனால் அவர்கள் பெறும் இலாபமும், பொருளாதார சக்தியும், கண்டி அரசவையில் அவர்களுக்கிருந்த செல்வாக்கும் ஒல்லாந்தரின் பகைமை உணர்வை மேலும் தூண்டின.

எனவே, முஸ்லிம்கள் உள்நாட்டுக்கு சென்று வியாபாரச் சரக்குகளை வாங்குவதைத் தடுக்கும் முயற்சிகளை ஒல்லாந்தர் மேற்கொண்டனர். காலி, வெலிகாமம், மாத்தறை சார்ந்த முஸ்லிம்கள் நகர எல்லையை விட்டு வியாபாரத்திற்காக வெளியே போகக்கூடாது என 1659ம் ஆண்டு ஒரு கட்டளை பிறப்பிக்கப் பட்டது. இதனால் மிகவும் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் ஆளுநருக்கு முறைப்பாடுசெய்யும் அளவிற்கு இன்னலுக்கு ஆளாக்கப்பட்டனர். அதன் பின் காலிக் கவுன்ஸிலின் செயலாளரின் விசேட அனுமதியைப் பெற்றுத்தான் அவர்கள் பயணம் செய்ய முடியும் என விதிக்கப்பட்டது. கொட்டைப் பாக்கு வியாபாரம் முஸ்லிம்களின் ஏகபோக உரிமையில் இருப்பதைத் தடுக்க ஒல்லாந்தர் பல முயற்சிகளை மேற்கொண்டனர். 1650ம் ஆண்டு மயோட்ஸுயுகர் (Mayetsuyeker) என்ற ஒல்லாந்த அதிகாரி காலி முஸ்லிம்கள் தையல் தொழில் மூலம் இலாபம் சம்பாதிப்பதை அவதானித்து அதனைப் பரங்கியருக்கு மட்டுமே உரிய ஒரு தொழிலாக பிரகடனம் செய்ய முனைந்தார். கொட்டைப் பாக்கு சில்லறை வியாபாரத்தை முஸ்லிம்களிடமிருந்து பறித்து பறங்கியருக்குக் கையளிக்கத் திட்டமிட்டார். வான் குவான்ஸ் (Van Guens) என்னும் ஒல்லாந்த அதிகாரி படிப்படியாக முஸ்லிம்கள் உள்நாட்டு வியாபாரத்தில் ஈடுபடுவதை விட்டு, அவர்களது அவதானத்தை வேறுபக்கம் திசைதிருப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமென அவரைத் தொடர்ந்துவந்த அதிகாரிக்கு ஓர் அறிக்கை சமர்ப்பித்தான்.(14)

1659ம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதிரான பல கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. கிறிஸ்தவர்கள் மட்டுமே இறைச்சி வியாபாரிகளாகவும், பேக்கரி உரிமையாளர்களாகவும் பணிபுரிய முடியும் எனவும், முஸ்லிம்கள் தையல் தொழிலில் ஈடுபட

விரும்பினால் அவர்கள் ஒல்லாந்த ஆட்சியாளர்களின் கீழ் கூலிக்கு வேலை செய்பவர்களாகவே இத்தொழிலைச் செய்ய முடியும் எனவும் ஒல்லாந்தர்கள் பங்குத்தாரர்களாகக் கொள்ளாத பட்சத்தில் வெளிநாட்டு வணிகத்தில் முஸ்லிம்கள் ஈடுபடல் முடியாது. உப்பு வணிகத்தில் கிறிஸ்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும் எனவும் கட்டளைகள் ஒன்றன்பின் ஒன்றாக பிறப்பிக்கப்பட்டன.(15)

இவ்வாறு முஸ்லிம்கள் மிக அமைதியான முறையில் மேற்கொண்ட வணிகத்தைத் தடுக்கும் மிகக் கடுமையான முயற்சிகளை ஒல்லாந்தர் மேற்கொண்டனர். பறங்கியர்கள், கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்தவர்களுக்கு ஆதரவாகவும், முஸ்லிம்களைத் தனிமைப்படுத்தும் வகையிலும் பல சட்டங்கள் உருவாக்கப்பட்டன. முஸ்லிம்கள் வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரும் துணிமணிகளுக்கு பத்துவீதம் வரியும் பறங்கிய பிரிவினருக்கு ஐந்து வீதம் வரியும் விதிக்கப்பட்டது. முஸ்லிம்கள் தங்களது துணிகளை விற்கும் சில்லறை வியாபாரம் தடுக்கப்பட்டது. அவர்கள் கொண்டுவரும் எல்லாத் துணிவகைகளையும் மொத்தமாக பறங்கியருக்கு விற்றல் வேண்டும். முஸ்லிம்கள் தனிப்பட்ட முறையில் கடையில் வைத்து விற்பது தடுக்கப்பட்டது. முஸ்லிம்கள் இறக்குமதிசெய்யும் அரிசிக்குப் பத்துவீதம் வரி அறவிடப்பட்டது. கிறிஸ்தவர்கள் மீது இந்த வரி அறவிடப்படவில்லை. முஸ்லிம்களை கிறிஸ்தவரும்- பறங்கியரும் ஆதிக்கம் செலுத்த வழிவகுக்கும் நோக்குடனேயே இம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.(16)

முஸ்லிம்கள் பல இடங்களில் பரவி வாழ்வதையும் உள்நாட்டை நோக்கி அவர்கள் நகர்ந்து குடியேறுவதையும் தடுக்கும் வகையில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. முஸ்லிம்கள் தென்மேற்குக் கரையோரத்தைப் பொறுத்தளவில் காலி, வெலிகாமம், மாத்தறை ஆகிய நகரங்களுக்குள் மட்டுமே கட்டுப்பட்டு வாழல் வேண்டும் என 1659ம் ஆண்டு ஒல்லாந்த அதிகாரி வான் கோயென்ஸ் கட்டளை பிறப்பித்தான். முஸ்லிம்கள் அசையாச் சொத்துக்கள் வைத்திருப்பதையும் அவர்கள் தடைசெய்தனர். ஒல்லாந்த ஆளுநர் ஹென்றிக் பெகர் முஸ்லிம்கள்

ஒல்லாந்த அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் அசையாச் சொத்துக்களை வைத்திருப்பது சட்ட விரோதமானது எனப் பிரகடனப்படுத்தியதுடன், அவற்றைப் பறிமுதல் செய்து, ஏலத்தில் விற்க முடிவுசெய்தான்.(17)

கொழும்புக்கும்- நீர்கொழும்புக்கும் முஸ்லிம்கள் வெளிநாடுகளில் இருந்து வருவதைத் தடுப்பதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. துறைமுகங்களுக்கு பயணிகளை ஏற்றிவரும் கப்பல்கள் அதே எண்ணிக்கை கொண்ட பயணிகளை உள்ளடக்கிய நிலையில் திரும்பிச் செல்லல் வேண்டும் என கட்டளை பிறப்பிக்கப்பட்டது. எந்த ஒரு முஸ்லிமும் புதிதாக இலங்கையில் குடியேறுவதைத் தடுக்கும் வகையிலே இந்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. ஒல்லாந்தர் அவர்களது ஆட்சியின் ஆரம்பகாலப்பிரிவில் முஸ்லிம்களின் மத சுதந்திரத்தைப் பாதிக்கும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஒல்லாந்த ஆளுநர் மட்ஸ்விகர் கிறிஸ்தவத்தைப் பரப்பும் மிக உறுதியான ஒரு கொள்கையை மேற்கொண்டான். முஸ்லிம்களுக்கு அவர்களது மதக்கிரியைகளை நிறைவேற்ற அனுமதிக்க வேண்டாமெனவும், நகரத்தின் எல்லைக்குள்ளோ, அல்லது அதன் எல்லைக்கு அப்பாலோ அவர்களது மதத் தலைவர்களைச் செயல்பட அனுமதிக்க வேண்டாமென்று ஒல்லாந்த ஆளுனர் வான் கொயென்ஸ் மாத்தறையின் திஸாவைக்குக் கட்டளை பிறப்பித்தான்.(18)

இலங்கையை ஒல்லாந்தர் ஆட்சிபுரிந்த காலப்பிரிவில் கண்டியில் சிங்கள மன்னர்களின் ஆட்சி நிலைபெற்றிருந்ததானது இலங்கை முஸ்லிம்களுக்குப் பல வழிகளிலும் நன்மையாக அமைந்தது. ஒல்லாந்தர் ஆட்சிபுரிந்த பிரதேசங்களில் முஸ்லிம்கள் நடாத்தப்பட்ட அநீதியும் பாரபட்சமான தன்மையிலிருந்து முற்றிலும் வித்தியாசமான வகையிலே கண்டி சிங்கள மன்னர்களின் ஆட்சியில் முஸ்லிம்கள் மிக சகிப்புத் தன்மையுடனும், பெருந்தன்மையுடனும் நடாத்தப்பட்டதானது, ஒல்லாந்தருக்கு ஒரு பெரும் பிரச்சினையாக அமைந்தது.

கண்டியில் முஸ்லிம்கள் பரிபூரண மத சுதந்திரத்தை அனுபவித்தனர். அவர்களது வணக்கஸ்தலங்கள் கண்டி இராச்சியத்தின் எல்லாப் பிரதேசங்களிலும் காணப்பட்டன.

இரண்டாம் ராஜசிங்ஹ மன்னனினதும் அவரைத் தொடர்ந்து வந்த கண்டி ஆட்சியாளர்களினதும் அவையில் முஸ்லிம்கள் முக்கிய பதவிகள் வகித்ததையும், மன்னனின் ராணுவத்தில் பணிபுரிந்ததையும், அரண்மனை மருத்துவர்களாகச் சேவை செய்ததையும், வணிகர்களாகவும், வியாபாரிகளாகவும் மட்டுமன்றி, கண்டி மன்னரின் தூதுவர்களாகவும் பணிபுரிந்ததை ஒல்லாந்தர் மிக உன்னிப்போடு அவதானித்தனர். 1675ல் கண்டி மன்னனின் இராணுவத்தில் இணைந்து ஒல்லாந்தருக்கு எதிராக முஸ்லிம்கள் போராடினர்.(19)

கண்டி இராச்சியத்தில் முஸ்லிம்கள் பெற்றிருந்த செல்வாக்கை இழக்கச் செய்யும் நோக்கோடு, 1680ம் ஆண்டு ஒரு சூழ்ச்சித் திட்டம் ஒல்லாந்தரால் மேற்கொள்ளப்பட்டது. ஒல்லாந்தர் ஆட்சியில் விசேட அதிகாரியாக இருந்த வான்ரீட் (Van Rieds) பொருத்தமான முறையில் பிரசார முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டால் முஸ்லிம்களுக்கு எதிராக கண்டியர்களின் உணர்வுகளைத் தூண்டிவிடலாம் என ஆளுநர் பிஜீக்கு(Pji) ஆலோசனை கூறினான். அதனைத் தொடர்ந்து அதற்கான திட்டம் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. அக்காலப்பிரிவில் வட இந்தியாவில் மொகலாய ஆட்சி நடைபெற்றது. பல வெற்றிகளை ஈட்டிய மொகலாயப் படைகள் அவ்ரங்கசீப்பின் கீழ் தென் இந்தியாவுக்குள் ஊடுருவல் செய்துகொண்டிருந்தனர். இந்தப் படைகள் மிக விரைவில் ராமேஸ்வரம் வரை முன்னேறி இறுதியில் இலங்கையையும் ஆக்கிரமிக்கும் சாத்தியக்கூறுகள் உள்ளன என்ற வதந்தி பரப்பப்பட்டது. முஸ்லிம்கள் அனைவரும் வெளிநாட்டுத் தொடர்புடையோர்; அவர்கள் மொகலாயர்களுடன் இணைந்து ஒரு சூழ்ச்சியை வகுக்கின்றார்கள் எனவும், உரிய சந்தர்ப்பம் வரும்போது அவர்கள் கண்டி அரசனைப் பதவிநீக்கம் செய்து ஒரு முஸ்லிம் ஆட்சியை அமைப்பதே நோக்காகக்கொண்டு செயல்படுகின்றனர் எனவே கண்டி மன்னன் ஒல்லாந்தரோடு இணைந்து அவர்களுக்கு எதிராக செயற்படுவது அவசியம் எனவும் கூறப்பட்டது. வதந்திகள் பரப்பப்பட்டதோடு, உளவாளிகள் மூலம் இதனை முக்கியமான கண்டிப் பிரதானிகளுக்கு எட்டச் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இந்த தர்க்கங்களும், அச்சுறுத்தல்களும் கண்டி மன்னனில் எத்தகைய மனமாற்றத்தையும்

ஏற்படுத்தவில்லை. கண்டி மன்னனுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் உள்ள நல்லுறவைக் குலைக்க ஒல்லாந்தர் மேற்கொண்ட முயற்சிகள் ஒன்றும் பலனளிக்கவில்லை.[20]

முஸ்லிம்களைப் பொறுத்தளவில் ஒல்லாந்தர் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப, தங்களுக்குச் சாதகமான கொள்கை யையே கடைப்பிடித்தனர். எனவே காலத்திற்குக் காலம், ஒல்லாந்த ஆளுநர்கள், அதிபதிகளின் மனோநிலைக்கு ஏற்பவும் சந்தர்ப்ப சூழலுக்கு ஏற்பவும் முஸ்லிம்களைப் பொறுத்தளவில் அவர்களது நடவடிக்கைகள் வித்தியாசமாக அமைந்தன. உதாரணமாக 1683ல் யாழ்ப்பாணத்திலிருந்த ஒல்லாந்த சீர்திருத்த கோயிலின் சில மதகுருமார்கள், யாழ்ப்பாண முஸ்லிம்கள் வாரத்தில் நான்கு விசேட நாட்களில் ஒன்றுகூடி குர்ஆன் ஓதுவதைத் தடுக்கும்படி ஒல்லாந்த ஆளுநரைக் கேட்டபோது அவர் அவ்வேண்டுகோளை நிராகரித்தார்.

ஆனால் கி.பி. பதினேழாம் நூற்றாண்டளவில், முஸ்லிம் களுடன் தொடர்புகொண்டு செயலாற்றுவதற்கு அனுகூலமாக அமைவதற்காக முஸ்லிம் கிராமத் தலைவர்களை ஒல்லாந்தர் நியமித்தனர். 1762ல் உதுமான் கண்டி மேஸ்திரி அய்துருஸ் லெப்பே மரிக்கார் கொழும்பு முஸ்லிம்களின் தலைவராக ஒல்லாந்தரால் நியமிக்கப்பட்டார். இதுபோன்று காலி, வெலிகம, மாத்தறை போன்ற இடங்களிலும் ஒல்லாந்தர் முஸ்லிம் தலைவர்களை நியமித்தனர். 1789ம் ஆண்டு சின்னலெப்பை மரிக்கார் சீதக்காதி லெப்பை மாத்தறை முஸ்லிம்களின் தலைவராக நியமிக்கப்பட்டார்.[21]

முஸ்லிம்களிடம் காணப்பட்ட சில திறமைகள் காரணமாக முஸ்லிம்களின் சேவை ஒல்லாந்தருக்கு சிலபோது இன்றியமையாத தாக அமைந்தது. முத்துக்களின் பெறுமானத்தை மதிப்பீடு செய்வதில் முஸ்லிம்களைப் போன்று வேறு எவரும் திறமைபெற்றவர் களாகக் காணப்படவில்லை. எனவே, முத்துக்குளிப்பதில் ஈடுபடுவோர் முஸ்லிம்களிலேயே தங்கியிருந்தனர். போர்களின போது படையினருக்குத் தேவையான பொருட்களை எடுத்துச் செல்வதற்கு முஸ்லிம்களின் உதவி ஒல்லாந்தருக்குத் தேவைப்பட்டது. முஸ்லிம்கள் தங்கள் வணிகப் பொருட்களை சுமந்து செல்ல ' தவளம்' என அழைக்கப்பட்ட பொதி மாடுகளைப்

பயன்படுத்தினர். பொருட்களை சுமந்துசெல்ல இதுமட்டுமே போக்குவரத்து முறையாகக் காணப்பட்டது. எனவே முஸ்லிம்களை ஒல்லாந்தர் வெறுத்து பகைமை பாராட்டி, அவர்களுக்கு எதிராகச் செயல்பட்டாலும் அவசியப்பட்டபோது முஸ்லிம்களை தங்களது நன்மைக்காகப் பயன்படுத்த அவர்கள் பின்நிற்கவில்லை. முஸ்லிம்களும் இந்த வாய்ப்புக்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தவறவில்லை.

ஒல்லாந்தர் காலப்பிரிவில் இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தளவில் நடைபெற்ற ஒரு முக்கிய நிகழ்வு அவர்களால் முஸ்லிம்களுக்கென ஒரு சட்டக் கோவையை உருவாக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகும். ஒல்லாந்த கிழக்கிந்தியக் கம்பனிகள் கிழக்கிந்தியப் பிரதேசத்தில் அதன் ஆரம்ப காலங்களில் சுதேசிகள் மீது ஒல்லாந்த சட்டத்தையே அமுல்நடாத்தின. ஆனால் காலப்போக்கில் அவர்களது ஆதிக்கத்திற்குட்பட்ட ஆசியப் பிரதேசங்களில் பாரம்பரியமாக வழக்கிலிருந்த பாரம்பரியச் சட்டங்களையும், மதச் சடங்குகளையும் நடைமுறைப்படுத்த அவர்கள் அனுமதித்தனர். எனவே பதினேழாம் நூற்றாண்டளவில் ஒல்லாந்தர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைத் தங்களது ஆதிக்கத்திற்கு உட்படுத்தியபோது முஸ்லிம்கள் தங்களது பாரம்பரிய சட்டங்களை அமுல்படுத்த அனுமதி வழங்கினர்.

போர்த்துக்கேயர் காலப்பிரிவில் முஸ்லிம்கள் இஸ்லாமிய உலகுடனான தொடர்பைத் துண்டித்த நிலையில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டதால் ஷரீஆ பற்றிய அறிவில் மிகப்பாரதூரமான பின்னடைவு ஏற்பட்டது. இதன் விளைவாக ஒல்லாந்தரால் நியமிக்கப்பட்ட முஸ்லிம் தலைவர்கள்கூட குடும்ப வாரிசுரிமைச் சட்டம் போன்ற விடயங்களில் போதிய அறிவின்றி, அவர்களது விருப்பப்படி தீர்ப்புகள் வழங்கினர். இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டதை அவதானித்த ஒல்லாந்த ஆளுநர் வில்லியம் போக் (Willem falk) 1770ம் ஆண்டு இந்நிலையை சீராக்கும் நோக்கோடு கிழக்கிந்தியத் தீவுகளில் அதற்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் தொகுக்கப்பட்ட நடைமுறையிலிருந்த இஸ்லாமிய விவாகம், வாரிசுரிமை தொடர்பான சட்டக்கோவையின் பிரதி ஒன்றை படாவியா (தற்போதைய ஜகர்தா)வின் ஆளுநரிடம்

தொடர்புகொண்டு பெற்று, அதனைத் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்து, முஸ்லிம் சமூகத்தின் பரிபாலனத்திற்குப் பொறுப்பாக இருந்த தலைவர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்க ஏற்பாடு செய்தார். ஒல்லாந்த நீதிமன்றங்கள் இந்த சட்டக்கோவையின் அடிப்படையில் முஸ்லிம்களது விவகாரங்களில் தீர்ப்பு வழங்க வேண்டுமெனக் கட்டளை பிறப்பித்தார். கிழக்கிந்தியத் தீவுகளின் முஸ்லிம்கள் இலங்கை முஸ்லிம்களைப் போன்றே ஷாபி மத்ஹபைப் பின்பற்றியதால் இலங்கை முஸ்லிம்கள் எத்தகைய தயக்கமுமின்றி அச்சட்டக்கோவையை அங்கீகரித்து ஏற்றுக்கொண்டனர்.(22)

இலங்கை மலாயர்கள்

ஒல்லாந்தர் காலப்பிரிவில் இலங்கை முஸ்லிங்களின் வரலாற்றைப் பொறுத்தளவில் நடைபெற்ற முக்கிய வரலாற்று நிகழ்வு இலங்கை மலாயச் சமூகத்தின் தோற்றப்பாடாகும். ஒல்லாந்தர் ஆதிக்கம் கிழக்கிந்தியத் தீவுவரை பரவியிருந்தது. கிழக்கிந்திய தீவுகளில் குறிப்பாக இந்தோனேஷியாவில் ஒல்லாந்தரின் ஆட்சிக்கு எதிராகப் புரட்சி செய்து, ஆட்சிக்கு கடும் அச்சுறுத்தலாக விளங்கிய இளவரசர்கள், பிரதானிகள், மார்க்க அறிஞர்களை நாட்டை விட்டு தேசப்பிரஷ்டம் செய்வது ஒல்லாந்தரின் கொள்கையாக இருந்தது. இவர்கள் தென் ஆபிரிக்காவில் நன்னம்பிக்கை முனைக்கும், இலங்கைத் தீவுக்கும் நாடுகடத்தப்பட்டனர். நன்னம்பிக்கை முனையைவிட இலங்கைத் தீவு இந்தோனேஷியாவுக்கு அண்மையில் இருப்பதால், சிறைக்கைதிகளை அனுப்பிவைப்பதற் கான போக்குவரத்துச் செலவினம் குறைவாகக் காணப்பட்டதுடன், அவசியப்பட்டபோது அவர்களை மீண்டும் தாயகத்திற்கு அனுப்பிவைப்பதும் இலகுவாக இருந்ததால் ஒல்லாந்த ஆட்சியாளர் இச் சிறைக்கைதிகளை இலங்கைக்கு அனுப்பிவைப்பதையே வசதியாகக் கருதினர்.(23)

இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட இச்சிறைக்கைதிகளில் பெரும்பாலோர் பிரபுக்களாகவும் இளைஞர்களாகவும் மார்க்க

அறிஞர்களாகவும் காணப்பட்டனர். இவர்களில் பெரும்பாலோர் தங்களது குடும்பங்களுடன் கொழும்பு, காலி, திரிகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் வாழ்ந்தனர். இலங்கையில் இக்கைதிகள் ஆட்சிக்கு எதிராக செயல்படும் சாத்தியம் காணப்படாததால் அவர்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டனர். இந்தாட்டில் ஏற்கனவே நீண்ட காலமாகக் குடியேறியிருந்த அரபு வணிகர்களின் வழித்தோன்றல்களான இலங்கை முஸ்லிம்களுடன் நெருங்கி, இரண்டறக் கலந்து பழகும் வாய்ப்பையும் அவர்கள் பெற்றனர். இதன் காரணமாக, இம் மலாய முஸ்லிம்கள் தங்களது மத, கலாசாரச் செயல்பாடுகளை இலகுவாக மேற்கொள்வதற்கும், தங்களது மத, கலாசார தனித்துவத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைத்தது. இதன் காரணமாக இந்த மலாய் கைதிகள்- குறிப்பாக மார்க்க அறிஞர்களாகக் காணப்பட்டவர்கள் தங்களது மார்க்க அறிவை மேலும் வளர்த்துக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்று அவர்கள் தாயகத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டதும், ஆட்சியில் சன்மார்க்கத்தோடு தொடர்புடைய பல பொறுப்பான பதவிகளில் நியமிக்கப்பட்டனர்.

இலங்கை மலாயர் சமூகம் தொடர்பாக மிக விரிவான ஆய்வுகளை மேற்கொண்ட கலாநிதி பி. ஏ. ஹுஸைன் மியா இந்த சன்மார்க்க அறிஞர்கள் பற்றிய பல முக்கிய தகவல்களை அவரது ஆய்வின்போது கண்டறிந்துள்ளார். 1743ல் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட ரதீன் அதிபதி நடகுஸுமா 1758ல் ஜாவாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்ட போது ஜோயாகர்டாவின் அரண்மனையின் மதத்துறையின் பிரதானியாக நியமிக்கப்பட்டார். இது போன்றே இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட சிறைக்கைதிகளான பெற்றோர் களுக்கு இலங்கையில் பிறந்த வீரகுஸும் (1781) ஒரு சன்மார்க்கக் குழுவின் தலைவராகப் பணிபுரிந்ததோடு நாடு திரும்பியதும் இளவரசர் ஜோக்யாகர்தாவின் ஆலோசகராக நியமிக்கப்பட்டார். இந்தோனேஷியாவிலிருந்து நாடுகடத்தப்பட்டவர்களில் சிலர் இலங்கையில் 18ம் நூற்றாண்டில் இரு முஸ்லிம் மார்க்க அறிஞர்களான ஸெய்யித் மூஸா நிகித் ரூஸ், இப்ராஹீம் அஸ்மாரா ஆகியோரின் கீழ் தங்களது மார்க்க அறிவைப் பெற்றதாக சில வரலாற்றுக் குறிப்புகள் மூலம் அறியமுடிகின்றது. (24)

இந்தோனேஷிய தீவுகளிலிருந்து ஒல்லாந்தரால் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட மாலாயர்களில் பலர் மிக கண்ணியம் மிக்க குடும்பத்தைச் சார்ந்தவர்களாகவும், அறிவு ரீதியான ஈடுபாடுடையவர்களாகவும், போராளிகளாகவும் விளங்கினர். இவர்களுள் பிரபல்யம் மிக்க அறிஞராகவும், போராளியாகவும் ஷெய்க் யூஸுப் அல் -மகாஸரீ அல்- கல்வதி விளங்குகின்றார். அவரது காலப்பிரிவில் வாழ்ந்த மிகப் பிரபல்யமான அறிஞரான நூருத்தீன் அல்-ரனீரீ உட்பட, பல புகழ்மிக்க சன்மார்க்க அறிஞர்களின் கீழ் அவர் கல்வி கற்றார். ஹள்ரமௌத், யெமன், மக்கா, மதீனா, ஜெரூஸலம் போன்ற இஸ்லாமிய கலாசார மத்திய நிலையங்களில் பல துறைசார்நத இஸ்லாமிய அறிஞர்களிடம் கல்வி கற்று, தனது ஊரான மகஸ்ஸருக்குத் திரும்பிய பின்னர், பண்டனுக்குச் சென்று அக்காலப்பிரிவில் பண்டன் ஸுல்தானாக விளங்கிய ஸுல்தான் அகெங் திர்தயாஸாவுடன் இணைந்து ஆக்கிரமிப்பாளர்களான ஒல்லாந்தருக்கு எதிராக 1682ம் ஆண்டு போராட்டத்தில் ஈடுபட்டார். ஒல்லாந்தரால் ஸுல்தானின் படைகள் தோற்கடிக்கப்பட்டதும் ஒல்லாந்தரால் ஷெய்க் யூஸுப் சிறைபிடிக்கப்பட்டு இலங்கைக்கு அவரது குடும்பத்துடன் நாடு கடத்தப்பட்டார். இலங்கையில் கி. பி. 1684 முதல் 1693 வரையிலான ஒன்பது ஆண்டுகளை, அவரது சீடர்களுடனும், குடும்பத்தவ ருடனும் கழித்தார்

இலங்கையில் முஸ்லிம் உலகின் பல பகுதிகளையும் சார்ந்த புகழ்பெற்ற அறிஞர்களை சந்தித்தார். இந்தியாவைச் சேர்ந்த ஷெய்க் இப்ராஹீம் இப்னு மியான் அவர்கள், ஷெய்க் யூஸுபை, "தஸவ்வுப்" எனும் இஸ்லாமிய ஆத்மஞானம் தொடர்பான ஒரு நூலை எழுதும்படி வேண்டியதற்கிணங்க அவர் பல நூல்களை எழுதினார். அவர் எழுதிய இருபத்து மூன்று நூல்களில் ஏழு நூல்கள் இலங்கையில் வைத்து எழுதப்பட்டதாகக் கருதப்படுகின்றது. அவரது சில நூல்களின் பெயர்கள் இலங்கையைக் குறிக்கும் 'ஸைலான்' என்னும் பெயரைத் தாங்கியுள்ளன. இவற்றுள் இரண்டுநூல்கள் குறிப்பிடத்தக்கவை. "அல் -பரகத் அஸ்- ஸைலானிய்யா" (ஸைலானிய அருள்கள்) என்னும் நூல் ஆத்மீக படித்தரங்களின் பல்வேறு நிலைகளில் அனுஷ்டிக்கப்படும் "திக்ர்கள்" பற்றி விளக்குகின்றது.

"அல்- நப்ஹதுஸ் -ஸைலானிய்யா" (ஸைலானின் மணம் மிக்க தென்றல் காற்றுகள்) என்ற நூல் ஆத்மீக தத்துவங்கள் பற்றி விளக்குகின்றது.(25) இலங்கையில் பிற்காலப்பிரிவில் சன்மார்க்கப் பணிபுரிந்த மாப்பிள்ளை ஆலிம் அவர்களும் அவரது நூல் ஒன்றிற்கு "மின்ஹதுஸ் ஸரன்தீப்" (ஸரந்தீபின் நன்கொடை) எனப் பெயரிடப்பட்டதும் இதுதொடர்பாக குறிப்பிடத்தக்து.

இலங்கைத் தீவானது கிழக்கிற்கும், மேற்குக்குமிடையிலான கடல்பாதையின் மத்தியில் இருந்ததால், தென்கிழக்காசியாவிலிருந்து ஹஜ்ஜுக்குச் செல்லும் பயணிகள் இலங்கையைத் தரிசித்துச் செல்லும் பழக்கம் காணப்பட்டது. இவ்வாறு தென்கிழக்காசியாவிலுள்ள பண்டன், மகஸ்ஸா முதல் மலாய் உலகின் பல பகுதிகளிலிருந்தும் ஹஜ்ஜுக்காகச் செல்லும் பயணிகள் இலங்கை வந்தபோது ஷெய்க் யூஸுப் அவர்களைச் சந்தித்து சில காலம் தங்கி அவரிடம் அறிவும்,ஆத்மீக வழிகாட்டலும் பெற்றனர். ஷெய்க் யூஸுப் இலங்கையில் இந்த வகையில் ஓர் அறிவு வட்டத்தை அமைத்துச் செயல்பட்டார். ஷெய்க் யூஸுபின் இந்த சன்மார்க்கச் செயல்பாடு ஒல்லாந்தருக்கு அச்சத்தையும், பீதியையும் ஏற்படுத்தியது. எனவே, அவர்கள் ஷெய்க் யூஸுபையும், அவரது குடும்பத்தவர்கள், நண்பர்களையும் கி. பி. 1699ம் ஆண்டு தென் ஆபிரிக்காவிலுள்ள நன்நம்பிக்கைமுனைக்கு நாடு கடத்தினர். ஷெய்க் யூஸுப் தென் ஆபிரிக்காவில் முதல் முஸ்லிம் சமூகத்தின் தோற்றத்திற்கான அத்திவாரத்தை இட்டார். கேப்டவ்ன் முஸ்லிம்கள் 1994ம் ஆண்டு ஷெய்க் யூஸுபின் மறைவின் மூன்றாவது நூற்றாண்டு பூர்த்தியை நினைவு கூர்ந்தனர்.(25)

பதினேழாம் நூற்றாண்டில் அரசியல் கைதிகளாகவும், போர்வீரர்களாகவும் ஒல்லாந்தரால் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட மலாயர்கள், இந்நாட்டில் மலாய சமூகத்தின் தோற்றத்திற்கு முன்னோடிகளாக அமைந்தார்கள். மலாயர்கள் மத்தியில் காணப்பட்ட கல்விமான்கள், அறிஞர்களில் ஒல்லாந்தர் காலப்பரிவில் முக்கிய இடம்பிடித்த ஷெய்க் யூஸுபின் அறிவு, ஆத்மீகப் பாரம்பரியம் மலாயர்களில் தொடாந்தது.

இலங்கை மலாயர்கள் தொடர்பாக மிக சரியான ஆய்வுகளை மேற்கொண்ட கலாநிதி பி. ஏ. ஹுஸைன் மியா அவர்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டளவில் இலங்கை மலாயர்கள் மத்தியில் மிக வளமான கலாசார, இலக்கியப் பாரம்பரியம் காணப்பட்டதை அவரது ஆய்வின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளார். இலங்கையில் மலாய் மொழியில் எழுதப்பட்ட நூற்றுக்கும் அதிகமான கையெழுத்துப் பிரதிகள் பற்றி *"Malay manuscript of Ceylon"* என்ற அவரது ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மலாயர்கள் மத்தியில் பாரம்பரிய மலாய் நூல்களைப் பிரதிபண்ணும் ஒரு பாரம்பர்யம் காணப்பட்டது. பல முக்கிய சன்மார்க்க இலக்கிய நூல்களை இலங்கை மலாயர்கள் பலர் பிரதிபண்ணிப் பாதுகாத்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த புகழ்மிக்க மலாய அறிஞராக பாபா யூனுஸ் ஸலதீன் (1832-1906) வாழ்ந்திருக்கின்றார். ஒரு நூலாசிரியராகவும், பத்திரிகையாசிரிய ராகவும் அனைத்தையும் விட ஒரு சன்மார்க்க அறிஞராகவும் அவர் விளங்கினார். அவர் இலங்கையில் மட்டுமன்றி முழு மலாய் உலகிலும் பிரபல்யமான ஓர் அறிஞராக விளங்கினார்.

அவர் கொழும்பில் ஓர் அச்சகத்தை நிறுவியதோடு கிழக்குலகில் மலாய் மொழியில் வெளியாகிய முதலாவது மலாய் மொழிப் பத்திரிகையான 'ஆலாமத் லங்காபுரி' என்ற பத்திரிகையை வெளியிட்டார். இது 'ஜாவி' லிபியில் அமைந்திருந்தது. 1870 ம் ஆண்டுவரை அது வெளியிடப்பட்டு, நடுவில் இடை நிறுத்தப்பட்டு 1877ல் மீண்டும் வெளியிடப்பட்டு ஓர் ஆண்டு காலம் நீடித்தது. 1895ல் "வாஜா ஸுலாங்" என்னும் பெயரில் இன்னொரு பத்திரிகையை அவர் வெளியிட்டார். 1895க்கும் 1898க்குமிடையில் வெளியிடப்பட்ட இப்பத்திரிகை மலாக்கா, சிங்கப்பூர், ஜகர்த்தா, பங்கொக் ஆகிய இடங்களில் வாசகர்களைப் பெற்றிருந்தது.

ஸல்தீன் மலாய் மொழியில் மட்டுமன்றி அரபு மொழியிலும் அக்காலப்பிரிவில் தென் இந்தியாவிலும், இலங்கையிலும் வழக்கிலிருந்த அரபுத் தமிழிலும் புலமை பெற்றிருந்தார். 'முஹ்யதீன் முனாஜாத்' என்னும் அரபுத் தமிழ் நூலை அவர் மலாய் மொழியில் பெயர்த்தார். 1900 முதல் ஸல்தீன் "உண்மை" என்னும் பெயரில் ஓர் அரபுத்தமிழ் பத்திரிகையை வெளியிட்டார்.

ஒல்லாந்தரால் 1723ம் ஆண்டு படாவியாவிலிருந்து நாடுகடத்தப்பட்டு ஏனைய பிரமுகர்களுடன் இலங்கை வந்தடைந்த மாஸ் மஹொதா ரன்னத பல தொலா ஷஹாப்தீன் ஒரு சிறந்த கட்டடக் கலைஞராக விளங்கினர். அவர் கொழும்பில் புதிய சோனகத் தெருவில் கட்டிய பள்ளிவாசல் ஒரு புதிய கட்டட மரபைக் கொண்டிருந்ததால் 1826ம் ஆண்டு அப்பள்ளிவாசலைத் தரிசித்த பிரிட்டன் தேசாதிபதி ஸேர். எட்வர்ட் பான்ஸ் அதனைப் பெரிதும் பாராட்டினார்.(26)

இந்த வகையில் நோக்கும்போது இலங்கை மலாய சமூகம் அவர்களுக்கே உரிய ஒரு வரலாற்று கலாசாரப் பாரம்பரியத்தைப் பெற்றுள்ளனர். இது இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றினதும் பாரம்பரியத்தினதும் முக்கிய அங்கமாக உள்ளது.

தமிழ் லிபியில் எழுதப்பட்ட அரபு மொழி அரபுத் தமிழ் என அழைக்கப்பட்டதுபோன்று அரபு லிபியில் எழுதப்பட்ட மலாய மொழி ஜாவி என அழைக்கப்பட்டது.

பிரித்தானியர் ஆட்சியில் முஸ்லிம்கள்

இலங்கையில் 1796 முதல் பிரித்தானியர் ஆட்சி ஆரம்பமாகியது. 1796- 1948க்குமிடையிலே பிரித்தானியரின் ஆட்சிக்காலம் இலங்கையில் சமூக, அரசியல், பொருளாதார வாழ்வில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. இம் மாற்றங்கள் இலங்கை முஸ்லிம் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கத்தினையும், அதனடியாக இலங்கை முஸ்லிம் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் விளக்குவதே இந்த அத்தியாயத்தின் நோக்கமாகும்.

பிரித்தானியர் ஆரம்பத்தில் அவர்களது ஆட்சியை இந்த நாட்டில் நிலைநாட்டுவதற்காக கண்டி இராச்சியத்தின் உதவியைப்

பெறத் திட்டமிட்டனர். இந்த நோக்கத்தை அடையும் பொருட்டு இலங்கையில் உள்நாட்டு அரசியல் நிலைபற்றி, குறிப்பாகக் கண்டி இராச்சியம் பற்றி உளவறிந்து தகவல்களைப் பெறுவதற்காக ஜோன் பைபஸ் (John Pybrs) என்பவரை அனுப்பி வைத்தனர்.

இக்காலப்பிரிவில் கணிசமான அளவு முஸ்லிம் குடியேற்றங்கள் காணப்பட்டன. கண்டி மன்னர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் நெருக்கமான நல்லுறவு காணப்பட்டது. கண்டி மன்னன் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்ஹ (1742-82) பைபஸ் தூதை வரவேற்று, பிரித்தானியரின் ஆதரவைப் பெற்று நாட்டிலிருந்து ஒல்லாந்தரை வெளியேற்ற நாடினான். இதற்கு மூல காரணம் நாட்டுக்கு மிக வருமானத்தைத் தரக்கூடிய வணிகப் பொருட்களில் ஒன்றான கறுவா வியாபாரத்தில் அவர்கள் ஈடுபாடு காட்டியதே எனக் கருதப்படுகின்றது.

ஜோன் பைபஸ் கண்டிக்கு அண்மையிலுள்ள கன்னொருவ என்ற இடத்தை அடைந்தபோது கண்டி மன்னனின் தூதுவரான உதுமாலெப்பே என்பவர் அவரைச் சந்திக்கக் கண்டி அரசர் ஏற்பாடு செய்திருந்தார். இது முஸ்லிம் பிரஜைகளில் கண்டி மன்னர்கள் வைத்திருந்த நம்பிக்கைக்கு இது ஒரு சான்றாகும்.

பிரித்தானியர் வருகையைத் தொடர்ந்து, ஒல்லாந்தர்களது காலப்பிரிவில் முஸ்லிம்கள் அனுபவித்த சில இடர்பாடுகள், இன்னல்களை நீக்கும் முயற்சிகள் பிரித்தானிய ஆட்சியாளர்களால் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டன. இந்த நடவடிக்கைகள் மூலம் முஸ்லிம்களின் ஆதரவைப் பெற அவர்கள் முயற்சித்ததோடு, கண்டி இராச்சியத்தில் குறிப்பாகவும், இலங்கையின் ஏனைய பகுதிகளில் பொதுவாகவும் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் நிலவிய நல்லுறவைக் குலைக்கவும் திட்டமிட்டனர். உண்மையில் 1796 முதல் பிரித்தானியர் இவ்வாறு இனங்களுக்கிடையில் பிரித்தாளும் கொள்கையையும் வகுப்புவாத அரசியலையும் தொடங்கிவைத்தனர் என கலாநிதி லோனா தேவராஜா கருதுகின்றார்.(27)

அவர்களது பிரவேசம் நிகழ்ந்த காலம் முதற்கொண்டு பிரித்தானிய ஆட்சியாளர் முஸ்லிம்களுக்குச் சிறு சலுகைகள் வழங்கி அவர்களது ஆதரவைப் பெறும் நோக்கோடு, ஒல்லாந்தர்

ஆட்சிக்காலப்பிரிவில் அவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த, வணிக ரீதியான, சமூக ரீதியான சில தடைகளையும், கட்டுப்பாடுகளையும் தளர்த்த ஆரம்பித்தனர். பிரித்தானிய தேசாதிபதி பிரடரிக் நோர்த் (1798-1805) 1799ம் ஆண்டு முஸ்லிம்களின் விவகாரங்கள் தொடர்பான சட்டங்களும், 1806 ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட முஹம்மதிய சட்டமும் பாதுகாக்கப்படுமென ஒரு பிரகடனம் விடுத்தார். முஸ்லிம்கள் மீது ஒல்லாந்தர் விதித்திருந்த ஆள்வரியை அறவிட அவர் மறுத்தார். 'ஊழியம்' என்னும் இந்த ஆள்வரி, முஸ்லிம்களை ஏனைய இனங்களிலிருந்து பாரபட்சமாக நடத்தும் ஒரு முறையாகும் என அவர் குறிப்பிட்டார். ஆனால், 'ஊழியம்' என்னும் இந்த ஆள்வரி 1830ம் ஆண்டு கோல்பரூக்-கெமரூன் சீர்திருத்தக் குழுவின் சிபார்சின் பிறகே முற்றிலும் நீக்கப்பட்டது. இது முஸ்லிம்களுக்குப் பெரும் நிவாரணமாக அமைந்தது. ஏனெனில் 'ஊழியம்' என்னும் இந்த அமைப்பின் மூலம் ஒல்லாந்தர் காலப்பிரிவில் முஸ்லிம்கள் கட்டாய சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர். இது அவர்களது பாரம்பரியத் தொழிலான வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு தடையாக அமைந்தது.[28]

1833ம் ஆண்டுவரை முஸ்லிம்கள் கொழும்பில் காணி களையோ வீடுகளையோ வாங்குதல் தடைசெய்யப்பட்டிருந்தது. ஒல்லாந்தர் காலம் முதல் நடைமுறையிலிருந்த இந்த தடை 1833ம் ஆண்டு நீக்கப்பட்டதைத் தொடர்ந்து முஸ்லிம்கள் கொழும்பில் பெருமளவு குடியேறினர். படிப்படியாக ஒல்லாந்தர் வெளியேறியதும் அவர்கள் கொழும்பு புறக்கோட்டையில் தங்களது வதிவிடங் களையும் வியாபாரத் தலங்களையும் அமைத்துக்கொண்டனர். புதிய சோனகத்தெரு, பழைய சோனகத்தெரு, மெஸேன்ஜர் வீதி போன்ற இடங்களில் முஸ்லிம்களின் வதிவிடங்கள் காணப்பட்டன. இந்த இடங்களுக்கு அண்மையில் கொழும்புத் துறைமுகம் அமைந்திருந்ததானது அவர்களது வணிக முயற்சிகளுக்கும், வணிகப் பொருட்களின் போக்குவரத்துக்கும் மிக வசதியாக அமைந்தது. ஒல்லாந்தர் காலப்பிரிவில் முஸ்லிம்கள்மீது விதிக்கப் பட்டிருந்த கட்டுப்பாடுகள் காரணமாகப் புறக்கணிக்கப்பட்டிருந்த, சிலபோது அழிக்கப்பட்ட மஸ்ஜித்கள் இப்போது புனர் நிர்மாணம் செய்யப்பட்டன. இவ்வாறு புனர் நிர்மாணம் செய்யப்பட்ட மஸ்ஜித்களில் தற்போதைய புதிய சோனகத் தெருவில்

அமைந்துள்ள கொழும்பு பெரிய பள்ளிவாசல் ஒன்றாகும். இப்பள்ளிவாசல் இரண்டு மாடிக் கட்டடமாக விஸ்தரித்துக் கட்டப்பட்டது. 1825ல் வளாகத்தைத் தரிசித்த பிரித்தானிய தேசாதிபதி அதன் கட்டடக்கலைச் சிறப்பை வியந்து பாராட்டினார்.(29)

இலங்கை முஸ்லிம்களுக்கும், கண்டி அரசர்களுக்குமிடையில் மிக நெருங்கிய தொடர்பு காணப்பட்டதையும் கண்டி சிங்கள அரசர்கள் முஸ்லிம்களில் நல்லெண்ணமும், நம்பிக்கையும் வைத்து அவர்களுக்கு பல உயர் பதவிகள் வழங்கியதையும் ஏலவே நோக்கினோம். இது இரு சாராருக்கும் பல்வேறு வகைகளில் பரஸ்பரம் துணைபுரிவதையும், பயனளித்ததையும் நோக்கினோம்.

பிரித்தானியர் முஸ்லிம்களையும், கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த சிங்களப் பிரபுத்துவ வர்க்கத்தையும் தங்கள்பால் ஈர்ந்து, முஸ்லிம்கள் கண்டி மன்னனுடன் கொண்டிருந்த மிக ஆரோக்கிய மான நல்லுறவைக் குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். பிரித்தானிய ஆட்சியாளர்கள் முஸ்லிம்களுக்கு வழங்கிய சலுகைகள், அவர்கள் பல சமூக, பொருளாதார நன்மைகளைப் பெறக்கூடிய வகையில் அமைந்தாலும், அதன் பின்னால் பல மறைவான நோக்கங்கள் காணப்பட்டன என்பதை மறுப்பதற்கில்லை. முஸ்லிம்களுக்கும் கண்டி இராச்சியத்திற்குமிடையேயுள்ள தொடர்பை, நல்லுறவைப் பயன்படுத்தி அவர்களை கண்டி இராச்சியத்தின் அரசியல் நிலை பற்றி உளவறிந்து, கண்டியைக் கைப்பற்றுவதற்கான முக்கிய ராணுவத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலும், கண்டி அரசனுக்கும் முஸ்லிம்களுக்கு மிடையேயுள்ள நல்லுறவைக் குலைத்தலும் இந்த மறைவான நோக்கங்களாகும் . இதன் வரலாற்று விளைவை கலாநிதி லோனா தேவராஜா பின்வருமாறு விளக்குகின்றார்:

> "இந்தியாவைப் போன்றே இலங்கையிலும் முஸ்லிம்கள் பிரித்தானியரின் கையில் மிகப் பெரும் ஆயுதமாக மாறினர். கண்டி மன்னனின் அதிகாரத்தையும், செல்வாக்கையும் முறியடிக்கும் தங்கள் நோக்கத்திற்கு துணைபுரியும் சக்தியாக முஸ்லிம்களை அவர்கள் பயன்படுத்தினர்."

பிரித்தானியரின் இப்பிரித்தாளும் கொள்கை அவர்களுக்கு வெற்றியளித்தது. முஸ்லிம்களுக்கும் கண்டி இராச்சியத்திற்கு மிடையிலான நல்லுறவும், முஸ்லிம்கள்பால் கண்டி ஆட்சியாளர்கள் கொண்டிருந்த நம்பிக்கையும், நல்லெண்ணமும் படிப்படியாக பாதிப்புக்கு ஆளாகியது. பிரித்தானிய ஆட்சியில் முஸ்லிம்கள் செல்வாக்குப் பெற்றதைத் தொடர்ந்து, கண்டி ராச்சியத்திற்கு வியாபார நோக்கத்திற்காக வருகின்ற முஸ்லிம் வியாபாரிகளை பிரித்தானிய ஆட்சிக்கு ஆதரவாகத் தகவல் திரட்ட வருகின்ற உளவாளிகளாக கண்டி அரசர்கள் நோக்க ஆரம்பித்தனர். 1802ம் ஆண்டு சில முஸ்லிம் வியாபாரிகள் தமது வியாபாரப் பயணமொன்றின்போது கண்டியிலிருந்து திரும்பிக்கொண்டிருந் தனர். அவர்கள் கண்டி மன்னனின் முதலாவது அதிகாரியாகப் பணிபுரிந்த பிலிமத்தலாவையினால் புத்தளத்தில் வைத்து தடுத்து நிறுத்தப்பட்டனர். அவர்களது வியாபாரப் பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன. தமது பிரித்தானிய ஆட்சிக்கு விசுவாசமாக இருந்த முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இந்த விடயத்தை அறிந்த தேசாதிபதி நோர்த் 1803ம் ஆண்டு கண்டி ராச்சியத்தினை முற்றுகையிட்டார். ஆனால் இது தோல்வியில் முடிந்தது. இதுவே பிரித்தானியருக்கும் கண்டி இராச்சியத்துக்குமிடையிலான முதலாவது மோதலாகும். அதனைத் தொடர்ந்து 1815ம் ஆண்டு தேசாதிபதி ரொபர் பிரவ்ன்ரிங்கின் காலப்பிரிவில் கண்டி ராச்சியம் முற்றுகையிடப்பட்டு கைப்பற்றப்பட்டது. பெப்ரவரி 18, 1815ம் ஆண்டு கண்டி அரசன் பதவிநீக்கம் செய்யப்பட்டு, கண்டி உடன்படிக்கை கைச்சாத் திடப்பட்டது. கண்டிப் போரின்போது முஸ்லிம்கள் பிரித்தானியருக்கு மறைமுகமாக உதவியாக இருந்தனர். ஆனால் கண்டி அரசனின் ராணுவத்திலும் முஸ்லிம்கள் இணைந்து போராடினர். கண்டி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டவர்களில் முஸ்லிம்கள் எவரினதும் பெயர்கள் காணப்படவில்லை.(30)

முஸ்லிம்களின் விசுவாசத்தைக் கண்டி அரசர்கள் சந்தேகித்ததே இதற்குக் காரணமாக இருக்கலாம் எனச் சிலர் கருதுகின்றனர். ஆனால் ஒரு காலப்பிரிவில், இந்நாட்டிலிருந்து ஒல்லாந்தரை வெளியேற்றும் முயற்சியில் பிரித்தானியருடன் பேச்சுவார்த்தை நடாத்த கண்டி அரசர்கள் ஒரு முஸ்லிம் தூதுவரைப் பயன்படுத்தினர். கண்டி உடன்படிக்கையில்

முஸ்லிம்களும் சேர்க்கப்படல் வேண்டும் என்ற விடயத்தில் எத்தகைய கரிசனையும் காட்டாத பிரித்தானியர்கூட, கண்டி கைப்பற்றப்பட்ட பின்னர், 1817-1818க்குமிடையில் நடைபெற்ற முதலாவது கண்டிக் கலவரத்தை அடக்குவதற்கு முஸ்லிம்களைப் பயன்படுத்தினர். 1815ம் ஆண்டு கண்டி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இரு ஆண்டுகளின் பின்னர் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக கண்டி மாகாணங்களில் ஒரு மாபெரும் கலவரம் நடைபெற்றது. இக்காலத்தில் முஸ்லிம்கள் பிரித்தானியருக்கு விசுவாசமாகச் செயல்பட்டனர். பிரித்தானிய துருப்புக்களுக்கு கரையோரப் பகுதிகளிலிருந்து மலைநாட்டுப் பகுதிகளுக்குப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு தமது பொதி மாடுகளைக் கொடுத்துதவினர். ஊவக, வெல்லஸ்ஸ பகுதியில் மிகப் பரவலாக குடியேற்றங்களைக் கொண்டிருந்த முஸ்லிம்கள் பிரித்தானியருக்கு பல வழிகளிலும் துணையாக நின்றனர். முஸ்லிம்களின் இச் செயற்பாடு அவர்கள் முன்னர் கடைப்பிடித்த போக்குகளிலிருந்து, முற்றிலும் வித்தியாசமாக அமைந்தது. 1815ல் பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றும்வரை கண்டி சிங்கள அரசபீடம் நிலைக்கும் வரை, முஸ்லிம்கள் சிங்கள அரசர்களுக்கு விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் செயல்பட்டனர். ஆனால் பிரித்தானியரின் ஆட்சி உறுதியடைந்ததும் முஸ்லிம்கள் தாங்கள் பிரித்தானியருக்கு விசுவாசமாக இருப்பதைத் தவிர வேறு வழியில்லை என யதார்த்தபூர்வமாக சிந்தித்து இவ்வாறு செயல்பட முற்பட்டிருக்க லாம் என நாம் கருத்துக் கொள்வதில் தவறில்லை.

கண்டிக் கலவரத்தின்போது முஸ்லிம்கள் பிரித்தானியருக்கு விசுவாசமாக செயல்பட்டதன் காரணமாக அவர்களுக்கு ஆட்சியாளர் பல சலுகைகளை வழங்கினர். கண்டிச் சிங்கள அரசர்களின் ஆட்சியில் முஸ்லிம்கள் அரசனின் மாகாணப் பிரதிநிதிகளான 'திஸாவ' என அழைக்கப்பட்ட அதிகாரிகளின் கட்டுப்பாட்டின் கீழேயே வாழ்ந்தனர். சிங்களக் கிராமவாசிகளைப் போன்றே முஸ்லிம்களும் அவர்களது பிரதேசங்களுக்குப் பொறுப்பாக இருந்த சிங்களத் திஸாவைகளுக்கே அவர்களது வரிகளைச் செலுத்தினர். ஆனால் 1818 மார்ச் 2ம் திகதி பிரித்தானிய ஆட்சியாளர்களால் விடுக்கப்பட்ட பிரகடனம் மூலம் மாற்றியமைக்கப்பட்ட இப்பிரகடனத்தின் மூலம் முஸ்லிம்கள் கண்டிப்

பிரதானிகளான 'திஸாவை'களின் பரிபாலன கட்டுக்கோப்பிலிருந்து விடுக்கப்பட்டு. பிரித்தானிய அதிகாரிகளினகட்டுக்கோப்பின் கீழ் கொண்டுவரப்பட்டனர்.

முஸ்லிம்கள் தொடர்பான பிணக்குகளும், வழக்குகளும் பிரித்தானிய அதிகாரிகளினாலேயே விசாரிக்கப்படல் வேண்டும் என இப்பிரகடனம் குறிப்பிட்டது. கண்டிக் கலவரத்தில் பிரித்தானிய ஆட்சிக்கு விசுவாசமாக செயல்பட்டு உயிர்களையும் உடமைகளையும் இழந்த முஸ்லிம்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டது.

கண்டிக் கலவரத்தில் முஸ்லிம்கள் பிரித்தானிய ஆட்சிக்கு விசுவாசமாக செயல்பட்டதானது இன்னெரு முக்கிய விளைவினை ஏற்படுத்தியது. இக்காலத்தில் பிரித்தானியருக்கு ஆதரவாக முஸ்லிம்கள் செயல்பட்டதால் ஆத்திரமும் கோபமும் அடைந்த கண்டி மாகாணத்திலுள்ள பிரதானிகள் உப்பு போன்ற வியாபாரப் பொருட்களை வியாபாரிகளிடமிருந்து அபகரிப்பதாகவும் அதற்கு எத்தகைய கொடுப்பனவும் செய்வதில்லையென்றும் எனவே அவர்களுக்கு ஒரு தனிப்பட்ட முஹாந்திரம் (கண்டி மாகாணங்களில் வரி அறவிடுபவர்) ஒருவரை நியமிக்கும்படியும் முஸ்லிம்கள் பிரித்தானிய தேசாதிபதியிடம் முறையிட்டனர். இந்த வேண்டுகோளுக்கேற்ப பிரித்தானிய தேசாதிபதி 1818ம் ஆண்டு உஸ்மான் லெப்பே மரிக்கார் ஷெய்க் அப்தில் காதிர் என்பவரை முஸ்லிம்களுக்கான முஹாந்திரமாக நியமித்தனர்.

பிரித்தானியரும் பிரித்தாளும் கொள்கையினடிப்படையில் முஸ்லிம்களின் சில பலவீனமான நிலைமைகளைச் சாதகமாகப் பயன்படுத்தி அவர்களுக்கு சில சலுகைகளையும் வழங்கி, ஆதரவைப் பெறும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இந்த தந்திரமான நடவடிக்கைகள் பல நூற்றாண்டு காலங்களாக நிலவிய சிங்கள-முஸ்லிம் நல்லுறவில் விரிசலையும், பாதிப்பையும் ஏற்படுத்தியது. சிங்கள-முஸ்லிம் சமூகங்கள் பாரம்பரியமாக ஒருவரில் ஒருவர் பரஸ்பரம் தங்கி நிற்கும் நிலையை இழக்கச் செய்தது.(31)

இலங்கையின் செலவினங்கள், வருமானத்தைவிட அதிகரிப்பதற்கான காரணங்கள் பற்றி விசாரிப்பதற்காக 1829ம் ஆண்டு இலங்கைக்கு அனுப்பப்பட்ட கோல்புரூக்-கெமருன் குழு செய்த சிபார்சுகள் முஸ்லிம்களின் சமூக, பொருளாதார வாழ்வில் மிக முக்கிய மாற்றங்கள் நிகழக் காரணமாக அமைந்தன. 1832ம் ஆண்டு கட்டாய சேவையின் ராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டது. கோல்புரூக் ஆணைக்குழு இலங்கையில் முதலாளித்துவ பொருளாதாரத்துக்கான அத்திவாரத்தை இட்டது. இந்தப் பொருளாதார அமைப்பு தொடர்ந்துவந்த காலப்பிரிவில் பலம் பெற்று வளர்ச்சியடைந்து. இலங்கையின் விவசாயப் பொருளாதாரம் தோட்டப் பொருளாதாரமாக மாற்றமடைந்தது. மிகக் குறைந்த விலைக்கு அரசாங்கத்தினால் விற்கப்பட்ட 40,000 ஏக்கர் காணியில் கோப்பி பயிரிடப்பட்டது. கோப்பி முக்கிய ஏற்றுமதிப் பொருளாக விளங்கியது. ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதார அமைப்பு தோற்றம் பெற்றது. முஸ்லிம்கள் மிகச் சிலரே தோட்டங்களுக்கு உரிமையாளராக விளங்கினர். இப்புதிய பொருளாதாரமுறை தோற்றுவித்த அரசாங்க உத்தியோகங்களிலும், ஏனைய தொழில்களிலும் அவர்கள் ஈடுபாடு காட்டவில்லை. ஆனால் முஸ்லிம்களில் வசதிபடைத்தோர் அவர்களது வியாபாரம் மூலம் ஈட்டிய மூலதனத்தைப் பெற்றிருந்தனர். முஸ்லிம்கள் கொழும்பில் உடைமைகளையோ-காணிகளையோ வைத்திருத்தல் முடியாது எனத் தடைசெய்யும் சட்டம் பிரித்தானிய ஆட்சியினரால் நீக்கப்பட்டதும் தங்களது மூலதனத்தைப் பயன்படுத்தி கொழும்பிலும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் வீடுகளையும், காணிகளையும் வாங்கினர். இவ்வாறு தோட்டங்களுக்கும், வீடுகளுக்கும், காணிகளுக்கும் உரிமையாளர்களாக விளங்கிய பல முஸ்லிம் குடும்பங்களில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நான்காவது தசாப்தம் முதல் (1840) மூலதனம் குவிய ஆரம்பித்தது. இவ்வாறு மூலதனத்தைப் பெற்றிருந்த வசதிபடைத்த முஸ்லிம் குடும்பங்களில் மாக்கான் மாக்கார், வாப்பிச்சி மரிக்கார் குடும்பத்தினர் முஸ்லிம் உயர்தர மேட்டுக் குடியினைச் சேர்ந்த குடும்பங்களாக பரிணாமம் பெற்றனர். இலங்கையில் மிகப் பிரபல்ய ஆபரண வணிகத்தலம் ஏ.எல்.எம். மாக்கான் மாக்காரினால் காலியில் நிறுவப்பட்டது. மாணிக்கம்

தோண்டப்படும் இடங்களிலிருந்து பெறுமதியான மாணிக்கக் கற்களைக் கொள்வனவு செய்து அவர் ஐரோப்பிய சந்தைக்கு ஏற்றுமதி செய்தார். காலியிலிருந்த அவரது வணிகத்தலம் பிறகு கொழும்பு கிராண்ட் ஒரியண்டல் ஹோட்டலுக்கு மாற்றப்பட்டது. கொழும்பில் அவரது வியாபாரத்தலம் பிரித்தானிய அரச குடும்பத்தினர், பிரபுத்துவ வர்க்கத்தையும் கவர்ந்து சர்வதேசிய புகழடைந்தது. வசதி படைத்த, உயர்தர குடும்பத்தைச் சார்ந்த பிரித்தானிய ஆட்சிக்கு விசுவாசம் படைத்தவர்களாக கருதப்பட்ட முஸ்லிம்கள் சிலர் பிரித்தானிய ஆட்சியாளர்களால் Consul என அழைக்கப்படும் ராஜதந்திரப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டனர். 1885-1872க்குமிடையில் இலங்கையில் பிரித்தானிய தேசாதிபதியாகப் பணிபுரிந்த ஸர். ஹர்கியூலன்ஸ் ரொபின்ஸன் இவர்களில் சிலரை அன்றைய காலகட்டத்தில் சர்வதேசிய விவகாரத்தில் முக்கிய இடம் வகித்த முஸ்லிம் நாடுகளான துருக்கி, பாரசீகம் போன்ற நாடுகளின் கன்ஸியுலர்களாக நியமித்தார். இவர்கள் பூரண ராஜதந்திரி என்ற வகையிலன்றி பிரித்தானிய ராச்சியத்தின் வர்த்தக விவகாரங் களைக் கவனிக்கும் பொறுப்பை நிறைவேற்றுவதற்காகவே நியமிக்கப்பட்டனர். ஏனெனில் இக்காலப்பிரிவில் பாரசீகம், துருக்கி ஆகிய இரு நாடுகளும் பிரிட்டனுக்கும் இந்தியாவிற்குமிடையிலான வணிகத்தில் முக்கிய இடத்தை வகித்தன. முஸ்லிம்கள் பெற்றிருந்த கடல்கடந்த நாடுகள் பற்றிய அறிவும் பரிச்சயமும், அவர்களது சர்வதேசிய தொடர்புகள், மொழிவன்மை ஆகியனவும் இத்தகைய நியமனங்களுக்கு காரணமாக இருந்திருக்கலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரித்தானிய ஆட்சியில் முஸ்லிம்கள் பொருளாதாரத் துறையில் ஓரளவு முன்னேறியபோதும் அவர்களது முன்னேற்றம் வணிகத்தை மையமாக வைத்தே அமைந்தது. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மூன்றவது தசாப்தமளவில் (1875) முஸ்லிம்கள் அரசியல், கல்வித்துறையில் அடைந்திருந்த பின்னடைவு மிகத் தெளிவாகப் புலனாகியது. முஸ்லிம்கள் கல்வித்துறையில் அடைந்திருந்த பின்னடைவுக்கும், அரசியல், சமூகத் துறையில் அடைந்திருந்த தேக்க நிலைக்கும் அடிப்படைக் காரணமாக அமைந்தது அவர்கள் கிறிஸ்தவ மிஷனரிப் பாடசாலைகளைப் பொறுத்தளவில் கடைப்பிடித்த கொள்கை

யாகும். இக்காலப்பிரிவில் முஸ்லிம்கள் அவர்களது குழந்தைகளின் சன்மார்க்கத் தேவைகளை குர்ஆன் மத்ரஸாக்கள் மூலம் பூர்த்தி செய்தனர். குர்ஆனையும், அடிப்படை அரபு மொழி அறிவையும் போதிக்கும் இத்தகைய 5910 மத்ரஸாக்கள் காணப்பட்டதாக 1893ம் ஆண்டுக்கான கல்விப் பரிபாலன அறிக்கை குறிப்பிடு கின்றது. இம்மத்ரஸாக்கள் விராந்தைப் பாடசாலைகள் (Varanda School) என இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முஸ்லிம்கள் இக்காலப்பிரிவில் நவீன ஆங்கில மொழிக் கல்விப் பாடசாலையைப் புறக்கணித்து, தங்களது கல்வியை குர்ஆன் மத்ரஸாக் கல்வியோடு மட்டும் மட்டுப்படுத்திக்கொள்வதற்கு முக்கிய காரணம், இக்கல்வியைப் போதிக்கும் கிறிஸ்தவ மிஷனரிப் பாடசாலைகள் கடைப்பிடித்த கொள்கையாகும். இப்பாடசாலை களில் போதிக்கப்படும் கிறிஸ்தவமத சார்பான கல்வியை முஸ்லிம்கள் சந்தேகத்துடன் நோக்கியதில் எத்தகைய வியப்பும் இல்லை. இலங்கையை பிரித்தானியர் கைப்பற்றிய காலம் முதல் இந்நாட்டு மக்களை கிறிஸ்தவ மதத்திற்கு மதமாற்றம் செய்வதே அவர்களது கொள்கையாக இருந்தது. இலங்கையில் முதலாவது பிரித்தானிய தேசாதிபதியாக பிரடரிக் நோர்த் இலங்கையின் பிரதான மதமாக கிறிஸ்தவ மதம் இருத்தல் வேண்டும் என வலியுறுத்தினார். இரண்டாவது தேசாதிபதியான ஸேர். தோமஸ் மேட்லன்ட் கிறிஸ்தவ மதத்தைப் போதிக்கும் பாடசாலைகள் நிறுவுவதற்கு தூண்டுதல் வழங்கினார். 1830ல் கோல்புரூக் ஆணைக்குழுகூட கிறிஸ்தவ மதகுருமார்களின் மேற்பார்வையின் கீழ் பாடசாலைகள் நிறுவப்படல் வேண்டும் என சிபார்சு செய்தது. இத்தகைய நிலையில் முஸ்லிம்கள் தங்களது குழந்தைகளை இப்பாடசாலைகளுக்கு அனுப்பத் தயங்கியதில் எத்தகைய ஆச்சரியமும் இல்லை.

இவ்வாறு முஸ்லிம்கள் நியாயமான காரணங்களுக்காக ஆங்கிலக் கல்வியை புறக்கணித்ததானது சமூக, அரசியல் வாழ்வில் மிகப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது. ஏனெனில் ஆங்கில அறிவின்றி நாட்டின் பொது வாழ்வில் அவர்களுக்கு உரிய பங்கைப் பெறும் வாய்ப்பு சாத்தியமாக இருக்கவில்லை. 1889ம் ஆண்டுவரை இலங்கை சட்ட நிரூபண சபையில் ஒரு முஸ்லிம் அங்கத்தவர்கூட காணப்படவில்லை. இதன் காரணமாக

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை முஸ்லிம்களின் அரசியல் பங்களிப்பு மிகக் குறைவாகவே காணப்பட்டது. அரசாங்கத் தொழில்கள் பெறும் வாய்ப்பும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.(32)

கி.பி. 1880ம் ஆண்டளவில் முஸ்லிம்கள் கல்வி, சமூக, அரசியல் துறைகளில் பின்னடைந்திருந்த இக்காலப்பிரிவில் அவர்களது சமகால பௌத்த, இந்து சமூகத்தில் ஓர் எழுச்சிக்கான இயக்கங்களின் செயல்பாடுகளை மிகக் கூர்ந்து அவதானித்தார்கள். பௌத்த சமூகத்தில் ஹிக்கடுவே ஸிரி ஸுமங்கல தேரோ, அனகாரிக தர்மபால, கேர்னல் ஒல்கொட் ஆகியோரும், இந்து சமூகத்தில் ஆறுமுக நாவலரும் முறையே பௌத்த, இந்து சமூகங்களின் இந்த எழுச்சி இயக்கத்தில் முன்னோடிகளாகச் செயல்பட்டனர். கிறிஸ்தவ ஆதிக்கம் கொண்ட ஆங்கிலக் கல்வியின் பாதிப்பை எதிர்கொள்வதற்கான ஒரே வழி மிக ஒழுங்குபடுத்தப்பட்ட பௌத்த, இந்து பாடசாலைகளை நிறுவுவதே என்ற உண்மையை இவர்கள் உணர்ந்து செயல்பட்டனர்.

முஸ்லிம்கள் தங்களது எழுச்சிக்காக ஒரு புத்திஜீவியான சக்திமிக்க, தூரநோக்குக் கொண்ட தலைமைத்துவத்தை வேண்டிநின்ற இக்காலகட்டத்தில் வரலாற்றின் இத்தேவையைப் பூர்த்திசெய்வதற்காகத் தோன்றிய இரண்டு தலைவர்களாக எம்.ஸி. சித்திலெப்பையும் (1838-1898) எகிப்திலிருந்து இலங்கைக்கு நாடுகடத்தப்பட்ட சுதந்திரப் போராட்ட வீரர் ஒராபிபாஷாவும் (1883-1900)விளங்கினார்கள்.

1838ம் ஆண்டு ஜூன் 11ந் திகதி பிறந்த சித்திலெவ்வையின் தந்தையார் இலங்கையின் முதல் முஸ்லிம் சட்டத்தரணியாகக் கருதப்படுகிறார். தந்தையின் வழியில் ஒரு சட்டத்தரணியாகப் பணிபுரிந்த சித்திலெவ்வை அவரது அறிவுப் பின்னணி தூர நோக்கு காரணமாக அவரைச் சுற்றி நிகழும் மாற்றங்களை கூர்ந்து அவதானித்து, சிந்திக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார். தனது சமூகத்தின் மீட்சியும், எதிர்காலமும் கல்வியிலே தங்கியுள்ளது என்பதை அவர் உணர்ந்தார். சமூகத்தில் புரையோடியிருந்த அறியாமை, மூட நம்பிக்கைகள், அறிவில் ஆர்வமின்மையைப் போக்கி, அதனை இயங்கச் செய்வதற்கான வழி சமூகத்திற்கு அறிவூட்டுவதேயாகும் என்பது அவருக்குத் தெளிவாகியது. எனவே,

அவரது கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்புவதற்கு ஓர் ஊடகமாக 1882 டிசம்பர் 21ம் திகதி 'முஸ்லிம் நேசன்' என்ற பெயரில் ஒரு பத்திரிகையை ஆரம்பித்தார். முஸ்லிம் சமூகத்திற்கு அறிவூட்டுவதும், முஸ்லிம் உலகின் நிகழ்ச்சிகள் பற்றி மக்களைப் பரிச்சயப்படச் செய்வதும், சமூக சீர்திருத்த திறமாகக் குரல் கொடுப்பதும் முஸ்லிம் நேசனின் நோக்கமாக அமைந்தது. எகிப்திலும், சூடானிலும் நடைபெறும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான சுதந்திரப் போராட்டங்கள், அண்மை நாடான இந்தியாவில் முஸ்லிம்களது அரசியல், கல்வி நடவடிக்கைகள் என்பன முஸ்லிம் நேசனில் முக்கிய செய்திகளாகப் பிரசுரிக்கப்பட்டன. இதன் காரணமாக இலங்கை முஸ்லிம்கள் தங்களது கலாசார சூன்யத்திலிருந்து மீட்சி பெற்று அவர்கள் பரந்த இஸ்லாமிய உம்மத்தின் ஓர் அங்கம் என்ற உணர்வைப் பெற்றனர். முஸ்லிம் நேசன் குறிப்பாக இலங்கை முஸ்லிம்களின் சமூக, கல்வி, அரசியல் பிரச்சினைகளில் ஈடுபாடு காட்டப்பட்டது. தனது பத்திரிகையின் மூலம் சட்ட நிரூபண சபையில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்திற்காக, சித்திலெவ்வை குரல் கொடுத்தார். சித்திலெவ்வையின் முக்கிய நோக்கமாக விளங்கியது சமூகத்தின் கல்வி மேம்பாடாகும். பத்திரிகையில் அவர் எழுதிய ஆசிரிய தலைப்புகளிலும், கட்டுரைகளிலும் முஸ்லிம்கள் கல்வியின் அவசியத்தை உணர்ந்து செயல்பட வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியதோடு கல்வியின்மை அவர்களை ஏனைய சமூகங்களைவிட மிகப் பின்தங்கிய நிலைக்குத் தள்ளிவிடும் என்றும் எச்சரித்தார். இக்காலப்பிரிவில் எகிப்திய நாட்டிலிருந்து, சுதந்திரப் போராட்ட வீரர் அஹ்மத் ஒராபி பாஷா பிரித்தானியரினால் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டதானது சித்திலெவ்வையின் சமூகப் புனருத்தாரண முயற்சிகளுக்கு மாபெரும் பலமாக அமைந்தது.

ஜனவரி 10ம் திகதி 1883ம் ஆண்டு ஓராபி பாஷாவையும், அவருடன் நாடுகடத்தப்பட்ட சகாக்களையும் சுமந்துவந்த எஸ்.எஸ். மரியோடிஸ் (S.S. Mariotis) என்ற கப்பல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. ஜனவரி 11ம் திகதி பெருமளவு எண்ணிக்கையிலான முஸ்லிம்கள் துறைமுகத்திலிருந்து ஏறக்குறைய கால் மைல் தூரத்திற்கு வீதியின் இரு மருங்கிலும் குழுமி நின்று அவரை வரவேற்றனர். சித்திலெப்பை ஒராபிபாஷாவில் தனது கல்வி சமூக

சீர்திருத்தப் பணிகளுக்கு தூண்டுதலும், ஆர்வமும் அளித்து துணைநிற்கும் ஒரு தோழனைக் கண்டார். ஒராபி பாஷா இலங்கை வந்தடைந்து பன்னிரண்டு நாட்களுக்குள் சித்திலெவ்வை அவரைச் சந்தித்தார்.

ஒராபிபாஷா பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலப் பிரிவில் எகிப்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கல்விச் சீர்திருத்தங்கள் பற்றி ஏற்கனவே நன்கு அறிந்தும், பரிச்சயப்பட்டும் இருந்தார். அவர் சித்திலெப்பையின் கல்விப் பணிகளுக்கு முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும் நல்கி அதன் வெற்றிக்குத் துணைநின்றார். அக்காலப்பிரிவில் பொதுப் பணிகளுக்குத் துணை நின்ற வாப்பிச்சி மரிக்காரின் துணையும் சித்தி லெவ்வைக்குக் கிடைத்தது. சித்திலெப்பை, ஒராபிபாஷா, வாப்பிச்சி மரிக்கார் ஆகிய மூவரினதும் முயற்சிகள் காரணமாக 1884ம் ஆண்டு கொழும்பில் புதிய சோனகத் தெருவில் ஆங்கிலோ-முஹம்மதிய கல்லூரி - அல் மத்ரஸதுல் கைரியதுல் இஸ்லாமிய்யா நிறுவப்பட்டது. முஸ்லிம்கள் மத்தியில் கல்வி வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு ஒராபிபாஷா, சித்திலெவ்வை, வாப்பிச்சி மரிக்கார், ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் ஆகியோர் இணைந்து 1891ல் முஸ்லிம் கல்விச் சங்கத்தைத் தோற்றுவித்தனர்.

இச்சங்கத்தில் சித்திலெவ்வை மிக முக்கிய பங்கை வகித்தார். இச்சங்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டிலேயே முஸ்லிம்களுக்கான பாடசாலைகள் நிறுவும் பணியை ஆரம்பிக்க சித்திலெவ்வை ஆர்வம் கொண்டார். நவீன கல்வியை அளிக்கும் ஒரு கல்வி நிறுவனத்தை உருவாக்க உதவும்படி முஸ்லிம்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார். மருதானை பள்ளிவாசலில் ஜும்ஆத் தொழுகையின் பின்னர் இது தொடர்பாக சித்திலெவ்வை நிகழ்த்திய உரை பற்றிய செய்தியை Ceylon Times பத்திரிகை 21 ஜனவரி 1891 இதழில் வெளியிட்டது. இறுதியில் 22ந் திகதி ஆகஸ்ட் 1892ம் ஆண்டு ஒராபி பாஷாவின் அனுசரனையுடன் வாப்பிச்சி மரிக்காரின் உதவியுடனும், சித்திலெவ்வையின் முயற்சியில் ஒரு பாடசாலை கொழும்பில் நிறுவப்பட்டது. அல்-மத்ரஸதுல் ஸாஹிரா (???) என ஒராபிபாஷா இப்பாடசாலைக்குப் பெயரிட்டார்.

முஸ்லிம் கல்வி வளர்ச்சியோடு அரபு மொழியை முஸ்லிம்கள் மத்தியில் பரவலாக்கும் முயற்சியிலும் சித்திலெவ்வை ஈடுபட்டார். சித்திலெவ்வை முஸ்லிம்கள் அரபு மொழியைக் கற்கும்படி தூண்டியதோடு, அதனைக் கற்பதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். அரபு மொழியைக் கற்பதற்குத் துணைபுரியும் வகையில் 'ஹிதாயதுல் காஸிமியா', 'துஹ்பதுந் நஹ்வ' என்னும் பெயரில் அரபிலக்கணம் பற்றிய இரு நூல்களை அரபுத் தமிழில் எழுதி வெளியிட்டார்.(33)

சித்திலெவ்வையின் கல்விச் சமூகப் பணிகளில் அவருடன் ஒத்துழைத்த ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் ஒராபி பாஷாவினால் மிகவும் கவரப்பட்டார். அப்போது உஸ்மானிய சக்கராதிபத்தியத்தின் கலீபாவாக இருந்த ஸுல்தான் ஸலாஹுத்தீன் அப்துல் ஹமீதின் ஆளுமையால் கவரப்பட்டு துருக்கியின் செயல்பாடுகளிலும் அவர் மிக ஈடுபாடு காட்டினார். ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் (1867-1913) ஒரு பத்திரிகை ஆசிரியராக, சிந்தனையாளராக, சமூக சீர்திருத்தவாதியாக விளங்கினார். 1889ம் ஆண்டு அப்துல் அஸீஸ் "முஸ்லிம் நேசன்" பத்திரிகையின் ஆசிரியராகப் பொறுப்பேற்று ஆறுமாத காலங்கள் பணிபுரிந்தார். அதன் பின்னர் அவர் அரபுத் தமிழில் "அஸ்-ஸவாப்" என்னும் பத்திரிகையை ஆரம்பித்தார். அதன் பின்னர் 1901ல் "முஸ்லிம் பாதுகாவலன்" என்ற பத்திரிகையை வெளியிட்டார். அது 1908ம் ஆண்டுவரை நிலைத்தது.

சமூகத்தில் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தல், முஸ்லிம் சமூகத்தில் புரையோடிப் போயிருந்த இஸ்லாத்திற்கு முரணான செயற்பாடுகளைக் கண்டறிந்து சமகால முஸ்லிம் உலகின் நிகழ்வுகள் பற்றி சமூகத்திற்கு அறிவூட்டல், முஸ்லிம்கள் உலகளாவிய இஸ்லாமிய உம்மத்தோடு சார்ந்தவர்கள் என்ற உணர்வை அவர்களில் தோற்றுவித்தல் ஆகிய நோக்கங்களை "முஸ்லிம் பாதுகாவலன்" கொண்டிருந்தது. இப்பத்திரிகை மூலம் அக்காலப்பிரிவில் டமஸ்கஸையும் மதினாவையும் இணைக்கும் வகையில் அமைக்கப்படத் திட்டமிடப்பட்டிருந்த ஹிஜாஸ் புகையிரதத் திட்டத்திற்கு உதவும்படி அவர் இலங்கை முஸ்லிம்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். இவரது இந்த

வேண்டுகோள் முஸ்லிம்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. முஸ்லிம்கள் ஹிஜாஸ் புகையிரதத் திட்டத்தின் பூர்த்தியை மிக ஆர்வத்தோடு எதிர்நோக்கினர். அதன் பூர்த்திவிழா கொழும்பில் மிக விமர்சையோடு கொண்டாடப்பட்டது. அப்துல் அஸீஸின் முஸ்லிம் பாதுகாவலன் எந்த அளவு பிரபல்யமடைந்ததெனில், அதன் சில ஆங்கில கட்டுரைகள் பிரபல ஆங்கிலத் தினசரிகளில் மறுபிரசுரம் செய்யப்பட்டன. அப்துல் அஸீஸ் குர்ஆன் போதனையிலும், அதனைப் பிரபல்யப்படுத்துவதிலும் மிக ஆர்வத்துடன் செயல்பட்டார். குர்ஆனைப் போதிப்பதற்கான முறைமைகள் பற்றி முஸ்லிம் பாதுகாவலனில் தொடர்ச்சியாகப் பல கட்டுரைகள் எழுதினார். குர்ஆனை ஓதுவதோடு மட்டும் நிற்காது இலங்கை முஸ்லிம்கள் அதன் தமிழ் மொழிபெயர்ப்பையும் கற்றல் வேண்டும் என வலியுறுத்தினார். 1921ல் யாழ்ப்பாணத்திற்குச் சென்றிருந்தபோது, ஜும்மாவின் பின்னர் அவர் நிகழ்த்திய சொற்பொழிவின்போது குத்பாப் பிரசங்கங்கள் தமிழிலும் நிகழ்த்தப்படல் வேண்டும் என்ற கருத்தை மிக அழுத்தமாகக் குறிப்பிட்டார்.



டமஸ்கஸையும் மதினாவையும் இணைக்கும் ஹிஜாஸ் புகையிரதத் திட்டத்தின் பூர்த்தியை முன்னிட்டு கொழும்பு பெரிய பள்ளிவாசலில் 1 செப். 1908ல் நடைபெற்ற வைபவம்

சனத்தொகை மதிப்பீட்டு அதிகாரியாகப் பணிபுரிந்த ஈ.பி. டென்ஹாமின் வேண்டுகோளின் பேரில் இலங்கை முஸ்லிம்களிடையே காணப்படும் குழந்தைப் பேற்றோடு தொடர்புடைய சம்பிரதாயங்கள் பற்றிய அறிக்கையொன்றை அவர் சமர்ப்பித்தார்.

ஆனால் அவரது பங்களிப்புக்கள் அனைத்திற்கும் சிகரம் அமைத்தாற்போல் விளங்கியது "A Criticism of Mr. Ramanathan's 'Ethnology of Moors of Ceylon' " என்ற தலைப்பிலான நூலாகும். இலங்கை முஸ்லிம்களின் வரலாறு பற்றிய ஒரு முன்னோடி ஆய்வு முயற்சியாக இது அமைகின்றது. அந் நூலை அவர் எழுதுவதற்கான வரலாற்றுப் பின்னணியை நாம் இங்கு விளங்குதல் அவசியமாகும்.

1833ம் ஆண்டு டொனமூர் ஆணைக் குழுவின் சிபார்சின் பேரில் நிறுவப்பட்ட சட்ட நிரூபண சபைக்கு அங்கத்த வர்கள் இனப் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் நியமிக்கப் பட்டனர். முஸ்லிம்களுக் கென்று தனிப்பட்ட பிரதி நிதித்துவம் வழங்கப்பட வில்லை. தமிழ் இனத்தைச் சார்ந்த அங்கத்தவர் முஸ்லிம்களைப் பிரதிநிதித் துவப்படுத்தும் நிலை இருந்தது. தமிழ் இனத்தைச் சார்ந்த அங்கத்தவர் ஏன் முஸ்லிம்களைப் பிரதிநிதித் துப்படுத்தல் வேண்டும் என்ப தற்கான காரணங்கள் ஒரு போதும் சரியான முறையில் தெளிவுபடுத்தப்படவில்லை. முஸ்லிம்களும் தமிழ் மொழி

ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ்

யைப் பேசியதால் இந்நிலை தோன்றியிருக்கலாம் என்பது இதற்கான விடையாக இருக்கலாம். 1880களில் சட்ட சபையில் சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்பட்டபோது முஸ்லிம்கள் அவர்களுக்கென்று உரிய ஒரு தனிப்பட்ட பிரதிநிதித்துவத்தை கோரினர். இந்நிலையில் 1879ல் தமிழர்களை சட்டசபையில் பிரதிநிதித்துவப்படுத்திய பொன்னம்பலம் ராமநாதன் முஸ்லிம்களின் பூர்வீகம் தென் இந்தியாவென்றும், அவர்கள் உண்மையில் இஸ்லாத்திற்கு மதம் மாறிய திராவிடர்கள்தாம் என்றும் ஒரு வாதத்தை முன்வைத்தார். இது தொடர்பான பொன்னம்பலம் ராமநாதனின் கட்டுரை ரோயல் ஆசியக் கழகத்தின் இலங்கைக் கிளையின் சஞ்சிகையில் 1888ம் ஆண்டு என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்டது.(34)

முஸ்லிம்கள் சட்ட சபையில் தங்களுக்கெனத் தனிப் பிரதிநிதித்துவத்தைக் கோரிய காலகட்டத்திலேயே முஸ்லிம்கள் திராவிட இனம் என அடையாளப்படுத்த ராமநாதன் மேற்கொண்ட இந்த முயற்சியை முஸ்லிம்கள் பிரதிநிதித்துவத்தைப் பெறுவதைத் தடுக்கும் ஒரு தந்திரோபமான முயற்சியாக முஸ்லிம்கள் நோக்கினர்.

இது தொடர்பாக ராமநாதனை மிகக் கடுமையாக விமர்சித்த ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> "ராமநாதன் சோனகர்களை தமிழ் இனத்தவர் எனக் குறிப்பிடுவதன் நோக்கமாவது, அரசாங்கம் முஸ்லிம்களுக்கென ஒரு தனிப்பட்ட அங்கத்தவர் சட்டசபையில் இடம்பெறுவதைத் தடுப்பதாகும். ஏனெனில் சட்டசபையில் ஒரு முஸ்லிமை நியமிப்பதற்கான அரசாங்கத்தின் திட்டம் வெளியானதும், சோனகர் ஒரு தனிப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்கள் அல்லவென்றும், எனவே அவர்களுக்கென தனிப்பட்ட ஒரு அங்கத்துவத்தைப் பெறுவதற்கான அவசியம் இல்லை எனவும் அரசாங்கத்திற்கு உணர்த்துவதே இதன் நோக்கமாகும்."(35)

முஸ்லிம்களின் சமூக நலனில் அக்கறை கொண்ட சமூக ஆர்வலர்கள் அரசியல் துறையில் முஸ்லிம்களை தமிழ் இனத்தோடு

இணைக்கும் இந்த முயற்சியை ஆதரிக்கவில்லை. எனவே, ராமநாதனின் கருத்துக்கள் பலத்த விமர்சனத்துக்கு ஆளாகின. ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் ராமநாதனின் கருத்துக்கள் பற்றிய ஏலவே குறிப்பிடப்பட்ட விமர்சன நூலை 1889ம் ஆண்டு வெளியிட்டார். முஸ்லிம்கள் தமிழ் மொழியைப் பேசுவதையும், அவர்கள் உடல் தோற்றத்தில் தமிழர்களை ஒத்திருப்பதையும், முஸ்லிம்களில் தமிழ் கலாசாரச் செல்வாக்குக் காணப்படுவதையும் அடிப்படையாக வைத்து முஸ்லிம்கள் இனத்தால் திராவிடர்கள் என நிறுவுவதற்கு ராமநாதன் முற்பட்டார். ஆனால் அப்துல் அஸீஸ் ராமநாதனின் இவ் வாதத்தை வரலாற்று ரீதியாகவும், தர்க்கரீதியாகவும் மறுத்துரைத்தார். முஸ்லிம்களின் கலாசாரத்தில் தமிழ் கலாசாரப் பண்புகள் காணப்படுவதை அவர் மறுக்கவில்லை. இது இரு இனங்கள் இரண்டறக் கலந்து உறவாடும்போது ஏற்படும் கலாசார, பண்பாட்டுச் செல்வாக்காகும். இதனை அடிப்படையாக வைத்து ஒரு சமூகத்தின் இனத்துவத் தன்மையை தீர்மானித்தல் முடியாது என அப்துல் அஸீஸ் குறிப்பிட்டார். அரபு வணிகர்கள் இந்து சமுத்திரப் பிரதேசத்தில் வணிகத்தில் ஈடுபட்டபோது, இந்து சமுத்திர வணிக மொழியாக தமிழ் விளங்கியது. எனவே, அவர்கள் தங்கள் வசதி கருதி தமிழ் மொழியைப் பயன்படுத்தினர். ஆனால் அரபுமொழி முஸ்லிம்களின் சன்மார்க்கக் கல்வியில் முக்கிய இடம்பெற்றது. முஸ்லிம்கள் உடல் தோற்றத்தில் தமிழர்களை ஒத்துள்ளனர் என்பதே ராமநாதன் தனது கருத்தை நிறுவப் பயன்படுத்திய முக்கிய வாதமாக அமைந்தது. ஆரம்பகால அரபு வணிகர்கள் தென்னிந்தியாவில் குடியேறியதும் தமிழ்ப் பெண்களைத் திருமணமுடித்தனர் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் இதனை அடிப்படையாக வைத்து முஸ்லிம் குடியேற்றங்களின் தொன்மை அராபி வணிகர்களிலிருந்து ஆரம்பமாகியது என்பதை எந்த வகையிலும் பொய்ப்படுத்தல் முடியாது. இவ்வாறு தனது வாதத்தை முன்வைத்த அப்துல் அஸீஸ் இலங்கை முஸ்லிம்கள் அரபு வணிகர்களின் வழித்தோன்றல்கள் என்பதையும், எனவே அவர்கள் பூர்வீக இனத்தால் அராபியர் என்பதையும் நிறுவினார்.

ராமநாதனின் கருத்துக்களைத் தொடர்ந்து நிகழ்ந்த வாதங்கள் முஸ்லிம்களில் தங்களது இனத்தின் தனித்துவம் பற்றிய

உணர்வைத் தூண்டியதுடன், தங்களது அரபுப் பூர்வீகத்தை உறுதிப்படுத்தி, வலுவூட்டுவதற்காக இஸ்லாமிய உலகுடன் தங்களது தொடர்பை புதுப்பித்துக்கொள்ள அவர்கள் இப்போது முனைந்தனர். இலங்கை முஸ்லிம்கள், உலகில் வாழ்ந்த ஏனைய முஸ்லிம்களைப் போன்று துருக்கியின் சுல்தானை, இஸ்லாத்தின் கிலாபத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவராகவும், இஸ்லாத்தின் சங்கேதமாகவும் நோக்கினர். இலங்கை முஸ்லிம்களில் இவ்வாறு துருக்கியுடன் தங்களை இனங்கண்டதானது பல்வேறு வழிகளில் பிரதிபலிக்க ஆரம்பித்தது. துருக்கி சுல்தான் பதவியேற்பு தங்க விழா 1900ம் ஆண்டு இலங்கை முஸ்லிம்களால் மிக விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. டமஸ்கஸ், மதீனா புகையிரதப் பாதைக்காக இலங்கை முஸ்லிம்கள் நிதி திரட்டினர். போல்கன் போரில் பங்குபற்றும் போராளிகளுக்காக சிவப்பு பிறை நிதியம் (Red Crescent Fund) தோற்றுவிக்கப்பட்டது. மஸிடோனியாவில் ஸேர். எட்வர்ட் கிரே முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொண்ட வன்முறைகள் கண்டிக்கப்பட்டன. இத்தாலியர்களுக்கு எதிராகப் போராடிய துருக்கியர்களுக்கு ஆதரவாக இலங்கை முஸ்லிம்கள் குரல் எழுப்பினர். இலங்கை முஸ்லிம்களின் இந்த ஆதரவின் நன்றியாக துருக்கி இலங்கையில் ஒரு கன்ஸியூலர் அமைப்பை நிறுவியது. இப் பதவிக்கு இலங்கையின் பிரபல்யம் மிக்க முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டனர்.(36)

1905ல் நடைபெற்ற துருக்கித் தொப்பி தொடர்பான விவகாரம் இலங்கை முஸ்லிம்கள், தங்களது தனித்துவத்தை அடையாளப்படுத்தப் போராடிய இன்னொரு முக்கிய நிகழ்வாக அமைந்தது.

இலங்கை முஸ்லிம் சமூகத்தின் முதல் பட்டதாரியும், முதல் வழக்கறிஞருமான எம்.ஸி. அப்துல் காதர் நீதிமன்றத்தில் துருக்கித் தொப்பி அணிந்து தோன்றியபோது பிரதம நீதியரசர் ஸேர். சார்ல்ஸ் லேயரிட் அவரை துருக்கித் தொப்பியைக் கழற்றும்படி கூற அவர் அவ்வாறு செய்ய மறுத்து நீதிமன்றத்திலிருந்து வெளியேறினார். இச் செயலானது ஒரு தனி மனிதரோடு மட்டும் தொடர்புடைய தனிப்பட்ட விவகாரமல்லவென்றும் முஸ்லிம்களின் மதத்துடனும், பண்பாட்டுடனும் தொடர்புடையதென்றும் முஸ்லிம் பிரமுகர்கள்

உணர்ந்தனர். முஸ்லிம் பிரமுகர்கள் தூதுக்குழுவொன்று பிரதம நீதியரசரைச் சந்தித்தது. ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் பிரதம நீதியரசருக்கு பிரச்சினை தொடர்பான முஸ்லிம்களின் நிலையை விளக்கினார். அப்துல் காதர் இது தொடர்பாக ஒரு முறைப்பாட்டை சமர்ப்பித்தல் வேண்டுமென பிரதம நீதியரசர் வேண்டிக்கொண்டதற்கிணங்க, அவரது விளக்கம் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் உயர் நீதிமன்றம் அதன் முடிவில் எத்தகைய மாற்றத்தையும் செய்ய மறுத்தது. அப்துல் காதரின் அறிக்கையைப் பரிசீலனை செய்த நீதிமன்றம் அவர் செப்டம்பர் 19ம் திகதிக்குப் பின்னர் துருக்கித் தொப்பி அணிந்து வருதல் கூடாது எனக் குறிப்பிட்டது.

இதன் விளைவாக துருக்கித் தொப்பி விவகாரம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக் குழு 27 ஒக்டோபர் 1905ம் ஆண்டு கூடியபோது, ஒரு பொதுக் கூட்டத்தை நடாத்துவதற்கும் நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்யும்படி பிரித்தானிய அரசர் எட்டாம் எட்வட் மன்னனுக்கு வேண்டுகொள் விடுக்கவும் அக்கூட்டத்தில் பிரேரணை நிறைவேற்றப்படல் வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. பின்வருவோர் இதனை ஏற்பாடு செய்ய நியமிக்கப்பட்டனர்:

டபிள்யூ.எம். அப்துர் ரஹ்மான்
ஸேர். முஹம்மத் மாகான் மாக்கார்
எம்.என்.எம். ஸெய்னுதீன்
எம்.ஐ. முஹம்மது
எஸ்.எல்.எம் முஹம்மத்
ஐ.எல்.எம். நூர்தீன்
கரீம் ஜபர்ஜீ
எஸ்.எல். நெய்னா மரிக்கார்
இப்ராஹிம் இப்னு அஹ்மத்
என்.பி.எச். அப்துல் கபூர்
ஐ.எல்.எம். மீரா லெப்பே மரிக்கார்
பி.பி. உம்பிச்சி

இக் குழுவின் செயலாளராக ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் தெரிவு செய்யப்பட்டார். கொழும்பில் நடைபெறவுள்ள முஸ்லிம்களின் பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்துவதற்கு பம்பாய் நீதிமன்றத்தில் புகழ்பெற்ற வழக்கறிஞரான பரிஸ்டர் ரபிஉத்தீனை அழைப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. பம்பாய் நீதிமன்றத்தில் அவரது வாதத்திறமை காரணமாக "பம்பாய் நீதிமன்றத்தின் சிங்கம்" என அவர் புகழப்பட்டார். அனைத்தையும் விட அவர் பிரிவிக் கவுன்ஸில் வழக்குகளில் தோன்றும்போது துருக்கித் தொப்பி அணிந்து செல்வது வழக்கமாகக் காணப்பட்டது. துருக்கித் தொப்பிப் பிரச்சினை பற்றி நாடளாவிய ரீதியில் முஸ்லிம்களுக்குத் தெரியப்படுத்தி அவர்களது ஆதரவைத் திரட்டுவதற்காக நாடு முழுவதும் முப்பது பொதுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. அக்கூட்டங்களின்போது கொழும்பில் நடைபெறவுள்ள இறுதியான பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக தொண்ணூற்று ஒன்பது பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டனர். இறுதியில் பொதுக்

துருக்கித்தொப்பி விவகார நடவடிக்கைக் குழு

கூட்டம் 30ம் திகதி டிசம்பர் 1905ம் ஆண்டு கொழும்பு மருதானைப் பள்ளிவாசல் முற்றவெளியில் நடைபெற்றது. இது முஸ்லிம்களை உள்ளடக்கிய மிக வெற்றிகரமான கூட்டம் என 31, டிஸம்பர் 1905 டைம் ஒப் ஸிலோன் பத்திரிகையில் செய்தி வெளியானது. இம் மாபெரும் பொதுக் கூட்டத்தில் பிரித்தானிய அரசரை நீதிமன்றத்தின் தீர்ப்பை மாற்றியமைக்கும்படி கோரும் ஒரு பிரேரணை நிறைவேற்றப்பட்டது. ஆனால் இப்பிரேரணையை அரசருக்கு சமர்ப்பிக்க முன்னரே பிரித்தானிய ஆட்சி அதிகாரிகள் செயல்பட்டனர். 16 மார்ச் 1906ல் உயர் நீதிமன்றம் துருக்கித் தொப்பி அணிய அனுமதியளித்தது. முஸ்லிம்களின் துருக்கித் தொப்பி உரிமைப் போராட்டம் முஸ்லிம் சமூகம் அதன் தனித்துவ அடையாளத்தைப் பேணிப் பாதுகாக்க விடுத்த பலம்மிக்க குரலையும், அதன் இறுதி வெற்றியையும் மிகச் சிறப்பாகப் பிரதிபலிக்கின்றது.

1915ல் நடைபெற்ற சிங்கள - முஸ்லிம் இனக் கலவரம் இந்நாட்டின் வரலாற்றில் ஒரு துரதிஷ்டவசமான நிகழ்வாக அமைந்தது. இந்தக் கலவரத்திற்கான வரலாற்றுக் காரணங்கள் பற்றி பல்வேறு கண்ணோட்டங்களில் விளக்கப்பட்டுள்ளன. சிலர் இதனை இஸ்லாத்துக்கும்- பௌத்தத்திற்குமிடையிலான ஒரு மோதல் என விளக்க முற்படுகின்றனர். இன்னும் சிலர் சிங்கள இனத்திற்கும் முஸ்லிம்களுக்குமிடையிலான ஒரு இனக் கலவரம் என நோக்கி இதனை ஆராய்கின்றனர். ஆனால் இக் கலவரம் திடீரென வெடித்த ஒரு நிகழ்வன்று. பல்வேறு சமூக, அரசியல், பொருளாதாரக் காரணிகள் இக்கலவரத்திற்குக் காரணமாக அமைந்தன.

பிரித்தானிய ஆட்சிக்காலப்பிரிவில் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையானது இலங்கையின் பொருளாதார அமைப்பிலும், சமூக வாழ்விலும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது. விவசாயப் பொருளாதாரம் அதன் முக்கியத்துவத்தை இழந்து, மூலதனத்தை முக்கிய அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதார அமைப்பு தோன்றியது. கண்டி விவசாய மக்கள் அவர்களது விவசாய நிலங்களை இழந்தனர். தோட்டங்களை அண்டி அத்தோட்டங்களின் தேவையைப் பூர்த்தி

செய்யும் வகையில் சிறு நகரங்கள் வளர்ச்சியடைந்தன. தோட்டங்களை அண்டிய இந் நகரங்களில் சில்லறை வியாபாரம் செய்வதற்காக தென்னிந்தியரான முஸ்லிம் வியாபாரிகள் வந்தனர். இந்நாட்டில் நிரந்தரமாகக் குடியேறியிருந்த முஸ்லிம்களைப் போலன்றி இவர்கள் சிங்கள மக்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளவில்லை. சிங்கள மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் தன்மையும் காணப்படவில்லை. தென்னிந்திய வியாபாரிகள் சிங்கள மக்களுக்கு அதிக விலைக்குப் பொருட்களை விற்று அதிக லாபம் சம்பாதிப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. வியாபாரத்தோடு வட்டிக்குக் கடன் கொடுத்தல், அடகு வைத்தல் போன்ற தொழில்களிலும் இவர்கள் ஈடுபட்டனர். தங்களது நிலங்களை இழந்து வறுமையில் வாழ்ந்த கண்டி விவசாயிகள் தென்னிந்திய வியாபாரிகளுக்குக் கடன்பட்டு சிலபோது தங்களது பொருட்களை அடகுவைத்து அதனை மீட்ட முடியாது போகும் நிலையில் இருந்தனர். இதற்கிடையில் முதலாவது உலகப் போர் மூண்டது. பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவி இயற்கையாகவே விலைவாசிகள் உயர ஆரம்பித்தன. இந்நிலையில் தென்னிந்திய வணிகர்கள் மக்களைச் சுரண்டி அதிக லாபம் சம்பாதிப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. எனவே சிங்கள மக்கள் முஸ்லிம்களை வெறுப்போடும், பகையுணர்வோடும் நோக்க ஆரம்பித்தனர்.

இலங்கையில் பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் நாட்டின் ஏற்றுமதி வணிகமும், பெரும் சில்லறை வணிகமும் இந்திய வர்த்தகர்களான போராக்கள், சிந்திகள், பார்ஸிகள் கையிலிருந்தது.

இலங்கைக் கரையோரப் பகுதியைச் சோர்ந்த சிங்கள வியாபாரிகள் இந்த முஸ்லிம் வியாபாரிகளைத் தங்களது வர்த்தகப் போட்டியாளர்களாகக் கருதினார்கள். முஸ்லிம்கள் தங்கள்ால் அவர்களுடன் போட்டிபோட முடியாத அளவு வியாபாரத்தில் மிகத் தீவிரமாக ஈடுபடுவதாகச் சிங்களப் பத்திரிகைகள் குறிப்பிட்டன. எனவே முஸ்லிம்களின் வளமான வாணிபம் சிங்களவர்களின் முஸ்லிம் எதிர்ப்பு உணர்வைத் தோற்றுவித்தது. முஸ்லிம்கள் தங்களது வியாபார முயற்சிகளுக்குப் பெரும் முட்டுக்கட்டையாக இருப்பதாக அவர்கள் கருதினர்.

தென்னிந்திய முஸ்லிம்களின் வர்த்தக ஆதிக்கத்திற்கெதிராக செயல்பட்ட சிங்கள கரைநாட்டு வணிகர்கள் இலங்கையின் பூர்வீகக் குடிகளான சோனகர்களையும், தென்னிந்தியாவிலிருந்து வந்து வியாபாரத்தில் ஈடுபட்ட "ஹம்பங்காரயா" என அழைத்த தென்னிந்திய முஸ்லிம்களையும் ஒரு பிரிவினராகவே நோக்கினர். இக்கால கட்டம் சிங்கள சமூகத்தில் பௌத்த மத உணர்வு எழுச்சிபெற்ற ஒரு காலப்பிரிவாக விளங்கியது. பௌத்த மத மறுமலர்ச்சியின் முக்கிய சக்தியாக விளங்கிய கரையோரச் சிங்களவர் பௌத்த மக்களின் உணர்ச்சிகளை முஸ்லிம்களுக்கு எதிராகத் தூண்டினர். வணிகத்தில் முஸ்லிம்களின் போட்டியாளர்களாக விளங்கிய பௌத்த வர்த்தகர்களும், அவர்கள் சார்பாகக் குரல்கொடுத்த படித்த தலைவர்களும் இதில் முன்னணியில் இருந்தனர்.(37)

முஸ்லிம்களுக்கு எதிரான இனக் கலவரம் நடைபெற்ற 1915ம் ஆண்டு இலங்கை வரலாற்றில் இன்னொரு வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது. 1815ல் கண்டி ராச்சியம் பிரித்தானியரால் வெற்றிகொள்ளப்பட்டு கண்டி சிங்கள ராச்சியம் அதன் அதிகாரத்தை இழந்த ஒரு நூற்றாண்டு பூர்த்தியாகியிருந்த இக்காலப்பிரிவில் பௌத்த மக்களின் சுய எழுச்சியும் சிங்கள மக்கள் தேசிய எழுச்சியும் மிக மும்முர நிலையில் செயல்பட்டது.

இந்த வகையில் 1915ல் வெடித்த முஸ்லிம்களுக்கெதிரான இனக் கலவரத்தை இந்தியாவில் 'பிளஸ்ஸி போரின்' (Battle of Plassy) நூற்றாண்டு 1857ம் ஆண்டு சிப்பாய்க் கலகமாகிய உண்மையையும், தூண்டுதலையும் தோற்றுவித்தலுக்கு இணையாக சில வரலாற்றாசிரியர்கள் ஒப்புநோக்குகின்றனர்.(38)

1907ம் ஆண்டு கம்பளையிலிருந்த தென்னிந்திய முஸ்லிம்கள் அம்பகமுவ வீதியில் ஒரு புதிய பள்ளிவாசலைக் கட்டினர். வஹங்கொட தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே ஒரு பௌத்த பெரஹராவை ஏற்பாடு செய்து வழமையாக பெரஹரா பயணம் செய்யும் பாதையில் இந்தப் பெரஹரா வீதிவரல் வேண்டும் எனவும், இது 1815ம் ஆண்டில் கண்டிய ஒப்பந்தம் வழங்கிய ஒரு சலுகை எனவும் ஆலோசனை தெரிவித்தார். முஸ்லிம்கள் அவர்கள் புதிதாகக் கட்டியுள்ள பள்ளிவாசலை இப்பெரஹரா கடந்து

செல்வதை ஆட்சேபித்தனர். அரசாங்க அதிபருக்கு இது பற்றி முறைப்பாடு செய்தனர். பெரஹராவின் பாதை பொலிஸின் தீர்மானத்திற்கேற்ப மாற்றியமைக்கப்பட்டது. பஸ்நாயக்க நிலமே பலமுறை இதற்கு எதிராக முறைப்பாடு செய்தார். பொலிஸார் தமது தீர்மானத்தை செயல்படுத்தினர். 1911ம் ஆண்டுக்குப் பின்னரும் இப்பிரச்சினை எழுப்பப்பட்டபோது அரசாங்க அதிபர் ஸெக்ஸ்டன் பள்ளிவாசலுக்கு முன்னரோ அல்லது வேறு வணக்கஸ்தலங்களுக்கு முன்னரோ எத்தகைய ஓசையும் எழுப்பப்படக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில் பெரஹராவுக்கு அனுமதி வழங்கினர். இத் தீர்மானம் அவர்களால் பாரம்பரியமாக அனுமதித்துவந்த ஓர் உரிமையை மீறுவதாக வெல்லங்கொட தேவாலயத்தின் பரிபாலனர்கள் கூறி இதற்கு உடன்படவில்லை. பஸ்நாயக்க நிலமே அட்டோணி ஜெனரலுக்கு எதிராக கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

1914ம் ஆண்டு ஜூன் 4ம் திகதி நீதிபதி போல் ஏ. பீரிஸ் பஸ்நாயக்க நிலமேக்கு சார்பாக தீர்ப்பு வழங்கினார். கண்டி ஒப்பந்தத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஓர் உரிமையை வெல்லங்கொட தேவாலயத்திற்கு அரசாங்க அதிபர் மறுத்துள்ளார் என அவர் குறிப்பிட்டார். 1915ம் ஆண்டு இலங்கை உயர் நீதிமன்றத்தில் இத்தீர்ப்பிற்கு எதிராக ஒருமனுத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவின் தீர்ப்பு போல் பீரிஸின் தீர்ப்புக்கு எதிராக அமைந்தது. இந்த வழக்கின் தீர்ப்பு பெரும்பான்மை சமூகத்தின் மத்தியில் பலத்த அதிருப்தியை ஏற்படுத்திற்று. முஸ்லிம்களுக்கும் ஆட்சிக்கும் எதிராக வெறுப்பும், எதிர்ப்பும் தோன்ற ஆரம்பித்தது.

1915ம் ஆண்டு மே மாதம் 29ந் திகதி வெசாக் தினத்தன்று ஏழு யானைகளைக் கொண்ட, மேளம் கொட்டுபவர்கள், கண்டி நடனமாடுபவர்கள், தீப்பந்தங்களைச் சுமப்பவர்கள் உள்ளடங்கிய பெரஹரவானது கண்டி வீதிகளை வலம்வந்தது. காஸில் வீதியில் செல்ல முற்படும்போது, வீதியின் இரு மருங்குகளிலும் முஸ்லிம்கள் கூடியிருந்ததை அவதானித்த பொலிஸ் அதிகாரி, சில அசம்பாவிதங்கள் நேருவதைத் தவிர்ப்பதற்காக வேறுபாதை வழியாகச் செல்லும்படி பணித்தார். அவ்வாறே பெரஹரா திரும்பி

வேறு பாதையில் செல்ல திரும்பிய சந்தர்ப்பத்தில் முஸ்லிம்கள் கைகொட்டி சிரித்து ஏளனம் செய்தனர். இதனால் சிங்களவர்களின் பொறுமை எல்லைமீறும் நிலையை அடைந்து பெரும் குழப்பநிலை தோன்றியது. முஸ்லிம்கள் கற்களையும், போத்தல்களையும் சிங்களவர்கள் மீது வீசினர். சிங்களவர்கள் பதிலளிக்கும் வகையில் பள்ளிவாசலுக்குள் சென்று அதன் யன்னல்களை உடைத்து நொறுக்கிச் சேதம் விளைவித்தனர்.

இந்தக் குழப்பம் மிக விரைவில் கண்டியில் பல இடங்களுக்கும் பரவியது. கெடம்பே பள்ளிவாசல் எரிக்கப்பட்டது. முஸ்லிம் கடைகள், வீடுகள் சூறையாடப்பட்டு, எரிக்கப்பட்டன. கடுகண்ணாவை, மாத்தளை, கம்பளை போன்ற இடங்களில் பௌத்த கோயில்கள் முஸ்லிம்களால் தாக்கப்படுவதாக வதந்திகள் பரப்பப்பட்டன. ரம்புக்கனை, அம்பலாங்கொடை, காலி, மாத்தறை, நீர்கொழும்பு ஆகிய இடங்கள் உட்பட பல பிரதேசங்களில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டனர். கொழும்பு நகரிலேயே முஸ்லிம்கள் மிகவும் பலத்த பாதிப்புக்கு ஆளானார்கள். ஆட்டுப்பட்டித் தெரு, புதிய சோனகத் தெரு, புதுக்கடை ஆகிய இடங்களில் முஸ்லிம் பெண்களும் குழந்தைகளும் டாம் வீதிப் பொலீஸில் தஞ்சம் புகுந்தனர். மருதானை, புறக்கோட்டை, பொறளை ஆகிய இடங்களிலும் முஸ்லிம்கள் தாக்கப்பட்டனர்.

பிரித்தானிய ஆட்சியாளர் இக்கலவரத்தை பிரித்தானிய ஆட்சிக்கு எதிரான சதியாக நோக்கினர். முதலாம் உலகப் போரில் துருக்கி பிரிட்டனுக்கு எதிராக ஜெர்மனியை ஆதரித்ததால் இதனைத் தூண்டிவிடுவதில் ஜெர்மனியினர் மிகத் தந்திரமாக செயல்பட்டிருக்கலாம் எனக் கருதினர். இலங்கை முஸ்லிம்கள் துருக்கிக்கு ஆதரவாக கிளந்தெழுவார்கள் என அஞ்சிய பிரித்தானிய ஆட்சியாளர், முஸ்லிம்களை ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்த்து, முஸ்லிம்களுக்கு உதவும் வகையில் செயல்பட்டனர். இந்தக் கலவரத்தை அடக்க அவர்கள் மிகக் கடுமையான முறைகளைக் கையாண்டனர். பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக சிங்களத் தலைவர்களை சதி, தேசத்துரோக குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி கைதுசெய்தனர். முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பொருள் நட்டம் ரூபாய் 5,427,745 என மதிப்பீடு செய்யப்

பட்டது. சட்டசபை அங்கத்தவரான ஸேர் பொன்னம்பலம் ராமநாதன் கலவரத்தில் முஸ்லிம்கள் வகித்த பங்கைக் கண்டித்தும், சிங்களத் தலைவர்களை ஆதரித்தும் பேசினார். கலவரம் சம்பந்தமாக விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க ஓர் ஆணைக்குழு நியமிக்கப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்தினார். கலகத்தை அடக்குவதற்கு பிரித்தானிய ஆட்சியாளர் கடைப்பிடித்த வன்மையான முறைகளைக் கண்டித்தார். சிங்கள சமூகத்தினர் கலவரத்தின் காரணத்தையும், அதனைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர கடைப்பிடிக்கப்பட்ட முறை பற்றியும் விசாரிக்க ஓர் ஆணைக்குழு நியமிக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தினர். சிங்களத் தலைவர்களும் தமிழ் தலைவர்களும் ஒன்றுபட்டு செயல்பட்ட இக்காலப்பிரிவில் முஸ்லிம்கள் பிரித்தானியருக்கு ஆதரவாக இருப்பதில் மிக உறுதியாக செயல்பட்டனர். அன்றைய காலகட்டத்தில் இத்தகைய ஒரு போக்கைக் கடைப்பிடிப்பதைத் தவிர, ஒரு சிறுபான்மைச் சமூகமான முஸ்லிம் சமூகத்திற்கு வேறு எந்த வழியும் இருக்கவில்லை. இந்தியாவில் முஸ்லிம் தலைவர்கள் பிரித்தானிய ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் முன்னணியில் நின்று செயல்பட்டது போன்ற நிலை இலங்கையில் ஏற்படவில்லை. இக்காலப்பிரிவில் இந்தியாவில் மிகத் தீவிரமாக செயல்பட்ட கிலாபத் இயக்கம், இலங்கை முஸ்லிம்கள் பால் அதன் செல்வாக்கைச் செலுத்தினாலும், அது முஸ்லிம் சமூகத்தில் பரவலான ஆதரவை பெறவில்லை. அல்லது இந்தியாவில் காணப்பட்டது போன்று பிரித்தானிய ஆட்சிக்கு எதிரான ஒரு நிலையையோ அது உருவாக்கவில்லை.

1915ம் ஆண்டுக் கலவரத்தின் கசப்பான அனுபவங்களின் பின்னர் முஸ்லிம்கள் அச்சத்தோடும், பயத்தோடும் வாழ்ந்ததோடு பெரும்பான்மை சிங்கள மக்களின் செயல்பாடுகளை எப்பொழுதும் சந்தேகக்கண் கொண்டு பார்க்கும் மனோ நிலையிலும் செயல்பட்டனர். 1919ம் ஆண்டு இலங்கை தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டபோது, சட்டசபை அங்கத்தவர்களாக இருந்த டபிள்யூ. எம். ஏ. ரஹ்மான், எம். எச். எம். அப்துல் காதர், முஹம்மத் மாகான் மாக்கார் ஆகியோர் அதில் சேரவில்லை 1919ம் ஆண்டு இலங்கை தேசிய காங்கிரஸ் தலைவராக பொன்னம்பலம் ராமநாதனின் சகோதரரான எஸ். பொன்னம்பலம் அருணாசலம்

தேர்ந்தெடுக்கப்பட்டார். அதனை அப்போது சட்ட சபை அங்கத்தவர்களாக இருந்த டபிள்யூ. எம். அப்துர் ரஹ்மானும் முன்னைநாள் அங்கத்தவர்களான என். எம். அப்துல் காதர், ஸேர் முஹம்மத் மாகான் மாகார் ஆகியோரும் எதிர்த்தனர். இதற்கு முக்கிய காரணம் 1915ம் ஆண்டு கலவரத்தின்போது திரு. ராமநாதன் சிங்களவர்களுக்குச் சார்பாக செயல்பட்டமையாகும்.

தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டு ஓர் ஆண்டு காலப்பிரிவுக்குள் பிரதிநிதித்துவம் தொடர்பான பல பிரச்சினைகள் தோன்றின. தேசிய காங்கிரஸானது பெரும்பான்மை சிங்களவர்களின் அழுத்தம் காரணமாக பிரதேசவாரியான தேர்தல் தொகுதி முறையையும், சட்ட சபைக்கு பெரும்பான்மை அங்கத்தவர்கள் தேர்தல் முறையில் தெரிவு செய்யப்படல் வேண்டும் எனவும் வலியுறுத்தியது. சட்ட சபைக்கான தேர்வு முறையில் இத்தகைய பாரதூரமான மாற்றத்தை சிறுபான்மை இனங்கள் – தமிழர்கள், முஸ்லிம்கள் – விரும்பவில்லை. அவர்கள் இதுவரை இன அடிப்படையிலான நியமனப் பிரதிநிதித்துவம், இன அடிப்படையிலான அல்லது விசேட தொகுதிமுறையிலிருந்து தெரிவு செய்யப்படும் பிரதிநிதித்துவம் போன்ற சலுகைகளை அனுபவித்தனர். 1921ல் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்குமிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது. இதற்குக் காரணம் மேல் மாகாணத்தில் தமிழருக்கென பிரத்தியேகமான பிரதிநிதித்துவம் வழங்கப்படல் வேண்டுமென அவர்கள் விடுத்த கோரிக்கையை கைவிடுமாறு சிங்களத்தலைவர்கள் தமிழரைக் கேட்டுக் கொண்டதை அவர்கள் நிராகரித்தமையாகும் முஸ்லிம்கள் மேல்மாகாணத்தில் அவர்களுக்கென ஒரு தனிப்பட்ட முஸ்லிம் தேர்தல் தொகுதியைக் கோரி விடுத்த வேண்டுகோளும் சிங்களவர்களால் நிராகரிக்கப்பட்டது. இந்நிலையில் முஸ்லிம்களும் தமிழரும் ஒன்றாக இணைந்து தங்களது உரிமைகளுக்காகப் போராட வேண்டிய ஒரு நிர்ப்பந்த நிலை தோன்றியது.

டொனமூர் ஆணைக்குழு இலங்கைக்கு வந்த காலகட்டத்தில் முஸ்லிம்கள் மத்தியில் "சோனகர்", "மலாயர்" என்ற பிரிவினை உணர்வு காணப்பட்டது. இந்த இரு பிரிவினர்கள் மத்தியிலும் பல அமைப்புக்கள் காணப்பட்டன. டி.பி. ஜாயாவின்

தலைமையிலான 'இளைஞர் முஸ்லிம் லீக்' (Young Muslim League), என். எச். எம். அப்துல் காதரின் தலைமையிலான 'முஸ்லிம் சமூக யூனியன்' (Muslim Social Union) ஆகிய இரண்டுமே இந்த அமைப்புக்களாகும். இந்த இரண்டு அமைப்புக்களும் முஸ்லிம்களின் மத்தியில் ஒருமைப்பாட்டைத் தோற்றுவித்தல், சகோதர உணர்வை வளர்த்தல் போன்ற பரந்த நோக்கத்துடன் செயல்பட்டன. முஸ்லிம் சமூக யூனியனில் பெரும்பான்மையோர் சோனகர்களாகவும், இளைஞர் முஸ்லிம் லீகில் பெரும்பான்மையோர் மலாயர்களாகவும் இருந்தனர். டொனமூர் தூதுக்குழு இலங்கைக்கு வந்த காலப்பிரிவில் சோனகர் (Moors), மலாயர் ஆகிய இரு பதங்களும் இலங்கை முஸ்லிம் சமூகத்தில் இரு இனக்குழுக்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டன. இலங்கைச் சோனகர்கள் வியாபாரத்திலும் விவசாயத்திலும் ஈடுபட்டிருந்தனர். மலாயர்கள் பொலிஸ் உத்தியோகத்திலும் அரசாங்க எழுதுவினைஞர் சேவையிலும் பணிபுரிந்தனர். இலங்கை சோனகர், ஆரம்பகால அரபு வணிகர்களின் வழித்தோன்றல்கள் என தங்களைக் கருதினர். மலாயர் அவர்களது பூர்வீக தாயகமாக ஜாவாவைக் கருதினர்.

கொழும்பு மருதானைப் பள்ளிவாசலின் பரிபாலகர்களாக சோனகர்கள் மட்டுமே அருகதையுடையோர் என்ற விதி உருவாக்கப்பட்டு, மலாயர்கள் புறக்கணிக்கப்பட்டதானது, மலாயர்கள் மத்தியில் அவர்கள் சோனகர்களால் அந்நியப்படுத்தப் படுவதாக உணரும் சூழ்நிலையை உருவாக்கியது. இந்நிலையில் மலாயர்கள் அவர்களுக்கே உரிய அரசியல் அமைப்புக்களை தோற்றுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். ஜனாப் ஜே.ஏ. குட்டிலான் என்பாரின் தலைமையில் மலாய் அரசியல் சங்கம் (Malay Political Association), ஜனாப் எம்.ஏ. மஜீதின் தலைமையில் கண்டி மலாய் சங்கம் என்பன தோற்றுவிக்கப்பட்டன. இந்த இரண்டு அமைப்புக்களும் மலாயரின் தனித்துவத்தை வலியுறுத்தின. பொதுவான முஸ்லிம் பிரதிநிதித்துவத்துக்குப் பதிலாக சோனர்கள், மலாயர்கள் ஆகிய இரு பிரிவினருக்கும் தனிப்பட்ட பிரதிநிதித்துவம் வழங்கப்படல் வேண்டும் என சோனகர்களும் மலாயர்களும் கோல்புரூக் ஆணைக்குழுவினரிடம் வேண்டுகோள் விடுத்தனர். ஆனால், மலாய் சமூகத்தைச் சேர்ந்த டி.பி. ஜாயா இதனை எதிர்த்து சோனகர், மலாயர் ஆகிய இனங்களுக்குத் தனிப்பட்ட

பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதற்குப் பதிலாக முஸ்லிம்களுக்குப் பொதுவான பிரதிநிதித்துவம் வழங்கப்படல் வேண்டும் எனக் கூறியதோடு, மலாய் சமூகத்தின் குறுகிய கண்ணோட்டத்தையும் கண்டித்தார்.

கோல்புரூக் ஆணைக்குழுவின் வருகைக்கு முன்னர் இலங்கை சோனகர் மத்தியிலும் பல அமைப்புக்களும் சங்கங்களும் தோற்றமெடுத்தன. சோனக அரசியல் சங்கம் (Moors Political Association), மட்டக்களப்பு முஸ்லிம் சங்கம், காலி முஸ்லிம் சங்கம் (Galle Muslim Association) ஆகியன சில உதாரணங்களாகும். டொனமூர் ஆணைக்குழுவின் முன்னர் சாட்சியமளித்த மலாயர்கள், சோனகர்களை பகிரங்கமாக விமர்சித்தனர்.

முஸ்லிம்கள் மத்தியில் காணப்படும் இத்தகைய வேற்றுமைகளை உணர்ந்த கோல்புரூக் ஆணைக்குழுவினர் முஸ்லிம்கள் ஏனைய சமூகங்களோடு இணைந்து செயல்படல் வேண்டும் என்ற முடிவுக்கு வந்ததோடு, முஸ்லிம்களுக்கு இனவாரியான பிரதிநிதித்துவம் நீக்கப்படல் வேண்டும் என்றும், அவர்கள் பொதுவான தேர்தல் தொகுதி அமைப்பில் இணைதல் வேண்டும் எனவும் கூறினர்.

1928ல் வெளியிடப்பட்ட டொனமூர் ஆணைக்குழு அறிக்கையானது இனவாரியான பிரதிநிதித்துவம் நீக்கப்படல் வேண்டும் என விதந்துரைத்ததுடன், சர்வஜன வாக்குரிமையின் அடிப்படையில் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படல் வேண்டும் எனவும் குறிப்பிட்டது.

முஸ்லிம்கள் டொனமூர் ஆணைக்குழுவின் இச்சிபார்சுகளை எதிர்த்ததுடன் நாட்டின் பல பாகங்களிலும் அதற்கு எதிராகக் கண்டனக் கூட்டங்களை நடாத்தினர். சர்வஜன வாக்குரிமை முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பாதிக்கும் என அவர்கள் அஞ்சினர். டொனமூர் விதந்துரைகளின் அடிப்படையில் அமையப் போகும் அரசியல் யாப்பானது இலங்கை நாட்டுக்கு கணிசமான அரசியல் அதிகாரத்தை வழங்கினாலும் சிறுபான்மையோரின் நல உரிமைகளைப் பேணும் வகையில், அவர்களுக்கான போதிய பாதுகாப்பு அதில் காணப்படவில்லை என

அவர்கள் கருதினர். இனரீதியான தேர்தல் தொகுதி முறையை டொனமூர் ஆணைக்குழு நீக்குவதற்கு விதந்துரைத்தமையானது சிறுபான்மை சமூகங்களின் பலத்த கண்டனத்திற்கு ஆளாகியது.

1929ம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்பு சட்ட சபையில் விவாதிக்கப்பட்டபோது முஸ்லிம் பிரதிநிதிகள் உட்பட, சிறுபான்மைச் சமூகத்தைச் சார்ந்த பிரதிநிதிகள் அனைவரும் அதனை எதிர்த்து வாக்களித்தனர். ஸேர் பொன்னம்பலம் ராமநாதன் இங்கிலாந்துக்குச் சென்ற டொனமூர் விதந்துரைகளை நிராகரிக்கும்படி குடியேற்ற நாட்டு அலுவலகத்திற்கு வேண்டுகோள் விடுத்தார். 1930ம் ஆண்டு ஜூலை மாதம் 27ல், டி.பி. ஜாயா "முஸ்லிம்களும் இலங்கையில் உத்தேச யாப்பு மாற்றங்களும்" (Muslims and the proposed constitutional changes in Ceylon) என்ற தலைப்பில் ஒரு மகஜரை குடியேற்ற இலாக்காவுக்கு அனுப்பிவைத் தார். சட்டசபையில் முஸ்லிம்களின் பிரதி நிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் முஸ்லிம்களுக்காக உரிய தனிப்பட்ட தேர்தல் தொகுதிகள் அமைக்கப்படல் வேண்டும் எனக் குறிப்பிட்டார். ஆனால் இம்முயற்சிகள் பயனளிக்கவில்லை. டொனமூர் ஆணைக்குழுவினர் 65 தேர்தல் தொகுதிகளுக்குப் பதிலாக 50 தொகுதிகளை சிபார்சு செய்தனர். ஆணைக்குழு வினரின் இந்த விதந்துரைகள் தொடர்பில் முஸ்லிம்களின் அச்சமும் பயமும் நியாயமானது என்பதை அதனைத்தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வுகள் உறுதிப்படுத்தின. 1930ல் ஆணைக்குழுவின் அறிக்கை நிராகரிக்கப்பட்டபோது முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள எந்த ஒரு தேர்தல் தொகுதியும் அதில் காணப்படவில்லை. 1931ல் அரசசபைக்கு (State council) ஒரே ஒரு முஸ்லிம் அங்கத்தவராக முஹம்மத் மாக்கான் மாக்கார் மட்டக்களப்புத் தொகுதிக்கு தெரிவுசெய்யப்பட்டார். டி. பீ. ஜாயா அவரது மத்திய கொழும்பு ஆசனத்தை இழந்தார். தெரிவுசெய்யப்பட்ட மாக்கான் மாக்காரும், நியமன அங்கத்தவராக நியமனம் பெற்ற எம். கே. ஸல்டீனுமாக இரண்டு முஸ்லிம் அங்கத்தவர்களே 60 அங்கத்தவர்கள் கொண்ட அரசசபையில் இடம்பெற்றனர்.

டி. பி. ஜாயா, அரச சபையில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் தொடர்பாக, லண்டனிலுள்ள அரசாங்கச் செயலாளரை (Secretary

of state) சந்திப்பதற்காகச் சென்றார். முஸ்லிம்களது பிரச்சினை தொடர்பாக அனுதாபத்துடன் பரிசீலனை செய்யப்படும் என அவரிடம் கூறப்பட்டது. 1936ம் ஆண்டு தேர்தலில் எந்த ஒரு முஸ்லிமும் தெரிவுசெய்யப்படவில்லை. இது முஸ்லிம்களுக்கு பெரும் அதிர்ச்சியாக அமைந்தது. முஸ்லிம்கள் தங்களது பிரதிநிதித்துவம் தொடர்பாக மிக அழுத்தமாக குரல் எழுப்ப ஆரம்பித்தனர். முஸ்லிம்களின் தோல்வியை ஈடுசெய்யும் வகையில் டி. பி. ஜாயா, ஏ. ஆர். ஏ. ராஸிக் ஆகிய இருவரும் நியமன அங்கத்துவத்தைப் பெற்றார்கள். ஏ. ஆர். ஏ. ராஸிக் பிற்காலத்தில் அவருக்கு ஸேர் பட்டம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து ஸேர் ராஸிக் பரீத் எனப் பெயர் மாற்றமடைந்தார்.

இலங்கையின் அரசியல் சாசன வளர்ச்சியின் அடுத்த கட்டத்தில் அனைத்து இனங்களும் ஆர்வம் செலுத்தின. எத்தகைய ஓர் அரசியல் சாசனமும் அங்கீகாரம் பெறுவதற்கு அரசாங்க சபையின் மூன்றில் ஒரு பங்கு பெரும்பான்மை அவசியம் என 1923ம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கம் வலியுறுத்தியது. இந்த அறிவுறுத்தலுக்கேற்ப, ஓர் அரசியல் சாசனம் அங்கீகாரம் பெற 42 வாக்குகள் அவசியமாகின்றன. சிறுபான்மையோரின் ஆதரவின்றி இது எந்த வகையிலும் சாத்தியமாகாத நிலை இருந்தது. பிரிட்டிஷ் அரசாங்கம் விதித்த இந்த நிபந்தனை சிறுபான்மை இனத்தவர்களின் அபிலாசைகள் கவனத்தில் கொள்ளப்படும் என்பதை தெளிவுபடுத்தியது. இலங்கை டொமினியன் அந்தஸ்தை அடையும் அடுத்த கட்டத்தை அனைத்து இனங்களும் ஆவலுடன் எதிர்நோக்கின. 1944ல் ஆண்டளவில் அரசியல் சாசனத்தின் வரைவு பூர்த்தியாகியது. அடுத்த கட்டமாக, இங்கிலாந்துக்கு அனுப்பப்படும் ஆணைக்குழு அதனைப் பரிசீலனை செய்த பின்னர், இறுதியாக ஏற்கனவே குறிப்பிடப்பட்டவாறு சட்ட சபையின் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மையினரால் அது அங்கீகரிக்கப்படல் வேண்டும். 1944 டிஸம்பர் 22ல் இதற்காக நியமனம் பெற்ற ஆணைக்குழு ஸோல்பரி பிரபுவின் தலைமையில் இலங்கைக்கு வந்தது. ஸோல்பரி ஆணைக்குழு வரும் காலச் சூழலில் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் பல சோனக, மலாய் அமைப்புக்கள் காணப்பட்டன. தமது பிரிவினருக்கு கூடிய உரிமைகளைப் பெற்றுக்கொள்ள இவற்றிற்கிடையில் பலத்த

போட்டி நிலவியது. ஸோல்பரி ஆணைக்குழுவினர் அவர்களது விசாரணைகளை ஆரம்பித்தபோது சோனகரும், மலாயரும் அவரவர்களது இனத்துக்கென தனிப்பட்ட பிரதிநிதித்துவம் தேவை என வாதிட்டனர். ஆனால் டி. பி. ஜாயா அவர்கள் முஸ்லிம்களுக்கென பொதுவாக ஒரு தனிப்பட்ட தொகுதியை தருமாறு வேண்டினார். ஸேர். ராஸிக் பரீதும் இதனை ஆதரித்தார்.

ஸேர். ராஸிக் பரீத் தலைமையில் இயங்கிய சோனகர் சங்கம் 1945ல் சோல்பரி குழுவினருக்கு சமர்ப்பித்த அறிக்கையில் முஸ்லிம்கள் தமது தனித்துவத்தைப் பாதுகாப்பதற்காக மேற்கொண்ட முயற்சிகள் பற்றிக் குறிப்பிட்டது. மார்க்கக் கல்வியைப் புகட்டுவதற்காக காலியிலும், மஹரகமையிலும் இரு மத்ரஸாக்கள் நிறுவப்பட்டுள்ளதையும், ஸாஹிரா கல்லூரியில் அரபு மொழியையும், இஸ்லாமிய கலாசாரத்தையும் கற்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டதையும் முஸ்லிம்களின் கல்விக்காக அளுத்கமையில் ஓர் ஆசிரிய கலாசாலை நிறுவப்பட்டதையும் இதற்கு உதாரணங்களாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

சோல்பரி ஆணைக்குழு இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்தை அளித்து சுதந்திரம் வழங்க சிபார்சுசெய்தது. 1945 நவம்பர் 9ம் திகதி சோல்பரி விதந்துரைகள் ஏற்றுக்கொள்வதற்கான வாக்கு நடைபெற்றபோது அரசாங்க சபையிலிருந்த முஸ்லிம்கள் அனைவரும் அதற்கு ஆதரவு வழங்கி வாக்களித்தனர். ஸேர். ராஸிக் பரீத், டி. பி. ஜாயா ஆகிய இருவரும் அச்சந்தர்ப்பத்தில் ஆற்றிய உரைகள் மிக உணர்ச்சி பூர்வமாக அமைந்தன.

ஸேர். ராஸிக் பரீத், டி. பி. ஜாயா ஆகிய இருவரும் திரு டி. எஸ். சேனாநாயக்கவின் தலைமைத்துவத்தை ஏற்று இலங்கை சுதந்திரமடைவதற்காக அவரது திட்டத்திற்கு மனப்பூர்வமான ஆதரவை வழங்கினார்கள்.

Footnotes

1- C.R. De Silva, **The Portuguese in Sri Lanka, Colombo**,1972 , p-54

2- T.V.H Abeyasinghe " **Muslims in Sri Lanka in the Sixteenth and**

Seventeenth Centuries" in Muslim of Sri Lanka. **Op.cit**, p-132.

3- **Ibid.**

4- Lorna Dewaraja. **Op.cit**. p 62.

5- **Ibid**. p-63.

6- Abeysinghe, **Op.cit**., pp135-136

7- Lorna Daweraja, **Op.cit**. P-65.

8- **Ibid.** p- 67.

9- Dr. D.A Kotelawele " **Muslims Under Dutch Rule in Sri Lanka 1638-1796"** in Muslims of Sri Lanka. Op.cit. p- 167.

10- **Ibid**. p- 170

11- Lorna Daweraja- **Op.cit**- 67

12- **Ibid**

13- **Ibid**

14- Kotalawela, **Op.cit**, P-200

15- **Ibid**-P-202

16- **Ibid**-204

17- **Ibid**

18- **Ibid**

19- Lorna Dewaraja, p. 78

20- Ibid, p-79

21- Kotalawala, **Op.cit**- p- 143

22- H.M.Z Farook "**Islamic Law in Sri Lanka"** in Muslims of Sri Lanka. **Op.cit**. p-397

23- B.A Hussainmiya " **Princes and Soldiers – The Antecedents of The Sri Lankan Malays" in Muslims of Sri Lanka. op.cit**

24- Ibid.

25- Presentation made by Prof. Dr. Wan Mohd Nor Wan Daud at the Seminar on Sri Lanka's Islamic Heritage and Its links in South East Asia held at Kuala Lumpur, September 22. 200.

26- M.A.M Sourjah **" The Sri Lanka's Malay Heritage in Brief."** Colombo2005.

27- Lorna Dewaraja. Opct- P- 144

28- K.D.G Wimalaratne " Muslims Under British Rule in Ceylon (Sri Lanka) 1796-1948" **in Muslims of Sri Lanka**. Op.cit. P-400

29- Van Sanden " **Sonahar**" p- 140

30- Lorna Dewaraja, Op.cit- p - 140

31- Ibid- P- 145

32- K.D.G Wimalaratne, **Op.cit**. P -426

33- M.A.M Shukri – Muslims of Sri Lanka- A Cultural Perspective " in **Muslims of Sri Lanka** . Op.cit. Pp- 355-356.

34- Ramnadan , Ponnambalam " The Ethnology of Moors of Ceylon" **JCBRAS X**, 1888- Pages-234-262.

35- Abdul Azeez I.L.M ,1889 " **A Criticism of Mr. Ramanadhen's Ethnology of Moors of Ceylon**: Colombo.

36- Sameraweera, Vijaya, Arabi pasha in Ceylon 1883- 1901. **Islamic Culture**- page- 290- 297

37- Jaya Wardene, Kumary " Economic & Political Factors in 1915 Riots. **JAS- Vol- XXX**.No- February 1971.p- 227-228.

38- Lorna Dewaraja. Op.cit. P-410.

இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட அரபுச் சிலாசனங்கள் - அவற்றின் வரலாற்று முக்கியத்துவம்

இலங்கை முஸ்லிம்கள் பற்றிய வரலாற்று ஆய்வில், இலங்கையின் பல்வேறு பாகங்களில் கண்டெடுக்கப்பட்ட அரபுச் சிலாசனங்கள் மிக முக்கிய இடம் பெறுகின்றன. இலங்கை முஸ்லிம்களின் தொன்மை, பூர்வீகம், பரம்பல் சம்பந்தமாக வரலாற்று நூல்களிலும், இலங்கையை தரிசித்த அரபுப் பயணிகளின் குறிப்புக்கள் போன்ற வரலாற்று ஆவணங்களிலும் காணப்படும் வரலாற்றுச் செய்திகளை இச் சிலாசனங்கள் மேலும் உறுதிப்படுத்துகின்றன.

கி . பி . 1827ம் ஆண்டு முதல் - அதாவது கொழும்புச் சிலாசனம் எனப் பொதுவாக குறிக்கப்படும் சிலாசனம் கண்டெடுக்கப்பட்ட காலப்பிரிவைத் தொடர்ந்து ஏறக்குறைய இருபத்து நான்கு அரபுச் சிலாசனங்கள் கண்டெடுக்கப்பட்டதை இலங்கை அரும்பொருட் காட்சிசாலைப் பதிவேடு, தொல்பொருள் திணைக்களப் பதிவேடுகளில் காணப்படும் குறிப்புக்களிலிருந்து நாம் அறிய முடிகின்றது. ஆனால் இவற்றுள் மிகக் குறைந்த அளவிலான சிலாசனங்களே இன்று எமக்குக் கிடைக்கின்றன. இவற்றுள் சில இலங்கை அரும்பொருட்காட்சிசாலையின் காட்சி மண்டபத்தில் (Stone Gallery) உள்ளன. இன்னும் சில தொல்பொருள் இலாகாவில் பிரதிவடிவில் (estampages) உள்ளன. இன்னும் சில சிலாசனங்கள் பற்றிய குறிப்புகள் பதிவேடுகளில் காணப்பட்டாலும் அவற்றைத் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை.

தொல்பொருள் திணைக்களத்திலும் அரும்பொருட் காட்சிசாலையிலும் பதிவு செய்யப்பட்டுள்ள சில அரபுச் சிலாசனங்கள் அனைத்தும் உத்தியோகபூர்வமான, திட்டமிடப்பட்ட, அரச அனுசரனையில் நடைபெறும் அகழ்வாராய்ச்சி முயற்சிகளின் அடிப்படையிலன்றி, சில தனிப்பட்ட நபர்கள் தற்செயலாக் கண்டெடுத்தவையாகும். அதன் பின்னர் அவை தொல்பொருள் இலாக்காவின் அவதானத்தைப் பெற்றன. ஆனால் இலங்கையில் ஆரம்பகால அரபுவணிகச் செயல்பாடுகள் நடைபெற்ற துறைமுக நகரங்களிலும், அரபுக்குடியேற்றங்கள் காணப்பட்ட பகுதிகளிலும் திட்டமிடப்பட்ட ஒழுங்கான அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட்டால் இன்று எங்களுக்கு கிடைத்துள்ள அரபுச் சிலாசனங்களை விட அதிக எண்ணிக்கையிலான சிலாசனங்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. அதன்மூலம் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை ஆராய்வதற்கான மிகப் பயனுள்ள அரிதான தகவல்களை நாம் பெறமுடியும்.

இலங்கையில் கண்டெடுக்கப்பட்டுள்ள பிரஹ்மி, தமிழ் சிலாசனங்கள் பற்றியும், போத்துக்கேய, ஒல்லாந்தர் கால கல்லறைச் சாசனங்கள் (Tomb-inscriptions) பற்றியும் கணிசமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிராஹ்மி, சிங்கள, தமிழ் சிலாசனங் களோடு ஒப்பிடும்போது எண்ணிக்கையில் அரபுச் சிலாசனங்கள் மிகக் குறைவாகக் காணப்பட்டாலும் அவற்றின் வரலாற்றுப் பெறுமானத்தைப் பொறுத்தளவில் இலங்கையில் கண்டெடுக்கப் பட்ட ஏனைய சிலாசனங்களைவிட அவற்றைக் குறைந்த நிலையில் வைத்து நோக்குதல் முடியாது. இச் சிலாசனங்கள் இலங்கையில் அரபு வணிகக் குடியேற்றங்கள் பற்றிய தகவல்களை மட்டுமன்றி இந்து சமுத்திரத்தில் மத்திய காலப்பிரிவில் நடைபெற்ற கடல் பயணங்கள், வணிக செயல்பாடுகள் பற்றியும், இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகம், இனத்துவம் பற்றிய செய்திகளையும் தெரியப்படுத்துகின்றன.

இலங்கை அரபுச்சிலாசனங்கள் முஸ்லிம்களின் ஆரம்பக் குடியேற்றங்கள் நிகழ்ந்த அவர்களது வணிக செயல்பாடுகளின் முக்கிய மத்திய நிலையங்களாக அமைந்த கொழும்பு, மன்னார், திரிகோணமலை, காலி போன்ற கரையோரப் பகுதிகளில்

மட்டுமன்றி, உள்நாட்டுப் பகுதிகளிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. புத்தளம் - அநுராதபுரப் பாதையில் கண்டெடுக்கப்பட்ட சிலாசனம், பலாங்கொடைச் சிலாசனம், ஆதம் மலை சிலாசனம் என்பன இவ்வாறு உள்நாட்டில் கண்டெடுக்கப்பட்ட சிலாசனங்களாகும். இவை மிகப்புராதன காலத்திலிருந்தே பல்வேறு இனத்தவர்களுடன் இலங்கைக்கு இருந்த வணிக பண்பாட்டுத் தொடர்பிற்குச் சான்றாக விளங்குவது மட்டுமன்றி. இந்நாட்டு ஆட்சியாளர்களின் சகிப்புத்தன்மை, தாராளத்தன்மைக்கும், இனங்களிடையே காணப்பட்ட நல்லுறவிற்கும் சான்றாக உள்ளன.

இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட அரபு சிலாசனங்களுக்கும் பிரஹ்மி, சிங்கள, தமிழ் சிலாசனங்களுக்குமிடையில் ஓர் அடிப்படை வித்தியாசம் காணப்படுகின்றது. பிராஹ்மி, சிங்கள, தமிழ் சிலாசனங்கள் இந்நாட்டில் ஆட்சிபுரிந்த மன்னர்களின் பிரகடனங்கள், கட்டளைகள், நன்கொடைகள் பற்றிய விவரங்களைக் கொண்டுள்ளன. ஆனால் அரபுச் சிலாசனங்கள் பெரும்பாலும் அடக்கத்தலங்களில் காணப்பட்ட "மீஸான்"களில் பொறிக்கப்பட்டவையாகும். பலாங்கொடை சிலாசனம், ஆதம் மலை சிலாசனம் ஆகியவை இதற்கு விதிவிலக்காக உள்ளன.

இலங்கை அரபுச் சிலாசனங்கள் அவற்றிற்கே உரிய தனிப்பட்ட எழுத்து வடிவத்தைக் கொண்டவையாகும். அக்காலப்பகுதியில் முஸ்லிம் உலகில் வழக்கிலிருந்த செங்குத்தான கூபி எழுத்து (Angular Kufic) வடிவிலேயே இவை உள்ளன. புத்தளம்-அநுராதபுரம், புத்தளம்-குருநாகல் பாதையில் கண்டெடுக்கப்பட்ட சிலாசனங்களும், பலாங்கொடைக் குகைச் சிலாசனமும் இதற்கு விதிவிலக்காக, கூபி எழுத்து வடிவிலிருந்து வித்தியாசமான வகையில் உள்ளன.

இந்தியாவில் முஸ்லிம்களது அடக்கத்தலங்களில் காணப்பட்ட சிலாசனங்களைவிட, எண்ணிக்கையில் குறைந்த அளவிலேயே இலங்கை அரபுச் சிலாசனங்கள் உள்ளன. இதற்கு இரண்டு முக்கிய காரணிகளை நாம் குறிப்பிடலாம். இந்திய துணைக்கண்டத்தில் விளங்கியது போன்று இலங்கையில் முஸ்லிம்கள் ஆட்சியாளர்களாகவோ, அல்லது ஆதிக்கமும், சக்தியும் படைத்த ஒரு சமூகமாகவோ விளங்கவில்லை.

கி. பி. 1505ல் போர்த்துக்கேயரது வருகை முதல் கி. பி. 1796ல் பிரிட்டிஷ் காலப்பிரிவு வரை இலங்கை முஸ்லிம்கள் உறுதியும் நிலையுமற்ற, அல்லமும் பீதியும் நிறைந்த ஒரு வாழ்வை மேற்கொள்ளும் நிலை ஏற்பட்டது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தரது காலப்பிரிவில் முஸ்லிம்களின் குடியேற்றங்கள், மஸ்ஜித்கள் மிகப் பாதிப்புக்கு உள்ளாகியதால் அங்கு காணப்பட்ட சிலாசனங்கள் கூட அழிவுக்கு ஆளாகியிருக்கலாம் என நாம் அனுமானிக்க இடமுள்ளது.

இலங்கை அரபுச் சிலாசனங்களில் ஆய்வாளர்களின் கவனத்தைப் பெற்ற முதலாவது சிலாசனம் 1827ல் கண்டெடுக்கப்பட்ட கொழும்பு சிலாசனம் என கொழும்பு அரும்பொருட் காட்சிசாலையின் பதிவேட்டில் குறிக்கப்பட்டுள்ள சிலாசனமாகும். இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட இந்த முதலாவது சிலாசனம் பற்றிய வரலாற்றை பிரித்தானியர் காலத்தில் இலங்கையில் பிரதம நீதியரசராக பணிபுரிந்த ஸேர் அலெக்ஸான்டர் ஜோன்ஸ்டன் "A Cufic inscription found in Ceylon with a translation by Samuel Lee" என்ற தலைப்பில் ரோயல் ஆசிய சஞ்சிகையில் 1823ம் ஆண்டு வெளியிட்டார். (Translation of the Royal Asiatic South News Vol. 1, 1827, Pp. 537 - 548)

இந்த சிலாசனம் பற்றிய வரலாற்றுப் பின்னணியை இக்கட்டுரையில் அவர் பின்வருமாறு விளக்குகிறார்.

> "கி. பி. 10ம் நூற்றாண்டளவில் பக்தாதில் ஆட்சிபுரிந்த கலீபா, கொழும்பில் முஸ்லிம்களின் வணிகக் குடியேற்றம் ஒன்று காணப்படுவதாக கேள்வியுற்று, அவர்களுக்கு மார்க்கவிடயங்களில் அறிவூட்டுவதற்காகவும் அவர்கள் தங்களது மதக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஒரு பள்ளிவாசலைக் கட்டும்படியும் பணித்து ஒரு பக்தி சிரத்தை மிக்க மார்க்க அறிஞரை அனுப்பிவைத்தார். இவ்வாறு கலீபாவின் கட்டளையின் பேரில் கொழும்புக்கு வந்த அந்த மார்க்க அறிஞர் ஒரு பள்ளிவாசாலை நிறுவி மக்களுக்கு மார்க்க போதனைசெய்யும் பணியையும் மேற்கொண்டார். அவரது மரணத்தின் பின்னர் அப்பளளிவாசலின் அண்மையில் அவர் அடக்கம் செய்யப்பட்டார்.

அவரது அடக்கத்தலத்தில் ஒரு சிலாசனத்தை பொறிப்பதற்காக சிலரை பக்தாதிலிருந்து கலீபா அனுப்பிவைத்தார். அச்சிலாசனம் கி. பி. 948 முதல் ஒல்லாந்தர் காலம் வரை (கி. பி. 1658 -1796) ஏறக்குறைய எண்ணூறு வருடகாலம் இந்த இடத்திலேயே காணப்பட்டது. ஒல்லாந்தர் காலப்பிரிவில் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் (அதாவது அலெக்ஸான்டர் ஜோன்ஸ்டனுக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர்) ஓர் ஒல்லாந்த அதிகாரி அக்கல்லை எடுத்துச்சென்று அவரது வீட்டின் நுழைவாயலின் வாயில் படிக்கல்லாக (Stepping stone) பயன்படுத்தினார். அந்தக் கல் அந்த இடத்திலேயே காணப்பட்டது".

பிரித்தானியர் காலப்பிரிவில் பிரதம நீதியராக இலங்கையில் பணிபுரிந்த ஸேர் அலெக்ஸான்டர் ஜோன்ஸ்டன் அதில் காணப்பட்ட அரபு எழுத்துக்களை அவதானித்து, அதனை விசாரித்து இனங்கண்டு ஓர் அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு அப்போது கேம்ப்ரிஜ் பல்கலைக்கழகத்தின் அரபுப் பேராசிரியராக விளங்கிய ஸமுவெல் லீ அவர்களுக்கு அனுப்பினார். அதனை வாசித்து இனங்கண்ட பேராசிரியர் ஸமுவெல் லீ அது காலித் பின் அபூகாயா என்பவரின் அடக்கலத்தலத்தைக் குறிக்கிறது என்றும் அதில் ரஜப் 5, ஹிஜ்ரி 337 (கி. பி. 948) என்னும் திகதி காணப்பட்டதையும் அவரது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அரபு வரலாற்றாசிரியர்களுள், இலங்கை பற்றி முதலாவதாகக் குறிப்பிட்டுள்ள அத்- தபரீ (மரணம் கி.பி. 838)க்கு ஒரு நூற்றாண்டு காலம் பிந்தியதாக இச்சிலாசனத்தின் திகதி உள்ளது என்பது இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

அழகிய கூபி வடிவில் அமைந்துள்ள இந்த கொழும்பு சிலாசனம் இலங்கை முஸ்லிம்களுக்கும் அரபுலகிற்குமிடையிலான தொடர்பு வெறும் வணிகத் தொடர்பாக மட்டுமன்றி மத கலாசாரப் பண்பாட்டுத் தொடர்பாக விளங்கியதை உறுதிப்படுத்துகிறது. பக்தாதிலுள்ள கலீபாவிடம் தங்களுக்கு மார்க்க போதனை புரிவதற்கு ஒரு மார்க்க அறிஞரை அனுப்பும்படி வேண்டிக் கொள்ளும் அளவிற்கு ஒரு செல்வாக்கு மிக்க அரபுக் குடியேற்றம்

கொழும்பில் காணப்பட்டதை இது காட்டுகின்றது. இலங்கை முஸ்லிம்களுக்கும், அப்பாஸிய தலைநரான பக்தாதிற்குமிடையே மிக நெருங்கிய தொடர்பு காணப்பட்டதையும் இது குறிக்கின்றது. இந்நாட்டு முஸ்லிம்கள் பக்தாதுடன் இத்தகைய தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வதற்கு சாதகமான ஒரு சூழல் காணப்பட்டதற்கும் நாட்டின் ஆட்சியாளர்களின் சகிப்புத் தன்மைக்கும் மதசுதந்திரத்திற்கும் முஸ்லிம்களுக்கும் பெரும்பான்மை இனத்தவருக்குமிடையில் நிலவிய நல்லுறவிற்கும் இச்சிலாசனம் ஓர் அத்தாட்சியாக உள்ளது. இலங்கை முஸ்லிம்களுக்கும் பக்தாதியருக்கும் இடையில் காணப்பட்ட தொடர்பை புகழ்பெற்ற அரபு வரலாற்றாசிரியர் கதீப் அல்-பக்தாதி அவரது "தாரிக் பக்தாத்" என்னும் நூலில் குறிப்பிடும் ஒரு வரலாற்றுத் தகவல் மேலும், உறுதிப்படுத்துகின்றது. ஹிஜ்ரி 204/ கி. பி. 877ல் ஆண்டளவில் பக்தாதில் அப்துர் றஹ்மான் பின் ஹாதிம் அஸ்-ஸைலானீ என்னும் அறிஞர் இருந்ததை அவர் குறிப்பிடுகின்றார். 'ஸைலானி' என்ற பதம் இந்த அறிஞருக்கு இலங்கையுடன் இருந்த தொடர்பையே காட்டுகின்றது. ஒரு நாட்டில் நீண்ட காலம் தங்கியவரை அந்நாட்டுடன் தொடர்புபடுத்தி அழைக்கும் பாரம்பர்யம் அரபுமக்கள் மத்தியில் உள்ளது. அபூஹாதீம் இலங்கையுடன் நெருங்கிய தொடர்புடையவராக விளங்கியதை இது குறிக்கின்றது.

கி. பி. 9, ம் 10ம் நூற்றாண்டுகளில் கிழக்குலகிற்கும் மேற்குலகிற்குமிடையிலான வணிகத்தில் இலங்கையின் முக்கிய துறைமுகமாக மன்னார் மாவட்டத்தில் உள்ள மாந்தொட விளங்கியது. புராதன காலப்பிரிவில் அது "மஹாதித்த" எனவும் தற்போது "மாந்தை" எனவும் அழைக்கப்படுகிறது. இம்மாந்தைத் துறைமுகம் கி. பி. 9ம் நூற்றாண்டிற்கும் 11ம் நூற்றாண்டிற்கு மிடையில் அரபு வணிகத்தின் முக்கிய துறைமுகமாக விளங்கியது. இத்துறைமுகம் இரண்டு சர்வதேசிய வணிகப் பாதைகளின் மத்தியில் அமைந்திருந்தது. இதில் ஒரு பாதை மலபார் கரை வழியாக அரேபியா, பாரசீகம், எகிப்து ஆகிய இடங்களுக்குச் சென்றது. அடுத்த பாதை சோழமண்டலக்கரை வழியாக வங்காள விரிகுடா, மலாக்கா, ஸுமாத்ரா, ஜாவா, மொலூக்கஸ் ஊடாகச் சீனாவைச் சென்றடைந்தது. இந்த புவியியல் நிலை காரணமாக மாந்தொட

துறைமுகம் கிழக்குக்கும், மேற்கிற்குமிடையிலான வணிகப் பாதையின் முக்கிய துறைமுகமாக விளங்கியது. எனவே, மாந்தைத் துறைமுகத்தை அண்மித்ததாக கணிசமான அரபுக் குடியேற்றங்கள் காணப்பட்டிருத்தல் வேண்டும் என நாம் அனுமானிக்கலாம். மன்னார் மாவட்டத்தில் மாந்தைத் துறைமுகத்தை அண்டிய பிரதேசங்களில் திருக்கேதீஸ்வரம், புளியந்தீவு, எல்லுபிடிய ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட சில அரபுச் சிலாசனங்கள் இப்பிரதேசத்தில் அரபு வணிக குடியேற்றங்கள் பரந்து காணப்பட்டதை உறுதிப்படுத்துகின்றன. அநுராதபுரம் சிங்கள ஆட்சியின் தலைநகராக இருந்த காலப்பிரிவில் அதற்கு அடுத்தாக இருந்த மாந்தைத் துறைமுகம் மிக முக்கியத்துவம் பெற்று விளங்கியது கி. பி. 1070ல் நடைபெற்ற சோழர்களின் படையெடுப்பைத் தொடர்ந்து தலைநகர் அநுராதபுரியிலிருந்து பொலன்னறுவைக்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து மாந்தைத் துறைமுகம் பெற்றிருந்த இடத்தை திரிகோணமலைத் துறைமுகம் பெற்றது. எனவே, அரபு வணிகர்களின் முக்கிய குடியேற்றங்களுள் ஒன்றாக திரிகோணமலைத் துறைமுகம் கி. பி. 13, 14ம் நூற்றாண்டுகளில் விளங்கியது. இதனை திரிகோணமலை துறைமுகத்துக்கு அண்மையில் கண்டெடுக்கப்பட்ட அரபுச் சிலாசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. ஒரே இடத்தில் ஆனால் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இரண்டு அரபு சிலாசனங்கள் கண்டெடுக்கப்பட்டன. திரிகோணமலையில் உள்ள நிக்கல்ஸன் சிறுவளைகுடா (Nicalson coves) என்னுமிடத்தில் இச்சிலாசனங் கள் கண்டெடுக்கப்பட்ட இப்பகுதியில் கப்பல்கள் பாதுகாப்பாக நிறுத்திவைப்பதற்கான வசதியும் நந்நீரும் காணப்படுவதால் வணிகச் செயல்பாட்டுக்கு மிகப் பொருத்தமான இடமாக இது காணப்பட்டது. எனவே, உறுதியான ஓர் வணிகக் குடிறேற்றத்திற்கு பொருத்தமான அத்தனை வாய்ப்புகளையும் திரிகோணமலை துறைமுகப்பகுதி பெற்றிருந்தது.

திரிகோணமலையில் கண்டெடுக்கப்பட்ட ஒரு சிலாசனம் மிக அலங்கார வேலைப்படுகள் கொண்டது. இச்சிலாசனம் இன்றும் கொழும்பு அரும்பொருட் காட்சிசாலையில் உள்ளது. இதில் காணப்படும் குர்ஆனின் திருவனங்கள் ஸ்பானிய, அராபிய (Hispano-Arabic) எழுத்துவடிவில் உளளதாக பேராசிரியர் இமாம்

கருதுகின்றார். இச் சிலாசனம் அப்துல்லா இப்னு அப்துல் ரஹ்மான் இப்னு முஹம்மத் இப்னு யூஸுப் அல்-அலவி என்பவரின் மரணத்தைப் பதிவுசெய்துள்ளது. அவர் ஹிஜ்ரி 808 ஸபர் 19 சனிக்கிழமை மரணித்தார் என்ற குறிப்பு உள்ளது. இத்திகதி கி. பி. 1405 ஆகஸ்ட் 16க்கு இணையானதாகும்.

அதே இடத்தில் கண்டெடுக்கப்பட்ட இரண்டாவது கல்லறைச் சிலாசனம் அமீர் பத்ருத்தீன் ஹுஸைன் இப்னு அல்ஹலபீ என்பவரின் பக்தி சிரத்தைமிக்க புதல்வியின் மரணத்தை குறிக்கின்றது. அரபி நஸகி எழுத்து வடிவில் இது உள்ளது. அவர் மரணித்த திகதி ஹிஜ்ரி 17 துல்க.ஃதா 729 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது கி. பி. செப்டம்பர் 12ந் திகதி 1329க்கு இணையானதாகும்.

இலங்கை அரபுச் சிலாசனங்கள் இந்நாட்டு முஸ்லிம்களின் பூர்வீகம், இனத்துவம் பற்றிய முக்கிய செய்திகளை எமக்குப் புலப்படுத்துகின்றன. முஸ்லிம் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து அவர்கள் இங்கு வந்து குடியேறிய தன்மையும், பல்வேறு நாடுகளுடன் அவர்கள் கொண்டிருந்த தொடர்புகளும் இந்த சிலாசனங்கள் மூலம் தெளிவாகின்றன. பொதுவாக இத்தகைய சிலாசனங்களில் அடக்கஸ்தலத்திலுள்ளவர்களின் பெயர், அவரது தந்தை, பாட்டனாரின் பெயர் உட்பட குறிக்கப்படுவது மரபாகும். உதாரணமாக திரிகோணமலை சிலாசனம் அங்கு அடக்கப்பட்டிருப்பவரின் பெயர் ஹுஸைன் இப்னு அல் அல்ஹலபீ எனக் குறிப்பிடுகின்றது. இவரது குடும்பப் பாரம்பரியம் "ஹலம்" நாட்டைச் சார்ந்தது என நாம் அறியமுடிகின்றது. இது ஆங்கிலத்தில் Aleppo என அழைக்கப்படுகின்றது. ஹலப் சிரியநாட்டின் ஒரு முக்கிய நகரமாகும். இக் காலப்பிரிவில் இலங்கை வந்தடைந்த வணிகர்கள் ஆத்மஞானிகள் முஸ்லிம் உலகின் பல்வேறு பகுதிகளையும் சார்ந்தவர்களாக விளங்கியதை இது காட்டுகின்றது

கி. பி. 10ம், 11ம் நூற்றாண்டளவில் முஸ்லிம் உலகிலிருந்து பல அரபுப் பயணிகள் ஆதம் மலையைத் தரிசிக்க வருகை தந்ததை அரபுப் பயணிகள், புவியியலாளர்களின் குறிப்புக்களிலிருந்து நாம் அறிய முடிகின்றது. இது தொடர்பாக பலாங்கொடையில் உள்ள குகைச் சிலாசனம் என தொல்பொருள் இலாகா பதிவுப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இச் சிலாசனம் 1972ம் ஆண்டு

கண்டெடுக்கப்பட்டது. எழுத்துக்கள் சிதைந்து தெளிவற்றுக் காணப்படும் இச் சிலாசனத்தில் உள்ள "தர்வேஷ்" என்னும் பதம் அரபியில் துறவியைக் குறிக்கப் பயன்படும் "ஸாஹித்" என்ற பதத்திற்கு இணையானது. இது "பாரிஸி" என்னும் அரபு எழுத்து வடிவில் உள்ளது. இச் சிலாசனத்தில் காணப்படும் 718 என்ற இலக்கம் ஹிஜ்ரி ஆண்டைக் குறிப்பதாக் கொண்டால் அது கி. பி. 1339ம் ஆண்டுக்கு இணையானதாக அமையும். இதற்கு ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் 1344ல் அரபுப் பயணி இப்னு பதூதா இலங்கையை தரிசித்தார் என்பது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். இக்காலப்பகுதியில் குராஸான் பகுதியைச் சேர்ந்த ஸூபிகள், குறிப்பாக ஆதம் மலையை அண்டிய பகுதிகளில் காணப்பட்டதை இப்னு பதூதாவின் பயணக் குறிப்புகள் மூலம் அறியமுடிகிறது.

ஆதம் மலையில் 100 அடிக்குக் கீழ் காணப்படும் பகவலென என்ற மலைக்குகையில் உள்ள சிலாசனம் இது தொடர்பாக அவதானத்தில் கொள்ளப்படல் வேண்டும். இந்த மலைக்குகை சிலாசனம் நிஸங்கமல்ல மன்னன் ஆதம் மலையைத் தரிசித்ததைக் குறிப்பிடுகின்றது. இந்த சிலாசனத்தின் வலது பக்கத்தில் 'முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்' என்ற வார்த்தைகளும் 'அபுல் பஷர்' (மனித இனத்தின் தந்தை) என்ற வார்த்தைகளும் பொறிக்கப்பட்டுள்ளன. இந்த சிலாசனம் நிஸங்கமல்ல மன்னனின் காலப்பிரிவைச் (கி. பி. 1187- 1196) சேர்ந்தது என பேராசிரியர் பரண விதான கருதுகிறார்.

அபுல்பஷர் என்ற பதம் ஆதம் (அலை) அவர்களைக் குறிக்கிறது. கி. பி. 12ம் நூற்றாண்டளவில் ஆதம் மலையைத் தரிசிக்க வந்த அரபுப் பயணி ஒருவரால் இந்த வார்த்தைகள் பொறிக்கப்பட்டிருக்க லாம். கி. பி. 10ம் நூற்றாண்டு முதல் அரபுப் புவியியலாளர்கள் பயணிகளின் நூல்களில் ஆதம் மலை பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

ஆதம் மலை சிலாசனமும், பகவலென சிலாசனமும், அவற்றில் காணப்படும் பாரசீக வார்த்தைகளும், 'பார்ஸி' எழுத்துவடிவமும் இக்காலப்பிரிவில் முஸ்லிம்களின் கலாசார வாழ்வில் பாரசீக செல்வாக்கின் ஓரளவான தாக்கத்தை நாம் அவதானிக்க

முடிகின்றது. கி. பி. 13, 14ம் நூற்றாண்டுகளில் பாரசீக மொழி இந்து சமுத்திர வணிகத்தின் மிக முக்கிய மொழிகளுள் ஒன்றாக விளங்கியது. 1344ல் இலங்கையை தரிசித்த இப்னு பதூதா ஆரிய சக்கரவர்த்தியுடன் பாரசீக மொழியில் உரையாற்றியமையும், சீனத் தளபதி செங்ஹோவினால் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட மும்பொழிச் சிலாசனம் , சீனம், தமிழ், பாரசீகம் ஆகிய மூன்று மொழிகளில் அமைந்திருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

காலியில் மாகாண என்ஜினியராகப் பணிபுரிந்த எச். எம். டமோலின் என்பவரால் 1911ம் ஆண்டு காலி கிரிப்ஸ் வீதியில் The Galle Trilingual Inscription என அழைக்கப்படும் சீனம், பாரசீகம், தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் உள்ள சிலாசனம் கண்டெடுக்கப்பட்டது. இது சீனாவில் மிங் வம்சத்தினரில் ஆட்சிக் காலப்பிரிவில் 1109ம் ஆண்டு சீனாவிலிருந்து கொண்டு வரப்பட்டது.

இலங்கையில் காணப்படும் வணக்கத்தலங்களுக்கு சீன மன்னனினால் அனுப்பப்பட்ட அன்பளிப்புகள் பற்றி இச்சிலாசனம் குறிப்பிடுகிறது. இதில் காணப்படும் பாரசீக எழுத்துக்கள் சிதைந்த நிலையில் தெளிவற்று மிகச் சிரமத்துடன் இனங்காணக்கூடிய வகையில் உள்ளன.

இச்சிலாசனம் மூலம் 1173?? இலங்கை மத்திய நிலை வகித்த இந்து சமுத்திர வணிகம் நடைபெற்ற பரந்த கடல் பிரதேசம் பற்றிய பல முக்கிய தகவலகளை நாம் பெறமுடிகின்றது. இச்சிலாசனத்தில் காணப்படும் மூன்று மொழிகளும் இக்காலப்பிரிவில் பாரசீக வளைகுடாவிற்கும் சீனாவுக்குமிடையிலான வணிகத்தில் பயன்படுத்தப்பட்ட வணிக மொழிகளாக விளங்கின. இது இந்து சமுத்திரத்தில் பல இனத்தைச் சார்ந்த, பல்வேறு மதங்களைப் பின்பற்றுகின்ற, பல மொழிகளைப் பேசுகின்ற மக்கள் மிக அமைதியான முறையில், பரஸ்பர ஒத்துழைப்புடன் அமைதியாக வணிகத்தில் ஈடுபட்டதற்குச் சிறந்த சான்றாக அமைகின்றது. பாரம்பரியமாக இப்பிரதேசத்தில் பல்லின மக்களால் மேற்கொள்ளப்பட்ட இந்த வணிகமானது கி. பி. பதினாறாம் நூற்றாண்டில் ஐரோப்பியர் வருகையோடு சுகிப்புத்தன்மையற்ற, வன்முறை சார்ந்த போட்டியின் அடிப்படையில் அமைந்த வணிகமாக மாற்றமடைகின்றது.

கொழும்பு சிலாசனம்

கொழும்பு சிலாசனம் எனப் பொதுவாக அழைக்கப்படும் சிலாசனம் இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட முதல் அரபு சிலாசனமாகும். கொழும்பு முஸ்லிம் மையவாடியில் (இது எந்த மையவாடி என்பதை உறுதியாக நிறுவமுடியவில்லை) கண்டெடுக்கப்பட்ட இச்சிலாசனம் ரஜப் 5 ஹிஜ்ரி 337 (கி. பி. 949)ல் மரணித்த காலித் இப்னு அபூபகாயாவின் மறைவைப் பதிவு செய்துள்ளது. இதனைக் கண்டெடுத்த பிரித்தானியர் காலப்பிரிவில் இலங்கையில் பிரதம நீதியரசராக பணியாற்றிய ஸேர். அலெக்ஸான்டர் ஜோன்ஸ்டன் இச்சிலாசனம் பற்றி 1827ம் ஆண்டு பிரிட்டனில் உள்ள றோயல் ஆசிய கழகத்தில் "A Cufic Inscription found in Ceylon with a translation by Samuel Lee" என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரையை வாசித்தார். இச்சிலாசனம் கண்டெடுக்கப்பட்ட வரலாறு ஏலவே இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது.

அரபு சிலாசனம்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மான்
அர்- ரஹீம் லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மத்
ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்
அல்லாஹும்மக்பிர் வர்ஹம் வதஜாவஸ் அன் அப்தி
இப்னு அப்திக காலித் பின் அபூ பகாயா கத் தரக்
அத்- துன்யா வ இப்தகர இலைக வ அன்த களிய்யுன்

அன்ஹு வகத் ..... க

வ அன்த கய்ரு மன்ஸூலின் மின்ஹு அல்லாஹும்ம
ப.ஃபு ஸன்புஹு மின்ஹு
லியப்க தபர்ருஹு வஸம்மிம் வஸதஸீதுல்.....
ஹீன இஸின்..... இஜ் அல் நபிய்யலை கய்ர.....
தால்லனர் ருஷ்த தலீலதன வனப்பிஹ் பில் கவ்லிஸ் ஸாபித்
இக்தனத் ஹுஜ்ஜதுஹு வரத்தஹு ஹவ்ள

தனப்புஹின் ஆமீன் ரப்பல் ஆலமீன்
வகுதிப் யவ்முல் இஸ்னயின் லிகம்ஸின் கலன்ன மின்
ரஜப் ஸன ஸப்அ வஸலாஸீன் வ ஸலூாஸு மிஅ
வபில் காரிப யதிம்மு அபீன தீன வ..... ஸன
ஸப்அ அஷர வ ஸுலுஸீ பிஅ வஸல்லல்லாஹு அல
நபிய்யிஹி முஹம்மத் வஸல்லிம்



கொழும்பு சிலாசனம்

மொழிபெயர்ப்பு

அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் அல்லாஹ்வைத் தவிர வேறு நாயன் இல்லை. முஹம்மத் (ஸல்) அவரது தூதராவார். அல்லாஹ்வின் அருள் அவர்கள் மீது உண்டாவதாக. இறைவா உனது அடியானாகிய காலித் இப்னு அபூ பகாயாவின் பாவங்களை மன்னித்து அருள் புரிவாயாக. முற்றிலும் உன்னில் தங்கியிருந்த அவர் இந்த உலகை விட்டும் பிரிந்துவிட்டார். நீ அவருக்குப் போதுமானவன். உனது சந்நிதானம் தான் அவர் மீளுவதற்குப் பொருத்தமான இடமாகும். இறைவா! அவரது பாவங்களை மன்னிப்பாயாக. அவருக்கு நற்கூலி வழங்குவாயாக. அவருக்கு பாதுகாவல் வழங்கி அவருக்கு நற்கூலி வழங்குவாயாக. எங்களுக்கு நேரான வழியைக் காட்டியருளிய இறைதூதரை மேன்மைப்படுத்துவாயாக. உறுதியான போதனைகளால் எங்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்தார்.

இது கிழமையின் இரண்டாவது நாளில் ரஜப் 5ல் ஹிஜ்ரி 337ல் எழுதப்பட்டது. அவரது சன்மார்க்கப் பணி நடைபெற்ற பாதுகாப்பான சூழலில் ஹிஜ்ரி 317ம் ஆண்டு...

திருக்கேஸ்வரம் சிலாசனம்

மன்னார் மாவட்டத்திலுள்ள மாந்தையில் திருக்கேஸ்வரத்திலுள்ள கோயிலுக்கு அண்மையில் முதலியார் ராசநாயகத்தினால் கண்டெடுக்கப்பட்ட இச்சிலாசனம் அதனைத் தொடர்ந்து அநுராதபுரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. இச் சிலாசனம் பற்றிய விளக்கத்தை ஏ. எம். ஹோகார்ட் 1920 - 21க்கான அவரது தொல் பொருள் ஆய்வு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மிக அழகிய செங்குத்தான கூபி எழுத்துவடிவிலான (Angular Cufic) இச்சிலாசனத்தில் பின்வரும் வாசகங்கள் உள்ளன. இது கி. பி. 11ம் நூற்றாண்டைச் சார்ந்த கூபி எழுத்து வடிவமாகும்.

இச்சிலாசனத்தில் பின்வரும் வாசகங்கள் இன்று காணக்கூடிய வகையில் உள்ளன.

1. பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்
2. லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்
3. அல்லாஹும் மக்பிர்லீ அப்திக வ இப்னு
4. அமதிக மாஹ்வை பின் மர்ஸுபான் பீ கப்றிஹீ
5. அல்லாஹும்ம நஸல பிக வ ரன்த கய்ரி மன்திலின் பிஹீ அதா பகிரன் இலா ரஹ்மதிக
6. வ அன்த கனீயுன் அன் அதாபிஹீ அல்லாஹும்ம இர்ஹம்ஹு வக்பிர்ஹு

மொழிபெயர்ப்பு

1. அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் திருநாமத்தால்.
2. அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது தூதராவார்.

3. இறைவா, உனது அடிமையான மாஹ்வையின் புதல்வர் மர்ஸூபானின் பாவத்தை மன்னிப்பாயாக. அவர் உன்னிடம் உனது கருணையை ஆதரவுவைத்து வந்துள்ளார். நீ அவரைத் தண்டிப்பதை விட்டும் தேவையற்றவன். அவரை மன்னித்து அருள்புரிவாயாக.

இச்சிலாசனத்தில் இவர் உலகைவிட்டுப் பிரிந்த திகதி குறிப்பிடப்படவில்லை. அடக்கப்பட்டிருப்பவரின் பெயர் மாஹ்வையின் புதல்வர் மர்ஸூபான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அழகிய கூபி எழுத்து வடிவிலமைந்த இச்சிலாசனத்தின் படம் Ancient India (Vol. IX, 1955) ஆய்வுச் சஞ்சிகையில் உள்ளது.

எலுபிடியசிலாசனம்

மன்னார் மாவட்டத்திலுள்ள எலுபிடிய என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட சிலாசனம் பற்றிய குறிப்பு தொல்பொருள் இலாக்காவின் பதிவேட்டில் காணப்படுகின்றது. இச் சிலாசனத்தின் சில பகுதிகள் தெளிவற்றுக் காணப்படுகின்றன. மூன்று வரிகளை அடையாளம் காண முடிகின்றது.

கலப் பினத் துன்யா வதரகஹா ..... அதா பகீரன் இலைக வஅந்த நஸல..... வஅன்த.....

மொழிபெயர்ப்பு

உலகை விட்டுப் பிரிந்து அதனை விட்டுச் சென்றார். உன்னிடம் முற்றிலும் தங்கிய நிலையில் உன்னிடம் வந்தார். உன்னிடம் சேர்ந்தார்..... நீ ....

அது ஓர் அடக்கத்தலத்தில் காணப்பட்ட சிலாசனமாகும். அடக்கப்பட்டிருப்பவரின் பெயர் எழுத்துக்கள் சிதைந்த நிலையில் இனம் காணப்பட முடியவில்லை. மரபுரீதியான பிரார்த்தனை மட்டுமே தெளிவாக உள்ளது. கி. பி. 9ம், 10ம் நூற்றாண்டில் முஸ்லிம் உலகில் வழக்கிலிருந்த கூபி எழுத்து வடிவில் உள்ளது.

புளியந்தீவு சிலாசனம்

மன்னார் மாவட்டத்திலுள்ள புளியந்தீவில் கண்டெடுக்கப்பட்ட இச்சிலாசனம் தொடர்பாக அக்காலப்பிரிவில் தொல்பொருள் ஆணையாளராகப் பணிபுரிந்த எட்வர்ட் அயர்டன் (Edward E Ireton) தொல்பொருள் இலாகாவின் 1912- 13க்கு இடையிலான அறிக்கையில் (Archeological Survery 1912-13) பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> "புராதன அரபு எழுத்து வடிவில் ஒரு பெரும் கல்லில் பொறிக்கப்பட்டுள்ள இச்சிலாசனம் யாழ்ப்பாண அரசாங்க அதிபரால் எனக்கு அனுப்பிவைக்கப்பட்டது. ஆரம்பத்தில் புளியந்தீவில் செங்கற்கள், மட்பாண்டங்களைக் கொண்ட இடிபாடுகள் காணப்பட்ட இடத்தில் கண்டெடுக்கப்பட்ட இச்சிலாசனம் அதன் பின்னர் மன்னார் குடாவின் தென்பகுதியில் சிலகாலம் இருந்தது".

அயர்டன் குறிப்பிட்டுள்ள புளியத்தீவு சிலாசனம் தற்போது கொழும்பு அரும்பொருட் காட்சிசாலையில் உள்ளது.

சிலாசனம்

1. அல்ஹம்துலில்லாஹ்
2. பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர் ரஹீம்
3. லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு
4. முஹம்மதுர் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி
5. வஅலா ஆலிஹி வஸல்லம்
6. குல்லு நப்ஸின் ஸா இகதுல் மவ்த்

மொழிபெயர்ப்பு

1. எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே.
2. அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் திருநாமத்தால்.
3. அல்லாஹ்வைத் தவிர வேறு நாயன் இல்லை. அவன் ஒருவன் அவனுக்கு இணையில்லை.

புளியந்தீவு சிலாசனம்

4. முஹம்மத் (ஸல்) அவனது தூதராவர். அல்லாஹ்வின் அருள் அவர்கள் மீதும்

5. அவர்களது குடும்பத்தார் மீதும் உண்டாவதாக

6. ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தை அனுபவித்தே தீரும்.

இச் சிலாசனத்தின் சில பகுதிகளே தெளிவாக உள்ளது. "ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தை அனுபவித்தே தீரும்" என்ற குர்ஆன் 3: 184ம் திருவசனம் இதில் காணப்படுவதன் மூலம் இது ஓர் அடக்கஸ்தலத்தில் காணப்பட்ட சிலாசனம் என்பது உறுதியாகின்றது. அடக்கப்பட்டிருப்பவரின் பெயர், திகதி ஆகிய குறிப்புக்கள் சிதைந்த நிலையில் இனங்காண முடியவில்லை.

இச்சிலாசனத்தில் காணப்படும் கூபி எழுத்து வடிவை அடிப்படையாக வைத்து இது ஹிஜ்ரி 4 கி. பி. 10ம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம் என நாம் அனுமானிக்க இடமுள்ளது. இச் சிலாசனம் கொழுப்பு சிலாசனத்தின் காலப்பிரிவைச் சார்ந்தது என நாம் கருதலாம்.

அநுராதபுரம் - புத்தளம் வீதி சிலாசனம்

இச்சிலாசனம் அநுராதபுரம் - புத்தளம் பாதைக்கு சற்று உள்ளேயுள்ள காட்டுப் பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்டது. இதனை வாசித்து எழுத்துக்களை இனம் காண பேராசிரியர் எஸ். ஏ. இமாம் அவர்களுக்கு தொல்பொருள் திணைக்களம் அனுப்பிவைத்தது. இச்சிலாசனம் 9, 10ம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம் என அனுமானிக்கப்பட்டுள்ளது. இச்சிலாசனத்தின் சிறப்பம்சம் என்னவெனில் இதன் எழுத்துக்கள் வட ஆபிரிக்காவில் வழக்கிலிருந்த மக்ரிபி எழுத்து வடிவில் காணப்படுவதேயாகும். இதில் ஏழு வரிகள் உள்ளன. ஆனால் பெரும்பாலான சொற்கள் சிதைந்து தெளிவற்றுக் காணப்படுகின்றன. இவற்றுள் பின்வரும் அடிகளை மிகச் சிரமத்துடன் இனங்காண முடிகின்றது

அநுராதபுரம்-புத்தளம் வீதி சிலாசனம்

1. பிஸ்மில்லாஹிர்.....
2. ரஹ்மானிர் ரஹீம்
3. வக்பிர்ஹு.....

மொழிபெயர்ப்பு

1. அல்லாஹ்வின் திருநாமத்தால்
2. அருளாளன் அன்புடையோன்
3. அவரை மன்னிப்பாயாக.....

இலங்கையில் கண்டெடுக்கப் பட்டுள்ள அரபு சிலாசனங்களில் மக்ரிபீ எழுத்து வடிவில் காணப்படும் அரபு சிலாசனமாக இது விளங்குவது மட்டுமன்றி வட ஆபிரிக்காவுடன், குறிப்பாக மொரோக்கோவுடன் முஸ்லிம்கள் கொண்டிருந்த தொடர்பையும் இது குறிக்கின்றது.

வெட்டிய மருப்பு சிலாசனம்

தொல்பொருள் ஆய்வுப் பதிவேட்டில் வெட்டிய மருப்பு சிலாசனம் எனப் பதிவு செய்யப்பட்டுள்ள இச் சிலாசனம் வட்ட வடிவ அமைப்பில் உள்ளது. இது அடக்கத்தலத்தில் காணப்பட்ட ஒரு சிலாசனமா அல்லது வேறு ஒரு பிரிவைச் சார்ந்ததா என நிச்சயித்துக் கூற முடியவில்லை. எழுத்துக்களை இனங்காண முடியாத அளவிற்கு சிதைந்துள்ள இச்சிலாசனத்தில் "அல் - ஹம்துலில்லாஹ்" என்ற வார்த்தை தெளிவாக உள்ளது. இது கூபி எழுத்து வடிவில் உள்ளது.[1]

வெட்டிய மருப்பு சிலாசனம்

பலாங்கொடை சிலாசனம்

இச்சிலாசனம் இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொடையில் உள்ள ஒரு குகையில் உட்புறத்தில் உள்ள ஒரு கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது. இச்சிலாசனம் சிதைந்து, எழுத்துக்கள் தெளிவற்றுக் காணப்படுகின்றன. இதில் உள்ள மூன்று வரிகளில் காணப்படும் மூன்று வார்த்தைகளை மிகச் சிரமத்துடன் இனம் காணமுடிகின்றது. மூன்றாவது வார்த்தை யான 'முஹம்மத்' என்பதாகும். பக்கத்தில் 718 என்ற அரபு எண் காணப்படுகிறது.

இச்சிலாசனத்தில் இனம் காணக் கூடிய மூன்று வார்த்தைகளும் பின்வரும் அமைப்பில் உள்ளது.

1. .....தர்வேஷ்
2. ..... அத்துயைகு
3. முஹம்மத் 718

இச்சிலாசனத்தில் உள்ள அரபு எழுத்து வடிவம் "பாரிஸ்" என அழைக்கப்படும் எழுத்து வடிவில் உள்ளது. இந்த எழுத்து வடிவு கூபி எழுத்து வடிவிற்குப் பின்னர் முஸ்லிம் உலகில், பாரசீக செல்வாக்கினால் வளர்ச்சியடைந்த எழுத்துவடிவாகும். இதில் காணப்படும் மூன்று வார்த்தைகளும் இக்காலப் பகுதியில் முஸ்லிம் ஆத்மஞானிகளின் செல்வாக்குக் காணப்பட்டதை எடுத்துக் காட்டுகின்றன. தெற்கு, தெற்காசியப் பிரதேசத்தில் இஸ்லாத்தின் பரவலில் வணிகர்களைப் போன்றே, ஸூபி மெஞ்ஞானிகள் முக்கிய பங்கு வகித்துள்ளனர். பேராசிரியர் டீ. டப்லியு. ஆர்னோலட் அவரது "The Preaching of Islam" என்னும் நூலில் இது குறித்து மிக விரிவாக ஆராய்ந்துள்ளார்.

இச்சிலாசனத்தில் காணப்படும் 718 என்ற இலக்கங்கள் ஹிஜ்ரி ஆண்டைக் குறிப்பதாக நாம் கொண்டால் இது கி. பி. 1339க்கு இணையானதாகும். இதற்கு ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர், 1344ல் இலங்கையைத் தரிசித்த அரபுப் பயணி இப்னு

பதூதா இக்காலப்பிரிவில் அவர் இலங்கையில் சந்தித்த பாரசீகத்தையும், குராஸானையும் சேர்ந்த ஸூபிகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவர் ஆதம் மலைக்குச் செல்லும் வழியிலேயே இந்த ஆத்மஞானிகளைச் சந்தித்தார் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. பலாங்கொடை ஆதம் மலைக்குச் செல்லும் வழியில் அமைந்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. கி. பி. 13, 14ம் நூற்றாண்டுகளில் மத்திய ஆசிய நாடுகளிலும் குராஸான், வட இந்தியப் பிரதேசங்களிலும் வழக்கிலிருந்த "பாரிஸ்" எழுத்துவடிவில் இச் சிலாசனம் அமைந்திருப்பதும் இது தொடர்பாக கவனிக்கத்தக்கதாகும்.

ஆதம் மலை - பகவலன குகைச் சிலாசனம்

இச்சிலாசனம் ஆதம் மலையின் உச்சியிலிருந்து 100 அடிக்கு கீழால் உள்ள பகவலன குகையின் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது. இச்சிலாசனம் நிஸங்கமல்ல மன்னன் (1187 - 1196) ஆதம் மலையைத் தரிசித்ததையும் அங்குள்ள பாதச்சுவட்டின் பராமரிப்பிற்காக பல கிராமங்களை மான்யமாக வழங்கியதையும் பற்றிக் குறிப்பிடுகின்றது.

முஸ்லிம் பயணிகள் ஆதம் மலையைத் தரிசிக்கும் மரபு கி. பி. 10ம் நூற்றாண்டளவில் ஆரம்பமாகியதாக வரலாற்றுக் குறிப்புகள் எடுத்துக் காட்டுகின்றது. பேராசிரியர் எஸ். பரணவிதான God of Adam's Peak என்னும் நூலில் இது பற்றி விளக்குகிறார். கி. பி. 10ம் நூற்றாண்டைச் சார்ந்த ஸுலைமான் தாஜிர், அல் - மஸ்ஊதி போன்ற அரபுப் பயணிகள் அவர்களது பயண நூல்களில் ஆதம் மலையைத் தரிசித்தமை பற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.

பகவலன குகைச் சாசனத்தில் நிஸங்கவல்ல மன்னனின் உருவம் பொறிக்கப்பட்டுள்ள இடத்தில் காணப்படும் சிங்கள சிலாசனங்களுக்கு வலது பகுதியில் அரபுச் சிலாசனம் உள்ளது. இதில் பின்வரும் வார்த்தைகள் உள்ளன.

1. அல்லாஹும்ம ஸல்லி அலாமுஹம்மத்
2. அபுல் பஷர்

மொழிபெயர்ப்பு

1. முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது அல்லாஹ்வின் அருள் உண்டாவதாக.
2. மனித இனத்தின் தந்தை

இச்சிலாசனம் முழுமையாக இல்லாமல், சில பகுதிகளை மட்டுமே கொண்டுள்ளது. எனவே முழுச் சிலாசனத்தின் உள்ளடக்கம் பற்றி உறுதியாக எதையும் கூற முடியவில்லை. இதில்

காணப்படும் "அபுல் பஷர்" என்ற பதம் இஸ்லாமிய மரபில் முதல் மனிதரான ஆதம் (அலை) அவர்களைக் குறிக்கிறது. இச்சிலாசனத்தில் காணப்படும் எழுத்து வடிவானது இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட ஏனைய அரபுச் சிலாசனங்களில் காணப்படும் கூபி எழுத்து வடிவிலிருந்து வித்தியாசமானது. இது கி. பி. 12, 13ம் நூற்றாண்டுகளில் முஸ்லிம் உலகில் வளர்ச்சியடைந்த நஸகி எழுத்து வடிவில் உள்ளது.

ஆதம் மலை சிலாசனம்

திரிகோணமலை சிறு வளைகுடா சிலாசனம்

இச்சிலாசனம் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட சிலாசனம் கண்டெடுக்கப்பட்டுச் சில காலங்களின் பின்னர் கண்டெடுக்கப்பட்டது. 1939ம் ஆண்டு இரண்டாம் உலகப் போர்க் காலப்பிரிவில் திரிகோணமலைத் துறைமுகத்தில் நிக்கல்ஸன் சிறு வளைகுடாவில் Ontenberg Point No. 1 என்னுமிடத்திற்கும் Chappel Stall என்னுமிடத்திற்குமிடையில் கண்டெடுக்கப்பட்டது. துறைமுகப்பகுதியில் பணிபுரிந்துகொண்டிருந்த எஸ். எச். அமீர்கான் என்பவர் மரம், செடிகள் வளர்ந்து புதர்களால் மூடப்பட்டிருந்த காட்டுப்பகுதியில் தாம் விசித்திரமான எழுத்துவடிவங்களைக் கொண்ட ஒரு கல்லைக் கண்டெடுத்ததாக அப்போது இலங்கை கடற்படைத் தளபதிகளுள் ஒருவராக விளங்கிய திரு. ஸோமஸிரி தேவேந்திராவிற்கு அறிவித்தார். அதனை வாசித்து இனம் காண்பதற்காக அதன் புகைப்படப் பிரதி கெய்ரோவிலுள்ள அரும்பொருட் காட்சிசாலைக்கு அனுப்பப்பட்டது. ஆனால் அது பற்றிய எந்த ஒரு முடிவும் கிடைக்கவில்லை. அதனைக் கண்டெடுத்த அமீர்கான் கூட அதன் கதையை மறந்துவிட்டார். 1958ம் ஆண்டு பிரித்தானிய கடற்படை திரிகோணமலை தளத்தை இலங்கை அரசாங்கத்திற்கு கையளித்தது. அதன் பின்னர் அது ஆரம்பத்தில் கண்டெடுக்கப்பட்ட இடத்திலேயே பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் கண்டெடுக்கப்பட்டது. அதன் புகைப்படப் பிரதி ஒன்று இந்திய தொல்பொருள் இலாகாவின் அரபு, பாரசீக சிலாசனங்களுக்குப் பொறுப்பதிகாரியாக இருந்த கலாநிதி தேசாய் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அவர் அது பற்றி ஓர் அறிக்கை சமர்ப்பித்தார்.

இச்சிலாசனம் ஒரு காஸியின் அடக்கத்தலத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. மிக அழகிய கலாசார வேலைப்பாடுடைய எழுத்துக்களைக் கொண்ட இச்சிலாசனம் அதன் இரு மருங்கிலும், மேல் பகுதியிலும் அழகிய வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளது . சிலாசனத்தின் வலது பகுதியிலும், இடது பகுதியிலும்,

மேல்வரிசையிலும் அல்குர்ஆனின் 5 வசனங்கள் அழகிய எழுத்துவடிவில் பொறிக்கப்பட்டுள்ளன. அத்துடன், அடக்கப்பட்டிருப்பவர் பற்றிய குறிப்புக்களும் உள்ளன.

அரபு சிலாசனம்

1. துவுப்பியல் அல் காஸி அல் அஜல்லு அஷ் ஷஹீத் அபீபுத்தீன்
2. அப்துல்லாஹ் இப்னு அப்திர் ரஹ்மான் முஹம்மத் அபீயூஸுப் அல் அலவீ



சிறு வளைகுடா சிலாசனம்

3. தாரிக் யவ்மஸ் ஸப்தி தாஸி அ அவுர ஷஹ்ர ஸபர்

4. ஸித்து மிஅ ஸன ப.ஃதல் ஹிஜ்ர

மொழிபெயர்ப்பு

1. கண்ணியத்துக்குரிய காஸி, ஷஹீத் அபீபுத்தீன் மரணமானார்.

2. அப்துல்லா இப்னு அப்துர் ரஹ்மான் இப்னு முஹம்மத் அபீ யூஸுப் அல் அலவீ

3. திகதி, சனிக்கிழமை பத்தொன்பதாம் நாள் ஸபர் மாதம்

4. வருடம் ஹிஜ்ரி அறுநூறு

அடக்கப்பட்டிருப்பவரின் பெயர் பூரணமாக இனம் காணக்கூடிய வகையில் உள்ளது. ஏற்கனவே குறிப்பிடப்பட்டசில சிலாசனங்களில் அடக்கப்பட்டிருப்பவரின் பெயர், மரணித்த திகதி ஆகியன இனங்காண முடியாதவாறு சிதைந்துள்ளன. அடக்கப்பட்டிருப்பவரின் பெயர் 'காளி அபிபுத்தீன்' என குறிப்பிடப்பட்டுள்ளது. அதுவும் "அல்-அஜல்லு" - "கண்ணியத்திற்குரிய" என்ற சிறப்புப் பெயரும் அவரது பெயருடன் இணைக்கப்பட்டுள்ளது. அவர் ஒரு நீதிபதியாகப் பணிபுரிந்தார் என்பதையே 'காஸி' என்ற பதம் குறிக்கின்றது.

1505ல் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது முஸ்லிம்களிடையே தோன்றும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக கொழும்பில் ஒரு நீதிமன்றம் காணப்பட்டதாக ஸேர். அலெக்ஸான்டர் ஜோன்ஸ்டன் குறிப்பிடுகிறார். இது போன்ற ஒரு நீதிமன்றம் முக்கிய வணிகத்துறைமுகமாக கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் காணப்பட்ட திரிகோணலைத் துறைமுகத்திலும் இருந்திருக்கலாம். அங்கு முக்கிய காஸியாக - நீதிபதியாக அபிபுத்தீன் அப்துல்லாஹ் இப்னு அப்துல்லாஹ் பணிபுரிந்திருக்கலாம் என நாம் அனுமானிக்க இடமுள்ளது. இச்சிலாசனம் ஹிஜ்ரி 808/ கி.பி. 1405ம் ஆண்டைச் சார்ந்தது.

திரிகோணமலை நிகல்ஸன் சிறுவளைகுடா சிலாசனம் - 1

Nicolson Cove Inscription - Trincomale Dockyard

இச்சிலாசனம் கடற்படைத் தளபதியாக இருந்த திரு. ஸோமஸிரி தேவேந்திரவினால் திரிகோணமலை துறைமுகத்திற்கு அண்மையில் உள்ள நிக்கல்ஸன் சிறு வளைகுடா என அழைக்கப்படும் இடத்தில் கண்டெடுக்கப்பட்டது. காடுகள் அடர்ந்திருந்த ஒரு பகுதியை துப்புரவு செய்து கொண்டிருந்த



நிகல்ஸன் சிறுவளைகுடா சிலாசனம் - 1

வேலையாட்கள் சிலர் இச் சிலாசனத்தைக் கண்டு அதனை திரு. ஸோமஸிரி தேவேந்திரவின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர். அவர் இந்தியாவில் தொல்பொருள் திணைக்களத்தில் அரபு, பாரசீக சிலாசனங்களுக்குப் பொறுப்பாக இருந்த திரு. ஏ. தேசாய் அவர்களைத் தொடர்புகொண்டு இச்சிலாசனங்களில் பொறிக்கப்பட்டுள்ள அரபு வார்த்தைகளை இனங் கண்டு ஓர் அறிக்கை சமர்ப்பிக்கும்படி கேட்டார். அந்த அறிக்கையின் அடிப்படையில் அவர் ரோயல் ஆசியக் கழகத்தின் இலங்கைக் கிளையின் சஞ்சிகையில் 1970ம் ஆண்டு ஓர் ஆய்வுக் கட்டுரையை எழுதினார்.

இச் சிலாசனம் பளிங்காலான ஒரு படிக்கல்லில் மிக அழகான எழுத்துக்களில பொறிக்கப்பட்டுள்ளது. மேலிருந்து கீழாக ஏழு வரிகள் உள்ளன. ஆறு வரிகள் பூரணமாகவும் தெளிவாக வாசிக்கக்கூடிய வகையிலும் உள்ளன. ஏழாவது வரியில் சில பகுதிகள் தெளிவற்றும் சில பகுதிகள் வாசிக்கக்கூடிய வகையிலும் உள்ளன. இவ்வாறு மேலிருந்து கீழாக உள்ள ஏழு வரிகளிலும் இரு மருங்கிலும் குர்ஆனின் இரண்டாம் அத்தியாயத்தின் 255ம் திருவசனமான ஆயத்துல் குர்ஸீயின் திருவசனங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அமீர் பத்ருத்தீன் ஹுஸைன் இப்னு அலி அல் ஹலபீயின் புதல்வியான ஹுர்ரதுத் தாஹிரா என்ற பெண்ணின் அடக்கஸ்தலத்தை இது குறிக்கின்றது.

அரபுச் சிலாசனம்

1. குல்லு மன் அலைஹா பானின் வயபகா வஜ்ஹு ரப்பிக துல் ஜலாலி
2. வல் இக்ராம் ஹாதா கப்ருல் ஹுர்ரதுத் தாஹிரா
3. அல் அபீபா அல்-மர்ஹுமா லி அவ்லாதில் அமீர் பத்ருதீன்
4. ஹுஸைன் இப்னு அலீ அல் ஹலபீ தகம்மதல்லர்ஹு பி மக்பிரதிஹீ
5. வ அல்கனஹு பி ஹுயூபதிஹீ ஜன்ன, துவுப்பியத்

இலாரஹ்மதில்லாஹி தஆலா

6. யவ்மல் இஸ்னய்னி ஸபீ அஷ்ர துல்க.ஃதா ஸனதிஸ் இ இஷ்ரீன்

7. (ஸப்அ/திஸ்அ) மியத மின் ஹிஜ்ரதின் நபவிய்யா அலைஹிஸ்ஸலாம்

மொழிபெயர்ப்பு

1. (பூமியாகிய) இதன் மீது இருக்கின்ற அனைத்தும் அழியக் கூடியதே. வல்லமையும் சங்கையும் உடைய உம்முடைய ரப்பின் திருமுகம் மட்டுமே நிலைத்திருக்கும்.

2. இந்த கப்ர் ஹுர்ரதுத் தாஹிரா உடையதாகும்.

3. அமீர் பத்ருத்தீனின் கற்புடைய பெண்

4. ஹுஸைன் அல்-ஹலபியின் புதல்வர் - அல்லாஹ் அவனது பாவமன்னிப்பை அருள்வானாக.

5. சுவர்க்கத்தை அவரது இருப்பிடமாக ஆக்குவானாக. அவர் உலகை விட்டு மறைந்து அல்லாஹ்வின்

6. திங்கட்கிழமை பதினேழு துல்க.ஃதா முன்னூற்று ஒன்பது

7. (ஏழு) ஆண்டுகள் நபி (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்திலிருந்து.

இச் சிலாசனம் ஹிஜ்ரி 729 துல்க.ஃதா 17ம் நாள் உலகை விட்டுப் பிரிந்த பக்தி சிரத்தையும் ஒழுக்கமும் மிக்க அல்-ஹலபியின் புதல்வரான அமீர் பத்ருத்தீன் ஹுஸைனின் புதல்வியான ஹுர்ரதுத் தாஹிராவின் அடக்கத்தலத்தைக் குறிக்கிறது. இச் சிலாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஹிஜ்ரி ஆண்டு 12 செப்டெம்பர் 1329க்கு இணையானது.

இச் சிலாசனம் இலங்கைக்கு போர்த்துக்கேயர் வருகைக்கு 176 ஆண்டுகள் முற்பட்டதாகும். இக் காலப்பிரிவில் திரிகோணமலைத் துறைமுகம் மிக முக்கிய வணிகத்தலங்களுள்

ஒன்றாக விளங்கியது. எனவே, கணிசமான முஸ்லிம் குடியேற்றம் ஒன்று இங்கு காணப்பட்டிருத்தல் வேண்டும். "ஹலப்" என்னும் பதம், சிரியாவிலுள்ள அலெப்போ நாட்டோடு தொடர்புடையது. இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகம் முஸ்லிம் உலகின் பல நாடுகளுடன் தொடர்புடையது என்பதனை இது உறுதிப்படுத்துகின்றது.

இலங்கை முஸ்லிம்களின் கலாசார, பண்பாட்டுப் பாரம்பரியம்

''கலாசாரம்'', ''பண்பாடு'' என்ற சொற்பிரயோகங்கள் மிக வித்தியாசமான வரைவிலக்கணங்களைக் கொண்டுள்ளன. சிலபோது கலாசாரம், நாகரிகம் என்ற புதங்கள் ஒரே கருத்தைப் புலப்படுத்தும் வகையில் பயன்படுத்தப்படுவதும் உண்டு. பொதுவாக ஒரு சமூகத்தின் நம்பிக்கைகள், விசுவாசங்கள், அவற்றினடியாக எழுந்த பழக்கவழக்கங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள், கலை, இலக்கியம் என்பன அச் சமூகத்தின் கலாசார கூறுகளாகக் கொள்ளப்படுகின்றன. சிலர் ஒரு சமூகத்தின் கலாசாரம், பண்பாட்டின் வெளிப்பாடுகளாக கலைகளை மட்டுமே கொள்கின்றனர். இசை, நடனம் போன்ற அழகியல் கலைகளுக்கு மட்டுமே ஒரு சமூகத்தின் கலாசாரப் பண்புகளைப் பொறுத்தளவில் இவர்கள் அழுத்தம் கொடுக்கின்றனர். இவ்வாறு கலாசாரத்தை மிகக் குறுகிய கண்ணோட்டத்தில் அணுகுவோர், இலங்கை முஸ்லிம் களுக்கே உரிய இசை, நடனப் பாரம்பர்யம் காணப்படாததைக் காரணமாகக் கற்பித்து இலங்கை முஸ்லிம்களுக்கென்று ஒரு தனிப்பட்ட கலாசாரம் உண்டா என்ற வினாவைக்கூட எழுப்புகின்றனர்.

கலாசாரம், பண்பாடு பற்றி இஸ்லாத்திற்கே உரிய ஓர் கண்ணோட்டம் உள்ளது. கலாசாரம், பண்பாடு பற்றிய இஸ்லாமிய நோக்கு இந்த எமது ஆய்வுக்கு அப்பாற்பட்டது. இலங்கையில் வாழும் பல்வேறு இனத்தவர்களுக்கும் அவர்களுக்கே உரிய கலாசார பண்பாட்டுப் பாரம்பர்யம் உள்ளது. இந்த வகையில்

முஸ்லிம்களுக்கும் உரிய கலாசார, பண்பாட்டு மரபுகள் உள்ளன. ஏனெனில் தனக்கே உரிய பண்பாடு, கலாசாரத்தைக் கொண்டிராத எந்த ஓர் இனத்தையும் நாம் கற்பனை செய்தல் முடியாது. முஸ்லிம்களின் கலாசாரத்திற்கும் ஏனைய இனத்தவர்களின் கலாசாரத்திற்கும் இடையில் உள்ள முக்கிய அடிப்படை வித்தியாசம் உள்ளது. அதாவது முஸ்லிம்களது வாழ்வில் இஸ்லாம் மிக அடிப்படையான பங்கை வகிக்கின்றது. இஸ்லாம் வாழ்வை, மதம் சார்ந்தவை, உலகியல் சார்ந்தவை என வித்தியாசப்படுத்தி நோக்கவில்லை. ஒரு முஸ்லிமின் வாழ்வின் அனைத்துச் செயல்பாடுகளையும் வரையறுக்கும் 'ஷரிஆ' என்ற இஸ்லாமிய சட்டமானது ஒரு முஸ்லிமின் வாழ்வின் எல்லாச் செயற்பாடுகளுக்கும், கலை, இலக்கியம் உட்பட ஓர் ஆத்மிக பரிமாணத்தை வழங்குகின்றது. எனவே முஸ்லிம்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்களது வாழ்வியல் செயல்பாடுகளை மதத்திலிருந்து பிரித்தல் முடியாது. இந்த வகையில் இலங்கை முஸ்லிம்களின் கலாசார வாழ்விலும் மதம் மிக அடிப்படையான இடத்தை வகிக்கின்றது. இந்த பின்னணியிலே இலங்கை முஸ்லிம்களின் கலாசார, பண்பாட்டு வாழ்வு பற்றிய ஆய்வை நாம் மேற்கொள்ளுதல் வேண்டும்.

இலங்கை முஸ்லிம்களின் தோற்றமும், பரம்பலும், அரபு வணிகத்தினடியாகவே நிகழ்ந்தது. இந்த வணிகம் துறைமுக நகரங்களை மையமாக வைத்து நடைபெற்றதால், முஸ்லிம்களின் ஆரம்பக் குடியேற்றங்கள் கரையோரப் பகுதிகளில் காணப்பட்டதுடன், அவர்கள் இப்பிரதேசங்களில் பரந்து வாழ்ந்தனர். முஸ்லிம்களின் குடியேற்றங்கள் எங்கு நடைபெற்றாலும், அதில் மஸ்ஜித் ஒரு மத்திய நிலையை வகித்தல் உலகளாவிய பாரம்பர்யமாகும். மஸ்ஜிதுடன் இணைந்து குர்ஆனையும், இஸ்லாமிய அடிப்படைப் போதனைகளையும் புகட்டுகின்ற 'குத்தாப்' என்னும் குர்ஆன் பாடசாலைகள் காணப்பட்டிருக்கலாம் என நாம் அனுமானிக்க முடியும்.

ஒரு சமூகம் அல்லது நாடு அரசியல் பலமும், பொருளாதார வளமும் வளர்ச்சியும் அடைந்த காலப்பிரிவிலேயே அச் சமூகத்தில் கட்டடக்கலை, ஓவியம், போன்ற கலைகள் தோற்றம்பெற்று

வளர்ச்சியடைகின்றன. பெரும்பாலும் இக் கலைகளின் வளர்ச்சிக்கு ஆட்சியாளர்களின் உதவியும், அனுசரனையுமே காரணமாக அமைகின்றது.' இஸ்லாமிய பண்பாடு, நாகரிகத்தின் வளர்ச்சியில், பஸ்ரா, கூபா, டமஸ்கஸ், பக்தாத், குர்துபா, இஸ்பஹான், ஸமர்க்கந்த், புகாரா, ஹிரத், டில்லி, லாகூர் போன்ற நகரங்களில் அரசியல், பொருளாதார வளர்ச்சியோடு கட்டடக் கலைகள் வளர்ச்சியடைந்தன. 'ஆனால் இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் நாட்டின் ஆட்சியாளர்களாக அவர்கள் ஒருபோதும் விளங்கவில்லை. எனவே ஆட்சியாளர்களின் அனுசரனையில் வளர்ச்சியடையும் கட்டடக்கலை, ஓவியம் போன்ற கலைகள் அவர்கள் மத்தியில் வளர்ச்சியடைவதற்கான அனுகூலமான சூழல் காணப்படவில்லை.'

'இஸ்லாமிய கட்டடக்கலைப் பாரம்பர்யத்தில் மஸ்ஜித் கட்டடக்கலை மிக அடிப்படையாக உள்ளது. ஆனால் இலங்கை முஸ்லிம்களின் பள்ளிவாசல் கட்டடக் கலை பற்றி வரலாற்று ரீதியாக ஆய்வு நடத்துவதற்கான போதிய மூலாதாரங்கள் காணப்பட வில்லை. இலங்கையில் பூர்வீக அமைப்பிலான பழைய பள்ளிவாசல் என இனங்காணப்படக்கூடிய எந்த ஒரு பள்ளிவாசலும் இன்று காணப்படவில்லை. இது தவிர, இன்று காணப்படும் பள்ளிவாசல்கள் அனைத்தும் போர்த்துக்கேயர் காலத்திற்குப் பிறகு கட்டப்பட்ட பள்ளிவாசல்களாகும். பெரும்பான்மைப் பள்ளிவாசல்கள் போர்த்துக் கேயரால் அழிக்கப்பட்டதே இதற்கான காரணமாகும்.'

'இன்று காணப்படும் பள்ளிவாசல்களை அடிப்படையாக வைத்து இலங்கை முஸ்லிம்களின் பள்ளிவாசல் கட்டடக்கலைப் பண்புகள் பற்றி ஓரளவு சில அனுமானங்களுக்கு நாம் வர முடிகின்றது. பள்ளிவாசல் கட்டடக்கலையின் முக்கிய சிறப்பம்சங்களாக மிஹ்ராப், மினாரா, குப்பா போன்றன பொதுவாகக் கொள்ளப்படுகின்றன. மஸ்ஜித்களில் 'குப்பா' என்னும் கும்மட்டம் கால வளர்ச்சியில் ஒவ்வொரு நாடுகளிலும், பிரதேசங்களிலும் வெவ்வேறு காலகட்டங்களிலும் வித்தியாசமான அமைப்புக்களைப் பெற்றுள்ளது. ஆனால் இலங்கையில் காணப்படும் பள்ளிவாசல்களில் கும்மட்டம் இந்த முக்கியத்துவத்தைப் பெறவில்லை. பெரும்பாலான பள்ளிவாசல்களில் கும்மட்டங்கள்

காணப்படவில்லை. புதிதாக கட்டப்படும் பள்ளிவாசல்களில் மத்திய கிழக்கு கட்டடக்கலையின் செல்வாக்கினால் கும்மட்டங்கள் அமைக்கப்படுகின்றன. பள்ளிவாசல்கள் கட்டடக்கலையின் இன்னோர் அம்சமான மினாராவும் இலங்கைப் பள்ளிவாசல் கட்டடக்கலையில் மிக அண்மைக்காலமாகவே காணப்படுகின்றது.

இலங்கைப் பள்ளிவாசல் கட்டடக்கலையில் 'மிஹ்ராப், 'மிம்பர்' என்பன இஸ்லாமிய கட்டடக்கலை மரபைப் பின்பற்றி ஓர் அங்கமாக இடம்பெற்றுள்ளன. பாரம்பர்ய இஸ்லாமிய கட்டடக்கலையில் காணப்படும் வளைமாடங்கள், ஒரு முக்கிய கலைவடிவமாக இலங்கை மஸ்ஜித் அமைப்பில் பாரம்பர்ய கட்டடக்கலையில் காணப்படுவது போன்று அதன் பூரண அமைப்பில் காணப்படா விட்டாலும், அவை பள்ளிவாசல் கட்டடங்களில் ஒரு முக்கிய அலங்காரமாகக் காணப்படுகின்றன. இலங்கை பாரம்பர்ய மஸ்ஜித் கட்டடக்கலைக்கே பொதுவான சில பண்புகள் உள்ளன. மஸ்ஜித்கள் உட்பள்ளிவாசல், வெளிப் பள்ளிவாசல் என இரு பகுதிகளை உள்ளடக்கியிருக்கும். பள்ளிவாசல் முழுவதும் தொழுகைக்குப் பயன்படுத்தப்பட்டாலும், வெளிப் பள்ளிவாசல் கூட்டங்கள், மௌலீது ஓதல் போன்றவற்றிற்கு மட்டும் பயன்படுத்தப்படும். ஆனால் இன்று கட்டப்படும் பள்ளிவாசல்களில் இந்த அமைப்புக் காணப்படவில்லை.

இலங்கைப் பள்ளிகளின் கட்டடக் கலையில் ஒழுச் செய்வதற்கான தண்ணீரைத் தேக்கியுள்ள ஹவ்ள் மிக முக்கிய இடம் பெறுகின்றது. பாரம்பர்ய இஸ்லாமியக் கட்டடக் கலையில் காணப்படும் அரபு எழுத்துக்களிலான வேலைப்பாடு இலங்கைப் பள்ளிவாயல்களில் காணப்படவில்லை. பல வர்ண செங்கற்களால் கட்டப்படும் மரபும் இப்பள்ளிவாசல்களில் காணப்படவில்லை. இதற்கு ஒரு விதிவிலக்காகக் காணப்படுவது கொழும்பில் அமைந்துள்ள சம்மாங்கோட்டுப் பள்ளிவாசலாகும். வட இந்திய முஸ்லிம் கட்டடக் கலையில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ள சிவப்புச் செங்கற்கள் இப் பள்ளிவாசல் கட்டடக் கலையில் காணப்படுவது ஒரு சிறப்பம்சமாகும். மலேசியாவில் காணப்படும் சில மஸ்ஜித்களை இந்த வகையில் இது ஒத்துள்ளது. அண்மைக் காலப்பிரிவில் கட்டப்படும் பள்ளிவாசல்களில், மத்திய கிழக்கு செல்வாக்கினடியாக

கும்மட்டங்கள், மினராக்கள் மிகச் சிறப்பாக அமைக்கப்படுகின்றன.

இலங்கையில் பத்தொன்பதாம் நூற்றாண்டளவில் ஸூபி தரீக்காக்கள் பரவியதைத் தொடர்ந்து 'தக்கியா', 'ஸாவியா' போன்ற கட்டடங்களும், பெரியார்களின் அடக்கஸ்தலத்தைச் சுற்றி எழுப்பப்படும் 'ஸியாரங்கள்' என அழைக்கப்படும் கட்டடங்களும் தோன்ற ஆரம்பித்தன. இஸ்லாமிய கலாசாரப் பாரம்பரியத்தில் ஸூபி மகான்கள் தமது சீடர்களுக்கு ஆத்மீகப் பயிற்சி வழங்குவதற்காக அமைத்த கட்டடங்களே 'கான்கா', 'ஸாவியா', 'தக்கியா' என அழைக்கப்பட்டன.

இஸ்லாமிய உலகில் 'கான்கா', 'ஸாவியா', 'தக்கியா' என்பன அவற்றிற்கே சிறப்பாக உரிய கட்டடக்கலை மரபைக் கொண்டிருந்தன. இவை பொதுவாக அதன் மத்தியில் ஒரு திறந்த முற்றவெளியைக் கொண்டிருக்கும். அதன் இரு மருங்கிலும் தியானத்திற்கான மாடங்கள் காணப்படும். 'திக்ர்' போன்ற ஆத்மீகச் செயற்பாடுகளுக்காக ஒரு பொது மண்டபம் காணப்படும். தரீக்காவின் ஷெய்க் சாய்ந்து அமர்ந்து சீடர்களுக்கு உபதேசம் புரிவதற்கான ஒரு மத்திய இடம் இதில் காணப்படும். ஸூபிகளின் அனுஷ்டானங்களுக்கான இந்த மத்திய நிலையங்கள் மத்திய ஆசியாவிலும், இந்தியாவிலும் "கான்கா" என அழைக்கப்பட்டன. வட ஆபிரிக்காவில் ஸாவியா என்ற பதமும், ஈரான், துருக்கி போன்ற நாடுகளில் தக்கி (Tekki) அல்லது தக்கியா என்ற பெயரால் இவை குறிக்கப்படுகின்றன.(1)

இலங்கையிலும், தென் இந்தியாவிலும் 'கான்கா' என்ற பெயரால் இவை குறிக்கப்பட்டாலும் ஸாவியா, தக்கியா போன்ற சொற்களாலேயே அழைக்கப்படுகின்றன. காதிரியா, நக்ஷபந்தியா, ரிபாஇய்யா தரிக்காக்களில் 'தக்கிய்யா' என்ற பதம் பொதுவாக பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் 'ஸாவியா' என்ற பதம் ஷாதிலிய்யா தரீக்காவின் அனுஷ்டான மத்திய நிலையங்களைக் குறிக்க மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது. ஏனைய நாடுகளில் காணப்படுவது போன்று இவற்றிற்கே உரிய ஒரு கட்டட மரபு இலங்கையில் காணப்படவில்லை. ஆனால் தோற்றப்பாட்டில் ஸாவியா என்பது அதற்கே உரிய ஓர் அமைப்பை பெற்றுள்ளதை

நாம் ஓரளவு அவதானிக்கலாம்.

இலங்கை முஸ்லிம்களின் சன்மார்க்க வாழ்வில் அவர்களுக்கே உரிய மத, கலாசாரப் பண்புகள் உள்ளன. 'அகீதா' என்னும் விசுவாசக் கோட்பாட்டைப் பொறுத்தளவில் இலங்கை முஸ்லிம்கள் அனைவரும் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தைச் சார்ந்த அஷ்அரிய்யா கோட்பாட்டையே பாரம்பர்யமாகப் பின்பற்றி வருகின்றனர். ஷீஆப் பிரிவினர் காணப்படாமை ஒரு முக்கிய அம்சமாகும். சட்ட மரபைப் பொறுத்தளவில் ஷாபி மத்ஹபை அவர்கள் பின்பற்றுகின்றனர். இலங்கை முஸ்லிம்களின் கலாசார பண்பாட்டு வாழ்வில் பாரசீகப் பண்பாட்டுச் செல்வாக்கைவிட அராபிய கலாசாரச் செல்வாக்கு மிகைத்துக் காணப்படுவதையே இது குறிக்கிறது. இது தென் இந்திய முஸ்லிம்களையும், இலங்கை முஸ்லிம்களையும் வட இந்திய முஸ்லிம்களிலிருந்து வித்தியாசப்படுத்திக் காட்டும் கலாசாரப் பண்பாக விளங்குகின்றது.

இலங்கை, தென் அரேபியா (யெமன், ஹலரமௌத்), இந்தியாவின் தென்மேற்குக் கரை (மலையாளம்), தென்கிழக்குக் கரை (ம.ீபர்) ஆகிய பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்கள் அஹ்லுஸ்ஸுன்னா பிரிவைச் சார்ந்தவர்களாகவும், ஷாபி மத்ஹபைப் பின்பற்றுகின்றவர்களாகவும் உள்ளனர்.

இவ்வாறு இப்பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்கள் ஒரு பொதுவான கலாசாரப் பண்பைப் பெற்றிருப்பதற்குப் பல்வேறுபட்ட புவியியல், வரலாற்று சாதகங்கள் காரணமாக அமைகின்றன. புவியியல் ரீதியாக நோக்குமிடத்து கிழக்காபிரிக்கா, இலங்கை, இந்தியா ஆகிய பிரதேசங்கள் இந்து சமுத்திரத்தின் இரு மருங்கிலும் அமைந்துள்ளன. இது இந்நாடுகளிடையே பரஸ்பர தொடர்புகள், உறவுகள் ஏற்படக் காரணியாக அமைந்தது. இலங்கை, கிழக்காபிரிக்கா பிரதேசங்களின் நிலைத்த அரபுக் குடியேற்றங்கள் தொடர்பான ஒரு பாரம்பர்ய நம்பிக்கையும் கவனிக்கத்தக்கதாகும். உமையா கலீபா அப்துல் மலிக் பின் மர்வானின் காலப்பிரிவில் கிழக்காபிரிக்காவில் ஓர் அரபுக் குடியேற்றம் நடைபெற்ற அதே காலப்பிரிவில் பனூ ஹாஷிம் குழுவைச் சேர்ந்த அரபிகள் குழு ஒன்று இலங்கையில் வந்து குடியேறியது. இத்தகைய புவியியல் வரலாற்றுக் காரணிகள்

இப்பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்களில் ஒரு பொது கலாசாரப் பண்பினைத் தோற்றுவித்திருக்கலாம்.

தென் இந்தியா, இலங்கை, தென் கிழக்காசியா ஆகிய நாடுகளுக்கு வணிக நோக்கமாக வந்த அரபிகள் ஷாபி மத்ஹபைப் பின்பற்றுவோராகவே விளங்கினர். யெமன் பிரதேசம் கி.பி. 12ம் நூற்றாண்டில் அய்யூபிகள் ஆட்சிக்கு உட்பட்டதைத் தொடர்ந்து ஷாபிஈ சட்ட மரபு அங்கு பிரபல்யமடைந்தது.

இலங்கை முஸ்லிம்களின் கலாசார பண்பாட்டுப் பாரம்பர்யத்தில் தஸவ்வுப் என்னும் இஸ்லாமிய ஆத்மீக மரபு மிக கணிசமான செல்வாக்கை ஏற்படுத்தியது. இது இலங்கையைப் பொறுத்தவரையில் மட்டுமன்றி இந்தியா, மலேசியா, இந்தோனேஷியா போன்ற தென்கிழக்காசிய நாடுகளைப் பொறுத்தளவில் நாம் காணக்கூடிய பொதுப் பண்பாகும். காதிரிய்யா, ஷாதுலிய்யா, ரிபாஇய்யா, நக்ஷபந்திய்யா போன்ற தரீக்காக்கள் தென் இந்திய முஸ்லிம்களால் இலங்கைக்கு அறிமுகமாயின. ஷெய்க் அப்துல் காதிர் ஜீலானி (1077-1166) அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட காதிரிய்யா தரீக்கா முஹம்மத் கவ்ஸ் (1482) என்பவரால் இந்தியாவுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இதே தரீக்கா தென் இந்தியாவின் கேரளப் பிரதேசத்திலிருந்து ம.ஃபர் ((தமிழகம்) பரவியது. ஹள்ரமௌத்தைச் சார்ந்த ஷெய்க் முஹம்மத் ஜிப்ரி என்னும் ஆத்மஞானியே கேரளாவில் காதிரிய்யா தரீக்காவின் பரவலுக்கு காரணமாக விளங்கினார். கி.பி. 1159-1746ல் ஹள்ரமௌத்திலுள்ள தரீம் என்னும் இடத்திலிருந்து தென் இந்தியாவில் கள்ளிக்கோட்டையில் குடியேறினார். அவர் அரபு மொழியில் புலமை பெற்றவராகவும், பிரபல்யம் மிக்க ஸூபி மகானாகவும் விளங்கினார். இலங்கையில் பிரபல்யமடைந்த அலவிய்யதுல் காதிரிய்யா தரீக்காவின் ஸ்தாபகராக ஷெய்குல் ஜிப்ரி விளங்கினார். காயல் பட்டணத்தைச் சேர்ந்த ஷெய்க் அப்துல் காதிர் தைக்கா ஸாஹிப் ஷெய்குல் ஜிப்ரியின் சீடராக மாறியதைத் தொடர்ந்து இந்த தரீக்கா கேரளாவின் மலபார் பகுதியிலிருந்து தமிழகத்தின் ம.ஃபர் பகுதிக்குப் பரவியது.(2)

தென் இந்திய காயல்பட்டணத்தைச் சார்ந்த ஷெய்க் உமர்

தைக்கா ஸாஹிப் (1875) கீழக்கரையைச் சேர்ந்த ஷெய்க் அப்துல் காதிர் தைக்கா ஸாஹிப் 1850, மாப்பிள்ளை ஆலிம் எனப் பொதுவாக அழைக்கப்படும் ஸெய்யது முஹம்மத் இப்னு அஹ்மத் லெப்பை ஆகியோர்களால் இலங்கையில் காதிரிய்யா தரீக்கா அறிமுகமாகியது. இவர்கள் பிக்ஹ், தஸவ்வுப், அகீதா தொடர்பாக எழுதிய நூல்கள், இலங்கை முஸ்லிம்களின் சன்மார்க்கச் சிந்தனைப் பாங்கில் கணிசமான செல்வாக்கை ஏற்படுத்தின.

வட ஆபிரிக்காவிலுள்ள மொரோக்கோவில் பிறந்த அபுல் ஹஸன் அஷ்ஷாதிலிய்யினால் (கி. 1196–1258) தோற்றுவிக்கப்பட்ட ஷாதிலிய்யா தரீக்கா மொரோக்கோ, எகிப்து, சிரியா ஆகிய பகுதிகளில் செல்வாக்குப் பெற்றது.(3) இது இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட காலப்பிரிவை உறுதிப்படுத்துவது சிரமமாக உள்ளது. ஆனால் 19ம் நூற்றாண்டளவின் இறுதிக் காலப்பிரிவில் இந்திய முஸ்லிம்கள் மத்தியில் இத்தரீக்கா பிரபல்யமடைந்திருப்பதை அபுல் ஹஸன் அஷ்ஷாதிலியின் வாழ்க்கைச் சரிதை நூல் எழுதப்பட்ட காலப்பிரிவை வைத்து நாம் அனுமானிக்க முடிகிறது. காயல் பட்டணத்தைச் சேர்ந்த நூஹ் லெப்பை ஆலிம் " நப்ஹதுல் அன்பர் பீ மனாகிபி குத்புல் அக்பர்" என்ற பெயரில் ஒரு வாழ்க்கைச் சரிதை நூல் இயற்றினார். இந் நூல்கள் இலங்கையிலும் பரவலாகச் செல்வாக்குப் பெற்றன. இவ்வாறே சிஷ்திய்யா, நக்ஷபந்திய்யா தரீக்காக்கள் 19ம் நூற்றாண்டில் இலங்கையில் அறிமுகமாயின.

யெமன், ஹள்ரமௌத் பகுதிகளிலிருந்து 19ம் நூற்றாண்டளவில் இலங்கையைத் தரிசித்த ஸூபிகள் இலங்கை முஸ்லிம்களின் கலாசார, பண்பாட்டு வாழ்வில் சிறப்பான பங்களிப்பைச் செய்தனர். இக்காலப்பிரிவில் இலங்கை முஸ்லிம்களுக்கும் யெமனுக்குமிடையில் மிக நெருங்கிய கலாசார உறவு நிகழ்ந்திருப்பதை நாம் அறியமுடிகின்றது. இலங்கை மட்டுமன்றி இந்தோனேஷியா, மலாக்கா போன்ற தென்கிழக்காசிய நாடுகளிலும் இக்காலப்பிரிவில் யெமனைச் சோர்ந்த ஸூபிகளின் செயற்பாடுகள் காணப்பட்டதாக பேராசிரியர் நகிப் அல்-அத்தாஸ் குறிப்பிடுவது இது தொடர்பாகக் கவனத்தில் கொள்ளத்தக்க விடயமாகும். யெமனுக்கும் இலங்கை முஸ்லிம்களுக்கு மிடையிலான கலாசாரத் தொடர்பு பற்றிய ஆய்வு மிக விரிவாக

எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.(4)

அரபுத் தமிழ் பாரம்பரியம்

இலங்கை முஸ்லிம்களின் கலாசார, பண்பாட்டுப் பாரம்பர்யத்தில் அரபுத் தமிழ் பாரம்பர்யம் மிக முக்கிய இடம் பெறுகின்றது. அப்பாஸிய தலைநகரமான பக்தாதின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இலங்கை முஸ்லிம்களுக்கும், இஸ்லாமிய ஆட்சியின் மத்திய நிலையமான பக்தாதிற்குமிடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டதையும், அதனைத் தொடர்ந்து தென் இந்தியாவின் ம.ஃபர் பிரதேசத்துடன் ஏற்பட்ட வணிக, கலசார உறவுகளே இலங்கை முஸ்லிம்களின் கலசார தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கு துணைபுரிந்தன என்பதையும் ஏலவே நாங்கள் விரிவாக ஆராய்ந்துள்ளோம்.

இலங்கை முஸ்லிம்களுக்கும் ம.ஃபர் முஸ்லிம்களுக்குமிடையில் ஏற்பட்ட தொடர்பின் முக்கிய கலாசார, பண்பாட்டு விளைவாக அமைந்தது அரபுத்தமிழின் தோற்றமாகும். இந்த இரு சாராருக்குமிடையில் பொதுவான கலாசார மொழியாக பரிணாமம் பெற்ற அரபுத்தமிழின் தோற்றம் பற்றிய ஒரு சுருக்கமான விளக்கத்தை நாம் இது தொடர்பாக பெறல் அவசியமாகும். இஸ்லாம் பரவிய நாடுகளிலும் சமூகங்களிலும் அரபுமொழி அதன் செல்வாக்கைப் பதித்தது. முஸ்லிம்கள் அல்குர்ஆனின் செல்வாக்கினால் அரபுஎழுத்து வரிவடிவத்திற்கு முக்கியத்துவமும், புனிதத்துவமும் வழங்கினர். இதன் காரணமாக இஸ்லாம் பரவிய பிரதேசங்களில் ஏற்கனவே முஸ்லிம்கள் மத்தியில் வழக்கிலிருந்த, அவர்களது கருத்து வெளிப்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்ட மொழிகளை அரபுஎழுத்து வடிவில் எழுத ஆரம்பித்தனர். இந்த வகையில் பாரசீக மொழி அரபுஎழுத்து வடிவில் எழுதப்பட்டது. 1920ம் வருட மொழிச் சீர்திருத்தத்திற்கு முன்னர் துருக்கிமொழி அரபுமொழியில் எழுதப்பட்டது. முஸ்லிம்கள் இந்தியாவில் சிந்துப்பிரதேசத்தைக் கைப்பற்றிய பின்னர், அது அரபு எழுத்துவடிவில் எழுதப்பட்டது. வங்காலத்தில் முஸ்லிம் ஆட்சியின்போது முக்கிய வங்காள நூல்கள் அரபு எழுத்து வடிவில் எழுதப்பட்டன. இதுபோன்றே இந்தியாவில் முஸ்லிம்கள் மத்தியில்

வழக்கிலிருந்த மலையாளம் அரபுமொழியில் எழுதப்பட்டு அரபு மலையாளமும், தமிழ் மொழியானது அரபுமொழியில் எழுதப்பட்டு அரபுத் தமிழும் தோற்றம் பெற்றது. அரபுமொழியை தமிழில் எழுதுவதற்காக அரபு எழுத்துக்களில் சில மாற்றங்களைச் செய்து புதிய எழுத்துக்களை உருவாக்கியதோடு, இஸ்லாமிய கருத்துக்களைப் புலப்படுத்தும்போது கருத்துச்சிதைவை ஏற்படுத்தும் தமிழ் சொற்களுக்குப் பதிலாக அரபுச்சொற்களை தமிழ்சொற்களோடு இணைத்தும் பல புதிய சொற்களை உருவாக்கியும் அரபும் - தமிழும் இணைந்த ஒரு புதிய மொழிவடிவத்தை தமிழ்பேசும் முஸ்லிம்கள் உருவாக்கினர். அரபுத்தமிழில் தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ், அகீதா போன்ற இஸ்லாமிய கலைகளைத் தழுவிய நூற்றுக்கணக்கான நூல்கள் எழுதப்பட்டன.

இலங்கை முஸ்லிம்களுக்கும் - தென்னிந்திய முஸ்லிம் களுக்குமிடையிலான வணிக, கலாசார, பண்பாட்டுத் தொடர்பின் மூலம் அரபுத் தமிழ் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் பரவி, இலங்கை முஸ்லிம்களையும் தென்னிந்திய முஸ்லிம்களையும் இணைக்கும் கலாசாரப் பாலமாக விளங்கியது. தென்னிந்திய முஸ்லிம் அறிஞர்களால் எழுதப்பட்ட நூல்கள் இலங்கை முஸ்லிம்கள் மத்தியிலும் பிரபல்யமடைந்தன. மத்தியகாலப்பிரிவில் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் அரபுத் தமிழ் வழக்கிலிருந்ததை பதினைந்தாம் நூற்றாண்டின் போர்த்துக்கேய தளபதி ஒடொராடோ பார்போஸா (Odora Barbosa) அவர்களது ,மொழிபற்றி அளிக்கும் விளக்கத்தின் மூலம் அறிய முடிகின்றது. இலங்கை முஸ்லிம்களின் சன்மார்க்க எழுச்சிக்கு ஒரு சிறந்த பங்களிப்பைச் செய்த கீழக்கரையைச் சேர்ந்த ஸெய்யித் முஹம்மத் மாப்பிள்ளை ஆலிம் (ஹி. 1316 /1898) அவர்களது "மகான்", "பத்ஹுத்தையான்" போன்ற நூல்கள் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில், சன்மார்க்க கடமைகள் பற்றிய அறிவைப் பெறுவதற்கும், செயல்பாட்டிற்கும் மிகப் பங்களிப்பு செய்தன. அவர்கள் அரபியிலிருந்து அரபுத்தமிழில் மொழிபெயர்த்த இப்னு நபாதாவின் 'குத்பா' இலங்கையின் மஸ்ஜித்களில் வெள்ளிக்கிழமை குத்பா சொற்பொழிவுக்காக மிகப் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது.

இலங்கை முஸ்லிம் அறிஞர்கள் பலர் அரபுத்தமிழின்

வளர்ச்சிக்கு கணிசமான பங்களிப்புச் செய்துள்ளனர். பேருவலையைச் சேர்ந்த ஷெய்கு முஸ்தபா அவர்கள் அல்குர்ஆனை அரபுத் தமிழில் முதல் தடவையாக மொழிபெயர்த்தார்கள். "பத்ஹுர்ரஹ்மான் பி தர்ஜமதி தப்ஸீரில் குர்ஆன்" என்ற பெயரில் ஹிஜ்ரி 1291/கிபி 1874ல் ஐந்து பாகங்களில் வெளியிடப்பட்டது. கசாவத்தை ஆலிம் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் அஷ் - ஷெய்க் முஹம்மது ஆலிம் (1898) இலங்கை உருவாக்கிய இன்னொரு முக்கிய அறிஞராவார். அரபு, பாரசீகம், உருது, தமிழ் ஆகிய பலமொழிகளில் அவர்கள் புலமை பெற்றிருந்தார்கள். சிங்கள மொழியில்கூட அவர்களுக்குப் பரிச்சயமிருந்தது. இலங்கை முஸ்லிம்களின் கல்வி மறுமலர்ச்சியின் தந்தை எனக் கருதப்படும் சித்திலெவ்வை அவர்கள் கசாவத்தை ஆலிமிடம் அரபு மொழியைக் கற்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. கசாவத்தை ஆலிம் அரபு மொழியில் புகழ்பாக்கள் (கஸீதா), இரங்கற்பாக்கள் (மர்ஸியா) பாடியுள்ளதுடன் உரைநடை நூல்களையும் ஆக்கியுள்ளார்கள். இவற்றுள் 'கஸீதத்துல் முரப்பஹா', 'கஸீதத்துல் மக்கியா', 'கஸீதத்துல் மதனியா' ஆகியன குறிப்பிடத்தக்கவையாகும்.

அரபும் - தமிழும் இணைந்து அரபுத்தமிழ் மொழியும், அரபுத்தமிழ் கலாசாரமும் உருவாகியது போன்று கிழக்காபிரிக்காவில் அரபும் - பாண்டுமொழியும் இணைந்து ஸ்வாஹிலி மொழியும் ஸ்வாஹிலி கலாசாரமும் தோற்றம் பெற்றன. கிழக்காபிரிக்காவின் ஸ்வாஹிலி பண்பாடு, தென் இந்திய - இலங்கை முஸ்லிம்களின் அரபுத்தமிழ் பண்பாடு ஆகியவற்றிற்கு இடையில் பல ஒருமைப்பாடுகள் காணப்படுகின்றன. தஸவ்வுபின் செல்வாக்கு, யெமனி - ஹள்ரமௌத் கலாசாரத்தின் தாக்கம் என்பன இதன் முக்கிய அம்சமாகும்.

ஸ்வாஹிலி கலாசாரத்திலும் - தென் இந்திய முஸ்லிம்களினதும், இலங்கை முஸ்லிம்களினதும் கலாசாரத்திலும் யெமன், ஹள்ரமௌத் கலாசாரத்தின் செல்வாக்கு மிகக் கணிசமான அளவு காணப்படுகின்றது.

இந்த மூன்று கலாசாரங்களினூடாக இழையோடி நிற்கும் யெமனி - ஹள்ர மௌத் கலாசாரக் கூறுகளை இனங்காணும்

முயற்சி மிக விரிவான ஆய்வாகும். இந்த ஆய்வை எவரேனும் மேற்கொண்டால் மிகப் பயனுடையதாக அமையும். இந்தோனேஷியா, மலாக்காப் பிரதேசங்களில் இஸ்லாத்தின் பரவலில் யெமன் நாட்டைச் சார்ந்த வணிகர்களும், ஸூபிகளும் வகித்துள்ள பங்கை பேராசிரியர் - நகீப் அல் -அத்தாஸ் மிக விரிவாக ஆராய்ந்துள்ளார். (5)

யெமன் நாட்டைச் சார்ந்த ஸூபிகள் பலர் இலங்கையில் சன்மார்க்கப் பணிபுரிந்து அவர்களது செல்வாக்கைப் பதித்துள்ளனர். இலங்கை முஸ்லிம்களின் சன்மார்க்க எழுச்சிக்கு அவர்கள் ஆற்றியுள்ள பங்களிப்பு மகத்தானது.

யெமன் நாட்டைச் சேர்ந்த ஆத்மஞானிகளுள் ஷெய்க் இஸ்மாயீல் இஸ்ஸதீன் யெமனீ, அவரது புதல்வர் யெஹ்யா அல் - யெமனீ ஆகியோரின் பங்களிப்புகள் தென்மாகணத்தில், மாத்தறையை மையமாக வைத்து நடைபெற்றன. யெமன் நாட்டைச்சேர்ந்த அஷ் - ஷெய்க் அப்துல்லா இப்னு உமர் பாதீப் அல் - யெமனீ அவர்களது பணி 1840க்கும் 1892க்கும் இடைப்பட்ட காலப்பிரிவில் ஹெம்மாத்தகமையில் உள்ள மடுல்போவை கிராமத்தை மையமாகக் கொண்டு மத்திய மாகாணத்தில் நடைபெற்றது. முஸ்லிம் சமூகத்தில் நுழைந்திருந்த இஸ்லாத்திற்கு முரணான கருத்துக்கள், செயல்பாடுகளுக்கு எதிராக அவர்கள் செயல்பட்டார்கள். அவர்களது "ஸைலுல் வாரித்" என்னும் நூல் இஸ்லாத்துக்கு முரணான செயல்பாடுகளைக் கண்டித்து எழுதப்பட்டதாகும்.

ஸெய்யித் அப்துர்ரஹ்மான் அப்துல் பாரி அல் - அஹ்தல், யெமன் நாட்டைச் சேர்ந்த இன்னொரு முக்கிய அறிஞரும், ஆத்மஞானியுமாவார். இவர் யெமனில் உள்ள மர்வா என்னுமிடத்தில் 'அஹ்தலிய்யா' என்ற தரீக்காவை நிறுவிய ஸெய்யித் உமர் அல் - அஹ்தலின் புதல்வராவார். யெமனில் உள்ள அஹ்லுல் பைத்களின் ஸக்காப் கிளையைச் சார்ந்த ஸூபிகளால் 'அய்தரூஸிய்யா', 'ஹத்தாதிய்யா' தரீக்காக்கள் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டன. ஹள்ரமௌத்திலுள்ள தரீம் என்னும் இடத்தைச் சேர்ந்த அபூபக்கர் இப்னு அப்துல்லாஹ் அல் - அய்தரூஸ் (ஹி. 914/1509) அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட அய்தரூஸிய்யா

தரீக்கா, அவரைப் பின்பற்றியோரால் இந்தியா, இந்தோனீஷியா, கிழக்காபிரிக்காப் பிரதேசங்களில் பரவியது.(6)

ஹள்ரமௌத்தைச் சேர்ந்த அப்துல்லா இப்னு அலவி அல்-ஹத்தாத் (கி. பி. 1720) அவர்களால் 'ஹத்தாதிய்யா' தரீக்கா தோற்றுவிக்கப்பட்டது. அலவிய்யதுல் காதிரிய்யா தரீக்காவை நிறுவி, அது இலங்கையில் பரவுவதற்குக் காரணமாக விளங்கிய ஷெய்க் முஹம்மத் அல் - ஜிப்ரியின் ஆத்மீக குருவாக ஷெய்க் ஹத்தாத் விளங்கினார்.

இலங்கை முஸ்லிம்களின் சன்மார்க்க, கலாசார வாழ்வில் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஸூபி தரீக்காக்கள் முக்கிய பங்கை வகித்தன. 'மஸ்ஜித்கள்' முஸ்லிம்களின் சன்மார்க்கக் கடமைகள், சமூகச் செயல்பாடுகளுக்கான மத்திய நிலையங்களாக விளங்க, ஸூபி தரீக்காக்களின் ஆத்மீக அனுஷ்டானங்கள் பெரும்பாலும் "ஸாவியா", "தக்கியா" ஆகியவற்றை மையமாக வைத்தே நடைபெற்றன. இலங்கையில் தரீக்காக்கள் மத்தியில் அவற்றிற்கே உரிய "ராதிப்", "விர்து" ஆகியன காணப்பட்டன. "ராதிப் அல் - ஹத்தாத்", "ஹிஸ்புல் பஹர்", "தலாஇறுல் கைராத்" ஆகியன இத்துறையில் குறிப்பிடத்தக்கனவாகும். இப்னு பதூதா அவரது 'ரிஹ்லா' என்னும் பிரயாண நூலில் முஸ்லிம் உலகில் அவர் தரிசித்த பிரதேசங்களில் ஹிஸ்புல் பஹ்ர் பிரபல்யம் பெற்றிருப்பது பற்றி குறிப்பிடுகின்றார்.(7) ரிச்சர்ட் பெர்டன் என்னும் மேற்கத்திய பிரயாணி அவரது Personal Narratives of a Pilgrimage to Al-Madina and Al-Makkah (London, 1898) என்னும் நூலில் அதன் சுருக்கத்தை அளிக்கின்றார். அப்துல்லாஹ் முஹம்மத் இப்னு ஸுலைமான் அல் - ஜஸூலீயின் "தலா இலுல் கைராத்" கிழக்காபிரிக்காவில் ஸ்வாஹிலி முஸ்லிம்கள் மத்தியில் மிகப் பிரபல்யம் பெற்றுள்ளதாக ஸ்பென்ஸர் டிர்பிங்ஹாம் அவரது Sufis Orders என்னும் நூலில் குறிப்பிடுகின்றார்.(8)

இலங்கை முஸ்லிம்களின் சன்மார்க்க செயல்பாடுகள், கலாசார பண்புகள், சிந்தனைப் பாங்குகளை உருவாக்குவதில் ஸூபி தரீக்காக்களின் செல்வாக்கு மிக ஆழமானதாகும். இமாம்

அல் - கஸ்ஸாலி, இப்னு அரபி, அப்துல் கரீம் ஜீலி ஆகியோரின் நூல்கள் யெமன், ஹள்ரமௌத்தைச் சார்ந்த ஸூபிகளாலும், தென் இந்திய மார்க்க அறிஞர்களாலும் இலங்கைக்கு அறிமுகமாயின. இமாம் கஸ்ஸாலியின் "பிதாயதுல் ஹிதாயா", "மின்ஹாஜுல் ஆபீதின்" போன்ற நூல்கள் கீழக்கரை ஸெய்யித் அஹ்மத் ஆலிம் அவர்களால் ஹிஜ்ரி 1298/1880ல் அரபுத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. நூஹ் லெப்பை ஆலிம் அவர்களால் "ராதீபுல் ஹத்தாத்" மொழிபெயர்க்கப்பட்டது. ஷெய்க் அப்துல் காதிர் ஆலிமினால் பிரதிபண்ணப்பட்ட அப்துல் கரீம் ஜீலியின் "இன்ஸானுல் காமில்", இப்னு அரபியின் "புஸூஸுல் ஹிகம்" ஆகிய நூல்களின் கையெழுத்துப் பிரதிகள் இன்னும் காயல்பட்டணத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளன.(9)

Footnotes

1. J. Spencer Tirmingham, **'The Sufi Orders in Islam"**, Oxford 1971.
2. Mohamed Yusuf ko kan, **"Arabic and Persian in Carnaties 1710-1960".** Madras 1974. P- 461
3. A.J. Arberry, "Sufism", London 1950, pp 86, 87.
4. Seyyed Naqib Al- Attas, "The **Mysticism of Hamzah Fansuri**", Kula Lumpor., 1960.
5. **Ibid.**
6. Art, "Aydroos" in **Encyclopedia of Islam**.
7. **Rihla, Ibn - Batuta**, Cairo edition- 1948, Vol-2, p.p – 109, 110.
8. Tirmingham, **Op.cit**. p- 64.
9. R.P.M Ghany, Islamiya Ilakkiyam (Tamil) Madras- 1963- p-210.

இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு

இலங்கை முஸ்லிம்களின் வரலாறு பற்றிப் பேசும்போது அவர்களது தேசியப் பங்களிப்பு பற்றிய ஆய்வு அதில் இடம்பெறல் மிக அவசியமாக உள்ளது. ஏனெனில் முஸ்லிம்கள் இந்த நாட்டிற்கு வணிக நோக்கமாக வருகை தந்து, அவர்களது பொருளாதார நலனில் மட்டுமே கவனம் செலுத்தினர் எனவும், தேசிய நலனுக்கு அவர்கள் எத்தகைய குறிப்பிடத்தக்க பங்களிப்பையும் ஆற்றவில்லை எனவும் ஒரு கருத்து உள்ளது.

முஸ்லிம்களும் நாட்டின் வெளிநாட்டு வணிகமும்

முஸ்லிம்கள் இலங்கையின் பிறநாட்டு வணிகத்தில் பங்குகொண்டு ஆற்றிய பணி நாட்டின் பொருளியல் வரலாற்றில் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. இலங்கையை ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர்கள் அநுராதபுர ஆட்சிக்காலப்பிரிவில் மிகப் பலமான விவசாயப் பொருளாதார அமைப்பொன்றைக் கட்டியெழுப்பினர். இந்த விவசாயப் பொருளாதாரம் பெருமளவு நீர்ப்பாசனத்திலும், மனிதவளத்திலும் தங்கியிருந்தது. நாட்டின் விவசாயப் பொருளாதாரத்தில் நீர்ப்பாசனக் கால்வாய்களும், அவற்றின் ஒழுங்கான பராமரிப்பும் மிக முக்கிய இடம்பெற்றன. இந்த நீர்ப்பாசன கட்டமைப்பை மிகச் சிறப்பாகப் பராமரிப்பதற்கு நாட்டின் வெளிநாட்டு வணிகத்தின் மூலம் பெறப்பட்ட மேலதிக வருமானமே துணைபுரிந்தது. நாட்டின் வெளிநாட்டு வணிகம் முற்றிலும்

முஸ்லிம்கள் கையிலேயே இருந்தது. இந்த வகையில் முஸ்லிம்கள் நாட்டின் விவசாயப் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதிலும், பேணிப் பாதுகாப்பதிலும் மிகக் காத்திரமான ஒரு பணியைப் புரிந்தனர்.

இலங்கையில் அரபு வணிகம் மிகச் சிறப்பான வளர்ச்சியைக் கண்ட காலப்பிரிவிலேயே தாதுசேன மன்னனினால் (450-473) கட்டப்பட்ட மாந்தை துறைமுகத்திற்கு அண்மையில் உள்ள "யோத வெவ" போன்ற நீர்ப்பாசனக் கால்வாய்கள் மிகச் சிறப்பாகப் பரிபாலிக்கப்பட்டதற்கு வரலாறு சான்று பகர்கின்றது. இலங்கையின் நீர்ப்பாசன நாகரிகம் பற்றிய மிக விரிவான ஆய்வுகளை மேற்கொண்ட பேராசிரியர் ஆர்.ஏ.எல்.எச். குணவர்தன குறிப்பிடும் ஒரு கருத்தும் இது தொடர்பாக கவனிக்கத்தக்கதாகும். இலங்கையில் வெளிநாட்டு வணிகம் மிக வளர்ச்சியடைந்த காலப்பிரிவுகளிலேயே மிகப் பாரிய அளவு நீர்ப்பாசன நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும், வெளிநாட்டு வணிகம் இந்த நீர்ப்பாசன பணிகளுக்கான வருமானத்தை அளித்தது என்பது இதன் மூலம் உறுதியாகின்றது எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.(1)

நாட்டின் விவசாயப் பொருளாதாரம் பாதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில், முஸ்லிம்கள் மேற்கொண்ட வெளிநாட்டு வணிகமே நாட்டின் முக்கிய வருமானமாக விளங்கியது. உதாரணமாக, அநுராதபுர ஆட்சியின் இறுதிக் காலப்பிரிவில் நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பநிலைகள் காரணமாக விவசாய நிலங்கள் புறக்கணிக்கப்பட்டதைத் தொடர்ந்து நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. ஏனெனில் விவசாய நிலங்கள் மீது விதிக்கப்பட்ட நிலவரியே திறைசேரியின் முக்கிய வருமானமாக விளங்கியது. விவசாயம் புறக்கணிக்கப்பட்ட நிலையில் நிலவரி அறவிட முடியாததன் காரணமாக அரசாங்கம் வேறுவகையில் அதன் வருமானத்தைத் தேட வேண்டியிருந்தது. இக்காலப்பிரிவில் தென்கிழக்காசியாவுடன் நடைபெற்ற, முஸ்லிம்கள் முக்கிய பங்கு வகித்த வெளிநாட்டு வணிகம் நாட்டிற்கு அவசியமான இந்த வருமானத்தைப் பெற ஒரே வழியாக விளங்கியது.

தவளம் போக்குவரத்து முறை

உள்நாட்டு வணிகத்துறையில் முஸ்லிம்கள் அறிமுகப்படுத்திய தவளம் போக்குவரத்து முறை அவர்களது முக்கிய பங்களிப்பாக கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் தவளம் போக்குவரத்து முறையின் மூலமே முஸ்லிம் வணிகர் கண்டி ராச்சியத்தின் பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்தனர். கண்டி ராச்சியத்திற்கும் கரையோரப் பிரதேசங்களுக்குமிடையிலான வணிகம் கண்டி ராச்சியத்தின் பொருளாதார பலத்திற்கு மிக அத்தியாவசியமாகக் காணப்பட்டது. மத்திய மலைநாட்டின் வணிகப் பொருட்களான, பாக்கு, யானைத்தந்தம் போன்றவற்றை கரை நாட்டுத் துறைமுகங்களான கொட்டியாரம், கற்பிட்டி, புத்தளம் போன்ற இடங்களுக்கு எடுத்துச் செல்வதும் உப்பு, கருவாடு, துணிமணிகள் போன்றவற்றை கரையோரத்திலிருந்து மலைநாட்டிற்கு எடுத்துச் செல்வதும் இந்த வணிகத்தின் முக்கிய செயல்பாடாக விளங்கியது.

மலைநாட்டுப் பிரதேசம் பிற இடங்களிலிருந்து போக்கு வரத்தை மேற்கொள்வதற்கு கஷ்டமும், சிரமமுமான நிலையில் காணப்படுவதானது தங்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக கண்டி மன்னர்கள் கருதினர். இந்தப் பாதுகாப்பு நோக்கம் கருதி போக்குவரத்துத் துறையில் மாற்றங்கள், வசதிகளை ஏற்படுத்த அவர்கள் முற்படவில்லை. ஆனால் கண்டிப் பிரதேசத்தில் வாழ்ந்த கரைநாட்டு வணிகத்தில் ஈடுபட்ட முஸ்லிம்கள் இப் பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பயணம் மேற்கொள்வதற்கு கஷ்டமான மலைப்பாங்கான அப்பிரதேசத்திற்கு ஏற்ற வகையில் ஒரு போக்குவரத்து முறையை அவர்கள் கையாளவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதற்கு அவர்கள் கையாண்ட போக்குவரத்து முறையே "தவளம்" என அழைக்கப்படுகின்றது. கண்டி மலைநாட்டிலிருந்து கரையோரப் பிரதேசங்களுக்கும், கரையோரப் பகுதிகளிலிருந்து மலைநாட்டுக்கும் தமது வியாபாரப் பொருட்களை சுமந்து செல்வதற்கு மாடுகளை ஒன்றாகப் பிணைத்து அவற்றின்மீது பொருட்களை சுமந்து செல்லும் இந்தப் போக்குவரத்து முறை, பாலைவனத்தில் பயணம் செய்வதற்கும், பொருள்களை சுமந்து செல்வதற்கும் அரபுமக்கள் பயன்படுத்திய "கரவன்" என்னும்

ஒட்டகக் கூட்டங்களின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டது என சிலர் கருதுகின்றனர். ஒட்டகத்திற்குப் பதிலாக மாடுகள் பயன்படுத்தப்படுவதே இரண்டிற்குமிடையேயுள்ள ஒரே வித்தியாசமாகும்.(2)

1762ம் ஆண்டு ஆங்கிலோ கிழக்கிந்தியக் கம்பனியின் தூதுவராக கண்டி மன்னன் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கனைச் சந்திக்கச் சென்ற ஜோன் பைபஸ் என்னும் ஆங்கிலேயர் தான் திருகோணமலையிலிருந்து கண்டிக்கு வரும் வழியில் இருபது முப்பது பொதிமாடுகளின் மேல் வியாபாரப் பொருட்களை ஏற்றிக்கொண்டு துறைமுகத்தை நோக்கிச் செல்லும் முஸ்லிம் வியாபாரக் கூட்டம் ஒன்றைக் கண்டதாக குறிப்பிடுகின்றார்.

போக்குவரத்து மிகக் கஷ்டமாகக் காணப்பட்ட அக்காலப்பிரிவில் பொதி மாடுகளின் தொகுதிகளை உள்ளடக்கிய தவளமானது பயணிக்கும் இடத்தை அடைய பல நாட்கள் எடுத்தன. பகல் பொழுதில் உணவை சமைக்கவும், மிருகங்கள் மேய்வதற்கும், இரவைக் கழிப்பதற்கும் பல இடங்களில் தங்கி ஓய்வுகொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இத்தகைய தங்குமிடங்களை மையமாக வைத்து காலவளர்ச்சியில் முஸ்லிம் குடியேற்றங்கள் தோற்றம் பெற்றன. மலைநாட்டின் பெரும்பாலான முஸ்லிம் கிராமங்கள் தவளங்கள் பயணம் செய்த பாதையிலேயே அமைந்துள்ளன. கொட்டியாரத்திலிருந்து கண்டிக்குச் செல்லும் பாதையில் பங்குரான, நிக்கவடன ஆகிய இரண்டு முக்கிய முஸ்லிம் கிராமங்கள் உள்ளன.(3)

வெளிநாட்டுத் தூதுவர்களாக முஸ்லிம்கள்

முஸ்லிம்கள் சிங்கள மன்னர்களின் தூதர்களாக செயல்பட்டு பெரும் பங்களிப்பு செய்த பல சந்தர்ப்பங்கள் நாம் காண முடிகின்றது. முஸ்லிம்களின் சர்வதேசிய தொடர்பு, கடல் பயண அனுபவம், பல மொழித் தேர்ச்சி என்பன இதற்கு முக்கிய காரணிகளாகும். கி.பி. 1258ம் ஆண்டு யப்பாஹுவாவில் ஆட்சிபுரிந்த முதலாம் புவனேகபாகு (1272-1284) மன்னன் எகிப்தில் ஆட்சிபுரிந்த மம்லூக் மன்னனுடன் வணிகத் தொடர்பை ஏற்படுத்த விரும்பியபோது, அல்-

ஹாஜ் அபூ உஸ்மான் என்பவரை தனது தூதுவராக எகிப்திற்கு அனுப்பி வைத்தான்.(4)

இவ்வாறு மன்னர்களை முஸ்லிம்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் நிலை கண்டி இராச்சியத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்பட்டுள்ளது. கண்டி ராச்சியத்தில் முஸ்லிம்களின் நிலை பற்றி மிக விரிவான ஆய்வுகளை மேற்கொண்ட கலாநிதி லோனா தேவராஜா முஸ்லிம்கள் கண்டி மன்னனின் தூவர்களாகப் பணிபுரிந்த பல்வேறு சந்தர்ப்பங்களைக் குறிப்பிட்டுள்ளார். 1762ம் ஆண்டில் ஜோன் பைபஸ் ஆங்கிலோ கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் தூதுவராக கண்டி மன்னன் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கனைச் சந்திக்க இலங்கை வந்தபோது கண்டி அரசனின் தூதுவராக திருகோணமலை சென்று அவரைச் சந்தித்து கண்டிக்கு அழைத்து வந்தவர் மவுலா முகாந்திரம் என்பவரின் புதல்வர் உதுமான் லெவ்வை ஆவார். அவர் 1762ல் இலங்கையைத் தரிசித்த ஜோன் பைபஸின் விவகாரங்களை மேற்பார்வை செய்து துணைபுரிய கண்டி மன்னனின் பிரதிநிதியாக செயல்பட்டார்.

யூனானி மருத்துவம்

யூனானி மருத்துவ முறை இலங்கை முஸ்லிம்களின் ஒரு முக்கிய தேசியப் பங்களிப்பாகக் கொள்ளப்படல் வேண்டும். இஸ்லாமிய உலகில் மத்திய காலப்பிரிவில் வளர்ச்சியடைந்த அரேபிய - கிரேக்க மருத்துவ முறையானது அத்- தபரி (838-970), அல்- ராஸி (864-930), இப்னு ஸீனா (980-1003) ஆகியோரின் பங்களிப்பினால் வளமூட்டப்பட்டு, இந்திய இஸ்லாமிய ஆட்சியின் பரவலோடு பிரபல்யமடைந்து மேலும் ஒருகட்ட வளர்ச்சியினைக் கண்டது. இந்தியாவில் முஸ்லிம் ஆட்சியில் வளர்ச்சியடைந்த இந்த மருத்துவப் பாரம்பர்யம் "யூனானி திப்" - யூனானி மருத்துவம் என அழைக்கப்பட்டது.

யூனானி மருத்துவம் இலங்கையை வந்தடைந்த காலம் பற்றி உறுதியாக எதுவும் கூறமுடியாதுள்ளது. ஆனால் கி.பி. 9ம், 10ம் நூற்றாண்டுகளில் இலங்கையின் கரையோர துறைமுக நகரங்களில் அரபுக் குடியேற்றங்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து படிப்படியாக

யூனானி மருத்துவப் பாரம்பர்யம் இலங்கையில் அறிமுகமா யிருக்கலாம் என நாம் அனுமானிக்கலாம். இலங்கையில் பாரம்பர்யமாக ஆயுர்வேத, சித்த வைத்திய முறைகள் வழக்கிலிருந்தன. முஸ்லிம் குடியேற்றங்களில் யூனானி மருத்துவம் நடைமுறையிலிருந்தது. இக் கரையோரக் குடியேற்றங்களிலிருந்து பிற்காலப்பிரிவில் நாட்டின் உள்நாட்டுப் பகுதிகளுக்கு அது பரவியது.

கி.பி. 10ம் நூற்றாண்டளவில் சின்னாசியாவிலுள்ள கோன்யாவின் ஸுல்தானின் புதல்வரான இளவரசர் ஜமாலுத்தீன் ஒரு மருத்துவராக விளங்கினாரெனவும், பேருவலையில் இக்காலப்பிரிவில் குடியேறிய அவரும் அவரது புதல்வர்களும் யூனானி மருத்துவ முறையைக் கடைப்பிடித்தனர் எனவும் ஒரு பாரம்பர்யச் செய்தி உள்ளது.(5)

இது தொடர்பாக இலங்கையில் பிரித்தானிய ஆட்சியில் பிரதம நீதியரசராக விளங்கிய ஸேர். அலெக்சாண்டர் ஜோன்ஸ்டன் குறிப்பிடும் ஒரு கருத்து கவனிக்கத்தக்கது.

> "அவர்கள் இலங்கைக்கு அறிமுகப்படுத்திய முக்கிய மருத்துவ நூல்களுள் அவிஸென்னாவின் நூல்களும் ஒன்றாகும். அத்தோடு அவர்கள் அரிஸ்டோடில், கியுக்லிட், கேலன், டொலமி, ஆகியவர்களின் நூல்களின் அரபு மொழி பெயர்ப்புக்களையும் அறிமுகப்படுத்தினர். நான் இலங்கையில் இருந்தபோது இந்நூல்களின் சில பகுதிகளை முஹம்மதிய மத குருக்களும், வியாபாரிகளும் என்னிடம் கொண்டுவந்தனர். அவை அவர்களது மூதாதையர்களால் பக்தாதிலிருந்து பெறப்பட்டதெனவும், அவர்களது குடும்பங்களில் பல நூற்றாண்டு காலங்களாக அவை பாதுகாக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டனர்." (6)

மேலும் இலங்கையில் குடியேறியிருந்த முஸ்லிம்கள் அரபுலகுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பானது அங்கிருந்து அவர்களுக்கு அவசியமான யூனானி மருந்துகளைப் பெற துணைபுரிந்தது. கி.பி. 7-9ம் நூற்றாண்டுகளுக்கிடையிலான காலப்பிரிவைச் சேர்ந்த மருந்துகளைச் சேமித்து வைப்பதற்கான ஸாஸானிய இஸ்லாமிய மட்பாண்டங்கள் அநுராதபுரம், மிஹிந்தலை இடிபாடுகளில் ஒரு புராதன மருத்துவமனை

அமைந்திருந்த இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் மூலம் அரேபியா, பாரசீக வளைகுடா போன்ற பகுதிகளிலிருந்து யூனானி மருந்துகள் இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கலாம் என நாம் அனுமானிக்க முடிகின்றது.(7) இலங்கையிலும் யூனானி மருத்துவத்திற்குத் தேவையான மூலிகைகள் காணப்பட்டன. கி.பி. 10ம் நூற்றாண்டைச் சார்ந்த அரபுப் புவியியலாளர் அல்-இஸ்தக்ரி இலங்கையிலிருந்து மருத்துவ மூலிகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டது பற்றிக் குறிப்பிட்டுள்ளார். 13ம் நூற்றாண்டைச் சார்ந்த புவியியலாளர்களான யாகூத் அல் ஹமவீ (1229), அல்-கஸ்வீனி (1287) ஆகியோரும் இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களில் ஒன்றாக மருத்துவ மூலிகை பற்றிக் குறிப்பிடுகின்றனர்.(8)

இலங்கையில் யூனானி மருத்துவ முறை 'ஹகீம்' என அழைக்கப்பட்ட யூனானி மருத்துவக் குடும்பங்களால் குடும்பப் பாரம்பர்யமாகப் பாதுகாக்கப்பட்டு வந்தது. இது தொடர்பான மருத்துவ நூல்களும், பாரம்பர்யமாக ஒரு பரம்பரையினரிடமிருந்து இன்னொரு பரம்பரையின் கைகளுக்கு பரிமாற்றம் செய்யப்பட்டது. இந்த யூனானி ஹகீம்களில் சிலர் 13,14ம் நூற்றாண்டுகளில் இலங்கையைத் தரிசித்த சில அரபுக் குடும்பங்களின் பரம்பரையினர் காளாவர். அவர்கள் இஸ்லாமிய உலகில் அக்காலப்பிரிவில் காணப்பட்ட மருத்துவப் பாரம்பர்யம் பற்றிய அறிவை தம்முடன் எடுத்துவந்தனர்.

இலங்கைக் கரையோரப் பகுதிகளில் யூனானி மருத்துவம் காலப்போக்கில் உள்நாட்டுக்கும், கிழக்குக் கரைக்கும் பரவியது. முஸ்லிம்கள் போர்த்துக்கேயர்களாலும், பிற்காலத்தில் ஒல்லாந்தர்களாலும் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து அவர்களில் பலர் சிங்கள மன்னர்களால் கண்டி ராச்சியத்திலும், கிழக்குக் கரையிலும் குடியேற்றப்பட்டனர். இவர்களுள் யூனானி மருத்துவர்களும் கண்டி மன்னனின் அழைப்பின் பேரில் அங்கு குடியேறியிருக்கலாம் என நாம் அனுமானிக்கலாம். ஸெனரத் மன்னனும் (1604-1635) அவரது புதல்வர் இரண்டாவது ராஜசிங்ஹவும் காலியில் யூனானி மருத்துவராக தொழில்புரிந்த ஸுல்தான் குதியா என்பவருக்கு இரண்டு காணிகளை மானியமாக வழங்கி கண்டிக்குக் குடிபெயரச் செய்தனர். இவர் கண்டி மன்னனின் அரண்மனையில் பணிபுரிந்தார்.(9)

கேகாலை மாவட்டத்திலுள்ள கெடபெரியா குடும்பத்தினர்கள் மிகவும் புகழ்பெற்ற யூனானி மருத்துவக் குடும்பத்தினராவர். இவர்கள் முஸ்லிம் ஸ்பெயினில் ஆட்சிபுரிந்த முவஹ்ஹித் ஆட்சியாளரான ஸுல்தான் அபூ யாகூப் யூஸுபின் (1163-1184) அரண்மனை மருத்துவராகப் பணிபுரிந்த முஹம்மத் இப்னு துபைலின் வம்சாவழியைச் சார்ந்தவர்களாவர். கோபால முஸ்லிம் மருத்துவக் குடும்பம் பற்றிய பாரம்பர்யச் செய்தி பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

> வட இந்தியாவில் சிந்து மாகாணத்திலுள்ள கோப் என்னும் கிராமத்தில் மருத்துவர் இப்னு துபைலின் இரண்டு ஆண் சந்ததிகள் வாழ்ந்தனர். இலங்கையில் தம்பதெனியாவில் ஆட்சிபுரிந்த இரண்டாம் பராக்கிரமபாகு (1236-1270) மன்னனின் வேண்டுகோளுக்கிணங்க டில்லி சுல்தான் அவர்களை இலங்கைக்கு அனுப்பிவைத்தான். அறிவுப் பணிகளுக்கு ஆதரவு நல்கிய, கவிஸிலுமின் என்ற நூலை இயற்றிய இந்த மன்னன் பிற்காலத்தில், தீர்க்க முடியாத ஒரு நோயினால் பீடிக்கப்பட்டு தனது அரச பணிகளை துறந்து அப்பொறுப்பை அவரது அமைச்சர் ஒருவருக்கும், அதன் பின்னர் அவரது புதல்வருக்கும் வழங்கினார். இந்தச் சூழ்நிலையிலே மன்னன் சுல்தானிடம் இரண்டு யூனானி மருத்துவர்களை அனுப்பும்படி வேண்டியிருக்கலாம் என நாம் கருத இடமுள்ளது. சிங்கள மன்னர்கள், இந்தியாவில் அவர்கள் வாழ்ந்த நகரத்தை வைத்து " கோபாலா" என்ற வம்சப் பெயரை வழங்கினர்.[10]

இந்த மருத்துவர்கள் சிங்கள மன்னர்களுக்கு விசுவாசமாகப் பணிபுரிந்து அவர்களது நன்மதிப்பைப் பெற்றனர். அவர்களில் ஒருவருக்கு மன்னன் 'பெஹெத்கே முஹந்திர' (அரச மருத்துவர்களின் இலாகாவின் தலைவர்) என்ற பொறுப்பை வழங்கி, பரங்குரு கோரளே, தும்பர, மாத்தளை, யடிநுவர ஆகிய இடங்களில் காணிகள் அளித்து, வைத்திய திலக ராஜகருண கோபால முதலியார் என்ற பட்டத்தையும் அளித்து கௌரவித்தார்.

கண்டி அரசன் கீர்த்தி ஸ்ரீராஜசிங்ஹ (1747-1780) வின் காலப்பிரிவில் கோபால முதலியார் மிக உயர்ந்த நிலையை

அடைந்தார். 1760ல் அரசனைக் கொலைசெய்து அந்த இடத்தில் இலங்கை பிக்கு வேடம் தரித்து வந்த சீயம் நாட்டைச் சார்ந்த ஒருவரை அரச கட்டிலில் ஏற்ற சதிமுயற்சி மேற்கொள்ளப்பட்டது. அரசர் இந்த சதி பற்றி முன்கூட்டியே அவரது விசுவாசமான மருத்துவரான கோபால முதலியார் மூலம் அறிந்தார். இதனால் இச்சதி முயற்சி முறியடிக்கப்பட்டது. அவரது விசுவாசத்தினால் கவரப்பட்ட மன்னன் கட்டபரிய செப்பேட்டு ஸன்னஸ (Gateberiya Copperplate Sannassa) வழங்கியதோடு நிலபுலன்களையும் நன்கொடையாக வழங்கினார். இக் குடும்பத்தவர்களிடம், அறுவைச் சிகிச்சைக்காகப் பயன்படுத்தும் இரும்பினாலும் பித்தளையினாலும், உருக்கினாலுமான உபகரணங்கள் காணப்பட்டதாக எச்.ஸீ.பி. பெல் குறிப்பிடுகின்றார்.

ராணுவப் பங்களிப்பு

சிங்கள மன்னர்களின் விசுவாசத்தையும், நம்பிக்கையையும் பெற்ற முஸ்லிம்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மன்னனின் ராணுவத்தில் இணைந்து போராடியுள்ளனர். மாயாதுன்னைக்கும், பிற்காலத்தில் அவரது புதல்வர் ராஜசிங்கவுக்கும் முஸ்லிம்கள் பல வகைகளில் உதவி புரிந்தனர். போர்த்துக்கேயருக்கு எதிராக அவர்கள் மன்னனின் ராணுவத்தில் இணைந்து போராடினர். சிங்கள ராணுவத்தின் ஓர் அங்கமாக முஸ்லிம்கள் செயல்பட்ட பல சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

இரண்டாம் ராஜசிங்ஹ 1634-1684 மன்னனின் காலப்பிரிவில் நடைபெற்ற வெல்லவாய போரில் "ஒட்டுபந்திய"(Ottupandiya) என அழைக்கப்பட்ட முஸ்லிம்களின் ஒட்டகப்படை மிக முக்கிய இடம்பெற்றது. ராஜசிங்ஹ மன்னன் இந்தப் போரில் அடைந்த வெற்றியைக் கண்ணியப்படுத்தும் வகையில் ஹங்குரன்கெட்ட மகா தேவாலயத்திற்கு அன்பளிப்புச் செய்த பிடவையில் இந்த ஒட்டகைப்படை ஓவியமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அரபிகளால் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பா ஓபாப் மரம் பற்றிய குறிப்பு இங்கு கவனிக்கத்தக்கதாகும். கிழக்காபிரிக்காவிற்கே உரிய இந்த மரம்

ஒட்டகங்களுக்கு உணவாகப் பயன்படுத்தப்படுகின்றது. இம்மரம் இலங்கையில் அரபு வணிகர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒட்டகங்களுக்கு உணவாகப் பயன்படும் இம்மரம் நாட்டின் வடமேற்குப் பகுதியில் குறிப்பாக இன்று மன்னாரில் காணப்படுகின்றது. மிக அரிதான மரமாகக் கருதப்படுவதால், பாதுகாக்கப்படத்தக்க மர வகைகளுள் ஒன்றாக இது வகைப்படுத்தப்பட்டுள்ளது.



மன்னார் பல்லிமுனையிலுள்ள பா ஒபாப் மரம்

மன்னார் தீவில் உள்ள பல்லிமுனை என்னுமிடத்திலுள்ள மரமே இவற்றுள் மிகப் பழைமைவாய்ந்ததாகவும், அளவில் பெரியதாகவும் உள்ளது. எண்ணூறு ஆண்டுகள் பழைமைவாய்ந்த இம்மரம் 1890ம் ஆண்டு ஹென்ரி டிரிமன் என்னும் ஆங்கிலேயரால் அதன் சுற்றளவு 61 அடியாகவும் உயரம் 37 அடியாகவும் அளவிடப்பட்டது. இன்னொரு பாஒபாப் மரம் மன்னார்-யாழ்ப்பாணம்

பாதையில் மன்னார் நகரிலிருந்து பத்து மைல் தூரத்திலுள்ள பபமோடை (Papamotai) என்னுமிடத்தில் காணப்படுகின்றது.

1. Sirrima Kiribamuna, Muslims and The Trade of the Arabian Sea with Special Reference to Sri Lanka. From the Birth of Islam to the Fifteenth Century, in **Muslims of Sri Lanka. Op.cit**. p- 94.
2. MICH, Silver Jubilee Souvenir – 1944- 1969, P- 95.
3. Lorna Devaraja, **Op.cit**. P- 125.
4. H.W. Codrington, : "A Sinhalese Embassy to Egypt, JRAS, Ceylon Branch, Vol- XXVIII, No-72, pp. 82-85.
5. An Ethnological Survey of Muslims of Sri Lanka - Colombo1985, p-65
6. Sir Alexander Johnstons' Foot notes to his Dispatch to the Secretary of State Dated 3rd February 1827-cRASGB, Transaction of Royal Society of Great Britain and Ireland, Vol- I, P-537.
7. Lorna Devaraja. **Op.cit**, P-91
8. S.A Imam "Ceylon- Arab Relation" MICH first Twenty five years souvenir. Colombo 1965, P-03.
9. Lorna Devaraja- **Op.cit**, P-91
10. S.H Ahamed Udayar, "Sri Lanka's Moor Physicians to the Sinhala King" MICH, Souvenir, Vol-IV-1977-1982. pp-171-174.
11. Sir. Edwin Wijerite, Impact of Muhammadan Influence of the People of Ceylon.

Bibliography

1. Abdul Azeez I.L.M ,1889 " **A Criticism of Mr. Ramanadhen's Ethnology of Moors of Sri Lanka. Colombo**
2. Abeyasinghe T.B.H Muslims of Sri Lanka in The Sixteenth and Seventeenth Centuries in **Muslims of Sri Lanka**.
3. Ahamed Udayar S.H, "Sri Lanka's Moor Physicians to the Sinhala King" **MICH, Souvenir**, Vol-IV-1977-1982. pp-171-174.
4. Ananda coomaraswamy K., **Medieval Sinhalese Art**, 1979.
5. Arasaratnam S, **Ceylon**, New Gersy, 1964.
6. Arberry A.J **"Sufism"**, London 1950.
7. Art, "Aydroos" in **Encyclopedia of Islam.**
8. Bernard Louis, The Fatimids and the rout to India, in **Studies in Islamic History and Institution**. Leiden, 1968.
9. Brohier R.L, **Changing Face of Colombo 1981**.
10. Brohier R.L, **Seeing Ceylon**, Colombo1981. ,
11. Casse Chetty, **The Ceylon –Gazetteer**.
12. Codrington H.W : "A Sinhalese Embassy to Egypt, **JRAS, Ceylon Branch**, Vol- XXVIII, No-72, pp. 82-85.
13. Codrington H.W, **Ceylon Coins and Currency**.
14. Codrington, H.W, A Sinhalese embassy to Egypt, **JRASCB**, Vol-VIII, No.72, 1919.pp-82-84. Colombo
15. Cosmas Indicopleustes, **The Christian Topography**, (Ed) F.Q. Winstedt, Oxford University Press, 1909,322.**Culture**- page- 290- 297

16. Davaraja Lorna, **The Muslims Of Sri Lanka- One Thousand Years of Ethnic Harmony** –Colombo 1994, p-27

17. **Ethnological Survey of Muslims of Sri Lanka** - Colombo1985.

18. Farook H.M.Z " Islamic Law in Sri Lanka" in **Muslims of Sri Lanka.**

19. Ghany R.P.M, **Islamiya Ilakkiyam** (Tamil) Madras- 1963.

20. Gunawardana R.A.L.H, Sea ways of Seladibe, **Kalyani**, Vol:V,1986-87,p-13

21. Hakim, Mohamed, Said and M.D Baloch (Trans. And Ed) **Kithab Al-Jamahir Fi Marifat Al Jawahir**, Islamabad 1989.

22. Henry Yule (Ed) **Cathay and The Way Thither**.

23. **History of Ceylon,** University of Ceylon, Vol- I, p-706.

24. Hussainmiya B.H " Princes and Soldiers – The Antecedents of The Sri Lankan Malays" in **Muslims of Sri Lanka.**

25. Imam S.A, "Ceylon –Iran Cultural Relationship", **2500th Anniversary of the Monarchy of Iran,1971** (Brochure issued by the National Committee of Ceylon)

26. Imam S.A"Ceylon- Arab Relations" **MICH first Twenty five years souvenir**. Colombo 1965.

27. Jaya Wardene, Kumary " Economic & Political Factors in 1915 Riots. **JCBRAS X**, 1888.

28. John Carswell, The Excavations at Manthai, **Ancient Ceylon,** No.07 Vol.I.

29. Kotelawele D.A " **Muslims Under Dutch Rule in Sri Lanka 1638-1796"** in Muslims of Sri Lanka.

30. **Mahavamsa**, Ed. By W.Geiger, London 1950 –XV-90.

31. Mahroof, M.M.M The Early Arab Trade in Sri Lanka, **MICH-Souvenir-VI.1990.**

32. **MICH, Silver Jubilee Souvenir** – 1944- 1969.

33. Mohamed Sameer, Archeological Evidence of Early Arabs in Ceylon, **MICH First Twenty One Years Souvenir,** Colombo 1965.

34. Mohamed Yusuf ko kan, **"Arabic and Persian in Carnatic 1710-1960."** Madras 1974.

35. Neelakanda Sasthri, K.A, **Foreign Notices of South India** ,Madras 1939.

36. Ramanathen, P,The Ethnology of Moors of Ceylon, **JRAS, Ceylon Branch**-x (36) 1888.

37. **Rehla Ibn-Batuta**, Cairo 1948. Vol-II.

38. Sameraweera, Vijaya, Arabi pasha in Ceylon 1883- 1901.

39. Seyyed Naqib Al- Attas, "The **Mysticism of Hamzah Fansuri**", Kula Lumpor., 1960.

40. Shukri M.A.M – Muslims of Sri Lanka- A Cultural Perspective " in **Muslims of Sri Lanka.**

41. Shukri M.A.M Sinbad and Ibn –Batuta in **Ancient Ceylon.**

42. Silva C.R.De **The Portuguese in Sri Lanka, Colombo**,1972.

43. Sir. Alexander Johnston. Footnotes to his dispatch to the secretary of State dated 03rd February 1827, **Transaction of the Royal Asiatic Society of Great Britain and Ireland,** Vol.1 p- 537.

44. Sir. Edwin Wijeratne, Impact of Muhammadan Influence of the People of Ceylon.

45. Sirima Kiribamune, Muslims And The Trade of The Arabian Sea with Special Reference To Sri Lanka From The Birth of Islam To The Fifteenth Century,in **Muslims of Sri Lanka**, (Ed) M.A.M Shukri, Colombo 1980.

46. Sourjah M.A.M " **The Sri Lanka's Malay Heritage in Brief**."

47. Spencer Tirmingham J, **'The Sufi Orders in Islam",** Oxford 1971.

48. Sulaiman Nadvi, Muslim Colonies in India Before The Muslim Conquests, **Islamic Culture**, Hyderabad VIII, P-35.

49. Tarachand, **Influence of Islam on Indian Culture**, Lahore 1979.

50. Tennent, James, Emerson, **Ceylon,** London, 1859 Vol-I.

51. **The Rihla of Ibn Batuata**, Tr. & Commentry by Mahdi Hussain, Baroda 1953.

52. **The Travels of Marco polo**, Trans. by R.E. latham, London 1951.

53. Tim Savrin, **The Sinbad Voyage**, London 1982.

54. Van Sanden J.C, **Sonahar, A Brief History of the Moors of Ceylon**, 1926,

55. Wan Mohd Nor Wan Daud, Presentation made at the Seminar on **Sri Lanka's Islamic Heritage and Its links in South East Asia**, held at Kuala Lumpur, September 22, 2001.

56. Wimalaratne K.D.G, " Muslims Under British Rule in Ceylon" in Muslims of Sri Lanka.

நூல்சிரியர் பற்றி...

கலாநிதி M.A.M. சுக்ரி அவர்கள் தமிழ் கூறும் நல்லுலகில் நன்கு அறியப்பட்டவர். அறபு, இஸ்லாமிய உலகிற்கும் அறிமுகமான இலங்கை அறிஞர்.

பேராதனை, களனி பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராகக் கடமை புரிந்த இவர் களனி பல்கலைக்கழகத்தில் அறபு, இஸ்லாமிய நாகரிகத்துறைத் தலைவராகவும் கடமையாற்றினார்.

கடந்த மூன்று தசாப்த காலமாக ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் பணிப்பாளராகக் கடமை புரியும் கலாநிதி M.A.M. சுக்ரி, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல ஆய்வரங் கங்களிலும் மாநாடுகளிலும் பங்கேற்று தனது புலமைப் பங்களிப்பை வழங்கியுள்ளார்.

பல மொழிகளில் தேர்ச்சி பெற்ற இவர் ஒரு பன்னூல் ஆசிரியர். இஸ்லாமிய கற்கைகள், வரலாறு, கலாசாரம், நாகரிகம் ஆகியன இவரது சிறப்புத் துறைகள். இத்துறைகளில் பல ஆய்வு முயற்சிகளை மேற்கொண்டு சமூகத்திற்கு பல அரிய அறிவுக் கருவூலங் களை இவர் வழங்கியுள்ளார்.

பல தேசிய, சர்வதேசிய அமைப்புக்களிலும் நிறுவனங்களிலும் அங்கத்துவம் வகிக் கின்ற கலாநிதி M.A.M. சுக்ரி, அவரது காத்திரமான பங்களிப்புக்களுக்காக பல அமைப்புக்களால் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டுமுள்ளார். இவரது தேசிய பங்க ளிப்பை கௌரவிக்கும் வகையில் 2009 ஆம் ஆண்டு இலங்கை அரசு 'தேஷ நேத்ரு' எனும் பட்டம் வழங்கி இவரை கௌரவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அஷ்-ஷெய்க் A.C. அகார் முஹம்மத்
பிரதிப்பணிப்பாளர்
ஜாமிஆ நளீமிய்யா